பருந்தும் நிழலும்

(FORM AND MATTER)

பழனியப்பா பிரதர்ஸ்

பருந்தும் நிழலும்

ஓர் மொழிபெயர்ப்புத் தொகை நூல்

மூலமும் உரையும்

ஆங்கிலத்தினின்று இதைத் தமிழில்
பெயர்த்து உரை எழுதி வெளியிடுபவர் :

சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் தத்துவநூல் ஆசிரியராகவும்
சென்னைச் சட்டக் கலாசாலையில் அறநூல் ஆசிரியராகவும்
சென்னை இந்து சமய மத தர்ம பரிபாலன போர்டில்
செக்ரடெரியாகவும் கம்மிஷனராகவும் இருந்த

திருவாளர். ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, பி.ஏ., எம்.எல்.,
அட்வொகேட் அவர்கள்.

இதன் சிறப்புப்பாயிரம்

சென்னைக் கிறிஸ்தவக் கலாசாலையில் தலைமைத் தமிழ்ப்
பேராசிரியராகவும் இலங்கைச் சர்வகலாசாலையில் தலைமைத்
தமிழ்ப் போதகாசியராகவும் சென்னைச் சர்வகலாசாலையில்
தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகவும் இருந்த

திருவாளர். சு. அனவரத விநாயகம் பிள்ளை
எம். ஏ., எல். டி., அவர்கள்

இயற்றியது.

1956

All Rights Reserved by the Author

பருந்தும் நிழலும்

முதற் பதிப்பு : 1000 பிரதிகள்
மறு பதிப்பு : 2000 பிரதிகள்

இந்நூலைப் பற்றிய எல்லா உரிமைகளும்
இந் நூலாசிரியர்க்கே உண்டு.

ஏஷியன் பிரிண்டர்ஸ், சேப்பாக்கம், சென்னை - 5.

சிறப்புப் பாயிரம்

எனது நண்பர் திருவாளர் ஆ. பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் இயற்றிய பருந்தும் நிழலும் என்னும் இவ்வுரை நூல் தமிழ் மொழிக்குப் புதிதாய தொன்று. கார்லைல், எமர்சன், தோரோ, ரஸ்கின் முதலிய ஆங்கிலப் பெரும் புலவர் நூல்களை எவரே இவர்க்கு முன் தமிழில் மொழி பெயர்க்கத் துணிந்தார்? கருத்தின் வழிச் சொல் நடக்கும். ஒன்றி னின்றும் மற்றதனைப் பிரிக்க ஏலாதென்னும் உண்மையைக் குறிக்கும் இப் பெயர் உயர்ந்தாழ்ந்த பொருள்களும் அவ்வ வற்றிற் கேற்ற நடையும் அமைந்த இந்நூலுக்குத் தக்கதே.

'பருந்தொடு நிழல்சென் றன்ன இயல்இசைப் பயன்துய்ப் பாரும்'
என்று கல்வியிற் பெரிய கம்பரும்,

—'எள்ளுறும் நீ
பாழலைவான் ஏகும் பருந்தாக அப்பருந்தின்
நீழலை நான் என்று நினைகேனே'

என்று, தன்னை யீர்த்துச் செல்லுகின்ற மனத்தின் வழி ஆன்மாச் செல்லும் என்னும் உண்மையை உணர்த்த வந்த திருவருட் பிரகாச வள்ளலாரும் சொல்லிப் போந்தமை காண்க.

தமிழ் நாட்டில் ஆங்கில நூல்கள் பல ஒன்றன்பின் ஒன்ருய்த் தமிழில் வரத் தலைப்பட்டன. ஆயினும், இதுவரை கதைகளே பெரும்பான்மையும் பெயர்த்தெழுதப் பட்டுள்ளன. சிலர் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் சிலவற்றை யும், மில்ற்றன் காவியங்களில் ஒரோவொன்றையும் பெயர்த் தெழுதினர். வேறு சிலர் ஆங்கிலத்திலுள்ள சாஸ்திரங் களின் கருத்துக்களைத் தமிழில் அமைத் தெழுதினர். இவ்வாறன்றி, ஆங்கிலத்திற் காணும் உயர்தர வசன இலக்கியங்களைத் தமிழில் பெயர்த் தெழுத ஒருவரும் முயன்றதாகத் தெரியவில்லை. ஆங்கிலத்தில் பெரும் பான்மை உயர்தர வசன இலக்கியங்கள் தோன்றியது பத்தொன்பதாம் நூற்ருண்டி லாகும். கார்லைல், எமர்சன், தோரோ, ரஸ்கின், சார்லஸ் லாம் முதலிய பெருமக்கள் நூல்கள் உலகிலுள்ள எம்மொழியாளரும் கொண்டாடத் தக்கனவாய் விளங்குவன. இன்னூர் நூல்கள் அனைத்தும்

முறையாகத் தமிழ்மொழிக்கண் பெயர்த்தெழுதப் படுமாயின், அம் மொழிக்கு அவை பேருதியமாகும். ஆயினும், அவை ஆங்கிலத்திலேயே நுண்பொருள் கொண்டு உயர் நடையில் அமைந்துள்ளன. அவற்றை வாசித்தறிதற்கு நல்ல கல்விப் பயிற்சியும் நுண்ணுணர்வும் அவற்றின் பயனுகிய நல்லொழுக்கமும் வேண்டும். தமிழிலும் சிறந்த புலமை யிருந்தாலன்றி அவற்றைத் தமிழில் இறக்கிச் செய்தல் எவ்வணங் கூடும்? பருந்தும் நிழலும் இயற்றியோர்க்கு இவ்விரண்டும் அமைந்தன வென்பது கட்டுரைகளை வாசிப்போர்க்கு நன்கு புலப்படும். அவர் அக்கட்டுரைகளைத் தமிழில் இறக்க வேண்டும் என்னும் கருத்து மாத்திரம் கொண்டு வெறுமையென மொழி பெயர்த்தாரல்லர். ஆங்கிலத்தில் அவ்வக் கட்டுரைகட் கமைந்த குணங்களனைத்தும் தமிழிலும் அமைந்து கிடக்கின்றன. அதனுல், இக் கட்டுரைகளை முதனூல்களில் வாசித்தறிந்தார் அவற்றைத் தமிழில் இங்கு வாசிக்கலுறின், அவை தமிழிலுள்ளன என்பதை மறத்தலுங் கூடும். உதாரணமாக, கார்லைலுடைய மதயானை நடையையும் ரஸ்கினுடைய தெளிவான பளிங்கன்ன நடையையும் நோக்குக. இவ்வாறு ஆங்கில நடைச் சிறப்பைத் தமிழில் அமைத்துக் காட்டும் பொருட்டு ஆசிரியர் மிக உழைத்திருக்க வேண்டும்.

பிறநாட்டு மொழியிலுள்ள ஒரு நூலைத் தமிழில் மொழி பெயர்த்துச் செய்யுங்கால் அதனைப் பலவகையாகச் செய்தல் கூடும். மூல மொழியிலுள்ள பொருள் நுட்பங்களனைத்தும் விடாதமைத்துத் தமிழ் மரபு பிழையாது செய்வதே சிறந்த முறையாகும். பருந்தும் நிழலும் இம்முறையைத் தழுவி யமைக்கப்பட்டதாகும்.

கூடியவரை தமிழ்ச் சொற்களையே வழங்கல் வேண்டும் என்று இந் நூலாசிரியர் கொண்ட நியதி பாராட்டற்பாலது. வடசொற்களைச் சிறிது அதிகமாக உபயோகித்திருப்பின் பொருள் விளக்கம் கூடியிருக்கும் என்று சிலர் எண்ணக் கூடும். ஆயினும், தமிழ்ச் சொற்களே நிறைந்த ஒரு கட்டுரை செவிக்கின்பம் தருவதைப்போல மற்றவை தரா என்பதை அனுபவித்தறிந்தோரே அறிவர்.

மற்று, நூலாசிரியர், இக்கட்டுரைகட்கு விளக்கமான உரை யொன்றெழுதிச் சேர்த்துள்ளார்; அதனுள், ஒவ்வொரு கட்டுரைக்கும் ஆசிரியரது வரலாறு, ஆசிரியரது புலமை, கட்டுரையின் வழி, கட்டுரையின் கருத்து

கட்டுரையின் சுருக்கம், அரும்பொருள் விளக்கம் என்னும் தலைப்புக்களின் கீழ் அருமையான விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. அன்றியும், அவர், ஆங்கிலத்தில், தமிழ் வசன வரலாறு, மொழி பெயர்ப்பின் ஆவசியகம் முதலியவற்றைப் பற்றிப் பொதுவாகவும், இந் நூலமைப்பைப் பற்றிச் சிறப்பாகவும் ஒரு விரிந்த நூன்முகம் எழுதியுள்ளார். இவை கட்டுரைகளின் பொருளையும் நடையையும் தெளிவாக அறிந்து கொள்ளற்குச் சிறந்த கருவிகளாகும்.

இனி, தமிழுக்கு இந்நூல் புதிதாய தென்று முன்னரே உரைக்கப்பட்டது. இயற்கை வருணனை அமைந்த பழந் தமிழ்ச் செய்யுள்களும், கடவுள் துதி யமைந்த தேவாராதி செய்யுள்களும், சிந்தாமணி, கம்ப ராமாயணம் முதலிய காவியேதிகாசங்களும், செய்யுள் ரூபத்திலமைந்த சாஸ்திரங்களும் புராணங்களுமே நந்தமிழ் மொழியில் இலக்கியங்களா யுள்ளவை. இலக்கண நூலுரைகளும் இலக்கிய நூலுரைகளுமே நெடுநாளாக வசனமெனப் போற்றப்பட்டவை. சிறிது நாளாகக் கதைகளும் நாடகங்களும் வசனத்தில் எழுதப்பட்டனவு முண்டு. ஆயினும் பருந்தும் நிழலும் என்பதில் அமைந்துள்ள கட்டுரைகள் போன்ற தொன்றும் இதுவரை தமிழில் எழுதப்பட்டதில்லை. இவ்வகை நூலே தமிழுக்குப் புதியதாகும். உதாரணமாக, 'ஓர் துறவியின் மக்கள் வேட்கை' யையும், 'மகளிர் மேற்குய முடிவுரை' யையும் நோக்குக. முன்னது அதனாசிரியர் கண்ட ஒரு சிறு கனவின் வரலாறாகும். பின்னது மகளிர்க்குரிய கல்வி யின்ன தென்பதையும், இல்லங்களில் அவர்கள் அரசிகளாமாற்றையும் பல நியாயங்கள் உரைத்து விளக்குவது. அவற்றின் உயர் தன்மை அவற்றை நன்கு வாசித்துணர்ந்து தமிழில் அவை போன்ற கட்டுரைகள் வேறெங்குள என்று துருவி யறிவார்க்கே புலனாகும். ஆதலால், தமிழுக்கு இந் நூல் ஓர் ஊதியமாகும்.

இந்நூலைப் பயில்பவருடைய புலனுட்பமும் அறிவு விளக்கமும் மனத் தூய்மையும் ஒருங்கே செழித்து வளரும் என்று சொல்லலாம். இதனை வாசித்துணரும் தமிழறிந்தார் இதிலுள்ளவை போலத் தம் மொழியில் கட்டுரைகள் எழுத முயல்வரென்பது ஒருதலை; ஆங்கிலந் தமிழறிந்தார், ஆங்கிலத்திலுள்ள இவை போன்ற பிற கட்டுரைகளைத் தமிழில் இறக்கிச் செய்ய முயல்வ ரென்பதும் நிச்சயமே.

அனவரத விநாயகம் பிள்ளை

PREFACE

I

In all languages, Prose, as literature, comes after Poetry. It is certainly the case in the glorious English Literature. From the most ancient times up to the end of the 17th century, Tamil Literature was very nearly synonymous with Tamil Poetical Literature. The very meagre literary prose that is to be found in ancient Tamil Literature had but a dependent existence and was, indeed, brought under Poetry as Prose-Poetry by some grammarians.*

The Tamil Prose that really existed from the ancient times down to the end of the 17th century consisted of commentaries on grammatical, literary and theological works. Their subject-matter had an exceptionally wide range: the usual topics of the science of language; those special topics of Tamil grammar, matters pertaining to private or public conduct; strictly poetical works, epic, dramatic and lyrical; ethics and politics; philosophical and theological systems and doctrines; and devotional addresses to God: in short, all the aspects of life which

---

* "பாட்டிடை வைத்த குறிப்பினானும்,
பாவின் றெழுந்த கிளவியானும்,
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்,
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானு மென்(று)
உரைவகை நடையே நான்கென மொழிப."

என்னும் இத் தொல்காப்பியச் செய்யுளியல் சூத்திரத்தை இலக்கண விளக்கப் பாட்டியலில் மேற்கொண்டு உரை கண்டவர் "இந்நான்கும் உரைச் செய்யுள் என்று கூறுவர் பெரியோர்" என்பர். ஆனால், 'தமிழ் உரைநூல் வரலாற்றில்' கொண்டிருப்பதுபோல், 'செய்யுள்', செய்தது என்னும் பொருளில், பாட்டு, நூல், உரை முதலியவற்றை எல்லாம் தொல் இலக்கணங்களில் பொது வகையாகக் குறிக்கும் என்பதே பொருத்தமானதாகக் காண்கிறது.

succeeded in having a literary expression. They display the highest wisdom and the most accurate scholarship of their times and are very often teeming with brilliant wit. The intellectual powers of analysis and comparison and the art of exposition and critical estimate, shown therein, are of the very highest order. Almost all the commentators are imbued with an ennobling morality, sometimes passing on to holiness pure and simple. And it is wonderful to see that, at the same time, they breathe an air of aesthetic refinement, feeling and imagination. Also, there is not a single note of falsity or pretence in any of their extensive writings.

The other aspect in which we are equally interested is their style. The Commentaries are, for the most part, written in a conversational manner as when the authors address their disciples. The style is always dignified, serious and terse, never flippant, nor loose, nor cynical: neither does it descend to the pretty nor the commonplace. The selection of words and phrases, their arrangement and the construction of sentences, though still influenced by poetical canons, were more and more swayed by other considerations.

For all of them, literary competency may doubtless be claimed. Indeed, the earliest of all commentaries, that on Iraiyanar's Aha-p-Porul is universally admitted to be the most accomplished literary prose ever written in Tamil: its select and enchanting vocabulary, its exquisite phrases, the delicate construction of its sentences, and the masterly arrangement of all these, with a never-failing sense of proportion and cadence produce a certain indefinable literary charm—a refined rhythmic movement and harmony quite ineffable. Likewise, the great commentary of Siva-Jnana-Munikal, though dealing with a topic not within the four corners of literary Tamil is a monument of the capacity of Tamil prose to express accurate philosophical notions and to serve as a powerful instrument in carrying on philosophical arguments to splendid results.

From the very classical times, mention is now and then made of independent prose works. Nakkirar, the reputed commentator of Iraiyanar's Aha-p-Porul is said to

have written a prose work called Ceer Karuneekar Puranam.* Like many a hallowed name in Tamil Literature, it continues to be a mere name. An original prose work like that by Nakkirar—what a source of inspiration could it have proved to be! The Jains when they flourished in South India, wrote one or two prose works. But these are valuable only as experiments in the evolution of Tamil Prose, nay, in the evolution of Tamil Language itself. They are written in what is called Mani-p-Pravalam style, a mixture of Sanskrit and Tamil words and phrases, as the Sri Puranam. He would be a bold man indeed who will hereafter turn in that direction for inspiration and guidance in matters of Tamil Language and Literature.

Coming to modern times, it is Constant Beschi who seems to have first set the ball rolling: he published two pieces of prose composition (அவிவேக பூரண குருகதை & வேதியர் ஒழுக்கம்.) † one of which at least, even now, after 200 years of its first appearance, retains its popularity. They were addressed, not to scholars, but to common people. Tamil literary prose, almost for the first time, had to come down to the level of the people at large; and in so doing, acquired simplicity in its diction, easiness and agility in its movement, quite in consonance with their subjects.

During the last century when systematic teaching was available only in English schools and colleges, the need for Tamil Prose must have been so keenly felt that such accomplished scholars as Thandavaraya Mudaliar and Arumukha Navalar most willingly, as it seems, undertook to produce prose works in Tamil. The former translated Panchatantram from Mahrathi. Tens of short stories are its subject matter; but its style is a very significant thing. The work consists of five main tantras. Each succeeding tantra is written in a more advanced style—advanced in

---

* The late Prof. T. Chelvakesavaraya Mudaliar's Essay on Tamil, p 41: 1906 Edition.

† The present writer has been unable to secure a copy of வேதியர் ஒழுக்கம்.

matters of diction and construction of phrases and sentences; the progress is from the simple and the familiar to the learned, the out of the way, and the archaic. It is, however, very interesting to perceive that an increasingly higher rhythmic movement is secured thereby. There is no doubt that, in this process of translation, Tamil Prose has had the strength of its limbs tested, and in a new adjustment, gained considerable freedom of movement. It is also partly experimental in character, as the last of the tantras has, perhaps, shown; the realisation of pleasing rhythm should always be an objective in Tamil literary prose, but the vocabulary and the phrase-construction favoured in that tantra are not calculated to work for the onward march of Tamil Prose. The ideal, then, is that that charming rhythm should somehow be encased in pure and familiar words and phrases with the current suffixes and prefixes.

Arumukha Navalar took up Tamil Prose where it had been left by Thandavaraya Mudaliar. He addressed himself to students and moderately educated men and women. His prose covered a variety of topics: biographies of saints, descriptions of miracles, and, most important of all, essays on miscellaneous subjects. He selected a vast number of really good words, neither archaic nor foreign and arranged them to form phrases and clauses and managed these latter so very deftly that he was able to produce a literary style at once free from the old monotony and mere agglomeration and capable of being used for a variety of purposes. It is indeed the first accomplished plain style in modern times. It is clear, easy and elegant; and has a very agreeable rhythm.

Sri. Ramalinga Swamikal, the next prose-writer to be considered is a genius of an entirely different order. The more important of his prose writings are மநு முறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் and four devotional addresses to God. The first is a narration of a puranic story with a great ethical lesson; the second is a short treatise on Compassion towards all life; and the addresses pertain to the spiritual yearning of man. His command of the chaste and familiar

words in tens of thousands is simply marvellous. His phrases, clauses and sentences all stand bathed in calm and serene light familiar and fresh almost like the facial expression of one's own child. The clauses and sentences, however, have to keep pace with the amazing succession of ideas and images. One is unable to find any indication of an internal exhaustion; if he completes a sentence, a paragraph or a topic, it is because it has to be stopped somewhere. But this wealth of ideas does not in the least produce any confusion or obscurity or looseness in language. The emotional qualities of the style are its most distinguishing characteristic but, on that account, it does not become gaudy or extravagant. While there is a beautiful rhythm throughout, the rhythm of the Addresses is unutterably sweet and transporting. A mighty art must underlie all this; yet, from whatever point of view you look at the style, it looks artless. Here is for the first time in modern Tamil Literature what the English would call Romantic Prose, of a kind by itself. The style, by its very nature, is inimitable as a whole but its influences for good are very great: pedantry of all kinds, obscurantism in any shape, poverty of thought disguised as brevity must hereafter hang their heads low in Tamil Prose. Tamil literary prose though grown to mighty proportions in profundity, inspiration and variety of music still manages to be familiar and unpretentious.

There are several recent authors of note, among whom mention must be made of Tholuvur Velayuda Mudaliar, M. Vedanayakam Pillai, Veeraswamy Chettiar, Prof. P. Sundaram Pillai, V. G. Suryanarayana Sastriar, Visvanatha Pillai, T. Chelvakesavaraya Mudaliar, Kanakasundarm Pillai and Jaffna Sabarathna Mudaliar. Every one of them has endeavoured, with all his strength which is not of a mean order, to assist the growth of Tamil Prose. It may be out of place here to pause to examine their specific contributions. Let it suffice to say that they have with great results,—always, in the history of Tamil Prose, in most cases, in themselves—used prose for writing biographies, novels, literary anecdotes, dramas, critical works

and essays and in translating from Sanskrit, Mahrathi and English.

The present-day influences are manifold. Novel-writing is a craze and heaps of novels are produced every month and swallowed by an eager population with an unheard-of avidity. All kinds of persons are writing: from schoolboys to finished scholars and men of experience. Tamil prose has, on the whole, immensely gained by such extensive and varied handling. Tamil newspapers are multiplying with the increasing political activities of the country. The greater part of a newspaper consists necessarily of hastily composed matter; and Tamil Prose is there requisitioned for multifarious purposes. As Tamil scholars have not, in any appreciable number, taken to political polemics, their diction, in most cases, is a haphazard and ugly mixture, their arrangement of words and phrases, most jarring and their columns full of anacolutha. Still, the necessity to marshall aruguments makes them a great exercising ground for modern Tamil Prose. The monthlies contain far better prose, as some scholars are attracted to them. They are, however, to some extent, vitiated by faults of the opposite kind: fruitless pedantry and avoidable obscurantism beset them in several forms. In the course of the last one or two decades, a class of persons, most of them having some literary tradition either in Tamil or English or Sanskrit, has come into existence, who produce text-books for use in schools and colleges. All of them are working under a necessity to achieve clearness, ease and decorum and to avoid heaviness and indecency in their publications. They have no doubt advanced the cause of Tamil Prose towards decency in matter and perspicuity in handling miscellaneous—scientific, moral, and historical—topics.

II

There is one other factor, translation which is not operating either in bulk or quality as it should be. The present writer believes that, at this juncture, it will advance the cause of Tamil Prose as none others can do: and he will try to state his grounds for such a belief.

For a very long time, the Tamils have been getting a bilingual education: first, Sanskrit was the second language; now, English has taken its place. 'Constant and agelong effect' of such an education is towards change in language. The influence of Sanskrit has been considerable in the sphere of religious literature; the spoken influence of English is still greater: being the language of the schools and colleges, its literary influence is of a special kind. Side by side, the political claims of Hindi as the future language of India are pressed on us. There is, therefore, a wide spread hesitation to write original, even serious, literature in a language which is supposed to be thus crumbling from day to day. The fear is, however, baseless; for, there are no signs of degeneration in Tamil language, only plenty of signs indicative of change, assimilation, adjustment and growth. The present writer believes that Tamil has not degenerated into 'a mere makeshift, a mere engine of condescendence to children and grooms'; but that it is a 'vehicle of literature, not indeed perhaps quite so perfect' as English 'but capable of being improved and deserving of the pains necessary to improve it. He strongly believes in the virtues of English and Sanskrit for study and in those of Tamil for practice. Tamil, in trying to express the bewildering complexities of modern life is indeed in the making and as such it has more to receive than to give. Tamil is trying to keep itself abreast in poetry, but for obvious reasons its prose is not yet settled and it will be long before men with literary leaning can hope to resort to it without fear of having to forge a prose for themselves. It is necessary that in view to such a settlement, Tamil should be 'thoroughly suppled, thoroughly vernacularised and at the same time be charged with store of good words native and foreign, classical and modern, from which a standard vocabulary could be riddled out afterwards.'

Serious objection to translation is nevertheless possible from one quarter: Tamil Pandits might say that if Arumukha Navalar has created a style capable of being widely imitated and if the prose of Sri. Ramalinga Swamikal has

great influence, why should Tamil be mutilated through translations ? True, the prose of Navalar has been and is being successfully imitated. But its scope is really limited to traditionary topics. Even if otherwise, it is only one strand in the glorious mosaic of Tamil Prose of the future that is shaping. For the scope for excellence in prose, as distinguished from that in poetry, is very wide. 'For prose, the lower and less intense harmony is the more varied and indefinitely adjustable instrument. And while it is conceivable that one man'—Kambar, for instance,—'should catch up and utter in tint and intimation at least the whole sum of poetry, no one could do the like in prose.'

It is, therefore, expected that at this juncture and working under this ideal, translations will be of the greatest service, specially translations from languages which have accomplished literary prose distinguished for admirable varieties of excellence. Translation has played a great part in the history of English prose. 'Reflecting how destitute English, at least in prose, was, of such fairness, such gravity, such stateliness, and determining, so far as in them lay, to give readers in the vernacular not merely the bare matter but matter with some art', many an English scholar began to translate from Latin and French and from Latin translations of Eastern languages. In such a process they had 'to forge a vocabulary and arrange a syntax capable of conveying the effects of Latin argument in the 'vernacular.' 'It was hardly the object of a single one of these writers to give their author, their whole author, and nothing but their author in rigidly classical English.' They essayed 'to be at once vernacular and as variegated as may be.' And there cannot be a 'better exercising ground for an infant prose' than the 'one of translation and polemic.' 'Very much more experiment with term-forging, very much more copying of the more accomplished prose forms of Latin and French were necessary before the resources of style could really be at the command of the English prose-writer in miscellaneous subjects.' In a late stage of writing, prose and, indeed, verse translations have very little interest and are merely

make-shifts for the use of those who cannot read the originals. In the early stages, especially of prose writing, their value is very different." It was impossible for any one of intelligence to render Latin or French without exercising the youthful language in the airs, the graces and the crafts of its elder.' Translations of the Latin Bible and adaptations of the Liturgy, at the close of the 15th century, 'have supplied nearly four centuries since, with models of exquisite cadence, of enchanting selection, and arrangement of the vocabulary.' Throughout the 15th century, 'the resources, the practice, the duties, the opportunities of Prose continue to expand, to subdivide themselves, to acquire diversity, adequacy and accomplishment' through translations.

III

It is somewhat, if not entirely, in this spirit that the present translations were attempted. One of the ways in which translations helped the English Prose consisted in the suggestions of new subjects and forms of literature. Guided by that historical fact, the present translator has selected twelve subjects which have not hitherto submitted themselves to literary treatment in Tamil Prose: if ever, not in the manner which is its distinguishing excellence here. Ten of the pieces selected are from English originals; one from the English translation of the Russian original, and another from that of the Germen original. Their authors Carlyle, Ruskin, Walter Pater, Emerson, De Quincey, Thoreau, Charles Lamb, Kinglake, Landor, Goldsmith, Heine and Tolstoy are all masters of Romantic prose in their respective languages. Now, Romantic prose implies in general a suggestive, rhetorical, ornate or imaginative style fitted for fanciful, gorgeous or passionate expression and showing a rich variety of music. It is the opposite of plain or elegant style. Feelings of noblest morality, in some cases indistinguishable from those of saintliness characterize one and all of these selections as they did their respective authors. They are illustrative in substance, of the diverse ways in which Beauty and Truth, Wisdom and Justice, Holiness and Freedom are made

attractive to mankind by the literary spokesmen of the nations of the West.

1. Landor, in imitation of the manner of classical Greeks, narrates in simple, yet, suggestive manner how, even the person most reputed among men for truth and purity is full of subtle and unconscious falsehoods and impurities; and how if he steadily pursues the path of Truth and Humility, he will be assisted by Divine Grace.

2. Goldsmith describes in his inimitable style noted for its sweetness, sincerity and pathos, the quiet condition, during night, of the capital city of a powerful nation; reflects on the great contrast it presents with its groups of homeless, ill-clad and hungry destitutes, to the fashion, the bustle and the heat of the day and feelingly moralizes on the situation.

3. Kinglake, 'affecting a sort of thorn-crackling persiflage over things in general' describes in a style brilliant and novel how he crossed the Desert from Gaza to Cairo. No translation is here given but only the substance of his description in imitation of his manner.

4. Charles Lamb is at his very best in his Essay on Dream Children. It is partly autobiographical, partly fanciful, both the aspects having been inextricably woven one into the other. Its vividness, its quaint humour, its enchantment, its pathos, its indefinable rhythmic movement, its altogether dreamy atmosphere sustained throughout by a machless art: these are, indeed, delicacies requiring a literary connoisseur for their due appreciation.

5. De Quincey's gorgeous style is put to rarest effects in his Three Ladies of Sorrow. Sorrows are distinguished into three types. Each type is personified and delineated with a vividness, colour, and movement unsurpassed in English Literature. Its refined harmony is achieved as De Quincey himself despairingly tells us "Ah, reader, I would that the Gods had made thee musical, that thou mightest comprehend the thousandth part of my labours in the evasion of cacophony!"

6. The German original of Heinrich Heine was translated into English by Elizabeth A. Sharp. The present translation is from her. In a letter addressed to a friend, Heine is analysing and comparing the distinguishing features of the musical works of two masters of music, Rossini and Mayerbeer. The brilliant wit of the author will be apparent in almost every half a dozen sentences. The acute analysis, the barbed criticisms, the withering contempt for all that is snobbish, the unexpected pathos, the exquisitely chiselled language with a strange, quick and fascinating serpentine movement: this combination is something yet unknown to English Prose.

7. The name of Tolstoy is not an unfamiliar one. His life and works are said to have greatly influenced Mahatma Gandhi. He was one of the greatest men the world has ever produced. Deeply reflecting over the numberless iniquities which thrive in modern societies under the protective wings of law and religion, he was burning with moral indignation. The Tamil translation is from an English rendering of his "What to do?" Chap. XVI, wherein he tries to valuate the respective worth of a day-labourer and a charitably disposed person like himself in possession of all the material advantages of a high birth; and comes to the conclusion that man to man, the former is intrinsically far superior to the latter. This conclusion leads Tolstoy to examine the institution of Property in modern society. Tolstoy is the master of a clear and forceful manner of writing. His powers of analysis are the greatest of their kind.

8. Walter Pater's conclusion to his 'Studies in the History of Renaissance' is here translated. "It displays a most elaborate and novel style and in its few words, conveys something like a complete life-philosophy, inculcating the cultivation of, and carefully measured indulgence in aesthetic pleasures as practically the one thing to be heeded. He has written on 'Style' itself: and his own practice included the careful building up of clauses, sentence, and paragraph, the constituents and the total

being equally regarded; a cunning scheme of rhythm which never transgresses the bounds of metre; and an almost equally sifted vocabulary in which epithet and noun are chosen with attention to a certain effect of strangeness—a slight shock of not unpleasurable surprise . . . Its general effect in Pater's best passages is one of extreme beauty; indeed, these passages rank with the choicest in English."

9. Henry David Thoreau is an American scholar of an ascetic mode of living and a friend of Emerson. In describing his solitary life in the woods, he tells us his convictions about the verities of life; analyses the human personality into its double states; and shows how the lower part of the self has to keep the company of the higher part and thus could never find itself alone. His idea of company is not confined to humanity: all nature—trees as well as birds, the south-east wind no less than the starry heavens—keeps company with him, His style is refreshing and agreeable, clear and delicately rhythmic.

10. Thomas Carlyle's Essay on Goethe is one of his masterpieces. Of all his contemporaries, Goethe was the only person whom Carlyle admired without any reserve. His admiration was not a mere sentiment owing its origin or strength to prejudice or convention. In this essay, the various traits of Goethe are marshalled. That the analysis cannot be more accurate or more just, any one can see. It is expressed in Carlyle's own style—a style remarkable at once for its imaginative splendour, its arresting vividness, and its uncompromising morality. The marvellous grip of Carlyle's style is partly secured by his 'omission of coujunctions, pronouns and generally all parts of speech which, by relying strictly on the reader's ability to perceive the meaning without them, can be omitted.' Lastly, there is Carlyle's supreme 'art of arrangement in order of words and juxtaposition of clauses, cadence, and rhythm of phrase.'

11. Emerson's Essay on Art is here selected for translation. He conceives Art as an educational process

elevating the soul to the perception of beauty and his conclusion is that the perception once attained would supercede the educational process and render Art obsolete. The merits of Emerson's literary manner are chatacterized by Carlyle as brevity, simplicity, softness, homely grace, with such a penetrating meaning soft enough, but irresistible, going down to the depths and up to the heights, as silent electricity goes.' 'The line manner' of Emerson is not unacceptable to the genius of Tamil Language.

12. The longest translation is the last one, that of Ruskin's Lilies of the Queens' Gardens. The domestic and public functions of women and the kind of education that should accordingly be given to them are its subject-matter. Ruskin was considered by Mazzini as the greatest analytic intellect of the 19th century in Europe. And Ruskin wrote in a style which had never been known before. "Rhythm, as in all the great prose artists, is of course Mr. Ruskin's principal weapon; and it is of a piece with the wilful lawlessness and want of self-criticism which distinguishes all his work that he too often transgresses the boundary between rhythm and metre . . . But the fault is rendered less apparent by the extreme length of his sentences . . . This extreme length is also partially justified by the fact that Mr. Ruskin, even when nominally arguing, is for the most part building up pictures for the eye by successive strokes, and that that faithful organ retains the earlier and accepts the later touches with docility. It is also to be said as one of his highest commendations that, magnificent and varicoloured as is the effect, he is by no means 'a fine' writer in the ordinary sense. . . . That he learnt a good deal from Carlyle is not disputable; but he used what he learnt in quite different material, and with a totally different literary, though not a very different moral, effect."

IV

These translations were, indeed, a labour of love, a task undertaken and carried on in a kind of loving admiration for English and of affection for Tamil. It is believed, as has already been said, that these authors great

both as men and as artists in prose would prove, even in inadequate and fragmentary translations such as the following, new sources of inspiration for Tamil Prose in the two aspects of Form and Matter. These translations did certainly put the translator on his mettle: there were indeed difficulties of diverse kinds with their attendant feelings of anxiety and regret; but the feelings of joy that in many cases succeeded them did more than compensate him. Difficulties were specially experienced in matters of diction, of phrase-construction, and of juxtaposition of clauses, his ideal being the presentation of the ideas in the originals, in their logical sequence and subordination and with their special literary effects as much as possible, that is, as much as the genius of Tamil will intelligently absorb in practice at present. He had no ideas of sticking to the usual and popular modes in Tamil at all costs. Likewise, literalness was not a governing aim with him. But he believes that the familiar modes, in those cases where they were brushed aside, were not so treated without the deepest consideration; and that they yet play an overwhelming part. He had no occasion to disturb the thought-structure of Tamil at all.

He selected, in a few cases coined, his words and phrases with a view to their association and sound values; and arranged his syntax in order that he might convey, as nearly as may be, the images, the ideas or the arguments in their logical sequence and subordination, and in their particular literary setting. Persons who are conversant with language in its aspect of hindrance as well as in its aspect of help to thought know equally well that between one kind of vocabulary and syntax, and another kind of vocabulary and syntax, there may be the greatest logical, no less than, literary, difference. Logical variation would mean swerving from the particular aspect of Truth intended, literary variation from that of Beauty intended. And at the hands of a master, an aspect of Truth and its literary expression, Matter and Form, are inseparable as a kite and its shadow; also, at his hands, the matter determines its form as a kite, its shadow.

The earliest translation was done in the year 1909; and the latest in 1919; and the translator has always given his best attention and a sort of loving and anxious care to these attempts of his; that is, whenever he could snatch time from his regular avocation in life. He is now publishiug them in book-form, not without having satisfied himself (for what it is worth) in more ways than one, that his is not an altogether indequate mode of translating the Romantic English Prose; and that none of the pieces (except one or two short ones), if kept back, can gain any further improvement at his hands. Notwithstanding he read the greater part of them to a very eminent literary friend of his—a scholar and literary connoiseur of very rare attainments and in the course of such joint reading, here and there modified the language to great advantage, the decision and responsibility for such modifications is entirely his.

The translator has made a sufficiently long apology. It is now for the Tamil public to say how far his aims are fruitful and what the success of these attempts is. He fondly imagines that most of them have certain values in themselves. He will not, however, be totally disappointed in case they prove to be intrinsically valueless. 'That a certain amount of practice is in the nature of not always successful experiment is nothing to be ashamed of or to be annoyed at, but a fair reason for satisfaction and pride. Non-importation of a literary form bodily from another literature necessitates 'constant and very often unsuccessful experiment before the right kind or the right adjustment has been hit upon.' Thereby 'the necessary stocks of material—some of which will have to be rejected—are accumulated, the necessary plants and method of working—not a little of which will have to be perfected—are slowly and painfully elaborated.' Even if these attempts of his ultimately prove to be absolutely void of any positive experimentel value, they will at least serve to proclaim, at the right time, like the Mani-p-Pravala works of the Jains already referred to, that this way does not lie the progress of Tamil Prose.

Lastly, he has to say a word testifying his indebtedness, in point of Criticism to Prof. Saintsbury in particular. Like a schoolboy, he has freely borrowed from that eminent English literary critic, and used, in various ways, in this Preface and his explanatory notes in Tamil, many a critical phrase and estimation and one or two descriptions of literary situations. He finds it possible to mark out only some of them and regrets his inability to differentiate the rest, as they are, in most cases, made to do their duties, as it were, inextricably mixed up with his own poor language.

Triplicane,
June, 13, 1926.

A. BALAKRISHNAN.

என் நண்பர்களுக்கு ஒரு வார்த்தை

அகப் பொருள்களையும் புறப் பொருள்களையும் உள்ளபடி கூறும் நூல்கள் போல் அன்றி, இலக்கியம், குறித்த ஓர் புலவனது உள்ளத்தைப்பற்றி நின்று, அவனுடைய சிறந்த எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துவதற்கு ஆகும் ஒரு கருவி என்றும்; மக்கட் தொகுதியில் ஒவ்வொரு சாரார் ஒவ்வொரு பாஷையைப் பேச்சிலும் வேறு வகையிலும் உபயோகித்தாலும், ஆன்ம விளக்கம் நிறைந்த பெரும் புலவர்கள் தத்தம் பாஷையை முழுமை என்று சொல்லும் ஓர் வகையில் உபயோகப்படுத்துவதும் தவிர, அவரவர்தம் சிறந்த கருத்துக்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் பொருந்தும்படி அதை ஆக்கி அமைத்துக்கொள்ளுகிறார்கள் என்றும்; ஒவ்வொரு பாஷையிலுள்ள இலக்கியங்கள், அதனதன் சொற்றொடர்கள், வழக்கு, போக்கு, நடை, ஓசை முதலிய கூறுகளையும் இயல்புகளையும் கையாள்கின்றன என்றும்; சிற்பி கல்லை வடிவப்படுத்துவது போலவும், ஓவியப் புலவன், நிறவேற்றுமைகளைக் கொண்டு, வடிவம் காட்டுவிப்பது போலவும், இயற் புலவன் தன் பாஷையைக் கொண்டு தனது உள்ளத்தைப் புலப்படுத்துகிறான் என்றும்; பாஷைகள் பலப் பலவும் பலப்பல தன்மையுடையனவாக, ஒன்றிலுள்ள சிறப்புக்கள் மற்றொன்றில் பெரும்பாலும் காணப்படுவதில்லை என்றும் விவரித்து, அந்தக் காரணங்களால், ஒரு பாஷையிலுள்ள ஓர் இலக்கியத்தை மற்றொன்றில் தகுந்தபடி பேர்த்து அமைப்பது முடியாத காரியம் ஆகும் என்பர் நுண்ணறிவாளர் சிலர்.§

எனினும், ஆன்ம விளக்கம் நிறைந்த பேராசிரியர்களின் நூல்கள், மக்கட் பிறப்பினர் யாவரும் அறியும்படியான பொதுத் தன்மை யுற்றனவாய் இருக்கின்றன ஆதலாலும்; தமிழும், ஆங்கிலம் போன்று, அதன் போக்கில், அவ்வளவு வன்மை அடைந்திராவிட்டாலும், தொன்றுதொட்டே வளமையடைந்த ஓர் செம்மொழி ஆதலாலும்; ஆங்கிலப் பெரும் புலவர்களின் இலக்கியங்களைத் தமிழில் ஒருவாறு பெயர்த்து அமைத்தல் ஒருதலையாகக் கூடாத காரியம் அன்று என்பது என் துணிவு. இதில் எடுத்துக்கொண்ட ஆசிரியர்கள் பலரும் பேரறிவு விளக்கம் நிறைந்தவரே ஆவர். இதில் தேர்ந்துகொண்ட கட்டுரைகள் எல்லாம் உயர்ந்த பொதுத் தன்மை வாய்ந்தனவே ஆகும். ஆனால்,

§ கார்டினல் நியூமன் (Cardinal Newman) என்னும் ஆங்கிலப் பேர் உரை ஆசிரியர் உள்ளிட்ட சிலர்.

முதல் நூல்களின் கருத்து முதலியவற்றைத் திரிபின்றிக் காட்டும் வகையிலும், தமிழ் மொழிக்கு ஊறு செய்யாது, பொருத்தம் படவும், பழமைப் படவும் சொல்லும் வகையிலும் பின் வருவன, எல்லா விதத்திலும், சிறந்திருக்கின்றன என்று சொல்லுவது கூடாததாகும். நான், முதலில், முடியும் என்று நினைத்த அளவுக்குக்கூட அவை மேற் சொன்ன வகையில் வரவில்லை என்பது உண்மை. என்றாலும், ஆங்கிலமும் தமிழும் ஆகிய இவ் இருமொழி களிலும் பெருந் தேர்ச்சியும், எடுத்துக்கொண்ட ஆசிரியர் களது புலமையின் பலதிறப்பட்ட கூறுகளை எல்லாம் தம் ஒருவருடையனவாகவும் உடைய ஒருவர் [illegible]ண்டாயின், அவர் அங்ஙனம் இரு வகையிலும் திற[illegible] பெயர்த்து அமைத்தல் கூடுவது ஒன்றாகும்.

எடுத்துக்கொண்ட நூலாசிரியர்க[illegible] தேர்ந்த நூல்களையே இங்கு மேற்கொண்டதாகச் சொ[illegible] இல்லை. பெருமரங்கள் பலவற்றை அவற்றின் ஏதோ [illegible] சிறு நுனிக் கிளைகளைக் கொண்டு காட்டுவிப்[illegible] எடுத்துக்கொண்ட கட்டுரைகளின் சுருங்கிய [illegible] கருதியும், எனது கல்வியின் எளிய தரத்தைக் [illegible] அவை அங்ஙனம் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் [illegible] உரை நடை வளர்வதற்கு இவை போல்வன உதவும் [illegible] ஆங்கில முன்னுரையில் நான் சொன்ன காரணம் [illegible] அன்றி, பொய்ம்மையும், மினுக்கும், இழிவும் மலிந்த சி[illegible] ஆங்கில நூல்கள் தமிழில் பெயர்க்கப்பட்டு, தமிழ் நாட்[illegible] சிறுவர் சிறுமியர்களுடைய கைகளில் மட்டுமே அல்லா[illegible] கல்வியில் விருப்பமுடைய வயது முதிர்ந்தவர்களி[illegible] கைகளிலும் அவை காணப்படுவது கண்டு, வருந்தி, பி[illegible] வருவன போன்றவற்றை அவர்கள் காணுவது ஓர் வகையி[illegible] இன்றியமையாத ஒரு பரிகாரமாகும் என்று கருதியும் நான் இம் முயற்சியில் ஈடுபட்டேன். ஆனால், இவற்றைப் படிக்க விரும்பும் என் நண்பர்களுக்கு, நூல்கள் எனப்படுபவை, காலம் போக்குவதற்காக ஒருமுறை மேலோட்டமாகப் படித்து எறியப்படுவதற்காக அல்லாது, பலமுறை பயின்று உளத்தெளிவு அடைவதற்காகவே ஏற்பட்டிருக்கின்றன என்னும் முது மொழியை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

ஆங்கிலம் பிறமொழி யாதலால், எவ்வளவு ஆர்வத் தோடு நான் அதைப் பயின்றதாக நினைத்தாலும், அதைக் கையாளும் வகையில் குறைகள் பல இருந்தே தீரும் ஆகையாலும்; தமிழைப் பழைய முறையில் ஓர் ஆசிரிய

ரிடமும் பயிலாது, ஆங்கிலம் கற்கும் முறையைப் பின்பற்றி ஏதோ தோன்றியபடி எல்லாம் தாய் மொழி என்னும் உரிமை கருதிப் படித்தேன் ஆதலாலும்; அப்படிப் படித்துக் கொள்வதற்கு வேண்டிய சிற்சில கருவி நூல்கள்தாமும் தமிழில் இல்லை என்னும்படி அருகியிருப்பதாலும்; இவ் இரு பக்கங்களிலும் இருந்து உண்டாகக்கூடிய குறைகள் பல இம் மொழி பெயர்ப்பின் கண் மலிந்திருப்பதை, இவ் இரு மொழிகளையும் வரன் முறையாகத் தேர்ந்த புலவர்கள் அறிவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. என்றாலும், மேற்கொண்ட ஆசிரியர்கள் பலரும் பொய்யடிமை யில்லாத புலவர்கள் ஆதலால், அவர்களுடைய அழகு ததும்பிய மூதுரைகள், எவ்வளவு குறைவான சொற்போக்கினால் சொல்லப்பட்டாலும், தமது இயல்வன்மையால், விளக்கமுற்றுத் தோன்றும் என்னும் ஒருவித நம்பிக்கையைக் கொண்டு இவற்றை இப்போது வெளியிடத் துணிந்தேன். தமிழ்ப் புலவரும் மற்றையரும் இவற்றிலுள்ள குற்றங்கள் எல்லாவற்றையும் என்னுடையனவாகக் கொண்டு, அவற்றைப் பொருட்படுத்தாமல், எடுத்துக்கொண்ட பேராசிரியர்களின் உயர்ந்த அறிவு விளக்கத்தைக் கருதி மதித்து, குணமுள்ள வரையில், இந்நூலைப் பயன் படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

திருவல்லிக்கேணி,
அக்ஷய ஆண்டு வைகாசி மீ 31 உ. } ஆ. பாலகிருஷ்ணன்.

மறு பதிப்பின் முன்னுரை

'பருந்தும் நிழலும்' என்னும் இச் சிறு நூல் என் உள்ளத்தில் உருக்கொண்ட காலம், எளியேன், ஷேக்ஸ்பியர், கார்லைல்; எமர்சன், தோரோ; கேட்டே, ஹைனே; வால்ட்டேர், ரூஸ்ஸோ; மட்ஸீனி, டால்ஸ்டாய்; பிளேடோ, அரிஸ்டாட்டல் உள்ளிட்ட பலப்பல மேல் நாட்டுப் பேராசியர்களின் நுண்மாண் புலமை செறிந்த உலகப் பெருஞ் செந் நூல்களிலும்—காளிதாசன், பவபூதி முதலிய வடமொழிப் பேராசிரியர்கள்தம் இன் சுவை நிரம்பித் துளும்பும் பெருமிதமான நூல்களிலும்—பொய்யடிமை இல்லாப் பழந் தமிழ்ப் பேராசிரியர்களின் உயிர்ப்படிவங்கள் எனக் காணும் ஒப்புயர்வற்ற சங்கப் பெருநூல்களிலும்—தெய்வப் புலமையால் இயன்று, நம் செந்நீரோடு கலந்து, நம் நெஞ்சத்தில் தவிசேறி இருக்கும் திருக்குறளிலும்—புலவர் பெருமகனுர கம்பருடைய உயிர் ஓவியங்களிலும்—நுண்புலன் நிறைந்து விளங்கும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களது அழகொழுகும் மனோன்மணீயத்திலும் அளவிறந்து படிந்து, அவற்றின் உட்புரைகளில் சென்று சென்று, அவற்றின் புலன் நுட்பங்களையும் அறிவுரைகளையும் அறவுரைகளையும் ஆன்ம அநுபவங்களையும் நுகர்ந்து தேக்கி இன்புற்றுச் சற்றே இறுமாந்தும் இருந்த என் வாழ் நாளின் சிறு காலை ஆகும். இந் நாளில்தான், "விஜய காருண்யம்" என்னும் கதை நூலினையும், "பழந் தமிழரின் மணவினை" என்னும் அகப் பொருள் ஆராய்ச்சி நூலினையும், அச்சுக்கு வாராத வேறு சிற்சில நூல்களையும் எளியேன் வடிவப்படுத்தல் நேர்ந்தது. ஆனல், இவை உருவப்பட்டுக் கொண்டிருக்கும் போதே, என் உள்ளம், தேவார திருவாசகங்களிலும், திரு மந்திரம் திரு அருட்பாவிலும், பட்டினத்தடிகள் அருணகிரியார் தாயுமானப் பெருமானுர் மெய்ம் மொழிகளிலும், பதஞ்சலிமுனிவர் ஔவைப் பிராட்டியார் மாபெரு யோக நூல்களிலும், நாலாயிரப் பிரபந்தம் உபநிஷதங்கள் விவிலியம் குர்-ஆன் முதலிய தெய்வ நூல்களிலும் சென்று தோய்ந்து, அவை எல்லாவற்றின் உயிர்நாடியாக விளங்கும் தயாமூல தன்மத்தில் நிலைத்து, எனக்கு அதுகாறும் இருந்த ஆசிரிய மனப்பான்மையை வேரோடு களைந்துவிட்டது. இதன் பயனுக, உயிர் - இரக்கமே ஓர் வடிவங் கொண்டு வந்தது என்னும்—உள்ளந்தாள்

நின்று உச்சி அளவும் நெஞ்சாய் உருகாநிற்கும்—இராமலிங்க அடிகளாரின் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திருஏடுகளைத் தேடிச் சேர்ப்பதிலும், அவற்றைத் தொகுத்து வகுப்பதிலும், வகுத்தவற்றை அச்சிடுவதிலுமே என் முயற்சி சென்றது; சென்று கொண்டிருக்கிறது. இங்ஙனம் வகுத்த திருஅருட்பாப் பகுதிகள் பன்னிரண்டும்§ அடிகளார் உருவப் படுத்திய—அவைதம் தெள்ளிய பால்போன்ற தூய்மையான—அதாவது, நடைமுறையில் பெருவாரியாகக் காணும் குற்றங் குறைகளும் முறை பிறழ்ச்சிகளும் அற்ற — வடிவத்தில், எல்லார்க்கும் எக்காலத்தும் எளிமையாகக் கிடைக்கும் வண்ணம் ஒரு நிலைபெற்ற அற நிலையம் வகுப்பதும் என் வாழ்க்கையின் முடிவான குறிக்கோளாகும். இந்தச் செந்நெறியின் ஒரு கூருகவே இந்நூலை இப்போது மறுமுறையாக வெளிப்படுத்துகிறேன். இது நிற்க.

'பருந்தும் நிழலும்' எனப் பெயரிய இச் சிறு நூலை, நுண்ணறிவும் ஆழ்ந்தகன்ற கல்வியும் நன்னெறியும் உடைய தமிழ்ப் புலவர்களும் தமிழ்ப் பெருமக்களும், அன்னூர் நிறைந்த நம் நாட்டுப் பல்கலைக் கழகங்களும் வரவேற்றுப் பாராட்டியதும் பாராட்டுகிறதும் குறித்து, அவர்களுக்கும் அவைகளுக்கும் எளியேனது உளங்கொண்ட நன்றி உரியதாகுக. இந்நூல் வெளிப்படுவதற்குமுன் இதை நுணுகிப் பார்த்து இதற்கு அகங்கனிந்த ஆசி அளித்தவர்கள் மூவர் பேராசிரியர்கள் : திருமணம் செல்வக்கேசவராய முதலியார் அவர்கள், மறைமலை அடிகளார் அவர்கள், அநவரத விநாயகம்பிள்ளை அவர்கள். இந்நூல் வெளிவந்த இரண்டோர் ஆண்டுகளில், திருவாங்கூர் அரசில் மொழிபெயர்ப்பாளராக இருந்த பெரியார் ஒருவர் இதில் ஒரு பகுதியாகிய "மகளிர் மேற்ருய முடிவுரை" என்னும் பேராசிரியர் ரஸ்கின் அவர்களின் கட்டுரையை மலையாள மொழியில் பெயர்த்துக்கொள்ள என் சம்மதியைப் பெற்றுக்கொண்டார். முப்பதாண்டிற்கு முன் இந்நூல் முதல் முறை அச்சான அச்சுக் கூடத்தில் அச்சுக் கோப்பதில் தொழிற்பட்டுக் கொண்டிருந்த இளமகனுர் ஒருவர், சிலகாலம் கழித்து, இதில் மற்றும்

---

§ இவை பின் வருவனஆம்:

1. *கீர்த்தனைப் பகுதி* 2. *வசனப் பகுதி.* 3. *வியாக்கியானப் பகுதி.* 4. *உபதேசப் பகுதி.* 5. *திருமுகப் பகுதி.* 6. *தனிப் பாசுரப் பகுதி.* 7. *பெருநூல் பகுதி.* 8. *திரு ஒற்றியூர்ப் பகுதி.* 9. *திருத் தணிகைப் பகுதி.* 10. *பூர்வ ஞான சிதம்பரப் பகுதி.* 11. *உத்தர ஞான சிதம்பரப் பகுதி.* 12. *சித்தி வளாகப் பகுதி.*

ஒரு பகுதியாய "புலமைப் பேரின்பம் பெறும் உண்மை" என்னும் பேராசிரியர் எமர்ஸன் அவர்களின் கட்டுரையைத் தம் பெயரின் கீழ்த் தமது மொழி பெயர்ப்பென ஒரு பெயர் போன பத்திரிகையில் அச்சிட்டு வந்திருக்கிருர்! இங்ஙனம், இவர் தம் கூட்டாளிகளும் இந்நூலின் மூலத்தின் முன்பின் உரைகளின் ஏனைய பகுதிகளையும் தம் தம்முடையனவாகப் பங்கிட்டுக்கொண் டிருக்கிருர்கள் போலும்! இப் பதிப்பில் இம் முன்னுரையோடு சேர்த்திருக்கும், என் உரிமை நண்பர்கள்—நுண்ணுணர்வும், பரழ்ந்தாழ்ந்த கல்வியும், நுணங்கிய கேள்வியும், நன்னெறியும் கொண்டவர்கள்—இருவர்களின் மனமுவந்த வாழ்த்துரைகள், நெடுங் கால அளவில், முன்னும் பின்னுமாகக் கிடைத்தன. இந் நூலின் சிறப்புப் பாயிரத்தோடு இவ் வாழ்த்துரைகளும் இந் நூலிற்கு ஓர் உரைகல்லாக இயங்கித் திகழ்வது காண்க. இங்குக் கூறிய இவற்ருலும் பிறவாற்ருலும், இந் நூல் ஓரளவிலாவது உயிர் உரம் வாய்ந்திருக்கிறது என்றும், அரும்பெருங் கல்வி கற்று நன்னெறிக்கண் நிற்கும் உள்ளங்களையே அன்றி, அங்ஙனம் கல்லாதார் நில்லாதார் உள்ளங்களையுமேகூட ஒரு வகையில் ஈர்க்கும் செந்நீர் நாடி தெறிக்கும் கன்னித் தன்மையது என்றும் காண்கிறேன். எனக்கு இது போதும்.

இனி, இந்நூல் இம்முறை அச்சானபோது அச்சுத்தாள்களைத் துருவிப் பார்ப்பதில் எனக்கு உளமுவந்து துணை புரிந்த நண்பர்கள் மூவர். அவர்கள் திருவாளர்கள் நுண்ணறிவும் புலனுட்பமும் வாய்ந்த வில்வாரணி பச்சையப்பன் அவர்களும், சிறந்த இளம் வித்துவான்கள் இ. பா. வேணுகோபாலன் அவர்களும், நா. அறிவழகன் அவர்களும் ஆவர். இதை அழகுபட, நன்கு அச்சிட்டுதவியவர் அன்பர் திரு. செ. மெ. பழனியப்பா அவர்கள். இவர்கள் அனைவர்க்கும் என் மனமார்ந்த அன்பும் நன்றியும் எந்நாளும் உரியன. இறைவன் அவர்களுக்கு நீண்ட வாழ்வையும் எல்லா உயர் நலங்களையும் அருள்வானுக!

ஆ. பாலகிருஷ்ணன்.

வாழ்த்துரை

1.

"கலா நிலயம்" என்னும் செந்தமிழ் வாரத்தாளினை வளர்த்தவரும் அட்வொகேட்டும் ஆன

திருவாளர்

டி. என். சேஷாசலம், பி. ஏ., பி. எல்.

அவர்கள் கூறும் ஆசி.

(1928)

...ஆன்ம உணர்ச்சியடைந்து பொலிவுபெற்று விளங்கிய மேதாவிகள் உய்த்துணர்ந்து எழுதிவைத்த நூல்களே ஆங்கிலேயரின் மெய்த்தன்மை யாதெனக் காட்டுவதோடு அவைகளைக் கற்பதால் நமக்கு அளவிலா நன்மையும் பயக்கும். ஆங்கிலம் கற்றறியாத் தமிழருக்கு அன்னவித நூல்களை மொழிபெயர்த்துத் தருவோர் இருவருக்கும் பேருதவி செய்கின்றவராவர்.

அத்தகைய உதவியைச் செய்துவைக்க நமது நண்பர் ஸ்ரீமான் ஆ. பாலகிருஷ்ணபிள்ளை 'பருந்தும் நிழலும்' எழுதித் தந்தார். இதில் கார்லைல், எமர்ஸன் போன்ற ஆங்கிலப் பேரறிஞர் பன்னிருவர் கட்டுரைகள் அடங்கி யிருக்கின்றன. அன்னோர் எழுதிய நூற்கள் கடல்போன்று அளவிலாதன வாயினும், நமது நண்பர் அக்கடலுள் குளித்து முத்தைத் திரட்டினாற் போல் நடையின் பெருமையாலும் கருத்தின் அழகாலும் வாய்மையின் நிலையாலும் உயர்ந்த கட்டுரைகளையே தேர்ந்தெடுத்துத் தமிழால் தமிழருக்குப் பயன்படுமாறு செய்த விதத்தை நினைத்து மகிழ்கின்றோம். பருந்து செல்வழி நிழலும் தவழுமாறு போலக் கருத்தைத் தொடர்ந்து உரைநடையும் பயின்றுவரும் எனும் குறிப்பால், இம் மொழி பெயர்ப்புக் கட்டுரைத் தொகைக்கு, அப் பெயர் கொடுத்தார்.

நூலளவு உரையும் வரைந்து இவர் கட்டுரையை விளக்கி வைத்த திறத்தைப் பெரிதும் பாராட்டுகின்றோம். அவ்வந்த ஆசிரியர் தன்மையும், கட்டுரையின் சுருக்கமும் வரைந்து, கருத்தும் வழியும் இதுவெனக் காட்டி, அரும்

பொருள் விளக்கத்தோடு இவர் எழுதியுள்ள உரைப்பாகம் கூடவே யிருப்பதால், நூலைப் படிக்கும்போது பொருள் விளங்கவில்லையே என்று யாரும் கைசோர வேண்டா.

...அவரது உரையின் உதவியாலும் ஒருமுறைக்குப் பன்முறை ஆழ்ந்து படிப்பதாலும் பொருள் புலப்படாது போகாது. இந் நூல் மெய்வருத்தக் கூலிதரும். படிக்கின்ற வர்கள், பொதுவாய்ப் பொருள் விளங்காத இடமெல்லாம் எழுதியவர் பிழையென்று எண்ணித் திருப்தியடைந்து புத்த கத்தை அவமதித்து விடுகின்றனர். தமக்கே சிறிது புத்தியோ பழக்கமோ கவனமோ முயற்சியோ குறைவா யிருப்பதாற்றான் விளங்கவில்லை என்று எண்ணுவதும் தகும். ஆங்கிலம் கற்றவர்கள்தாம், பி. ஏ. பட்டமும் பெற்றவர்கள் தாம், எமர்ஸனையும் டி குவின்ஸியையும் எடுத்த மாத்திரத் தில் படித்துப் பிரயாசை யில்லாமல் அர்த்தம் தெரிந்து கொள்ளக் கூடுமா! நூற்றிலே ஒருவர்க்குத்தான் அவை தெளிவாக விளங்கும். முதல்நூல் எளியதாயிருந்தாலே கூட அதைத் தெளிந்த நடையில் மொழிபெயர்ப்பது வெகு கஷ்டம். அப்படியிருக்க அந்நூல்கள் ஆதி பாஷையிலேயே கடினமாயிருக்கப் பிரதிபாஷையில் சுலபமாக வந்துவிட வேண்டுமென்று எண்ணுவது நியாயமல்ல...

தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒருங்கே வல்ல ஸ்ரீ அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள் வியந்தெழுதிய சிறப்புப் பாயி ரம் ஒன்றே இந்நூலின் பெருமைக்குச் சான்று போதும்...

வாழ்த்துரை

2.

தமிழ் இலக்கிய இலக்கண நூல் போதகாசிரியரும் கவர்ன்மெண்டு அசிஸ்டண்டு செக்ரடரியாக இருந்தவரும் ஆன

திருவாளர்

கே. சோமசுந்தரம் செட்டியார், பி. ஏ.

அவர்கள் கூறும் ஆசி.

(1956)

...எது எது அழகுள்ளதோ, மனத்தைக் கவர்ந்து பிணிக்கின்றதோ, நம்மை நம் நிலையினின்றும் உயர்த்துகின்றதோ, அது அதுதான் இலக்கியம். இவ்வாறே மனத்தைப் பிணித்து உயர்த்துகின்ற கட்டுரைகளோ, கவிகளோ, இசை நாடகங்களோ, இலக்கியங்களாகும். நந்தம் அமிழ்தினும் இனிய தமிழிலே கவிதைகள்தாம் அதிகம். உரைநடை இலக்கியங்கள் சிலவே. ஆங்கில மொழியில் கவிதா இலக்கியங்களோடு உரைநடை இலக்கியங்களும் பல உள.

அப்படிப்பட்ட இலக்கியக் கட்டுரைகளில் மணி போன்றன பன்னிரண்டு, 'பருந்தும் நிழலும்' என்னும் இம் மொழிபெயர்ப்புப் புத்தகத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு கட்டுரையும் தனக்குத்தானே உவமம், ஒப்பு. ஒவ்வொன்றும் தனி இலக்கிய விருந்துத் துண்டு. அவ் விருந்துண்ண வம்மின் நண்பர்காள். நந்தம் உடல் பூரிக்கும், மனம் எழும். விருந்தளிக்கும் ஆசிரியர்கள், தங்கள் துறையில் ஒப்பு உயர்வு அற்றவர்கள். கட்டுரைகள் சொல்லாழம் கருத்தாழம் கொண்டவை என்று சொல்ல வேண்டுவதில்லை.

ஆங்கில மொழியிலிருக்கும் அக் கட்டுரைகளைத் தமிழில் வெகு திறமையோடு அமைத்துத் தந்திருக்கின்றார்கள் நம் நண்பராய புலவர் பெருந்தகை ஸ்ரீ. ஆ. பாலகிருஷ்ணப் பிள்ளையவர்கள்.

வெகுவாக மொழிபெயர்ப்புக்கள் மூலபாடத்திற்கும் மொழி பெயர்ப்புக்களுக்கும் யாதொரு அடைவுமில்லாமலோ மாறுதலமைந்தோ காணும். ஆனால், இங்கேயுள்ள மொழிபெயர்ப்புக்கள் ஒன்றுபோல் எல்லாமும் ஆங்கிலத்தில் காணும் வண்ணம் காண்கின்றன. நம் இல்லங்களில் குழந்தைகள் பிறந்தால் 'இது தகப்பனை அப்படியே உரித்துக்கொண்டு வந்திருக்கிறது' அல்லது 'இது தாயை உரித்துக்கொண்டு வந்திருக்கிறது' என்று சொல்லுவது வழக்கம். அஃதே போன்று, இம் மொழிபெயர்ப்புக்கள் ஆங்கிலத்திலுள்ளவற்றை அப்படியே உரித்துக்கொண்டு வந்திருக்கின்றன. மொழிதான் வேறு. ஆனால், சொல்லுக்குச் சொல்லு, வாக்கியத்திற்கு வாக்கியம் உள்ளதோர் சுவையற்ற மொழி பெயர்ப்பும் அன்று. கருத்துக்களின் அழகும் ஆழமும் ஒருவிதச் சிதைவுமின்றி, அவைகள் மூலபாடத்தில் எப்படிச் சுவைதருமோ அப்படியே இம் மொழி பெயர்ப்பும் தருகிறது. இஃது ஒரு இறும்பூதினும் இறும்பூது. இது போன்ற மொழிபெயர்ப்பு இதுவரை வந்ததில்லை. இனியும் வருமோ என்ற ஐயம் பெரிதுமுளது. இஃது ஒரு செயற்கரிய செய்கை.

ஆங்கில இலக்கியத் துறைகளில் நன்ருகப் படிந்தவர்களுக்கு இக்கட்டுரை மொழிபெயர்ப்புக்கள் பெரியதொரு விருந்தாகும். அவர்கள் இம் மொழிபெயர்ப்பினை நன்கனம் வரவேற்பார்கள் என்பது திண்ணம். அந்த மூல ஆசிரியர்களை அப்படியே நூற்றுக்கு நூறு தமிழ்மொழி வாயிலாக நமக்குக் காட்டித் தந்திருக்கிருர் மொழிபெயர்ப்பாளர். கார்லைல், டால்ஸ்டாய் போன்றவர்களுடைய ஆழ்ந்த கருத்துச் செறிவுகளும், சொற்போக்கும், உள்ளப் பண்பாடுகளும் உயர்நிலை கொண்டன. வாக்கியங்களெல்லாம் பேசுவதுபோலிருக்கும். பக்கம் பக்கமாக அரிய கருத்துக்கள் ஒரே நீளமாக ஓடும்; ஆனால், ஆங்காங்குச் சிறிது நின்று மனத்தை ஈர்த்துக்கொண்டும் செல்லும். கார்லைல் நடை கரடுமுரடாகத்தான் இருக்கும். ஆனால் இரத்தம் தெறிக்கும் பேச்சு. சொற்களும் அவற்றிற் கேற்பனவாயிருக்கும். இலக்கியச் சுவை ததும்பும். கட்டுரைகளின் மூலபாடங்கள்தாம் அப்படியிருக்குமென்ருல் ஈண்டுள்ள மொழிபெயர்ப்புக்களும் அன்னதன்மையனவே. அத்தகைய அரிய மொழி பெயர்ப்புத் தந்த ஆசிரியர் பாலகிருஷ்ணப் பிள்ளை அவர்கள் நீடூழி வாழ்க! அவர்கள் தமது இளம்வயதிலேயே ஆங்கிலம் தமிழ் இலக்கியங்களில் துறை போகிய

வர்கள். இருப்பினும், அத்துணை இளம்வயதில் ஒப்புயர்வற்ற அரிய மொழி பெயர்ப்புத் தந்தது அருமையினும் அருமை. அவ் விலக்கியக் கருத்துக்களை மாணவர் குழாம் , தமிழ்வழி நன்கு ஏற்று நலமுறுவதாக. இது போன்ற மொழிபெயர்ப் புக்கள் இன்னும் தோற்றுமாறு விழைவோமாக.

மொழிபெயர்ப்புக்களை மேலே காட்டிய வண்ணம் புலமை சான்ற நந்தம் பிள்ளையவர்கள் அமைவுறத் தந்த தோடு நில்லாது, இந் நூலுக்கு முன்னும் பின்னும் நூன்முக வாயிலாகவும் உரைவாயிலாகவும் விளக்கங்கள் தந்து உதவி யுள்ளார்கள். இவைகள் தாமே தனிப்பாடமாகப் படித்தற் குரிய திறம் வாய்ந்தனவாக இருக்கின்றன.

நூன்முகப் பகுதியில் தமிழ்மொழியில் உரைநடை எவ்வாறு வளர்ந்து வந்தது என்பதனை வரன்முறையாகத் தந்திருக்கின்றார்கள்... தமிழில் உரைநடை இலக்கியங்கள் பெரிதும் இல்லாக் குறையை நிரப்புவதுபோல் பிள்ளையவர் கள்தாமும் மொழிபெயர்ப்பு வாயிலாக இலக்கியக் கட்டுரை கள் பெய்து கொடுத்துள்ளார்கள். இவற்றை எல்லாம் கண் கொண்டு காண்க.

இனி, உரைப்பகுதியிலும் தேவார திருவாசகங்களினின் றும் திருஅருட்பாவினின்றும் ஒப்புமைகள் காட்டியிருக்கின் றார்கள். இவைகளெல்லாம் மிகமிக உயர்ந்த சிறந்த இலக் கியங்களாகும். வீணுகப் பெய்த ஒப்புமைகள் அல்ல, இன்றியமையாதனவே. நூலினுள்ளும் அடிக் குறிப்பு வாயிலாகச் சீரிய இலக்கிய ஆசிரியர்களிலிருந்தும் எடுத்துக் காட்டுக்கள் தந்திருக்கிறார்கள். தமது மொழி பெயர்ப் புக்கு விளக்கந் தருவது இன்றியமையாதது என்னும் கருத்துட்கொண்டு, பேருழைப்புச் செய்து பெருநோக்குடன் விளக்கங்களைத் தந்துள்ள மனப்பான்மையும் திறனும் மிகவும் பாராட்டற்குரியன.

இவ் விளக்கங்களெல்லாம் மொழிபெயர்ப்புக் கட்டுரைப் பாவைக்கு ஆடை அணிகலன்கள் இட்டு அழகுக்கு அழகு செய்வது போலத் திகழ்கின்றன.

இத்தகைய கட்டுரைகளையும் விளக்கங்களையும் ஊன்றிப் படித்து நலமுறுவோமாக. வாழி பிள்ளையவர்கள்! வாழி! அவர்கள்தம் நூல்!

உரிமை உரை

சென்னைப் பெரிய கோர்ட்டு வக்கீலும், அதன் நியாயாதிபதிகளில் ஒருவராகச் சிலகாலம் இருந்தவரும் ஆகிய திருவாளர் திவான் பகதூர். பி. ஏ., பி. எல்., வே. மாசிலாமணிப் பிள்ளை அவர்களுக்கு — அவர்கள் என்னிடத்தில் கொண்டிருக்கும் ஒழியா அன்பினையும், தாய் உருக்கம் போல்வதோர் இயல்பில், அவர்கள், பலதரம், எனக்குச் செய்திருக்கும் நலங்களையும் முன்னிட்டு, அவர்களைக் குறித்து, என் உள்ளத்தில் தோன்றி நிலை பெற்றிருக்கும் அன்பும் நன்றியறிதலும் ஆகிய உணர்ச்சிகளின் ஓர் வெளி நிகழ்ச்சியாக— பருந்தும் நிழலும் எனப் பெயரிய இச் சிறு நூலை, நான் மனமுவந்து உரிமையாக்கினேன் என்க.

ஆ. பாலகிருஷ்ணன்.

நூற்பிரிவு

இனம்	பக்கம்
சிறப்புப் பாயிரம்	1
Preface (மொழிபெயர்ப்பும் தமிழ் உரை வளர்ச்சியும்) ...	4
என் நண்பர்களுக்கு ஒரு வார்த்தை ...	20
மறுபதிப்பின் முன்னுரை ...	23
வாழ்த்துரை, 1. ...	26
வாழ்த்துரை, 2. ...	28
உரிமை உரை ...	31
நூற்பிரிவு ...	32
கடவுள் வணக்கம் ...	34
1. நக்கீரன் கனவில் கண்ட உண்மை (The Apologue of Critobulus by *Landor*)	
மூலம் ...	1—4
உரை ...	141—143
2. நகர்க்கண் ஓர் இரவு (A City Night Peace by *Goldsmith*)	
மூலம் ...	4—7
உரை ...	144—145
3. பாலை (From Eothen of *Kinglake*)	
மூலம் ...	8—12
உரை ...	146—147
4. ஓர் துறவியின் மக்கள் வேட்கை (Dream Children—a Reverie by *Charles Lamb*)	
மூலம் ...	12—19
உரை ...	147—151

இனம்		பக்கம்
5. மூவர் துயர மகளிர் (The Three Ladies of Sorrow by *De Quincey*)		
	மூலம்	... 19—25
	உரை	... 151—157
6. ஆசிரியர் ஹைனே அவர்களின் ஓர் திருமுகம் (Rossini and Meyerbeer by *Heinrich Heine*)		
	மூலம்	... 25—32
	உரை	... 157—162
7. ஆன்ம உருக்கம் ஈன்ற அறநிலை (From What to do? of *Tolstoy*)		
	மூலம்	... 32—40
	உரை	... 162—169
8. இன்பநிலை (From The Renaissance of *Walter Pater*)		
	மூலம்	... 40—47
	உரை	... 169—174
9. ஓர் துறவியின் தனிமை (Solitude by *Thoreau*)		
	மூலம்	... 47—64
	உரை	175—183
10. ஆசிரியர் கேட்டே (John Wolfgang Von Goethe by *Carlyle*)		
	மூலம்	... 64—78
	உரை	... 183—194
11. புலமைப் பேரின்பம் பெறும் உண்மை (Art by *Emerson*)		
	மூலம்	... 79—98
	உரை	... 194—207
12. மகளிர் மேற்கூய முடிவுரை (Lilies of Queens' Gardens by *Ruskin*)		
	மூலம்	... 99—140
	உரை	... 207—226

கடவுள் வணக்கம்

'என் போன் மனிதரை ஏன் அடுப்பேன்?
எனக் கெய்ப்பில் வைப்பாம்
பொன் போல் விளங்கும் புரிசடையான்றனைப்
போயடுத்தேன்;
துன் போர் அணுவும் பெறேன் இனியான்'
என்று சொல்லிவந்தேன்;
முன் போல் பராமுகம் செய்யேல், அருளுக,
முக்கணனே! (1)

சிவன் எனும் நாமம் தனக்கே யுடைய
செம்மேனி எம்மான்—
அவன் எனை ஆட்கொண் டளித்திடுமாகில்,
அவன் றனை யான்
பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து
பன்னாள் அழைத்தால்,
'இவன் எனைப் பன்னாள் அழைப் பொழியான்'
என் றெதிர்ந்திடுமே. (2)

நானே கருதின் வர நாடார்; சும்மா இருந்தால்,
தானே அணைவர்: அவர் தன்மை என்னே!
பைங்கிளியே! (3)

உள்ளத்தின் உள்ளே ஒளித்திருந்(து) என்
கள்ளம் எலாம்
வள்ளல் அறிந்தால் எனக்கு வாயும் உண்டோ?
பைங்கிளியே! (4)

சிறை யாரும் மடக்கிளியே! இங்கே வா,
தேனொடு பால்
முறை யாலே உணத்தருவேன்: மொய் பவளத்
தொடு தரளம்
துறை யாரும் கடற்றோணி புரத்தீசன்—துளங்கும்
இளம்
பிறையாளன்—திருநாமம் எனக்கொருகால்
பேசாயோ? (5)

தினைத்தனை யுள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே,
நினைத்தொறும், காண்டொறும், பேசுந்தொறும்,
எப்போதும்,
அனைத் தெலும்(பு) உண்ணெக, ஆனந்தத்தேன்
சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய், கோத்தும்பீ! (6)

பருந்தும் நிழலும்

1. நக்கீரன் கனவில் கண்ட உண்மை

"ஒரு வனத்திடையில் நான் அலைந்துகொண்டிருக்கும்போது, திடீரென்று ஒரு குளத்தினிடம் வந்து சேர்ந்தேன். மிகச் சிறந்து தெளிந்த நீர் உள்ளதாயிருந்த அக் குளத்தின் ஓரங்களில் இல்லாது, நடுவில் மட்டும், சில வெண்ணிற மலர்களும் அகன்ற இலைகளும் இருந்தது என் ஞாபகத்திற்கு வருகிறது. அப்போது, திடீரென்று, என் பின்னிருந்து மிக்க அழகிய வடிவம் ஒன்று வந்து எனக்கும் குளத்திற்கும் இடையே நின்றது. எனக்கு யாதொன்றும் தோன்றவில்லை. அதன் இளமையான தோற்றத்தாலும், அதன் முன்னம் நீர்ப்புறம் இருந்ததாலும் அதனுடைய பால் இன்னதென நான் அறியவில்லை. பளிக்கறையில் நின்ற மணிமேகலையே போன்ற அது, சாய்ந்து, நீரை உற்றுப் பார்த்துத் தன் சாயலை நோக்கிய வண்ணம் இருந்தது. பிறகு குனிந்து, ஆடம்பரம் இல்லாத மலர்கள் சிலவற்றால் தன்னை அலங்கரித்து, தனது அழகிய அடிகளால் மிதிபட்ட மற்றவைகளிடம், அதை முன்னிட்டே அதிகப் பற்றும் அதிக அன்பும் கொண்டதாக அது தோன்றியது. அவ்விதம் செய்தபிறகு, அது, திரும்பி, குறிப்பில்லாததும், வெறுப்பு-விருப்பு இல்லாததும் ஆன தோற்றத்தோடு என்னை நோக்கிற்று. இப்போதுதான் அஃது ஓர் பெண்ணென நான் அறிந்தேன்.

"அறிதலும், நான் அம் மங்கையைப் பார்க்கப் பார்க்க எனக்குக் காதல் மேலிட்டுத் தியக்கம் உண்டாயிற்று. அவள் அதை உணர்ந்து புன்னகை புரிந்தனள். அவள்தன் கண்கள் பெரியவையும் சாந்தமானவையும்

ஆக இருந்தன. தியக்கம் கொண்டனபோல் மிகவும் எண்ணமுள்ளனவாகவாவது, எளிதில் வயப்படுத்தப் படும் எனத் தோன்றும்படி மிக்க விளையாட்டு நோக் குடையனவாகவாவது அவை இல்லை. அவளது முகம் உயர்வானில் ஏகும் ஒளி நிறைந்த ஓர் மேகத்தின் சாயலே எனத் தோன்றும்படி அவ்வளவு உயரிய விருப்பமான நிறத்தால் தோய்ந்திருந்தது. அவள் இருந்த தன்மையில் இருந்து, உழைப்புக்கு முற்றும் ஏற்றவளா யிருப்பினும், அவள் ஓய்வு கொண்டிருக்க மனங்கொண் டிருப்பதாக அறிந்தேன். நான் அவள் தன் கைகளைப்பற்றி யிருப்பேன். அதற்குள் அவள் 'சற்றுப் பொறு: பார்க்கலாம்' என்று என்னை நோக் கினள். அவ்வண்ணமான தெய்வப் பார்வை மற்றெந்த ஆண் மகனுக்கும் கிடைத்திருக்க முடியாது. அப்படி நான் நினைத்ததையே அவளிடம் சொன்னேன். 'உன் பேச்சு நிரம்பவும் இனிமையாக இருக்கிறது' என்று அவள் மறுமொழி கூறினள். அதன் பிறகு, அவள் சாதாரணமானவள்என்றும் மனத்தளர்வு முகநய இச்சை ஆகிய இவைகள் உடையவள் என்றும் நினைத்து, நான் அவளுக்கு முகமன் கூற ஆரம்பித்தேன். அவள், தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு மறுமொழி ஒன்றும் தரா திருந்தனள். நான் எனது பொறுக்க முடியாத காதலை வெளியிட்டேன். அவள் சில அடிகள் அப்புறம் சென்றுள். 'எப்போதாவது ஒருதரம் அவளைப் பார்த்த ஓர் ஆடவன் பிறகு அவளில்லாது உயிர்வாழ முடியாது' என்று நான் உறுதி கூறினேன். அவள் மேலும் சில அடிகள் அப்புறம் நடந்தனள். 'அழியாத் தெய்வங்கள் மேல் ஆணை. நீ என்னை விட்டுப்போதல் அடாது' என்று நான் வருந்தினேன். அவள் என்புறம் திரும்பி அருளொடு பார்த்தனள். பிறகு தன் தலையை அசைத் தாள். 'அப்படியானுல் நீ வேருெருவனுக்கு உரிய வளோ! அதைச் சொல்! அதைச் சொல்!! அவ்வார்த் தையை உன் வாயினுல் ஒருதரம் உரை—உடனே நான் இறந்து படுவேனுக' என்று அலறினேன் நான். முன்னிலும் அதிக விசனக் குறிப்போடு அவள் இள நகை இயற்றி, 'ஓ நக்கீர! உண்மையில் நான் பிறன்

ஒருவனுக்கு உரியவளே. நான் ஓர் கடவுளுடையவள்' என்று மறுமொழி கூறினாள். அவள் இப்படிச் சொல்லும் போது மேலுலகத்திலிருந்து ஓர் காற்று வந்து என்னை ஊடுருவிப் பாய்வதேபோல் இருந்தது; மேலும் ஆத்திர முடையவர்கள் நடுங்குவது போல் நான் நடுங்கினேன். சற்றுப் பொறுத்து, 'நான் அதை நினைத்திருக்கலாம், தவறினேன். அப்படியானால் ஏன் என் முன் வந்து என்னை வருத்தல் வேண்டும்' என நான் கூவினேன்.

"அதன் பிறகு அவள் என்னோடு விளையாடவும் வேடிக்கை செய்யவும் ஆரம்பித்து, அவளது வயதிற்குத் தகுந்தபடியே அல்லது அவளது உறுதிக்கு உரியதன்றி என் கையை நாணங் காட்டாமலே அவளது மடி மீதுள்ள மலர்களின் மேல் வைத்தனள். அந்தக் குளத்து நீர் முழுவதுமேகூட அந் நொடியில் என்னிடத்து உதித்த வேட்கையைத் தணிக்க இயலாது. இளங் காற்றின் ஒலியோடு, சுற்றிலும் உள்ள பறவைகளின் ஒலியும் அவளுடைய குரலின் ஒலியும், முழுப் பெருக்கும் கூர்மையும் உள்ள ஒளியில் நிறம் தெளிவில்லாமல் இருப்பதுபோல், என் காதிற்குக் கலப்புடையனவாய்க் கேட்டன. அவள் எனக்கு மகிழ்ச்சி பொருந்திய பலப்பல சங்கதிகளைச் சொன்னாள். நான் அவற்றின் முற்பாகமும் பெரும்பகுதியும் ஆனவற்றை அறிந்தேனில்லை; ஆனால், நான் தெளிவாய்க் கேட்க முடிந்து, மிகவும் கவனமாய்க் கேட்டுக்கொண் டிருந்தவற்றின் இடையில், அவள், என் தலையிலிருந்து நரைத்த மயிர்களைக் களையத் தொடங்கி, மற்றவைகளுடைய நிறமும் அவ்வளவு விரும்பத்தக்கதாக இல்லை என்று எனக்குத் தெரிவித்தாள். உடனே என் உள்ளம் ஆழ்ந்தது. பின்னர் எனது ஓர் அவயவமாவது எனது ஓர் பகுதியாவது ஒவ்வொரு வகைக் குறைபாட்டை உடையதன்றாக இல்லை. ஆ க வே, நான் பெருஞ் சலிப்பெய்தி, 'நீ கடவுளிடம் பழகினவள்; நீ அவ்வணந்தான் நினைப்பாய்; ஆனால், மக்களுக்குள் நான் உறுப்புக் குறைவுள்ளவன் என்றாவது அழகில்லாதவன் என்றாவது கருதப்படவில்லை' என்று அலறினேன். என் வார்த்தைகளையாவது, எனது மன வெட்கத்தையாவது

எவ்விதத்தும் அவள் பொருட்படுத்தவில்லை. மேலும், அதே ஆர்ந்த குரலோடும், அதே இனிய முகத்தோடும், பின்னும் கொஞ்ச நேரம் என்னுடைய குறைபாட்டைப் பற்றிச் சொன்னபின் என்னிடம் அவளுக்கு அதிக அன்பு உண்டென்றும், அதையே போன்று நானும் அவளிடம் அன்புகொள்ள வேண்டும் என்றும் சொன்னாள். நான் கரையிலாக் களிப்போடு விடை கூறப்போகும் தருவாயில், தனது இளங் குறும்பு தூண்ட, அவள் வைத்து விளையாடிக்கொண் டிருந்த ஒரு முள்ளினை என் பின்புறம் தைத்தனள். நான் அதைப் பிடுங்க முயன்று வெட்கத்தோடும் கோபத்தோடும் குதிக்க, அதே நொடியில் எனது தோட்புறம் ஏதோ ஒன்று உறைவதாய் நான் உணர்ந்தேன். அஃது, பதித்த வயிரத்தில் செதுக்கிய எழுத்துக்களால் 'கடவுள் தமது மகள் உண்மைக்கு அளித்தது' என்று எழுதப் பட்டுள்ள ஒரு கையணி. சற்றுப்பின்பு எனக்கு எதிரில் சிறிது சேய்மையில் நின்று, 'நக்கீர! நான் உனக்குத் தகுதியில்லாதபடியாக மிக்க இளமையும் ஒருமைப்பாடும் வாய்ந்தவள். எனினும் நீ என்னை நேசிப்பையேல், எவ்விதத் துயரத்தையும் அடையாய்; இரு, நான் போய் வருகிறேன்' என்று அவள் இனிமையாகச் சொல்லிப் போயினாள்.''

---

2. நகர்க்கண் ஓர் இரவு

இரவு நாழிகை இருபதாயிற்று. அவிந்துகொண் டிருக்கும் திரி அகலின்கண் எழுந்தும் தாழ்ந்தும் எரிந்தது. தலையாரி தூக்க மயக்கில் மணி இன்னது என்பதையும் மறந்தான். வேலையாளரும் விசனமற்ற வரும் கலக்கமில்லாது உறங்கினர். அப்போது சிந்தனை, குற்றம், களியாட்டு, ஏக்கம் ஆகிய இவையன்றி ஏனைய விழித்தன அல்ல. குடியன் தன்னை அழிக்க விருக்கும் கிண்ணத்தினைப் பின்னும் ஒரு தரம் நிரப்புகிறான்; கள்வன் தன் இராச் சுற்றைச் சுற்றுகிறான்; தற்கொலை யாளன் தனது தெய்வீக ஆன்மாவை அழிப்பான், தன் குற்றம் நிறைந்த கையை ஓங்குகிறான்.

நான் எஞ்சிய இரவையும் பழம் புத்தகங்களின் ஏடுகளைத் தள்ளியாவது அல்லது தற்கால விவேகிகளின் சூழ்ச்சிகளில் உழன்ருவது கழிக்காமல், இத்தனிமையான வழிச் செல்வேனாக. எஞ்ஞான்றும் மாறுபாடெய்தும் வீண் பெருமை சில நாழிகைக்கு முன்னன்றே என் எதிரில் நடந்தனள். அவள் ஊர்கோலம் முடிந்ததும் தாறுமாருன குழந்தையே எனத் தனது நிர்ப்பந்தங்களோடு அடங்கி இருக்கின்றனள். சுற்றிலும் எவ்வளவு ஆழ்ந்த இருள் உறைகிறது! அவியும் விளக்கு ஒளி இறந்த மஞ்சட் கதிரை மெல்லென வெளிவிடுகிறது. ஒலியிடும் கடிகாரமும், தன் காவல் செலுத்திச் சேய்மையில் குரைக்கும் நாயும் அன்றி, வேறெதுவும் ஓசை யிடுகின்றதில்லை. மனிதனது வீண் பெருமை காரணமான ஆடம்பரம் முற்றிலும் மறந்தே போயிருக்கிறது. இதைப்போன்ற நாழிகை ஒன்று மனிதனது போலி உயர்வின் வெறுமையை நன்கு வெளிப்படுத்தா நிற்கும்.

இச் சிறிது காலத்தனிமையே எப்போதும் நிலைக்கும்படியும் இந் நகரமும் இந் நகரவாசிகளையே போற்குன்றி, ஒரு பாலை நிலமாக மாறும்படியும் ஆன காலம் ஒன்று வரும்.

எத்தனை நகரங்கள் இவ்வளவு பெருமை வாய்ந்தனவாக ஆர்ப்பரித்தன; இவ்வளவு உயரிய வெற்றியும் இவ்வளவு நடுவு நிலையற்றதும் இவ்வளவு கரையிலாததும் ஆன களிப்பும் வாய்ந்து களித்தன; அதா அன்றியும், ஆழ்கருத்தின்றிச் செருக்கோடு தாம் சாகாதிருக்கப் பிறந்தோம் என்று உறுதி கொண்டன! அவ்வாருய சிலவற்றின் இருப்பிடத்தைப் பின்னையோர் கண்டறிவதும் அரிதாயிற்று; மற்றும் சிலவற்றின் பாழ்பட்ட பயங்கரமான சேதத்தின் மீது அலைவர் மனங் கசிந்த யாத்திரிகர். அவர் அங்ஙனம் நோக்கும்போது அவருக்கு உலக மயக்கம் நீங்குகிறது; நிலையற்ற இவ்வுலக வாழ்க்கையின் நிலைமையை அவர் உணர்கின்றனர் :—

"அந்தோ! இப்போது பயனற்ற புல் பூண்டுகளால் மூடப்பட்டிருக்கும் இங்கேதான் உறைந்தது அவர்கள்

தம் கோட்டை; அங்கேதான் இருந்தது அவர்கள் தம் மந்திரக் கூடம்: ஆனல் இப்போதோ அஃது பலப்பல நச்சுயிர்களுக்கும் உறைவிடம்; கோவில்களும் கொட்டகைகளும் இங்கேதான் இருந்தன: இப்போதோ அவை குறிக்க முடியாது அழிந்து பாழ்பட்ட குவியல்; அவர்கள் அழிந்தனர். கொழுப்பும் சோம்பலும் பொருளாசையும் முதலில் அவர்கள் வலியைக் குறைத்தன; அரசாட்சியின் பட்டமும் பரிசும் குடிமக்களுக்குப் பயன் அளித்தவர்க்கு அல்லாது விநோதங் காட்டிப் பொழுது போக்குவார்க்கு அளிக்கப்பட்டன. அவர்களின் அளவற்ற செல்வமும் ஆடம்பரமும் பிறநாட்டினின்றும் படையாளரைக் கைசுட்டிக் கூப்பிட்டன. இவர்கள் முதலில் ஒருவாறு தடுக்கப்பட்டாலும், மறுபடியும் வந்து வந்து, விடா முயற்சியினல் வெற்றியடைந்து கடைசியில் தம்மைக் காக்க வலியிலாத அவர்களைக் குறிக்க முடியாத அழிவில் அமிழ்த்தினர்."

சில நாழிகைக்கு முன்னேதான் கூட்டம் நிறைந்திருந்த அத் தெருக்களில் யாவரே இருக்கின்றனர்! இஞ்ஞான்று இங்குத் தோன்றுமவர் தம்தம் பகல் வேஷத்தை இச்சித்தார் அல்லர்; அவர்கள் விகாரத்தை மறைக்க முயன்றார் அல்லர்; அவர்களது துன்பத்தை ஒளித்தனர் அல்லர்.

தெருக்களில் படுக்கை கொண்டும், பணம் மிகுந்தோரின் வாயிலில் இருந்து, நீங்காத துயரத்தினின்றும் கொஞ்ச நேரமேனும் விலக முயன்று கொண்டும் இருக்கும் அவர்கள் யாவரோ? அவர்கள் சுற்றம் அற்றவர், ஊர் திரிபவர், பெற்றோர் இல்லார். அவர்களது நிலைமை நியாயம் கிடைக்கக் கூடாதபடியாக மிகவும் தாழ்ந்திருக்கிறது; அவர்களின் துயரம் இரக்கத்திற்குங்கூடத் தகுதியற்றபடி மிகவும் மிஞ்சி யிருக்கிறது. அவர்கள்தம் கொடிய இடுக்கண் இரக்கத்தைவிட்டு, வெறுப்பையே மிகவும் பிறப்பிக்கிறது. கந்தல் போர்வையும் இன்றிச் சிலர் உளர்; நோயால் மெலிந்து உலர்ந்து உளர் பின்னும் சிலர்; உலகம் அவர்களிடம் உரிமை அற்றது; மக்கட்பொது அவர்கள்தம் பெருந் துன்பத்

தைக் கவனிக்காது, அம்மணத்திற்கும் பசிக்கும் அவர்களை இரையாக்கிற்று. இவ் ஏழைப் பெண்டிர்கள் எக்காலத்தும் இங்ஙனம் நடுங்கிக்கொண் டிருந்தார்கள் அல்லர். அவர்கள்தம் செவ்விய இளமையில் அழகுடையர் என்று பலதரம் முகமன் கூறி வஞ்சிக்கப்பட்டார். அவர்கள் கற்பும் ஒழுக்கமும், சிந்தனையற்றுக் கொழுப் பேறிய கொடியர்களால் அழிக்கப்பட்டு, ஈண்டு மாரிக் காலத்தின் கொடுமையை வலியின்றி அநுபவிக்க வெளியே துரத்தப்பட்டனர். ஒருவேளை, தங்களைக் கெடுத்தவர்களின் வாயிற்படியில் படுத்த வண்ணம், உணர்ச்சியில்லா மனமுடைய கொடியரையும், திட்டுவரே அன்றித் துயரத்தை நீக்க மனமிசையாத வன்கண்ணர்களையும் அவர்கள் கெஞ்சுகின்றார்கள் போலும்.

அந்தோ, நான் ஏன் மனிதனாய்ப் பிறந்தேன்? பிறந்தும், என்னால் நீக்கற்கரிய இவ்வறியர்களின் துன்பக் காட்சியை ஏன் நான் காணவேண்டும்? ஐயகோ, வசிக்க வீடில்லா வறியர்காள்! உங்களை உலகம் நிந்தனை செய்யுமல்லது, உங்களுக்கு ஓர் உதவியும் புரியாது. உயர்ந்த நிலைமையில் இருப்போரின் மிகச் சிறிய இடையூறும், செல்வமுடையாரின் கற்பனையான துன்பங்களும் சொல்வன்மையால் மிகப் பெரியனவாக ஆக்கப்பட்டு நமது கவனத்திற்கும் பரிதாபமான விசனத்திற்கும் அவர்கள் பாத்திரர் ஆக்கப்படுகின்றார்கள். கொடுங்கோன்மையின் கீழ்ப்பட்ட எல்லாவிதக் குரூரத்தாலும் வருத்தப்பட்டும், ஏழைகள் கேட்பாரின்றி அழுகின்றனர்; மற்றவர்களுக்கு ஆதாரம் தரப்பட்ட ஒவ்வொரு நியாயக் கட்டுப்பாடும் அவர்கள்மாட்டு விரோதமாய் முடிகிறது.

என்னையோ இந்த என்னுடைய மனமானது இவ்வளவு உணர்ச்சியை உடைத்து? அல்லது, ஏன் என் அதிர்ஷ்டம் இவ் உணர்ச்சிக்குத் தக அமைந்திலது? வறுமைத் துன்பத்தை நீக்க முடியாத நிலைமையில் இருக்கும் ஓர் அன்பாளன் அவ்வறியரைக் காட்டிலும் மிகவும் தாழ்ந்த நிலைமையை அடைகிறான்.

3. பாலை

பரந்து அகன்ற பாலையின் வரம்பின்கண் இருக்கும் "கேசா" நகரமானது, பெருங் கடல் ஓரம் உள்ள ஓர் சிறிய பட்டினம் எனத் தோன்றும். அந்தப் படுகனல் காயும் நெடிய நிலப் பரப்பூடு பிரயாணம் செய்ய விரும்பு வோர் அந் நீண்ட கால வழிப் போக்குக்கு இன்றியமை யாத எல்லாப் பொருளையும் அந்தப் பட்டணத்திலேயே அடைதல் வேண்டும். அவ்விடம் அவற்றை அடையா விடில், வேண்டுவன பிறகு அந்த விபரீதமான கரிய பாலையிலிருந்தா கிடைக்கும்! பலநூறு காவதங்கள் கடந்த பிறகல்லவோ மனித வாசனை எதிர்ப்படும்!

ஆகவே, என் மொழி பெயர்ப்பாளரை இவற்றை யெல்லாம் கவனிக்கவிட்டு, நான் யாத்திரைச் சத்தி ரத்தில் எனக்கெனக் குறித்த இடத்தில் இருந்தேன். அச்சத்திரம் இப்படித் தங்கி உறைவதற்குத் தகுதியான தென்றே சொல்லலாம். அது ஓர் நாற்கோணக் கட்டடம். நாற்புறமும் உள்ளும் புறம்பும் சாமான் சேமிக்க என முதல் தரையும், பிரயாணிகளுக்கு என இரண்டாம் மாடியும், இடையில் ஒட்டை நிற்பதற்கும் பிரயாண காலத்தில் நேர்ந்தே தீரும் ஆரவாரத்திற்கும் ஆக உத வும் சதுரமான முற்றமும் என, அது மூன்று பகுதியாய் இருந்தது. மேல்மாடி அறைகள் எல்லாம் குறுகிய குகை கள் என நெருங்கி இருந்தன. நாங்கள் வந்த சிறிது நேரத்திற்குள், வழிப் போக்கரது கூட்டம் ஒன்று "கைரோ" நகரினின்றும் வந்து தங்கியது. வழியில் அவர்கள் பல இடர்ப்பட்டு வந்தார்கள் என்பது சொல்லா மலே தெரிந்தது. பாலையில் புயற்காற்றென்றால் துன் புற்றவர் ஆதலின், அவர்கள் உடுத்திருந்த ஆடை புழுதி யடைந்திருந்தது. அம் முற்றத்தில் இவர்கள் உட்பட நின்ற பெருங் கும்பலின்கண் விதம் விதமான வகுப்பினரைக் காணலாம். கரிய வஸ்திரம் தரித்துப் புதர் என வெளிவரும் மயிர்க்கற்றை மீது மயிர்ப்பாகை யுடைய மால்தேவியாரும்—ஒளி உதிரும் பல்வேறு உடை உடுத்த உயர் துருக்கியரும்—கந்தல் கம்பளி போர்த்துத் தம் உடம்பு முழுவதும் மறைந்ததென

உன்னி அரச ஏறு என அசையும் அரபியரும்—அடிமைச் சட்டை அணிந்த அகில் நிறமுடைய எதியோப் பியரும்—மைப் பெட்டியை மடியில் செருகி, அருகில் நிற்பவரை ஏதோ வினவி, எழுதிக்கொண் டிருக்கும் ஒல்லிய, குளிர்ந்த, நகைபுரி முகமுள்ள காரியவாதியான கணக்கப்பிள்ளேயும்—விழுது எனக் கழுத்தை இழுத்து வைக்கோல் நுகர்ந்தாவது, முழந்தாளிட்டாவது, அண் ணுந்தாவது அல்லது நின்று கொண்டாவது இருக்கும் பாலே நிலப் படகுகளும்—இவர்கள், இவை, யாவரும், யாவும் ஒரு பக்கத்தில் ஒருங்கே நிறைந்திருந்தது பார்வைக்குப் பெரிதும் இலக்கா யிருந்தது.

பிறகு சிறிது நேரத்தில் என் ஆட்களோடு சினங் கொண்ட அவ்வூர்த் தலேவன் என்னிடம் அதைத் தெரிவிக்கும் பொருட்டு வந்தான். அவன் சொன்ன தைக் கேட்டு நான் சிறிது வருத்தம் அடைந்து என் னுடைய ஆட்களே அதற்குக் காரணம் என்ன என்று கேட்டேன். அசட்டை செய்தாலொழிய மரியாதை காட்டுவதால் தாங்கள் வேண்டியவற்றை அடைய முடியாதென அவர்கள் விடை யளித்தார்கள். இதைக் கேட்டுப் பொருள் அறிந்து கொள்ளக் கூடாத அவ் வூராளி, தன்னுல் இயல்வன எல்லாவற்றையும் செய்வ தாக என்னிடம் மிக்க வணக்கத்தோடு மேன்மேலும் உறுதி கூறிப் போனுன். இதனுல் இனியசொல் ஒழிந்த வன்சொல்லே இந் நாட்டில் பெருமை தருவது என நான் அறிந்தேன். வழிப் போக்கிற்கு உரிய ஏற்பாடுகள் எல்லாம் முடித்து, எனக்கு வழிகாட்டி, 'என்னேக் கைரோ நகரத்திற்குக் கொண்டுபோய் விடுங்கள்' என்று ஊர்திரி பெடுயினர்க்குச் சொல்லி, திமிலேயுடைய வாகனங்களின் மேல் கம்பளங்களே விரித்து அவற்றின் மீது மற்றவரோடு இருந்து நான் பின்பற்ற, என் மெய் காப்பாளர்கள் காலூர்ந்து வழி காட்டி முன் நடந்தார்கள்.

நகரிலிருந்து பத்துக் கல் செல்லும் அளவும் விருப்பம் விளேக்கும் பசும் புல் நிறைந்தும், மென் காற்று வீசியும் சல சலென ஒலி எழுப்பும் சருகுகள் நிறைந்த குத்துச் செடிகள் இங்கொன்று அங்கொன்ருய்க் குவிந்து

எழுந்தும், புன் முறுவல் பூத்த மரகதக் கொடிகள் மெல்லெனத் தவழ்ந்து தமக்கு ஒப்பனை உண்டோ என எட்டிப்பார்ப்ப தொப்ப ஒவ்வோர் இடத்தில் படர்ந்தும் உள்ள பசுந்தரையன்றிக் கானல் நீர் ஓடும் பாலையைக் காணுததால், நான் ஒருவாறு மன நிறைவு கொள்ளாமல் இருந்தேன். சற்று மேல்சென்றதும் என் நெஞ்சு முழு நிறைவை அடைந்தது. ஏன் எனில், கண்ணுக் கெட்டின அளவும் மண்ணும் மணலும் அன்றி வேறென்ன தோன்றிற்று?

அன்றிரவு என் மெய்காப்பாளராகிய பெடுயினர் வாழும் குடிசைகளுக்கு இடையில் இறங்கினேம். உடனே என்னைச் சுற்றிலும் பெடுயினர் பலர் சூழ்ந்தனர். அவர்கள் எல்லோரும் மெய் இளைத்துக் களையில்லாத முகத்தவர். இருந்தாலும், அவர்கள் தங்களைச் சிறிதும் தாழ்ந்தவர் என நினைக்கும் தன்மையராய்த் தோன்றவில்லை. அவர்கள்தம் மனைவிகளும் மற்றப் பெண்டிரும் என்னைக் காண்பதிலும், நான் அவர்கள் பார்வையை எதிர்க்க நேரிடில், தங்களைக் கூசாது காண விடுவதிலும் மறைப்பில்லாது இருந்தனர். மற்ற மகம்மதிய மகளிரைப் போன்று மறைவுடையவர் என இவர்கள் காணப் படவில்லை.

அவர்களுடைய வரியுண்ட கன்னங்களினின்றும் கூடு பாய்ந்த கண்களினின்றும், தசையில்லா இதழ்களினின்றும், அழகு வேற்று நாடு குடியேறியது போலும். ஆ, என்ன இழிவு! அன்னைக்கும் அவள் அருமைக் குழந்தைக்கும் உள்ள தொடர்பு ஒன்று தவிர்த்து, நாம் பெண்டிரைப் பற்றிப் பேசுவன யாவும் ஒருங்கே அழகு ஒழுகி நிற்கும் வடிவமும் மன மிசைந்த சாயலும் உடைய மங்கையர்களையே குறிப்பதாகும். ஆகவே, மனத்தை மருட்டும் நிலைமை வாய்ந்த இந்தப் பெடுயினிகள் மாயமாய் அமைந்து கனவென மறையும் இவ்வுலகிற்கு ஏற்றவரே அல்லர். அவர்களிடம் மறைப்பு என்பதே கிடையாது. மறைப்பே ஒரு பொருளுக்கு மதிப்பு உண்டாக்குகிறது என்பதை அவர்கள் அறியார்கள் போலும். துன்பம் நிறைந்த இந்தக் கொடிய உலகில் உளத்திற்குக் கொஞ்சம் உவகை தருவதான அழகு

என்பதைப் பாலை நிலத்தினரும் போற்ற வேண்டியதே. குடிசையின் ஒரு பகுதியில் இவர்களில் ஐம்பதின்மர் ஆட்டு மந்தையென அடைந்து காலங் கழிப்பர். இவர்கள் உவகை ஊற்றைப் பருகினவரே அல்லர். இவர்கள்தம் வாழ்நாள் பாழ்நாளே. சமயம் இல்லாப் பெண்டிரும் இவர்களே.

இச்சுடு நிலத்தில் பிரயாணம் செய்யும் வரையில் குறிப்பு ஒன்றும் இல்லாமல்தான் நடக்க வேண்டும். எங்கிருந்து எங்குப் போகிறோம் என்பது இறைவனுக்குத்தான் தெரியும். போகிற இடம் இன்னது என்றே தெரியாது. பசும் புல்லின் ஒரு இதழைக் கூடப் பார்த்தல் அரிது. நாற்புறத்திலும் நம்மைச் சுற்றிப் பரந்த மணற் காடே. நேற்றடித்த புயலினால் தோண்டப் பட்ட குழிகளும் அவற்றினின்று குவிந்து எழுந்த மணற் குன்றுகளும் இங்குமங்கும் தோன்றும். கொஞ்சம் மேலே நோக்கினால், பரிதியின் கதிர்கள் பல ஆயுதங்கள் எனத் தாக்கும். எப்பாங்கரும் சிறு மணற் கற்கள் பளபளென ஒளியைப் பரப்பும். நெருப்புக் காற்று அலைக்கும்; செய்மையில் பேய்த் தேர் பறக்கும்; எப்பக்கமும் ஒளி, ஒளியே; சூடு சூடே; சூடு, ஒளி, நெருப்பு—இவற்றைத் தவிர வேறொன்றும் அப்பாலையின்கண் இல்லை. பகலவன் தன் பன்னிறக் கதிர்களை ஒருங்கு திரட்டி வாரிக்கொண்டு ஒளிக்கப் புகும் வேளை, அக்களவை மறைத்து அவனுக்குத் துணை செய்யும் வண்ணம் சென்ற ஓர் மேகம் தனது தீய செய்கையைப் பிறர் அறிந்தார் என உணரவே, அதன் கவுட்புறம் இரண்டும் செவ்வெனச் சிவந்தன.

பிறகே, கூடாரம் அடித்துக் குடிவாழப் போவது. எவ்விடத்திலாயினும் அதை அடிக்கலாம், யாவரே மறிப்பர்? நாமே அரசர்—குடிகளில்லாப் பெரிய அரசு! என் பரிவாரங்கள் எல்லாரும் சமைத்தும், சாப்பிட்டும், சத்தமிட்டும் முன்போது கழிப்பர். நான் சிறிது அடையும் அதனினும் சிறிது நீரும் அருந்திப் பின் விளக்கு ஒன்று ஏற்றத் தொடங்கினதுதான் தாமதம்; உடனே எம தூதர்களைப் போன்ற வரிவண்டுகள் சிறியனவும் பெரியனவும் ஆகப் பல ஆயிரம் வந்து என் குடிசை

முழுவதும் நிறைந்தன. விளக்கைப் பேசாது அவித் தலைத் தவிர்த்து வேறென்ன நான் செய்யக்கூடும்!

மறுநாள் பொழுது புலர்வதன் முன் எழுந்து பழையபடி வழி நடக்க வேண்டுவதுதானே! அசைந்து அசைந்து நடக்கும் ஒட்டகங்கள் அன்றி மற்றெதுவும் இப்பாலை நிலச் செலவுக்குத் தகுதியன்று. பரிமா யாவும் சமையற்கரிமாவே; கரிகள் எல்லாம் அடுப்பின்கரியே போலும்.

இப்படி நான்கு நாட்கள் கழிந்தன. ஐந்தாம் நாளில் பாலைநிலப் பசுந்தரை ஒன்றை அடைந்தோம். நிழலின் அருமை வெயிலிற் சென்றவருக்கே நன்ருய்த் தெரியும். அதையும் அதன்கண் கைரோவிலிருந்து வந்திருந்தவரையும் பார்க்க என் மனம் மலர்ந்தது. வெண்ணிற அருவி ஒன்று மெல்லோசை எழுப்பி மகிழ்ந்தது. திரும்பியும் பசும் புல்லைப் பார்த்தபோது கன்றைக் கண்ட பசு என மனம் களித்தது. கடவுளர் பெருமையை என்ன என்று சொல்லலாம்! அவரது எண்ணம் என்ன என்று நம்மால் அறியக்கூடும்! அப்படி அறியத் தலைப்படும் ஓர் முயற்சி கண்ணிலான் ஓவியம் எழுதப் புகுந்ததைப் போலும்.

மேலும் மூன்று நாட்கள் மின்னொளி பரப்பிய சுடு மணல் நிறைந்த வெட்ட வெளியில் ஊர்ந்து, அடுத்த பகல் "மக்கள் வாழும் வையகத்தின் வாயில்" என விளங்கும் கைரோ நகரை அடைந்தோம்.

4. ஓர் துறவியின் மக்கள் வேட்கை

தங்கள் மூத்தோர் சிறுவராய் இருந்தபோதைய கதைகளைக் கேட்கக் குழந்தைகளுக்கு மிக்க விருப்பம் உண்டு. தாங்கள் பார்க்காது, கேள்வியால் மட்டும் அறிந்த பாட்டியையாவது பெரியப்பாவையாவது அறியும் பொருட்டு மனக் கண்ணை அகற்றுவார்கள். இவ்வண்ண மனத்தோடு முன்னொரு நாள் மாலை என் சிறுர்கள், தங்கள் மூன்றும் பாட்டி ஔவையைப்பற்றி அறிய விரும்பி, என்னை மெள்ள வருத்தினர். ஔவை தஞ்சையில் ஒரு பெரிய வீட்டில் வசித்தாள். அஃது

அவர்களும் அப்பாவும் இருக்கும் வீட்டைக் காட்டிலும் நூறு மடங்கு பெரியது. "காட்டில் விட்ட சிறுவர்" என்ற சிந்துவில் இருந்து அவர்கள் கொஞ்ச நாளைக்கு முன்னேதான் அறிந்த, முற்றும் துயரமான விஷயங்கள் நிறைந்த ஒரு காட்சி அவ் வீட்டில்தான் நடந்தேறிய தாம். அதென்னவோ அந்தப் பக்கத்தில் பொதுவாய் அப்படித்தான் நம்பிக்கை. குழந்தைகளையும் அவர்கள் தம் கொடிய சிற்றப்பனையும் பற்றிய முழுக் கதையும் மைனாக் குருவிகள் உட்பட, பெரிய கூடத்தின் புகைக் கூண்டின்மீது மரத்தில் செவ்வையாய்ச் செதுக்கி யிருந்தது தெரிந்ததுதான். ஆனால், பிறகு ஒரு மடமை யான பணக்காரன் அவற்றை யெல்லாம் பிரித்தெறிந்து, அவற்றிற்குப் பதிலாகப் புதிதாகத் தெரிந்த சலவைக் கல்லால் ஆன கூண்டைக் கதை ஒன்றுமே இல்லாமல் கட்டினான். என்றாலும், மாதவி தன் அருமைத் தாயின் முகச் சாயல் என நோக்கினள். கோபப் பார்வை என்று சொல்வதற் கில்லாதபடி அந் நோக்கு மிகவும் மென்மையாய் இருந்தது. அப்புறம் நான், எவ்வளவு அன்புடையவளாயும் எவ்வளவு நல்லவளாயும் அவர் களுடைய மூன்றாம் பாட்டி இருந்தாள் என்றும்; பக்கத்து நாட்டில் எங்கேயோ புதிதாய் வாங்கிய மிகப் புதியதும் காலத்திற் கேற்றதும் ஆன மாளிகையில் குடியிருக்க விரும்பிச் சொந்தக்காரன் அவளிடம் அதை-(சில விஷயங்களில் அதற்கு அவளைச் சொந்தக்காரி யென்றே சொல்லலாம் என்றாலும்,) அதைப் பார்த்துக் கொள்ளமட்டும் ஒப்புவித் திருந்தபடியால், அந்தப் பெரிய வீட்டிற்குச் சொந்தக்காரியாய் இல்லாத போதிலும், அவளிடம் எவ்வளவு நேசமாயும் மரியாதை யாயும் எல்லாரும் இருந்தார்கள் என்றும்; தான் அந்த நிலைமையில் இருந்தும், தனது சொந்தம்போல அவள் அதில் குடியிருந்து அந்தப் பெரிய வீட்டின் மேம் பாட்டை ஒருவகையாகக் காப்பாற்றி வந்தாள் என்றும்; பிறகு அது அழியத் தலைப்பட, கொஞ்சங் குறைய மற்றெல்லாம் பிரித்தெறிந்து, அதன் பழைய சித்திரங்கள் எல்லாம் களைந்து, சொந்தக்காரனுடைய மற்ற வீட் டிற்குக் கொண்டுபோய் வைக்கப்பட்டன என்றும்;

அவை அங்கே, கொஞ்ச நாளைக்கு முன் அவர்கள் பார்த்த பெரிய மயானக் கட்டடத்தில் உள்ள பிண மேடைகளைக் கொண்டுபோய், ஆடம்பர அம்மாளுடைய பொன்னிறங் காட்டும் ஒய்யாரமான கூடத்தில் வைத் தாற்போல அழகற்றிருந்தன என்றும் சொல்லி நின்றேன்: அப்போது சுந்தரம் "அது முழு மடமை" என்று குறிப்பது போன்று புன்னகை செய்தான். அதன் பிறகு அவள் இறந்தபோது, சுற்றி அநேக நாழிகை தூரத்திலிருந்து எல்லா ஏழைக் குடிகளும், அவர்கள் மட்டும் இன்றி, சிற்சில செல்வர்களும், அவளுடைய சிறந்த அன்பையும் நற்குணத்தையும் முன்னிட்டு, அவளது பிண அடக்கக் காலத்து வந்திருந்தார்கள் என்றும்; அவள் ஒவ்வொரு நாளைய வழிபாட்டிற்கு உரிய மந்திரங்களும், பாட்டுக்களும் தெரிந்திருந்ததும் அல்லாமல், தேவாரத்திலும் பாதிக்குமேல் தெரிந்திருக் கும்படியான அவ்வளவு நற்குணம் உடையவள் என்றும் சொன்னேன். சொல்லலும், சின்ன மாதவி விழிகளை அகற்றிக் கைகளை விரித்தாள். பிறகு அவர் களுடைய மூன்ரும் பாட்டி ஔவை ஒரு காலத்து எவ்வளவு உயரமாயும் நேராயும் அழகாயும் இருந்தாள் என்றும்; இளமையில் அவள் ஒரு மிகச் சிறந்த விறலி என்றும்; (எனலும், மாதவியின் சிறிய வலப்பாதம் தனக்குத்தானே அசைய ஆரம்பித்தது, நான் மிக்க எண்ணத்தோடு இருப்பது தெரிய, நின்றது.) பிளவை என்கிற நோய் வந்து, பிறகு அதற்குத் தீங்கு விளைத்தது என்றும்; ஆனல் அவள் மிக்க நல்லவளாயும் அன் புள்ளவளாயும் இருந்ததால் அது அவளுடைய நல் எண்ணங்களின் வலியை ஒழிக்கவாவது அல்லது குறைக்கவாவது செய்ய முடியாது போக, அவை முன் போலவே இருந்து விளங்கின என்றும் சொன்னேன். பிறகு, தனிமையான அப் பெரிய வீட்டின் ஒரு தனிமை யான அறையில் எப்படி அவள் ஒன்றியாய்ப் படுத்திருப் பது வழக்கம் என்றும்; எங்ஙனம் இரண்டு குழவி களுடைய உருவங்கள் பாதி ராத்திரியில் மெத்தைப் படியில் மேலும் கீழும் நகர்வதாக அவள் நம்பினுள் என்றும்; ஆனல் எப்படி அவள் யாதும் அறியா அச்சிறு

குழந்தைகள் தன்னை ஒன்றும் செய்யா என்று சொல்லு வாள் என்றும்; அவள் நலத்திலும் அன்பிலும் பாதிகூட எனக்கு இல்லாதிருந்ததால் அந்த நாட்களில் என்னோடு என் செவிலித்தாய் படுத்திருந்தாலுங்கூட நான் எப்படி அஞ்சிக்கொண் டிருந்தேன் என்றும் ; அப்படியிருந்தும் நான் அந்தக் குழந்தைகளைப் பார்க்கவில்லை என்றும் சொன்னேன். சொல்லலும், சுந்தரம் தன் புருவங்களை அகற்றித் தேட்டையாய்ப் பார்க்க முயன்றான். அதன் பிறகு, தன் பெயரப் பிள்ளைகளிடம் அவள் எவ்வளவு அன்புடையவளாய் இருந்தாள் என்றும் ; விடுமுறை நாட்களில் எங்களை அந்தப் பெரிய வீட்டிற்கு அழைத் துப் போக, அங்கே நான் மட்டும் அநேக நாழிகை தனியே இருந்து, உரோமாபுரியின் பெருமன்னர்களாகிய பன்னிரண்டு சீசர்களுடைய பழைய சிலைகளைக் கண் இமையாது, அந்தப் பழைய சலவைக் கல் முகங்கள் மறுபடியும் உயிர் பெற்றன என்று தோன்றும் வரைக்கு மாவது, அல்லது நானாவது அவைகளைப் போன்று சலவைக் கல்லாய் மாறும் வரைக்குமாவது பார்த்துக் கொண் டிருப்பேன் என்றும் ; எப்படி நான் பழமையான தோரணங்களும், பட படென அடிக்கும் சித்திரத் தொங்கல்களும், பொன் பூச்சு அழிந்துபோன செதுக்கிய கருங்காலித் தட்டுமுட்டுகளும் உள்ள விரிந்த ஒன்று மில்லா அறைகள் பொருந்திய அந்தப் பெரிய மாளிகை யில் திரிவதற்குச் சலிக்க மாட்டேன் என்றும் ; இன்னும் சில வேளைகளில் பரந்த பழங் காலத்துத் தோட்டங் களினூடு நான் அலைந்து திரிந்து, எப்போதாவது தனிமையான ஒரு தோட்டக்காரன் எதிர்ப்படுதல் தவிர்த்து மற்றப்படி தனிமையில் இன்புற்றேன் என்றும் ; முதிர்ந்து நாளாய்த் துயரக் குறிப்போடு நிற்கும் தேவதாரு அல்லது கொடிப் புன்னைகளுக்கு இடையில் திரிந்து, பார்ப்பதற் கல்லது வேறு உபயோக மில்லாப் புன்னைக் கொட்டைகளையும் நுணைக் காய்களையும் பொறுக்கிக் கொண்டாவது, அல்லது, சுற்றிலும் உள்ள சிறந்த மலர் மணத்தை நுகர்ந்து இளம் புற் பரப்பின் மேல் படுத்துக் கொண்டாவது—அல்லது, அங்கு நிரம்பிய மனதுக்கு இசைந்த காலை வெயிலில் கிச்சிலிச

ளோடும் எலுமிச்சைகளோடும் நானும் முதிருகிறேன் என்று எண்ணும்படி, கிச்கிலித் தோட்டத்தில் வெயில் காய்ந்து கொண்டாவது—அல்லது, தோட்டத்தின் பள்ளத்தாக்கில் இருந்த மீன் குட்டையில் சிறுமீன் குஞ்சுகள் துள்ளிக் குதித்தலையும், நீரின் நாப்பண் இங்கொன்று அங்கொன்ருய், செங்குத்தாய் நின்று இவைகளின் குறும்பான துள்ளலை ஏளனம் செய்வது போல் இருக்கும் பெரிய சேல்மீன்களையும் விடாது பார்த்துக் கொண்டாவது இருக்கும் இந்தச் சுறுசுறுப்புச் சோம்பல் பொழுது போக்குகளில், மதுரமான மாதுளை, கொய்யா, கிச்சிலி ஆகிய இவற்றையும், இவைபோன்ற குழந்தைகளுக்கு விருப்பமான பிறவற்றையும் காட்டிலும் எனக்கு மிக்க விருப்பம் உண்டாகையாலும், இப்போதப் போதன்றி மற்றப்படி பொதுவாய் அவற்றைப் பறித்த லாகாது ஆகையாலும், அவற்றைப் பறிக்க என் நெஞ்சில் ஒரு சிறிதும் எண்ணம் எழாமலேயே எவ்விதம் மாதுளையும் கொய்யாவும் சுவர்களின் ஓரம் தொங்கிக் கொண் டிருந்தன என்றும் சொன்னேன். சொல்லலும், இடையே மாதவிக்குத் தெரிந்தே அவளோடு அதைப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்று சுந்தரம் தனது கையில் எடுத்திருந்த ஒரு பச்சைத் திராட்சைக் குலையை அவன் திரும்பித் தட்டின் மேல் வைக்க, அவ் இருவரும் அது இப்பால் உபயோகமில்லை என்று தள்ளிவிட்டார்கள் போலும்.

பிறகு சற்றே உயர்ந்த குரலில் எப்படி அவர்கள் மூன்ரும் பாட்டி ஒளவை எல்லாக் குழந்தைகளிடமும் அன்பாய் இருந்தாலும், அவர்கள் தம் பெரியப்பா முத்து மிக்க அழகாயும் தேட்டை யுள்ளவனுயும் மற்ற எங்களுக்கெல்லாம் அரசன் எனவும் இருந்ததாலும், எங்களில் சிலரைப் போலத் தனித்த மூலையில் துயரங் கொண் டிருப்பதற்கு எதிராக அவன் உங்கள் அவ்வளவு சின்னப் பையனுக இருந்தபோதே கிடைக்கக்கூடிய விரைவான குதிரை ஏறிக் கொல்லைப் புறங்களிலும் வயற் புறங்களிலும் சவாரி செய்து, வேட்டைக்காரர் வெளிப்பட் டிருந்தால் அவர்களோடு சேர்ந்து கொள்ளு வான் ஆகையாலும், அவன் அதிக வலியுள்ள உடம்

புடையவன் ஆதலின் வீட்டுக்குள்ளேயே இருக்கப் பிடிக்காமல் இருந்ததைத் தவிர்த்து அந்தப் பழைய வீட்டையும் தோட்டங்களையும் ஆசை பாராட்டாம லிருக்கவில்லை ஆகையாலும், அவனிடம் எங்களைக் காட்டிலும் அதிக நேயம் காட்டினுள் என்றும்; யாவ ராலும், முக்கியமாய் அவர்கள்தம் மூன்றும் பாட்டி ஒளவையாரால் பெரிதும் வியந்து கொண்டாடும்படியான மிகுந்த அழகும் உளவன்மையும் நிறைந்த கட்டிளமையை அவன் அடைந்தான் என்றும்; எப்படி என்னைக் காட்டிலும் கொஞ்சம் பெரியவன் ஆகையால், அவன், நான் காலில் காயம்பட்டு நொண்டியாய் வலியால் நடக்க முடியாதிருந்த போது தன் முதுகில் அநேக மைல் தூரம் என்னைத் தூக்கிக்கொண்டு போவதுண்டென்றும்; எப்படிப் பிற்காலம் அவன் கால் நொண்டியபோது, அவன் அதை முன்னிட்டுப் பொறுமையற் றிருந்தபோதும், அவன் வலிகொண் டிருந்தபோதும் நான் அவனைச் சரியாய்ப் பராமரிக்க வாவது அல்லது நான் நொண்டியாய் இருந்தபோது அவன் என்னிடம் எவ்வளவு அன்பு காட்டினுன் என்று நினைக்கவாவது செய்யவில்லை என்றும்; பிறகு அவன் இறந்த ஒரு நாழிகைக்குள்—உயிருக்கும் சாவுக்கும் இடையில் கழி பெருந்தூரம் இருப்பதால்—அவன் நெடு நாளைக்கு முன்னேயே இறந்ததாய் எனக்குத் தோன் றிற்று என்றும்; எப்படி அவன் மரணத்தைப் பற்றி முதலில் ஒருவாறு பொறுத்துக் கொண்டிருந்தும், பிறகு அது என் மனம் விட்டு அகலாமல் என்னை வருத்தத் தலைப்பட, சிலரைப் போல அழவாவது, மனதில் விசன முற்று நெஞ்சு கலங்கவாவது,—நான் இறந்திருந்தால் அவன் செய்திருப்பான் என்று நான் நினைத்தபடி யாவது—நான் செய்யாவிட்டாலும், நாள் முழுவதும் அவன் இல்லாது பொழுது போகவில்லையாக, அது வரையில் நான் அவனிடம் எவ்வளவு அன்பு பாராட்டி னேன் என்று உணரவில்லை என்றும் சொன்னேன். அவனுடைய பட்சம் இல்லையாக, அவனுடைய தாறு மாறும் இல்லையாக, அவன் இல்லாதிருப்பதைவிட முன் நாங்கள் இடும் விதமாகச் சிறு பூசல் இடவாவது

இப்போது அவன் இருந்தால் நலம் என்று விரும்பினேன் என்றும், வைத்தியர், அவன் காலைச் சத்திரம் வைத்தபோது அவர்கள் தம் பெரியப்பாவுக்கு இருந்திருந்த வருத்தத்தளவு எனக்கு அவன் இல்லாதபோது இருந்தது என்றும் மேலும் சொன்னேன்.

சொல்லலும், குழந்தைகள் அழ ஆரம்பித்து அவர்கள் அப்போது கொண்டிருந்த துன்பக் கோலம் பெரியப்பா முத்துவின் பொருட்டல்லவா என்று கேட்டு என்னை நிமிர்ந்து பார்த்து, பெரியப்பாவைப் பற்றிச் சொல்வதை நிறுத்தி, தங்களின் அழகிய அம்மாவைப் பற்றிய கதைகளிற் சில சொல்ல வேண்டின. அப்புறம், நான், ஏழு நீண்ட வருஷங்களாக சில சமயம் முழு நம்பிக்கையோடும், மற்றும் சில போது நம்பிக்கை அற்றும், ஆனல் ஒருபோதும் ஊக்கம் விடாமல், அழகிய கருங்கண் மாதவியை என்னை மணம்புரிய வருந்தினேன் என்றும்; குழந்தைகள் அறியக்கூடிய வரையில், கல்யாணம் ஆகாப் பெண்களின் கூச்சம், மடமை, மறுத்தல் என்னும் அவற்றை விவரித்தும் உரைத்தேன். அப்போது மாதவி பக்கல் நான் திரும்பலும், முதன் மாதவியினுடைய உயிரே என அவள் கண்கள் தோற்றந்தரக் கண்டு, இருவரில் யார் என் முன் நிற்பவள் என்றும், யாருடையது அந்த ஒளி பொருந்திய மயிர்த் தொங்கல் என்றும் ஐயமுறும் வண்ணம் அவ்வளவு இயைந்த மறு தோற்றத்தோடு அவள் தோன்றினள். நான் கண் இமைக்காது பார்த்து நிற்கையில் குழந்தைகள் இருவரும் மறைந்து, எதிர்க்கோடியில் இரண்டு துன்பம் நிறைந்த உருவைத் தவிர, பிறிதொன்றும் தோன்ருவண்ணம் பின்வாங்கி மேலும் பின்வாங்க, அவை வாய் திறவாதிருந்தும் "நாங்கள் மாதவி மக்களும் அல்லேம், உன்னுடைய மக்களும் அல்லேம், அல்லது, குழந்தைகளேயும் அல்லேம், மாதவியின் குழந்தைகள் சாமிநாதனை அப்பா என அழைக்கிருர்கள், நாங்கள் வெறுமை, அவ் வெறுமையைக் காட்டிலும் குறைந்தன வாகிய கனுக்கள். நாங்கள் அங்ஙனம் இருந்திருக்கலாம் என்பதேதான். உயிர் ஆற்றின் கரையில் நாங்கள் கண்க்கிறந்த ஊழிகள் எங்களுக்கு

உயிராவது பெயராவது வேண்டில் காத்திருக்க வேண்டும்" என்று செவ்வையாய் என்னை நோக்கி உரைத்ததாக எனக்குப் பட்டது. உடனே விழிக்கவும், நான் சிறிது தூக்கத்தில் ஆழ்ந்த என்னுடைய பிரமசாரி நாற்காலியில் ஓசையில்லாமல் உட்கார்ந்திருப்பதை உணர்ந்தேன். பக்கத்தில் ஒருவித மாறுதலும் அடையாது அன்பு வாய்ந்த என் உடன் பிறந்தாள் பார்வதி இருந்தாள். ஆனால், முத்து மட்டும் என்றென்றைக்கும், பார்ப்பதற்கில்லாது, மறைந்து போய் விட்டான்.

---

5. மூவர் துயர மகளிர்

துயர மகளிர் மூவரையும் எனக்கு நன்கு தெரியும். அவர்கள் தம் நாடு முழுவதும் நான் நடந்து பார்த்திருக்கிறேன். மாயமான ஒரே குடியில் அவர்கள் மூவரும் உடன் பிறந்தாராவர்; அவர்கள் தம் வழிகள் ஒன்றிற்கொன்று தொலை தூரம் எனினும், அவர்கள் நாட்டிற்கு ஓர் எல்லை இல்லை. அவர்கள் பலதரம் நாமகளோடு அளவளாவிக்கொண் டிருப்பதையும், சில சமயம் என்னைப் பற்றிப் பேசிக்கொண் டிருப்பதையும் நான் பார்த்திருக்கிறேன். அப்படியானால் அவர்கள் வாய் திறந்து பேசுகிறார்களோ? இல்லை, முக்காலும் இல்லை. இவர்களைப்போன்ற மாப்பெரும் மாயாவிகள் மொழியின் குறைபாட்டினை இகழ்கின்றனர். ஒருவனது நெஞ்சில் குடிகொள்ளும்போது, அவனுடைய கருவிகள் வழியாக அவர்கள் குரல் காட்டலாம்; ஆனால், அவர்கட்குள் பேச்சாவது ஓசையாவது கிடையாது; அவர்களுடைய நாடுகளில் முடிவற்ற மௌனம் அரசாளுகிறது. நாமகளோடு அவர்கள் வார்த்தையாடினபோது அவர்கள் வாய் திறக்கவில்லை. அவர்கள் மென்மையாகக்கூட மொழிந்தனரில்லை; அவர்கள் பாடினாரேயுமில்லை. எனினும் அவர்கள் பாடியிருக்கலாம் என்று எனக்குத் தோன்றியதுண்டு: ஏனெனில், மண்ணுலகில் பல தடவை யாழ் குழலாலும் பண்ணமை வீணையாலும் அவர்களது மறைகளின் பொருள் வெளிப்படக் கேட்டிருக்கிறேன். கடவுளரைப்போல் அவர் ஏவலாளராகிய

அவர்களும் தங்களுடைய கருத்தை உரைப்பது அழியும் ஒலியாலும் அன்று, அல்லது தவறும் மொழிகளாலும் அன்று ; ஆனால் விண்ணிலுள்ள குறிகளாலும், தரையின் மீது உண்டாகும் மாறுபாடுகளாலும், எவரும் அறியா ஆறுகளின் திவலையாலும், இருட்டில் தீட்டப்பட்ட விருதுகளாலும், தலையோட்டில் எழுதியுள்ள வியப்பான மொழியாலுமேதான். அவர்கள் விபரீதமாக வளைந்து வளைந்து ஏகினர் ; நான் அடிகளை எண்ணினேன். தொலைவிலிருந்து அவர்கள் தந்தி பேசினர் ; நான் அதை வாசித்தறிந்தேன். அவர்கள் ஒருங்கு கூடிப் பொல்லாச் சூழ்ச்சி புரிந்தனர் ; அங்கேயும் இருட் கண்ணாடி கொண்டு என் கண்கள் சூழ்ச்சிகளைக் கண்டறிந்தன. குறிகள் அவர்களுடையன ; சொற்கள் என்னுடையன.

இம் மூவர் யாவரேயோ? அவர்கள் செய்வதுதான் என்ன? வரம்பிலும் அலைப்பது வடிவம் எனில், அல்லது எப்போதும் முன்னுக்கு நடந்தாவது அல்லது குறிக்க முடியா இருளில் எப்போதும் பின்வாங்கி யாவது இருப்பது சந்நிதி எனில், அவர்களின் வடிவையும் சந்நிதியையும் விவரிப்பேனாக.

மூவரில் மூத்தவள் பெயர் நமது கண்ணீர் அம்மை. மறைந்த முகங்களைக் குறித்து இரவு பகலாய்க் கூச்சலிடுபவளும் தேம்புபவளும் இவளே. சந்திரமதி தன் பிள்ளைக்காக அழுது அமைதியடையாது நின்ற இடமாகிய காசியில் அவ் அம்மை இருந்தாள். துரோபதையின் குழந்தைகள் ஐந்தையும் அசுவத்தாமனின் அம்பு ஊடுருவியபோதும், அரண்மனை மேன் மாடியில் அவை நடந்த ஓசையைச் சில வேளைகளில் தான் கேட்டபோது,—விண்ணுலகில் குறிக்கத் தவறாத—அன்பு நாடியை அவ் அன்னையின் நெஞ்சில் எழுப்பிய அச்சிறு அடிகள் என்றென்றைக்கும் விறைத்த போதும், குருக்ஷேத்திரத்தில் இருந்தவள் அவளே. பலமுறை மேகங்கள் வரை உயர்ந்தும், மற்றும் பல முறை விண்ணுலகங்களை அறைகூவியும், அவளுடைய கண்கள் முறையே அழகையும் நுண் உணர்வினையும், அச்சத்தையும் சோர்வையும் பொருந்தி இருந்தன. தன் தலையில்

அவள் ஒரு மகுடம் புனைந்திருந்தாள். கடவுள் வழிபாட்டின்கண் தேம்புதலையும், வாச்சியங்களின் முழக்கத்தையும் கேட்டவிடத்தும், கோடைகால மேகங்கள் சுமந்து கனப்பதைக் கண்டவிடத்தும், காற்றின் மீது சவாரி செய்து வேற்று நாடுகளுக்கு அவள் போகக்கூடும் என்று குழந்தை ஞாபகங்களால் நான் அறிவேன். ஒவ்வொரு குடிலையும் ஒவ்வொரு கோயிலையும் திறக்கக் கூடியதும், வானுலகம் புகுமாறு சமயாசாரியன் அளிக்கும் திறவுகோலுக்கும் மேலானதும் ஆன ஒரு திறவுகோலை வைத்திருப்பவளும் இவளே. இந்த மூத்த சகோதரியே ஆவள். பலமுறை நான் மிக்க மகிழ்ச்சியோடு பேசிக்கொண்டிருந்த ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் உண்டு. அவனுக்கு, எட்டு வயதானவளும், ஒளி பொருந்திய முகத்தை யுடையவளும், அன்புள்ளவளும் ஆன மகள் ஒருத்தி இருந்தாள். அவள், துயரம் எய்திய தன் தந்தையோடு புழுதியடைந்த சாலைகளில் நாள் முழுவதும் நடந்து திரியும் பொருட்டு, விளையாட்டு ஊர்க்களிப்பு முதலிய தூண்டுதல்களை அடக்கி ஆண்டிருந்தாள். இதற்காகக் கடவுள் அவளுக்குப் பெரிய வெகுமதி ஒன்று அளித்தார். இவ்வாண்டின் வேனிற் காலத்து, அவளுடைய வேனிற் பருவம் அலர்ந்துகொண்டிருக்கும்போது, தம்மிடத்து அவர் அவளை அழைத்துக் கொண்டார். ஆனால், அவளுடைய கண்ணிலாத் தகப்பன் அவளைப்பற்றி எப்போதும் துயரப்படுகிறான். பாதி ராத்திரியில், வழிகாட்டும் சிறிய கை தன் கையோடு பிணைத்திருப்பதாக, ஒவ்வொருநாளும் கனவு காண்பான்; ஒவ்வொரு நாளும், அதிக ஆழமான துயர இருளின்கண் வதிகிற வெளி இருளை நுகரவே விழித்துக் கொள்வான். அவனுடைய படுக்கை ஓரம், எனக்குத் தெரிந்து, சென்ற கோடை முழுவதும் இந்த மூத்தாள் உட்கார்ந்திருந்தாள். இப் பெண் போலவே, அவ்வளவு திடீரென்று மறைந்தவளும், தனக்குப் பின் அவ்வளவு நிறைந்த இருளைவிட்டுச் சென்றவளும், அன்பில் அவ்வளவுக்குக் குறைவில்லாதவளும் ஆகிய ருஷிய நாட்டு மன்னர் சாரின் மகளை, அவரது படுக்கை அறையில் அவருக்கு

எதிரில் கொணர்ந்து, 1845-ஆம் ஆண்டு மாரி முழுவதும் உட்கார்ந்திருந்தவளும் நமது கண்ணீர் அம்மையே. கங்கையிலிருந்து நைல் வரைக்கும் நைலிலிருந்து மிசிசிபி வரைக்கும் உள்ள தூக்கம் இல்லா ஆடவர், தூக்கமில்லாப் பெண்டிர், தூக்கமில்லாக் குழந்தைகள் ஆகிய இவர்கள் படுத்திருக்கும் இடங்களில் அவளுடைய திறவுகோலின் உதவியைக் கொண்டு, அழையா விருந்தாக நுழைபவளும் நமது கண்ணீர் அம்மையே. துயர் குடியில் இவள் மூத்தவள் ஆதலினாலும், எல்லாரினும் மிகப் பரந்த அரசாட்சியை உடையவள் ஆதலினாலும், இவளை நாம் பெருமூதாட்டி என்று சொல்லிப் பெருமைப் படுத்துவோம்.

இரண்டாவது சகோதரியின் பெயர் நமது தேம்பல் அம்மை. அவள் ஒருபோதும் மேகங்களை அளவாள்; காற்றின் மீது சவாரி செய்து பிறநாடு போதலும் செய்யாள். அவளுக்கு ஒரு மகுடமும் இல்லை. அவளுடைய கண்கள் எப்போதாவது ஒருமுறை பார்க்கப்பட்டாலுங் கூட இன்பமாகவாவது, அல்லது நுட்பமாகவாவது இரா. அவைகளின் குறிப்பில் பொதிந்து கிடக்கும் வரலாற்றை ஒருவனும் படிக்க முடியாது; அழியும் கனவுகளாலும் மறந்துபோன பிதற்றலாலுமே அவைகள் நிறைந்திருக்கக் காணலாம். ஆனால் அவள் தன் கண்களை உயர்த்துகிறதே இல்லை; சீர்குலைந்த பாகை ஒன்றை அணிந்திருக்கும் அவள் தலை எப்போதும் கீழ் நோக்குகிறது; அது புழுதியோடு எப்போதும் பிணைத்தல் செய்கிறது. அவள் அழுகின்றாள் அல்லள். அவள் பெருமூச் செறிகின்றாள் அல்லள். இடை இடையே கேட்கா வண்ணமாய் விம்முதல் மட்டும் செய்வாள் அவள். அவளுடைய உடன்பிறந்தாள் பெருமூதாட்டி விண்ணுலகைப் பெரிதும் பகைத் தெழுந்தும், தன் அருமைக் குழந்தைகளைத் திருப்பிக் கேட்டும் பலமுறை கொந்தளித்து வெறிகொள்வாள். ஆனால் நமது தேம்பல் அம்மையோ, ஒருபோதும் இரையாள். ஒருபோதும் வீரம் பேசாள். குழப்பமான நாட்டங்களைக் கனவிலும் கருதுவாள் அல்லள். "திக்கற்றவள்" என்னும்படி தாழ்மை வாய்ந்தவள். நம்பிக்கை அற்றவர்கள் உரிமை

பாராட்டும் பொறுமையும் அவளுடையதுதான். முறு முறுத்தல் செய்வாள் அவள். ஆனல் அது அவளுடைய தூக்கத்தில்தான். மெல்லென வாயசைப்பாள் அவள், ஆனல் அதுவும் மாலையில் தனக்குள்ளேதான். ஒரோர் வோர் போது முணுமுணுத்தல் செய்வாள் அவள், ஆனல் அது அவளைப்போல் அநாதையான தனிமை வாய்ந்த இடங்களிலும், அழிந்த நகரங்களிலும், ஞாயிறு ஒழிவுகொள்ளக் கீழ்ச்சென்ற போதுமேயே. இந்தச் சகோதரி, பறையருக்கும், யூதருக்கும், இடைக்கடலில் தண்டனைத் தோணிகளில் தண்டு வலிக்கும் அடிமை களுக்கும் தெரிந்த விருந்தினள்; அருமையானதும், சேய்மையில் உள்ளதும் ஆன தாய்நாட்டின் ஞாபகப் புத்தகங்களினின்றும், அடியோடே அழிந்து, அந்த மான் தீவிலிருக்கும் இந்தியக் குற்றவாளிக்கும்—தான் வேண்டிக் கொள்ளக் கூடிய மன்னிப்பின் பொருட்டா வது, தான் செய்து பார்க்கக் கூடிய ஈட்டின் பொருட்டா வது ஒருவித நிவேதனமும் இப்போது ஏற்றுக்கொள்ளக் கூடாதபடி, இப்பால் அழிந்துபோயிருக்கிறதும், ஆனல், நெடுநாளைக்கு முன் கொடிய ஓர் காவுகொண்ட பீடிகை எனத் தோன்றுகிறதும் ஆன தனித்த ஓர் பிணமேடை யின்மீது எப்போதும் தன் கண்களைத் திருப்பும் முறி பட்ட மனமிரங்கும் கொலையாளிக்கும்—இவளே விருந்தி னள். நமக்குப் பொது அன்னையும், தனக்கு மாற்றாந் தாயும் ஆக இருக்கும் மாநில மடந்தையை ஒரு கையால் சுட்டி, நமக்குப் பொதுப் பேராசிரியர் ஆயும் தனக்கு முற்றுகை இட்டு மறைக்கப்பட்டதாயும் ஆன வேதத்தை மற்றொரு கையால் சுட்டி, நண்பகலில் கோடை காலக் கதிரவனை நோக்கி அச்சத்தோடு பழி கூறும் ஒவ்வொரு அடிமையும், பெண்மைத் தன்மை வாய்ந்த தனது நெஞ்சில் கடவுளால் விதைக்கப் பட்டு, தனக்குள்ளே தூய்மையான இச்சைகளாகிற மூளைகளை உயிர்க்கும் உயரிய இயற்கை எண்ணங்கள், மக்கட் பொதுவின் திட்டங்களால், மேல்வரவொட்டாது தடுக் கப்படவே, முன்னோர்களின் கல்லறை விளக்குகளைப் போன்று இப்போது மனவெப்பத்தோடு எரிந்து அவித் துக் கொண்டிருப்பதனல், இருட்டில் உட்கார்ந்து, நன்

முகத்தை ஆதரிக்க அன்பில்லாமலும், தன் தனிமையை ஏதோ ஒரு வகையில் விளக்க நம்பிக்கை இல்லாமலும் இருக்கும் ஒவ்வொரு கைம்பெண்ணும், கடவுளரால் இனிக் கேட்டுத் தீர்க்கப்படவிருக்கும் கொடிய உறவினரால், திரும்பிவராத தன்னுடைய வேனிற் பருவம் வஞ்சித்து அழிக்கப்பட்டு கன்னிமாடத்தில் உறையும் ஒவ்வொரு பெண் துறவியும்; நெருங்கிய நண்பர் என்று கருதியவர்களால் வஞ்சிக்கப்பட்டவரும், புறக்கணிக்கப் பட்டவரும்; சநாதன தர்மத்தால் சூத்திரர் எனப் பட்டவரும்; பரம்பரையாக நிந்திப்புடைய குழந்தைகளும்:— ஆகிய இவர்கள் யாவரும் நமது தேம்பல் அம்மையோடு உரிமை கொண்டவர்களே. இவள் கையிலும் ஒரு திறவுகோல் உண்டு, ஆனால் இவளுக்கு இது வேண்டியதில்லை. ஏனெனில் இவளுடைய அரசாட்சி, முதன்மையாக, குறவர் குடிசைகள் இடையிலும், எந்த நாட்டிலும் வீடில்லா நாடோடிகள் பாலுமே. எனினும், மக்களுடைய ஈடில்லாது உயர்ந்த வாழ்க்கைத் துறைகளிலும், அவள் உறையத் தனிக்கோயில் உண்டு; வெளி உலகத்திற்குக் கலைமான் எனத் தருக்கோடு நிமிர்ந்து சென்றும், இரகசியமாய்த் தங்கள் நெற்றியில் அவளுடைய முத்திரையைக் கொண்டவர், மாட்சிமை பொருந்திய இப் பெரிய அரசாட்சியிலும் சிலர் உண்டு.

ஆனால், இவ் இருவரிலும் இளையாளான மூன்றுவது சகோதரியோ எனில், வாயை மூடு! அவளைப் பற்றிப் பேசும்போது உதட்டை மெல்ல அசை! அவளது நாடு மிகப் பெரியதன்று. அப்படி இல்லாவிடில் ஒருவனும் பிழைக்க முடியாது; ஆனால், அந்த நாட்டிற்குள் எல்லா ஆற்றலும் அவளுடையதே. அவள் தன் முடி கிருஷ்ண மூர்த்தியின் பெருவடிவக் காட்சியைப் போல, பெரும்பான்மையும் பார்வைக்கு எட்டாத உயரம் நிமிர்ந்து எழுகிறது. அவள் குனிகின்றுள் இல்லை; அவளுடைய கண்களோ, மிக்க உயரத்தில் எழுவதால், தொலைவால் மறைந்துவிடக் கூடும். ஆனால், அவைகள், அவைகளாய் இருப்பதால், மறைபட முடியா: அவள் முகத்தில் தரித்திருக்கிற மும்மடிப்பு மென்துணி வழியால் காலைச் சந்தியாகிலும், மாலைச் சந்தியாகிலும், நண்பக

லாகிலும், நள்ளிரவாகிலும், கடல் வற்றும்போதாகிலும். பெருகும்போதாகிலும் அமைவுகொள்ளாது, ஓங்கி எரியும் ஓர் துயரத்தினுடைய பொறுக்கமுடியாத ஒளியைத் தரையில் இருந்துகொண்டே படித்தறியலாம். அவள் கடவுளை மறுப்பவள். பயித்தியங்களுக்குத் தாயும், தற்கொலைகளுக்கு நினைப்பு ஊட்டுபவளும் அவளே. அவளது ஆற்றலின் வேர்கள் ஆழமாக இறங்கி உள, ஆனால் அவள் ஆளும் வகுப்பினர் குறுகிய எண்ணிக்கையினரே. ஏனெனில், தங்கள் வாழ்வின் சீரிய நம்பிக்கைகள் அழிதலினாலாகிய குழப்பங்களால் தலை கீழாக்கப்பட்ட தெள்ளிய அறிவினர்களையும், அகப்புறக் குழப்பங்களின் சூழ்ச்சிகளின் காரணமாக நெஞ்சு நடுங்கியும், மூளை சிதறுண்டும், இருப்பவர்களையும் மட்டும் இவள் அணுகுவாள். பெருமூதாட்டி நிச்சயமில்லா அடிகளோடு வேகமாயாவது அல்லது மெள்ளவாவது— எனினும் வருத்தம் கலந்த ஓர் அழகோடு—நடக்கிறாள். நமது தேம்பல் அம்மையோ, அச்சத்தோடு கள்ளத்தனமாக நகருகிறாள். ஆனால், இந்த இளையாள், குதித்தும் புலித்தாண்டலைப் போலும், அளவிடற்கரிய விரைவில் பாய்கிறாள். இவளுக்கு ஒரு திறவுகோலும் இல்லை. ஏனெனில், மக்களுக்குள் அரிதாய் வந்தாலும், இவள் உட்புக விடை கொண்டிருக்கும் எல்லாக் கதவுகளையும் பெயர்த் தெறிகிறாள். இவளுடைய பெயரோ, நமது பேரிருள் அம்மை.

6. ஆசிரியர் ஹைனே அவர்களின் ஓர் திருமுகம்

இசை என்பது என்ன? இக்கேள்வி, நேற்றிரவு நெடுநேரம் நான் தூங்குவதற்கு முன், என்நெஞ்சில் குடிகொண்டது. இசையின் வெறும் இருப்பு மட்டுமே கூட, மிக்க வியப்புத் தருவதாயிருக்கிறது; அது இயற்கையின்பாற் படாத கடவுள் தன்மை வாய்ந்தது என்று கூட, எனக்குச்சொல்லத் தோன்றுகிறது. அதனுடைய ஆளுகை எண்ணத்திற்கும் பொருளுக்கும் எண்ணத்திற்கும் இடையில்,

அவ் இரண்டிற்கும் உரிமை உடையதாயும் எனினும் அவ் இரண்டினுள், ஒவ்வொன்றினின்றும் வேறுபட்டதாயும் இருக்கிறது என்று கருதும்படி; அது, ஒரு கூட்டு இயைபாக, பற்றின்றி நிலவுகிறது. அதை ஆன்ம விளக்கம் என்று சொல்லலாம் என்ருல், கால அளவுக்குக் கட்டுப்பட்ட ஆன்ம விளக்கமாக அது இருக்கிறது; அதை வெறும் பொருள் என்று சொல்லலாம் என்ருல், இடத்தை வேண்டாது இருக்கிற பொருளாக அது நிலவுகிறது.

இசை இன்னது என்பது நமக்குத் தெரியாது. ஆனுல், நல்ல இசை இன்னது என்பதும், இன்னும் நன்ருக, கெட்ட இசை இன்னது என்பதும் நமக்குத் தெரியும்; ஏனெனில், கெட்ட இசையால்தானே, நமது செவிகள், பெரும்பாலும், எப்பாங்கரினின்றும் அழைத்து நிரப்பப்படுகின்றன. இசை - நயம் - காணல், அநுபவத்தை ஒட்டி அல்லது, கூட்டிப் பார்க்கும் அறிவின் முறையால், முடியாதது ஒன்று. அப்படி நயங்காணும் போது, இசை நூல்களை, அவற்றின் உவமைப்போலிகளால் மட்டுமே, பாகுபாடு செய்தல் வேண்டும்; அப்பாகுபாட்டின் பொருட்டு அவற்றின் மொத்த உணர்ச்சியை உரைகல்லாக எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இசையைக் குறித்த முதற்கொள்கையைப் போன்று, வேறு எதுவும் அவ்வளவு மனக்குறை தருவதன்று; அதற்குக் கணக்கு முறைமையால் நிறுவப்பட்ட விதிகள் உண்டு என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. எனினும், இவ்விதிகள் இசை ஆகா, இசையின் கட்டுப்பாடுகள் மட்டுமே ஆம்; என்னை? ஓர் உருவத்தைப்பற்றி முதலில் ஏற்படுத்திக்கொள்ளும் கோட்டுத் தொகுதியும், நிறங்களைப் பற்றிய கொள்கையும், இவையன்றி, நிறப் பலகையும் தீட்டுக்கோலுமே கூட, ஓவியம் ஆகாது, அதற்கு இன்றியமையாக் கருவிகளே ஆம் ஆறு போன்று. இசையின் நுண்ணிய பொருள், உட்கருத்தையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்தி அறிவித்தலேயாம்; அது பிரித்து-ஆராயும்-முறைக்கு இடங்கொடாது; எனவே, சரியான இசைச் சீர்தூக்குதல் ஓர் பயிற்சி நூலே ஆகும்.

எனக்குத் தெரிந்தவரைக்கும், இசை நூல் ஒன்றி னுடைய பெருமையையும் சிறுமையையும், சில முதற் கொள்கைகளைக் கொண்டே, தர்க்கவழி நின்று எடுத்துக் காட்டும் போலிக் கல்வியாளன் ஒருவனின் சீர்தூக்கு தலைப் போன்ற பயனற்றது வேறொன்றும் இல்லை. கல்விகற்ற பொதுமக்கள் அறியாது, வெறும் புலமை யாளனுக்கு மட்டுமே தெரிந்த சங்கேதச் சொற்கள் செறிந்த ஒரு சீர் தூக்குதல் கல்வியற்ற மக்களின் கண் ணுக்கு, பொருளற்ற வெறும் சொற்கோவைக்கு, ஏதோ ஒரு சிறந்த பொருள் தருவதாக இருக்கிறது. , எனது நண்பர் 'டெட்மால்டு' ஓவியத்தின் சார்பாக, அந்தப் புலமையைப் பற்றி ஒருவன் ஐந்து நாழிகையில் கற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஒரு கைந்நூல் எழுதியிருக் கிறதைப்போல், இசையைப் பற்றியும் யாராவது ஒருவர், இரண்டர்த்தமுடைய சொற்களும், சீர்தூக்கும் சொற் றொடர்களும், இசையாளரின் சங்கேதப் பேச்சுக்களும் செறிந்த ஒரு கைந்நூல் எழுதி, முற்குறித்த போலிக் கல்வியாளரின் பயனற்ற இசைச் சீர்தூக்குதலுக்கு முடிவு கட்டவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நான் இதுவரை நோட்டமாய்க் கேட்டதில், மிக்க உயர்ந்ததும், கேட்பவர் மனதில் பெரிதும் நம்பிக்கை உண்டாக்குவதும், ஆகிய ஒரு சீரிய இசை-நயம்-காண்ட லைச் சென்ற ஆண்டு (1836) 'மார்சேல்ஸ்' நகரத்தில் ஒரு சத்திரத்தின்கண் கேட்டறிந்தேன். இரண்டு பிறநாட்டு வியாபாரிகள். அப்போதைய ஊர்ப்பேச்சாகிய-ராஸ்ஸீனி, மேயர்பியர் ஆகிய அவ் இருவரில் யார் பெரிய இசைத் தலைவர் என்பதைப் பற்றிப் பேசி வாதித்துக் கொண் டிருந்தனர். ஒருவர், இத்தாலிய நாட்டினராகிய ராஸ் ஸீனியே உயர்ந்த சிறப்புடையவர் என்று சொல்லலும், மற்றவர் அதை ஏற்றுக்கொள்ளாது மறுத்தார்; ஆனால் வெறும் பசையற்ற பேச்சுக்களைக் கொட்டாமல் மேயர் பியரின் இசைநூல் ஒன்றிலிருந்து, மிக்க இனிமையான இசைக் கோவைகளை அவர் பாடினார். அப்படிப் பாடக் கேட்ட மற்றவர், முன்னவருக்கு நம்பிக்கை உண்டாக்கத் தகுந்த விடை, அதற்கு எதிராகத் தாமும் பாடுவதைத் தவிர்த்து வேறில்லை என்று கண்டு ராஸ்ஸீனியின்

'பார்பியர்' என்னும் இசை நூலிலிருந்து மிக்க அழகிய சில துறைகளைப் பாடினர். இவ்விதமாக அவ்விருவரும் அன்று முழுவதும் பாடிக்கொண் டிருந்தார்கள். குறிப்பு பெரிதும் அற்ற தொடர்களால் கூச்சலோடு வாதம் செய்வதற்கு ஈடாக, அவர்கள், அன்று சத்திரத்தில் இருந்த எங்களுக்கு, மிகச் சிறந்ததும் இனிமையானதும் ஆன இசையை அமுதம் என அளித்தார்கள். அன்று தொட்டு, இசையைப் பற்றி நாம் வாதம் செய்யாமல் இருத்தல் வேண்டும், அல்லது, அப்படிச் செய்தால், இந்த வண்ணம் உளத்தைக் கவரக்கூடியதும் நேரே உணரக் கூடியதும் ஆன வகையில் வாதம் செய்தல் வேண்டும் என்று நான் முடிவாகத் தெரிந்து கொண்டேன்.

எனது அருமை நண்ப, இசை நாடகத்தைப் பற்றி வழக்கமாய்க் கூறும் சொற்கோவைகளால் உன்னைக் களைப்படையச் செய்யும் நோக்கம் எனக்கு இல்லை. ராஸ்ஸீனியையும் மேயர்பியரையும் பற்றி, வழக்கமாய்ச் சொல்லுகிறபடி ஒற்றுமை வேறுபாடுகள் நிறைந்த நீண்ட ஓர் விவாதமாக நான் எழுதுவேன் என்ருவது நீ அஞ்சவேண்டாம். ஒருவரைக் குறை கூறி, மற்றவர் பால் நேயம்காட்டுதல் இன்றி, இருவரையும் நேசிப்பதில் தான் எனக்கு மகிழ்ச்சி. மேயர்பியரைக் காட்டிலும் அதிக மாக ராஸ்ஸீனியின் பக்கம் ஒருகால் என் மனம் சாய்ந்தாலும்கூட, அச்சாய்வு, முற்றிலும் என்னிடத் துள்ள உணர்ச்சி ஒழுக்கங்களின் காரணத்தாலேயே அன்றி, எவ்விதத்தும் அவருக்கு உயர்ச்சியை ஏற்றுவது என்பது ஆகாது. ஒருகால், என்னிடத்துள்ள குறை பாடுகளிடம் நெருங்கிய உறவு பாராட்டக்கூடிய ஈடான குறைபாடுகள் அவரிடம் இருக்கலாம். ஒருவித இனிமை யான சோம்பல் கொள்ள இயல்பாகவே மனமுறுபவன் நான்; மலர்ந்து கொண்டிருக்கும் புல்வெளியில் படுத்துக் கொண்டு, மேகங்களின் ஓசையில்லா ஊர்கோலத்தைச் சிந்தித்தும், அவற்றின் ஒளிகளிலும் சாயல்களிலும் களியாட்டெய்தியும் இருத்தலில் எனக்கு அவா. இந்த மகிழ்ச்சி நிறைந்த கனு வெளியிலிருந்து, என் பழுவெலும்புகளில் இருந்திருந்து ஊழ் உண்டாக்கும் ஒரு

கொடிய வலியால், நான் அப்போதைக்கப்போது விழித்துக் கொள்ள வேண்டும் என்பது கடவுள்தம் விருப்பம்: என் நாளைய மன வருத்தங்களிலும் துன்பங் களிலும் நான் தலையிட்டுக்கொள்ளும்படியாய் நேர்ந்தது. அவற்றில் என்னுடைய சேர்க்கை பெருமை பொருந்தியது; மிகப் பெரிய வீரர்களோடு கூட நான் போர் புரிந்தேன்... ஆனால்—என் நெஞ்சிலுள்ளதை எப்படி வெளிப்படுத்துவது என்று தெரியவில்லை—என்னு டைய உணர்ச்சிகள் மற்றவர்களின் உணர்ச்சிகளைப் போல் அன்றி ஒருவித வேறுபாடு உள்ளனவாய் இருந்தன; என்னைச் சூழ்ந்திருப்பவர்தம் அகத்தில், இன்ன உணர்ச்சி கொள்ளுகிறார்கள் என்பதை நான் அறிவேன்; எனினும், அவர்களின் உணர்ச்சிகளி னின்றும் மிக்க வேறுபட்ட உணர்ச்சி நிகழ்ச்சிகளை நான் கொண்டிருந்தேன். என்னுடைய போர்ப்புரவியை மற்றவர்களைப் பார்க்கிலும் குறைவில்லாத சீற்றத்துடன் துரத்தி, எதிரியை என் வாளினால், அவர்களைப்போன்று அவ்வளவு இரக்கம் இல்லாமல், துண்டித்தேனாயினும், பெரும்போரின் வேகமாவது, வேட்கையாவது, அல்லது, அதன் பொறுக்கமுடியாத துயரமாவது என்னை அணுகின தில்லை. எனது ஆன்மாவின் இந்த அமைதியை முன்னிட்டு, என் நெஞ்சு பலமுறை கலக்கம் எய்தியது உண்டு; கட்சிச் சண்டையின் மிக்க ஆபத்தான இடங் களில் நான் பூசலிட்டுக் கொண்டிருக்கும் காலத்தும் என்னுடைய எண்ணங்கள் பலப்பல தடவை வேறு எங்கேயோ தங்கிக்கொண்டிருக்கும். இவ்விதமாகவே, துருக்கியரைத் தமது கனுச்சுற்றுக்களில் எதிர்த்துக் கொண்டிருந்த டேனிசு நாட்டு அரசர் 'ஓகியரே' போன்று நான் இருந்தேன். என்னைப்போன்ற ஒருவன் மேயர்பியரின் இசைக்கு—இடைவிடா அடிமை ஆகா விட்டாலும்—சிற்சில வேளைகளில் மகிழ்ச்சி பொருந்திய போற்றுதலாவது செய்வான் எனினும், இயற்கையாய், மேயர்பியரைக் காட்டிலும் ராஸ்ஸீனியையே விரும்பு வான்.

தனித்த ஒருவனது கலப்பில்லாத களிப்பும் வருத்த மும், அதாவது, தனித்த ஆன்மாவின் காதலும்

வெறுப்பும், இனிமையும் ஆசையும், பொருமையும் துயரமும் ஆகிய எல்லாத் தனிமையான உணர்ச்சி நிகழ்ச்சிகளும், ராஸ்ஸீனியினுடைய இசையின் அலைமீதுதான் மெதுவாகத் தாலாட்டப்படுகின்றன. ராஸ்ஸீனியின் இசை, ஓர் தனித்த உணர்ச்சியின் தவருத நேர்மொழி ஆகிற தனியிசையின் கொழித்தல் நிறைந்த தன்மையதாய் இருக்கிறது. மேயர்பியரிடத்து, அதற்கு எதிராக இயைந்து செல்லும் கூட்டிசைச் செல்வம் நிலைத்துப் பெருகுகிறது. கூட்டிசைப் பெருக்காகிய நீரோட்டத்தில் தனியிசைகள் அமிழ்கின்றன; என்னை? ஒருவனுடைய சிறப்புத் தன்மை வாய்ந்த உளக்கருத்துக்கள் மக்கட் பொதுவின் மொத்த உள் உணர்ச்சியில் அழுந்தி மறையுமாறு போல் என்க. இந்த மாப்பேரிசையின் ஆற்றின் மீது, மக்கட் பிறப்பின் மொத்தத் துயரங்களிலும் களியாட்டுக்களிலும் மனம் இழந்திருக்கும் போதும், பெரிய பொதுநலங்களைச் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதும், நமது ஆன்மா உவகையோடு பாய்ந்து செல்லுகிறது. மேயர்பியருடைய இசை, தனித்த மனிதனைப் பற்றியதன்றி, பொதுமக்களைப் பற்றியது. நிகழ்காலம், இந்த இசையில், தன்னுடைய அகப்புறத் துன்பங்களையும், தன் ஆன்மச் சச்சரவுகளையும், தன் பெருந் துயரங்களையும், தனது நம்பிக்கைகளையும் வெளிப்படுத்தியிருப்பதைக் கண்டு நன்றி செலுத்துகிறது; ஆகவே இந்தப் பெரிய இசைத் தலைவரைப் புகழ்கிறதில், அது தன்னுடைய துயரங்களையும் மகிழ்ச்சியையும் கொண்டாடுகிறது. ராஸ்ஸினியினுடைய இசை, பிரஞ்சு நாட்டின் குடியரசுக் குழப்பம் அடங்கிப் பழையபடி ஆன அந்தக் காலத்தின் தன்மைக்கு மிகப் பொருத்தமானதாய் இருந்தது; ஏனெனில், கொடிய மல்லுகளுக்கும் பலப்பல ஏமாறுதல்களை உணர்ந்ததற்கும் பின்னுல் அந்தக் காலத்தில், குடிமக்களது பெரிய தொகுப்பான விருப்பங்களைப் பற்றிய எண்ணம், அவர்களது உளத்தில் பின் தங்கும்படி, குறுகியும், தனக்கு உரிய உரிமைகளை மறுபடியும் ஒருமுறை வலியுறுத்துமாறு தனித்த ஆன்மாவைப் பற்றிய எணணம் அவர்கள்பால் தலையெடுத்தும் இருந்தன. அந்நாட்டின் குடியரசுக்

குழப்பத்தின்போது, ராஸ்ஸீனி, ஒரு போதும், தமது பரந்த புகழ்ச்சியை அடைந்திருக்க முடியாது. 'ராப்ஸ்பியர்' அவரைப் பொது நன்மைக்கு எதிரான பண்களைக் கட்டுகிறவர் என்று ஒருகால் குற்றஞ்சாட்டியிருக்கலாம். தமது பெருஞ் சேனைக்குப் பாட்டுத் தலைவராக அவரை, மன்னர் மன்னனுகிய 'நெப்போலியன்' ஏற்படுத்தி யிருக்கமாட்டார்; ஏனெனில், பொது நன்மையைப்பற்றிய ஊக்கம் அந்த வேலைக்கு ஓர் முதன்மையான இன்றியமையாதது ஆகும்....ஓ பெஸாரோ நகரின் அரிய அன்னமே! ஐயோ பாவம்! 'காலிக்' நாட்டின் சேவலும் பேரரசின் வல்லூறும் பெரும்பான்மையும் உன்னைத் துண்டு துண்டாகக் கிழித்தேயிருக்கும். போர்க்களங்களையும் பொது நலத்தைக் கருதும் ஒழுக்கத்தையும் காட்டிலும், தனது கரைகளிலிருந்து மென்மையான அலரிப்பூக்கள் மெதுவாய் உன்னைக் கூப்பிடுவதும், தன்னிடம், இங்கும் அங்கும் ஆகச் செல்லும் உனது ஒவ்வொரு செலவிலும், சாயலும் அழகும் விளங்க நீ நீந்துவதும் ஆன ஓர் அமைதியான ஏரியே உனக்கு மிகத் தகுதியானது! குடியரசுக் குழப்பம் அமிழ்ந்த பிற்றை நாளே, ராஸ்ஸீனி வெற்றி பெற்ற நாள். அப்போது, ஐயமின்றி, விண்மீன்களும் அந்த அமைவு நிறைந்த நேரங்களைக் கொண்டாடிக்கொண்டும், குடிமக்களது நிலைமையைக் குறித்து நினைத்தலை விட்டும் இருந்தன; ஆகையால் அவைகள் கூட அவர்தம் இசைக்குக் களிப்போடு காது கொடுத்தன, ஜூலை மாதக் குழம்பம் வானத்திலும் தரையின்மீதும் ஓர் பெரிய கலக்கத்தை உண்டாக்கி விட்டிருந்தது; விண்மீன்களும், மக்களும், வேந்தர்களும், தேவர்களும் – ஏன், அன்புருவான கடவுளேயுங்கூட — தங்கள் தம் வழக்கமான அமைவினின்றும் எழுந்து வெள்ளம்போலும் பல்கிய விஷயங்களை கவனித்தல் வேண்டியிருந்தது. ஆகவே, ஒருவரது தனித்த உணர்ச்சியினின்றும் உண்டாய பண்களை நுகர்வதற்கு வேண்டிய ஒழிவாவது உள்ள அமைதியாவது அவர்களுக்கு இல்லா திருந்தன. மேயர்பியரின் 'ராபர்ட்ஸ்', 'ஹ்யூஜ்னட்ஸ்' என்னும் இசைநாடகங்களின் பெருமிதமான முழக்கம், சினத்தையும் களியாட்டை

யும் விம்முதலையும் மேற்கொண்ட கூட்டிசைக் கோவைகளில் வெளிப்பட்டபோது மட்டும்தான், அவர்களுடைய நெஞ்சங்கள், செவி சாய்த்து, உணர்வு மிகுத்த பொருத்தத்தோடு, அழுதும் மகிழ்ந்தும் கதறியும் இருந்தன.

மேயர்பியரின் இந்த இரண்டு இசை நாடகங்களின்—எவ்விடத்திலும் அவற்றைப் பின் தொடர்ந்த—அதற்கு முன் கண்டறியாததும், அளப்பரும் பெருமை வாய்ந்ததும் ஆன—வரவேற்புக்கு உண்மையான காரணம், ஒருகால் இதுவேயாம். அவரது நாளுக்குத் தகுந்த ஆடவன் அவரே; தனது மக்களைப் பொறுக்கி எடுத்தலை எப்போதும் அறிந்திருக்கிற காலம் என்பது, கேடயத்தின் மீது வெற்றி முழக்கங்களோடு அவரை உயர்த்தி, அவரது ஆளுகையைப் பறைசாற்றி அவரது கொற்றம் பொருந்திய வரவைக் கொண்டாடிற்று. இப்படி வெற்றிக் கோலம் வருவது முழுவதும் சௌகரியமான நிலைமை என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், கேடயம் தாங்குபவன் ஒருவனுடைய ஊழினாலும் அறியாமையினாலும் மேல் இருப்பவர் பெரிதும் தீங்கு எய்தாவிட்டாலும், அச்சந்தரும் நிலைமையில் அது அவரைக் கொண்டுவந்து விடலாம்; ஒருவர் தலையின் பால் விழுகிற மலர் முடிகள், அவை அழுக்கடைந்த கைகளினின்று வந்தபோது, அவரை அழுக்காக்காது ஒழிந்தாலும், நல்லுணர்ச்சியை அவருக்கு அளித்தலைக் காட்டிலும் அதிகமாக அவரைச் சில வேளைகளில் வருந்தச் செய்யலாம்; மிகுத்துப் பெருகிய மலர் முடிகள் மேன்மையைக் குறிப்பவையே ஆயினும் உடம்பில் நோய் செய்யும் வியர்வையை உண்டாக்கலாம்...இவ்வண்ணமான ஓர் ஊர்கோலத்தை ராஸ்ஸீனி காணும் போது தமது செவ்விய இத்தாலிய இதழ்களின்பால் இகழ்ச்சியைக் குறிக்கும் புன்சிரிப்பைக் காட்டுகிறார்...

7. ஆன்ம உருக்கம் ஈன்ற அறநிலை

* * **க**டைசியாய், நான் செல்வவானாய் இருக்கிற இந்தக் குற்றத்தை ஒப்புக்கொள்வது எனக்கு எளிதாயில்லை. ஆனால் இவ்வளவு தொலை, எண்ணத்தை

எழுப்பியவுடனே இதுகாறும் நான் நினைத்து நம்பி வாழ்ந்துகொண் டிருந்த போலி நினைப்புத் தொகுதியைப் பார்த்து, நான் பேரச்சம் அடைந்தேன். சேற்றில் கழுத்தளவு அமிழ்ந் திருக்கவும், பிறரை அச்சேற்றினின்றும் விடுவிக்க நான் முயன்றுகொண் டிருப்பதாக உணர்ந்தேன்.

உண்மையாக நான் செய்ய விரும்புவது என்ன? நான் நல்லவை செய்ய விரும்புகிறேன்; ஒருவன்கூட பசியாலும் பிணியாலும் வருந்தா திருக்கும்படியும், மக்கள் மக்கட் பிறப்புக்குத் தகுதியாக, வாழும்படியும் ஆன ஓர் ஏற்பாட்டைச் செய்ய விரும்புகிறேன். மேற்சொன்ன இதைச் செய்ய எனக்குப் பேராவல்தான்; ஆனால் மற்றவரோடு நானும் சேர்ந்து செய்கிற பலவகையான கடுமைகளாலும், பறித்தல்களாலும், பிற வகைகளாலும், வேலை செய்யும் மக்கள் இன்றியமையாத பொருள்களையும் இழக்கிறார்கள்; நான் உட்பட்ட வேலை செய்யாத வகுப்பினர் வேலையாளரின் வேலைக்கு முழு உரிமை கொண்டாடுகிறார்கள். வேலையாளருடைய வேலையின் பயன், பின் வருமாறு பங்கு செய்து அநுபவிக்கப்படுகிறது: ஒருவன்,—அல்லது, ஒருவனுடைய சொத்துக்கள் எவன் வழியாய்க் கிடைத்தனவோ அவன்—எவ்வளவு சூழ்ச்சியும் சிக்கலும் உள்ள முறைகளைக் கைக்கொள்ளுகிறானோ, அவ்வளவு மிகுதியாய் மற்றவர்களின் வேலையின் பயனைத் தான் கைப்பற்றி நுகர்ந்து, அவ்வளவு குறைவாக, தான் வேலை செய்கிறான்.

இந்த வகையாகப் பார்த்தால், முதன் முதல் கோடீசுவரர், பிறகு, வட்டிக்குப் பணம் கொடுக்கும் செல்வர்கள், வியாபாரிகள், பண்ணைக்காரர்கள், பெரிய அரசியலாளர்கள்; அடுத்தபடியாக, வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களில் சற்றே தாழ்ந்தவர்கள், சிறிய வியாபாரிகள், சிறிய உத்தியோகஸ்தர்கள், நிலமுள்ளவர்கள் (இவர்கள் வகுப்பில்தான் நான் சேர்ந்தவன்); பிறகு, கடைக்காரர், சோற்றுக் கடைக்காரர், பணம் கடன் தருபவர், பெரிய பாதுகாப்பு வேலைக்காரர், உபாத்தியாயர், பஞ்சாங்கக்காரர்கள், கணக்கர்கள்; அடுத்தபடியாக, வீட்டு வேலைக்காரர், ஏவலாளர், வண்டிக்காரர், நீர் சுமப்பவர், தெருவில் விற்பவர்; கடைசியாக, வேலை

யாட்கள், கைத்தொழில் ஆலைகளின் கூலிகள், ஏர் உழுபவர்கள். கடைசி வகுப்பினர், மற்றெல்லா வகுப்பி னரைக் காட்டிலும் ஒன்றுக்குப் பத்து அதிகமாக இருக் கின்றனர். வேலை செய்யும் மக்களில் பத்தில் ஒன்பது பங்கினரின் வாழ்க்கை, மற்ற இயற்கையான வாழ்வு ஒவ்வொன்றையும் போன்று, விடா முயற்சியையும் உழைப்பையும் இன்றியமையாது வேண்டுகின்றது; ஆனால், இவர்களினின்றும் உயிருக்கு இன்றியமை யாதனவற்றை மற்றையோர் கவர்ந்து கொள்ளும் சூழ்ச்சிகள் காரணமாக, இவர்களின் வாழ்வு ஒவ்வொரு ஆண்டும் மிக்க ஏலாததாயும், இல்லாதவை மிக்கவாகவும் ஆகின்றன; வேலை செய்யாத வகுப்பினராகிய நம் முடைய வாழ்க்கையோ, அறிவு நூல்களும், தொழில் நூல்களும் ஒத்தியங்குவதால், (இவற்றின் நோக்கம் பின் கூறுவதே) ஒவ்வொரு ஆண்டும், மிகச் செம்மை யாகவும், புதுமையாகவும், அச்சமற்றதாகவும், உளத் தைக் கவரக் கூடியதாகவும் ஆகிறது. இக்காலத்தில், வேலையாளரின் வாழ்க்கை—முதன்மையாக, கையுழைக் கும் வகுப்பினரில் நாட்சென்றவர்கள், குழந்தைகள் ஆகிய இவர்கள்தம் வாழ்க்கை,—தங்களின் ஊணுக்குத் தகுதியில்லாதபடியாக அதிகப்பட்ட வேலையினால் முழுதும் நசித்திருப்பதையும், இன்றியமையாதவைகளில் முதன்மையானவை கூட, அவர்களுக்குக் கிடைக்க வழி யில்லா திருப்பதையும் நான் உணருகிறேன். இவற்றின் பாங்கர், வேலையற்ற வகுப்பினரின் வாழ்க்கை (இவ் வகுப்பில்தான் நான் சேர்ந்தவன்) ஆண்டுதோறும் வேண்டாதவைகளாலும், வெறும் பெருமிதங்களாலும் மேலும் மேலும் நிறைந்தும், இடைவிடாது மேலும் மேலும் நிறைபெற்றும் வருகிறது. எப்போதும் பணம் வந்துகொண்டேயிருக்கும் மாயப் பையையுடையவனின் நிலைமையைப் பற்றி, முற்காலத்தில் கனவு கண்ட அளவுக்குச் செல்வர்களின் வாழ்க்கை உயர்ந்திருக்கிறது. தன் உயிரைக் காப்பாற்றுதற்கு வேண்டிய வேலையைச் செய்ய ஒவ்வொருவனும் கடமைப்பட் டிருக்கிறான் என்னும் இயற்கை விதியினின்றும், செல்வர்கள் முழுதும் நீங்கியிருப்பது மட்டும் இல்லாமல், இவர்கள்

வேலை செய்யாமலேயே இம் மாநில வாழ்க்கையின் எல்லாவிதமான நலன்களையும் நுகரவும், தம் குழந்தைகளுக்காவது, மற்றுத் தாம் வேண்டிய எவருக்காவது, பணம் ஊறிக்கொண் டிருக்கும் இந்த மாயப் பையைப் பின் விட்டுப் போகும்படியான ஒரு நிலைமையைஅவர்கள் அடைந்திருக்கிறார்கள்.

மக்களின் வேலையின் பயன்கள், முற்காலத்தைக் காட்டிலும் இப்போது மிகுதியாய், பெருந் தொகையினரான வேலையாட்களினின்றும், வேலை செய்யாத வகுப்பினருக்குச் சேருகின்றன. பொதுமக்கள் அடுக்கால் ஆய கோபுரம் இப்போது புது விதமாகக் கட்டப்படுகிறது; எனவே, அடிக்கற்கள் உச்சிக்குப் போகின்றன. இப்படிச் செல்லும் செலவின் விரைவு, ஒன்று, பத்து, ஆயிரம் என்னும் பெரிய அளவினதாக வளர்கிறது.

எறும்புக் கூட்டம் ஒன்று பொது விதியின் வரம்பை மறந்தது காரணமாக, சில எறும்புகள், ஊழியத்தின் பயனை அடிப்படையினின்றும், அடிப்படையைச் சிறுக்கிச் சிறுக்கி, உச்சிக்குக் கொணர்ந்து, உச்சியை அகற்றி, அதனால் மற்ற எறும்புகளையும் அடியிலிருந்து உச்சிக்கு வரும்படி செய்தால், எறும்புப் புற்றில் எவ்வகைப் பெரு மாறுதல் இயங்குமோ, அதைப்போல், மக்களாகிய நமது பொது வாழ்வில் பெரியதொரு வேறுபாடு உண்டாய்க் கொண்டிருக்கக் காண்கிறேன்.

மிக்க உழைக்கும் வாழ்க்கையில், எடுத்துக் காட்டாக நிலவி, விரும்பி அடையத் தோன்றும் ஒரு பெரு நலனுக்கு ஈடாக, இந்நாளையவர்,முடிவற்று வந்துகொண் டிருக்கும் செல்வப் பையைப் பெருநோக்கமாக உடைய ஒரு போலி நலத்தை அமைத்துவிட்டனர். என்னை உள்ளிட்ட செல்வர், பலப்பல சூழ்ச்சிகளால், இந்தச் செல்வத்தை ஒழுங்குபடுத்துகிறார்கள்; இதை நுகரும் பொருட்டு நாங்கள் (ஒன்றும் விளையாமல் எல்லாம் நுகர்ந்து செரிக்கப்படுகிற இடங்களாகிய) நகரங்களில் குடியிருக்கத் தொடங்குகிறோம்.

இந்த மாயவராகனை அடையும்பொருட்டு, பணக்காரரால் ஏமாற்றப்பட்ட ஏழை வேலையாளரும், அவர்களைத் தொடர்ந்து நகரங்களை அடைகிறார்கள்; மற்ற

வேலையாட்களின் நிலைமையை இன்னும் மிகக் கஷ்டமாக்கி, தாம், கொஞ்சமே வேலை செய்யவும், நிரம்ப நுகரவும், ஒப்படைக்கும்படியாகவாவது, அல்லது, இந்த நிலைமையை அடைய முடியாதபோது, தம்மை அழித்துக் கொள்ளுதலும், பசியாலும் பிணியாலும் வருந்தி பிச்சை வீடுகளில் புகும் ஏழைகளினுடைய—இடைவிடாது வளர்ந்துகொண் டிருக்கும்—கூட்டத்தில் தாமும் அடித்துக் கொண்டு போகப்படுதலும் ஆன ஏமாற்றல்களை அவர்கள் அங்குக் கைக்கொள்ளுகிருர்கள். இந்தப் பல வகையான ஏமாற்றல்களால் உழைப்பாளிகளினின்றும், வாழ்க்கைக்கு இன்றியமையாதவற்றை எடுத்தேகுகிறவரும், தங்கள் பொருட்டு மேற்சொல்லிய கொடுப்பனையற்ற வேலையாளரையும் தாங்கள் தூண்டாமல் தூண்டி, என்றும் நிலவுகிற மாய வராகனை அமைத்தவரும் ஆகிய இவர்களின் இனத்தில் சேர்ந்தவன்தான் நான்.

பொதுமக்களுக்கு உதவி புரிய அவாவுகிறேன் நான்; ஆகவே, முதலில், ஒரு பால், நான் இப்போது செய்வது போல் அவர்களைக் கொள்ளையடிப்பதை நிறுத்தல் வேண்டும். மற்ருெருபால், அவர்களுக்குப் போலி வழி காட்டுவதை அறவே ஒழித்தல் வேண்டும்.

ஆனுல், நான், அநேக நூற்ருண்டுகளாக மிகச் சிக்கலும் சூழ்ச்சியும் கெடுதியும் ஆன யுக்திகளால், மேற்சொல்லிய இந்த வராகனுக்குச் சொந்தக்காரனுக என்னை ஆக்கிவிட்டேன்; அதாவது, நான் ஒன்றும் செய்யாமலேயே, எனக்காக உழைக்கும்படி ஆயிரக் கணக்கான ஆட்களைக் கட்டாயப் படுத்தக்கூடிய ஒரு நிலைமைக்கு நான் வந்து விட்டேன்; இந்த உழைப்பாளிகளுக்காக நான் இரக்கப்படுகிறேன் என்று நடிக்கும் போதும், இவர்களுக்கு உதவிசெய்ய விரும்பும் போதும், இந்தத் தனித்த பெரிய உரிமைகளை நான் உண்மையாகவே கைப்பற்றி நுகர்ந்துகொண் டிருக்கிறேன்.

ஒருவனுடைய முதுகின் மேல் நான் உட்கார்ந்து அவனைப் பெரிதும் வலிவுற அழுத்திய பின்பும், என்னைத் தூக்கிக் கொண்டுபோக அவனைக் கட்டாயப் படுத்துவதையும், அவனுக்காக மிக்க இரக்கப்படுவதாகவும்,

அவன் முதுகினின்று இறங்குதல் ஒழிய மற்ற எல்லா வழிகளாலும், அவனுடைய நிலைமையைத் துன்பமறச் செய்ய விரும்புவதாகவும் எனக்கும் பிறர்க்கும் உண்மைப் படும்படி நான் சொல்லும்போதுகூட, அவன் முதுகி னின்று நான் கீழ் இறங்கா திருப்பதையும் போன்றது எனது இப்போதைய நிலைமை.

இவ்வண்ணமான எனது நிலைமையைப்பற்றிக் கொஞ்சம்கூட எனக்கு ஐயமில்லை. ஏழைகளுக்குத் துணை புரியும் விருப்பம் இருந்தால், அதாவது, ஏழைகளை ஏழைமையினின்றும் விடுவிப்பது எனது கருத்தானால், நான் இந்த ஏழைகளை உண்டாக்குவதை நிறுத்தல் வேண்டும். எனினும், தவறினவர்களுக்கு, என் உளப் போக்கின்படி ஒரு கையால் நான் பணம் தருகிறேன்; மற்றொரு கையால், இன்னும் இப்படித் தவருத ஆட்களிட மிருந்து பப்பத்து வராகனை எடுத்துக் கொள் கிறேன்; என்னுடைய இந்தச் செய்கைகளால் அவர் களில் சிலரை ஏழைகளாகவும் செய்கிறேன்.

இது மிகத் தெளிவாக இருக்கிறது; ஆனால் என் னுடைய செல்வ நிலைமையை ஒருவகையில் நியாயப் படுத்தத் தக்க ஏதாவது ஒரு பிடிமானம்கூட இல்லாமல், நேரே இப்படியே அறிவது எனக்கு அளவிட முடியாக் கஷ்டமாய் இருந்தது. இருந்தாலும், என்னுடைய தவற்றைக் கண்டவுடன், முன் விபரீதமாயும் சிக்க லாயும் மறைவாயும், சொல்லமுடியா வண்ணமாயும் தோன்றிய வெல்லாம், மிக்க எளியனவாயும் அர்த்தம் உடையனவாயும் தெரிந்தன; மேலும், பின்வருவன வற்றால், இனி நடக்க வேண்டிய ஒழுக்க முறை என் மனத்திற்குத் தெளிவாயும் நிறைவாயும் ஆய்விட்டது.

மக்களின் நிலைமையை உயர்த்த விரும்புகிற நான் எப்படிப்பட்டவன்? நான் இப்படிச் செய்ய விரும்பு கிறேன் என்பது உண்மை. எனினும், நேற்றிரா முழு வதும் ஒள்ளிய வெளிச்சம் உடைய சிங்கார மண்டபத் தில் சீட்டு ஆடியபின் நண்பகலில் எழுந்திருக்கிறேன். இப்படி எழுந்திருக்கும் இந்த வலிவற்ற ஆண்மை யழிந்த நான், இக் காரணத்தினாலேயே நூற்றுக் கணக்கான மற்றவர்களுடைய உதவியையும் ஏவல்

களேயும் வேண்டி யிருக்கிற நான், இவர்களுக்குத் துணே புரிய முன் வருகிறேன்! என்ன மடமை!—இவர்களோ எனில், காலேயில் எழுந்தும், கடினமான பலகைகளின் மீது தூங்கியும், அடையையும் கீரையையும் புசித்தும் இருப்பவரும்; உழுவதும் அறுப்பதும், குதிரைகட்குச் சவாரி இடுதலும், தைத்தலும் ஆகிய இவை தெரிந்த வரும்; தங்களுடைய வலிவாலும், ஊக்கத்தாலும் ஆசையை அடக்கும் முகத்தாலும் தங்களுக்கு உதவி செய்யவரும் என்னேக் காட்டிலும் நூறு மடங்கு உரம் உள்ளவர்களும் ஆவர்.

வெட்கம் தவிர்த்து வேறென்ன, இவர்களோடு பழகினதிஞல் நான் அநுபவித்திருக்க முடியும்? அவர் களில் மிக்க நொய்மையானவன் என்பவன்—குடியனும், பொது வீட்டு மூலேயில் குடியிருப்பவனும், அவர்களால் சோம்பேறி என்று அழைக்கப் படுபவனும் ஆகிய ஒருவன் என்று வைத்துக்கொள்வோம், அவன்கூட என்னேக் காட்டிலும் நூறு மடங்கு அதிகப்படியான வேலேயாளாவான்; அவனுடைய நிலுவை, அதாவது, வேறு மொழிகளில் சொல்ல வேண்டுமாஞல், மற்றவர்க ளிட மிருந்து அவன் வேண்டுவதும், அவர்களுக்குத் தான் கொடுப்பதும் ஆகிய இவற்ருல் ஆய நிலுவை, பிறருக்கு நான் என்ன கொடுக்கிறேன் என்றும், அவர்களிடமிருந்து நான் என்ன வாங்கிக்கொள்ளு கிறேன் என்றும் கணக்கிடுகிறபோது, என்னேக் காட் டிலும் உழைப்பில் அவனே ஆயிரம் மடங்கு பெரிய முதலாளி யாக்குகிறது. அப்படிப் பட்டவர்களிடம், அவர் களுக்குத் துணே புரியும் பொருட்டு நான் போக விரும்பு கிறேன்.

நான் ஏழைகளுக்குத் துணே புரியப் போகிறேன். ஆஞல், இவ் இருதரத்தாரில் யார் மிக்க ஏழை? என்னேக் காட்டிலும் பெரிய ஏழையே கிடையாது. ஒரு வகையான சிறப்பான இடம், பொருள், ஏவல்களால் மட்டுமே, நான் பிழைக்க முடியும்; ஒருவனுக்கும் உதவி யில்லாத இந்த என்னுடைய உயிர், ஆயிரவர் வேலே செய்தால் மட்டும் பிழைத்திருக்கும்; அதாவது உரமற்ற ஒன்றுக்கும் உதவியில்லாத ஓர் புல்லுருவியே நான்.

இப்படிப்பட்ட நான், மரத்தின் இலையைத் தின்று அழிக்கிற இந்த மரப்புழு, மரத்தின் நலத்திற்கும் வளர்ச்சிக்கும் உதவி செய்யவும் அதன் நோய் தீர்க்கவும் விரும்புகிறேன்.

என்னுடைய வாழ்க்கை முழுதும் பின் வரும் வகையில் செல்கிறது. நான் சாப்பிடுகிறேன், பேசுகிறேன், கேட்கிறேன்; பிறகு, நான் சாப்பிடுகிறேன், பிறிதொரு வகையில் பேசுவதும் கேட்பதும் ஆகிய எழுதலும் படித்தலும் செய்கிறேன்; நான் மறுபடியும் உண்கிறேன், விளையாடுகிறேன்; பிறகு, சாப்பிட்டு, பேசி, கேட்டு, கடைசியில் ஒருதரம் சாப்பிட்டுத் தூங்கச் செல்கிறேன்: இவ்வண்ணமாக ஒவ்வொரு நாளும் கழிகிறது; நான் வேறு ஒன்றைச் செய்கிறதும் இல்லை, அல்லது, எப்படி ஒன்றைச் செய்வது என்பதையும் அறியேன். இந்த வாழ்க்கையை நான் இன்பமாக நுகரும் பொருட்டு, வைகறையிலிருந்து இரவு வரைக்கும் வீட்டு வேலைக்காரர், பெண்டிரும் ஆடவரும் ஆகிய சமையற்காரர், ஏவலாளர், வண்டிக்காரர், வண்ணார்கள் முதலிய பலப்பலர் உழைத்தல் வேண்டும்; இதுவும் தவிர, வண்டிக்காரரும் சமையற்காரரும் காலாட்களும் மற்றையவரும் எனக்காக வேலை செய்வதற்கு வேண்டிய கோடரிகள், பிப்பாய்கள், துடைப்பங்கள், கலன்கள், கண்ணாடிகள், மெழுகு, செருப்புச் சாந்து, மண் எண்ணெய், வைக்கோல், விறகு, உணவு முதலிய கருவிகளையும் பொருள்களையும் அவர்கள் அடைவதற்காக வேண்டிய கையுழைப்பு கொஞ்சம் அன்று. இந்த எல்லாப் பெண்டிரும் ஆடவரும் பகல் முழுவதும் உழைக்கிறார்கள்; நாளும் இவ் உழைப்பு நான் பேசும் பொருட்டும் உண்ணும் பொருட்டும் தூங்கும் பொருட்டுமேதான். இப்படியிருக்க, இந்தப் பயனற்ற மகனாகிய நான், எனக்கு வேலை செய்து உதவும் உழைப்பாளிகளுக்கு உதவி செய்ய உரமுள்ளவன் என்று என்னைக் கருதினேன். என் உளத்தில் இவ்வளவு மடமையான கருத்து ஒரு போதாவது உண்டாயிற்றே என்பதைப் போல, நான் ஒருவருக்கும் உதவி செய்யவில்லை என்பதாவது, என்னைப் பற்றி எனக்கே வெட்கம்

உண்டாயிற்று என்பதாவது அவ்வளவு வியப்புத் தரவில்லை.

பிணியாளனை கிழவனைப் பராமரித்த பெண்டு, உண்மையில் அவனுக்கு உதவி செய்தவள் ஆவாள்; தான் விதை விதைத்ததி லிருந்து கடைசி வரையில் வேலை செய்து, அதனாலாய அடையைப் பகிர்ந்து கொடுத்த குடியானவன் மனைவி பசியாளனைத் தணித் தவள் ஆவாள்; தான் கையுழைத்து எய்திய மூன்று காசை வழிப்போக்கனுக்குக் கொடுத்து உதவிய கொல்லன், கொடையாளி ஆவான்; ஏனெனில்; இந்த மூன்று காசும் அவனுடைய உழைப்பின் பயன்! ஆனால், நான் ஒருவருக்கும் ஊழியம் செய்யவில்லை, ஒருவருக்காக உதவியும் செய்யவில்லை; என்னுடைய செல்வம் என் உழைப்பின் பயன் அன்று என்பது எனக்குச் செவ்வை யாய்த் தெரியும். *ஆகவே பணத்திலும், அல்லது, பணத் திற்கு ஈடானதிலும், பணத்தை வைத்திருப்பதிலும் ஏதோ முறையின்மையும் தவறும் இருந்தன என்பதை உணர்ந்தேன்; மேலும், பணந்தானும், அதை நான் அடைந்திருப்பதும், என் எதிரில் நான் முன் பார்த்த அந்த எல்லாக் கொடுமைகளும் உண்டாய் நிலைத்ததற்குமுதன்மையான காரணங்களில்ஒன்றெனவும் அறிந்தேன்;* அங்ஙனம் உணர்ந்து அறிதலும், செல்வம் என்றால் என்ன? என்று என்னையே கேட்டுக் கொண் டேன். * * *

---

8. இன்ப நிலை

எல்லாப் பொருள்களையும் பொருண் முதல்களையும் நிலையற்ற வகைகளாகவோ வடிவங்களாகவோ கருதுதல் இந்நாளைய எண்ணத்தின் போக்காக மேலும் மேலும் ஆய்விட்டது. வெளியே நடைபெறுகிற நம் உடல் வாழ்க்கையைப் பற்றி முதற்கண் ஆராய்வோம். அதன் சிறந்த இடைவெளி ஒன்றில் அதை நோக்குங்கள்: எடுத்துக்காட்டாக, கோடைகால வெப்பத்தில் ஓர் ஊற்றுப் பெருக்கில் முழுகி, அதினின்று இன்பமாக வெளியே வரும் அந்த நொடிப்பொழுதை எடுத்துக் கொள்வோம். அந்த நொடியின் முழு உடல் வாழ்க்கை

யும்—அறிவு-நூல் இட்ட பெயர்கள் கொண்ட—இயற்கைப் பொருண் முதல்களின் ஓர் சேர்க்கையே அன்றி, வேறென்ன? ஆனால் இந்தப் பொருண் முதல்கள்—அதாவது, எரிபொருளும் சுண்ணமும் நுண்ணிய நரம் பிழைகளும் ஆகிய இவை—மக்கள் யாக்கையில் மட்டுமே காண்பன அல்ல: அதற்கு மிகச் சேய்மையான இடங்களிலும் அவற்றை நாம் காண்கிறோம். நம் உடல் வாழ்க்கை—அதாவது, செந்நீரின் ஓட்டம், கண்ணின் ஒளிவட்டங்களினது அழிவு-மீட்சி, ஒளி ஓசைகளின் அலையால் மூளையின் வேர் நரம்புகள் மாறுபாடெய்தல் ஆகிய இவை போன்றவற்றால் ஆய நம் உடல் வாழ்க்கை—அம்முதற் பொருள்களின் நிலைபெற்ற ஓர் இயக்கமே ஆகும்: மேற்குறித்த இவ் இயக்கங்களையே அறிவு-நூல் இன்னும் மிக்க ஒருமைப்பாடுற்றவையும் இன்னும் மிகச் சிக்கலற்றவையும் ஆன உரங்களாகச் சிறுகுவித்துக் காட்டும் என்பதுணர்க. எப்பொருண் முதல்களைக் கொண்டு நாம் வடிவுபட் டிருக்கிறோமோ அவற்றைப் போன்று, இந்த உரங்களின் தொழிலும் நம்மைத் தாண்டிப் பரவுகிறது. அது இரும்பைத் துருவாக்குகிறது, நெல்லை விளைவிக்கிறது. நமக்கு எப்பக்கத்திலும் நெடுந்தூரம் அந்தப் பொருண்முதல்கள் விதைக்கப்பட்டுப் பலப்பல ஓட்டங்களாகத் துரத்தப்படுகின்றன; பிறப்பும், நடமாட்டமும், இறப்பும், பிணக் குழியினின்று செவ்வந்தி முளைத் தெழுவதும் அப்பொருண் முதல்களின் பல்லாயிரம் விளைந்த சேர்க்கைகளில் சிலவேயாக இருக்கின்றன. முகம், கை, கால்கள் ஆகிய இவற்றின் தெளிவானதும் பிறப்பு முதல் இறப்பு வரையில் உள்ளதும் ஆன அந்தப் பெரும்படியான உருவப் பாகுபாடு, நாம் அவ் ஆயிரக்கணக்கான சேர்க்கைகளை எதன் கீழ் தொடர்ந்து தொகுத்துப் பார்க்கிறோமோ அந்த நம் அகத் தோற்றமே ஆம்: என்னை? தனக்குப் புறத்தே எப் பக்கமும் வெளியே செல்கின்ற இழைகளால் ஆய ஓர் ஆடையின்கண் உத்தியால் அறியக் கிடக்கும் ஓர் பொருட் போலியே போலும் என்றறிக. தங்கள் வழிகளினிடையில் அண்மையிலாவது சேய்மையிலாவது பிரிந்து போகப் போகிற உரங்களின்—நொடிக்கு நொடி

மீட்கப்பட்ட—சேர்ந்த இயக்கமே நம் உடல் வாழ்க்கை: எனவே, இவ்வளவிற்கு மட்டுமாவது நம் உடல் வாழ்க்கை அனற் கொழுந்தின் ஒப்புமையாகும் ஓர் நீர்மையைக் கொண் டிருக்கிறது.

அல்லதூஉம், நினைப்பாலும் உணர்ச்சியாலும் ஆய அக உலகத்தைப்பற்றி ஆராயத் தொடங்கினால், அங்கே, நீர்ச்சுழி இன்னும் மிக்க விரைவாகவும், அனற் கொழுந்து இன்னும் மிக்க விருப்பங் கொண்டும் வேட்கை யுற்றும் இருக்கிறது. பார்வைக்கு அசைவற் றிருந்தும் உண்மையில் கீழ் முகமாக ஓடுகின்ற கரை ஓரத்து நீரின் இயக்கங்கள் போன்று கண் படிப்படியாய் இருண்டுபோதலும், சுவரிலிருந்து கொஞ்சங் கொஞ்ச மாய் நிறம் மங்குதலும் ஆக—அது ஆங்கில்லை. மற்று, நட்டாற்றின் பேரோட்டம் போன்றும், காட்சி, பேருணர்ச்சி, எண்ணம் ஆகிய—நொடிப் போதில் தோன்றி மறையும்—செயல்களின் கொழித்தல் ஆகவும் அன்றோ இருக்கிறது அது. மேலோட்டமாகப் பார்க்கும் போது, கூர்மையானதும் இடையீடற்றதும் ஆகிய ஓர் உண்மையால் நம்மை நசுக்கியும், ஓராயிரம் விதமான செய்கைகளை நாம் மேற்கொள்ளும்படி நம்மினின்றும் நம்மை வெளிப்படுத்தியும், அநுபவம் —வெளிப் பொருள் களால் ஆய—ஓர் வெள்ளத்தில் நம்மைப் புதைப்பது போல் இருக்கிறது. ஆனால்,அறிவு அவ் வெளிப்பொருள் களைப் பற்றி ஆராயும் போது அதன் வல்லமையினால் அவை சிதறிப் போகின்றன; செப்படி வித்தையின் ஒரு சூழ்ச்சியைப் போல் பொருளுக்கு ஒருமை தரும் உரம் அப்போது ஒழிந்துவிட்டது போல் தோன்றுகிறது ; ஒவ் வொரு பொருளும் நோக்குபவன் உள்ளத்தில் நிறம், மணம், பொருத்தப் பாகுபாடு என்கிற அகப் பதிவுகளின் ஓர் கூட்டமாகத் தளிர்கிறது. பேச்சினின்று பெற்ற உறுதியையுடைய பொருள்களால் ஆய பிரபஞ்சத்தை விட்டு, நிலையற்றவையும் அசைவுள்ளவையும் பொருத்த மற்றவையும் எரிகிறவையும் விழிப்போடே அழிந்து போகிறவையும் ஆன அகப் பதிவுகளால் ஆய பிரபஞ் சத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டே போவோம் ஆகில், அது இன்னும் சுருக்கமாய்ப் போகிறது ;

காட்சியின் முழுப் பரப்பும் தனித்த ஓர் உளத்தின் ஒடுக்கமான அறையின் அளவாகச் சுருங்குகிறது. உண்மை பொருந்திய எவ்வகைக் குரலும் நம்மாட்டு வெளியினின்று எதைத் துளைத்துக்கொண்டு வந்த தில்லையோ, அல்லது, வெளியே இருக்கிறது என்று மட்டும் நாம் யூகித்தறியும் எதனிடமாவது நம்மினின்று எதை ஊடுருவிக்கொண்டு போன தில்லையோ ஆன்மாவின் அந்த மொத்தச் சுவரால் ஒவ்வொருவனிடத்தும் —அகப் பதிவுகளின் ஓர் கூட்டம் என்று முன்னமேயே சிறுகுவிக்கப்பட்ட—அநுபவம் சூழப்பட் டிருக்கிறது. ஒவ்வொரு உளமும் தன் சொந்தமான பிரபஞ்சக் கனவை ஓர் தனித்த கைதியாக வைத்துக்கொண் டிருக்குங்கால், அந்த அகப் பதிவுகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொருவனது தனித்த நிலைமையில் உண்டான ஓர் அகப்பதிவே ஆகும். பிரித்தறியும்-முறை இன்னும் ஒரு அடி மேலே போய் நம்மில் ஒவ்வொருவனுக்கும் அநுபவம் எவற்றின் அளவாகக் குறுகுகிறதோ, ஓர் தனித்த மனத்தின் அவ் அகப்பதிவுகள் எப்போதும் ஓடிக்கொண்டே யிருக்கின்றன என்றும்; அவற்றில் ஒவ்வொன்றும் காலத்தால் வரையறுக்கப்பட் டிருக்கிறது என்றும்; காலம் எண்ணிறந்த அளவு கூறுபடுத்தப் படும் ஆகையால், அவற்றில் ஒவ்வொன்றும் அங்ஙனமே எண்ணிறந்த அள்வு கூறுபடுத்தப்படும் என்றும்; நாம் அதை அறிய முயல்கிற போதே மறைந்ததும், 'அது இருக்கிறது என்பதைக் காட்டிலும் அது இருந்தது என்பதே அதைப்பற்றி மிக்க உண்மையோடு சொல்லப்படுவது' என்கிறதும் ஆன ஒரே ஒரு நொடியே அவ் அகப் பதிவில் உள்ளதெல்லாம் என்றும் நமக்கு உறுதியாக உரைக்கிறது. நம் உயிரில் உண்மை என்று கருதக் கூடியது, நீரோட்டத்தில் தன்னை உடனுக்குடன் சரிப்படுத்திக்கொண்டிருக்கும் நடுங்கும் நுண்ணிய புல்லிதழாகவும், சென்ற அந்த நொடிகளைக் குறித்த தான—ஒருவாறு ஓடிமறையும் ஓர் எச்சம்மட்டும் ஆன தான—ஓர் உணர்வோடு கூடிய கூரிய ஓரே ஒரு அகப் பதிவாகவும் சிறுகுகிறது. இந்த இயக்கத்தினிடத்து, அதாவது, அகப்பதிவுகள், அகச்சாயல்கள், புலன்கள்

ஆகிய இவற்றின் செலவும் கரைவும் ஆகிய இவற்றிடத்து—தொடர்ந்து உடனுக்குடன் இறந்தொழிதல் ஆகிய இதனிடத்து—'நாம்' என்று சொல்லப்படுவதை வியப்பாக எஞ்ஞான்றும் உண்டுபண்ணுதலும் அழித்தலும் ஆகிய இவற்றினிடத்து—பிரித்தாராயும்-முறை மேல் செல்லாமல் நின்றுவிடுகிறது.

ஆசிரியர் நோவாலிசு அவர்கள் கருதுகிறபடி, நமது ஆன்மாவுக்கு உண்மை நூலின்—அல்லது, உளக் காட்சியால் ஆய நிறை கல்வியின்—பயன் என்ன வெனில், இடை விடாததும் விருப்பம் மீக்கொண்டதும் ஆன காட்சி நிறையும் ஓர் வாழ்வு வாழும்படி அவ் ஆன்மாவை மென்மையாகவோ அல்லது தட்டியோ எழுப்புதலே ஆம். ஒவ்வொரு நொடியிலும் கையிலாவது முகத்திலாவது ஓர் உரு முதிர்ந்த அழகு அடைகிறது;குன்றுகள் பக்கலாவது கடலின் கண்ணுவது ஓர் குரல் மற்றவைகளைப் பார்க்கிலும் பெரிதும் இன்பமானதாய் இருக்கிறது; பேர் உணர்ச்சியின் ஓர் துறையோ, ஆன்மக் காட்சியோ, அல்லது, அறிவின் எழுச்சியோ அந்த நொடிக்கு மட்டும் ஒழிக்க முடியாத உறுதியாகவும் நமக்கு இச்சை காட்டி நம்மை ஈர்ப்பதாகவும் இருக்கிறது. 'அநுபவத்தின் முடிவு' என்பதல்லாது அநுபவம்தானே முடிவாகிறது. பல்வகைப்பட்ட நாடகவாழ்வில் குறிக்கப்பட்ட எண்ணிக்கையுள்ள உயிர் நாடிகள் மட்டும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவிற்குள் உயர்வற்ற தேர்ச்சியான நுண்பொறிகளால் பார்க்கக் கூடிய எல்லாவற்றையும் நாம் எவ்வணம் பார்க்கலாம்? ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு நாம் எப்படி மிக்க விரைவாய்ச் செல்லலாம்? சென்று பேரளவினவாய உயிர் உரங்கள் மிகத் தூய்மையான தங்கள் வன்மையோடு கலக்கிற அந்த நடுமுனையில் எவ்வணம் நாம் எப்போதும் வாழலாம்?

இப்படித் திண்மையானதும் மணியின் ஒளி போன்றதும் ஆன அழற்கொழுந்து எழ எப்போதும் எரிந்து கொண் டிருத்தலும்—இந்தப் பேரின்பத்தைக் காப்பாற்றலுமே இவ்வாழ்க்கையில் வெற்றி அளிப்பதாகும். பழக்கங்களைக் கைப்பற்றுவதே நம்முடைய தோல்வி என்று கூட ஒரு வகையில் சொல்லலாம். ஏனெனில், எண்ணிப்

பார்க்கும்போது, பழக்கம் வேறுபடாத நிலை வாய்ந்த ஓர் உலகத்தைக் குறித்ததாகும். ஆனால் எந்த இரண்டு மக்களையாவது நிலைகளையாவது ஒரே வகை என்று காணச்செய்வது கண்ணின் மென்மையற்ற நீர்மையே அன்றோ! நம் அடிக்கீழ் எல்லாம் இங்ஙனம் நெகிழும் போது ஏதாவது ஓர் தூய்மையான பேர் உணர்ச்சியை யாவது, அல்லது, ஆன்மாவை ஒரு நொடிப்போதாகிலும் தளையினின்று--தன் உயர் நிலையால்--விடுவிக்கிறது எனத் தோற்றுகிற அறிவின் ஓர் உண்மை ஒளியையாவது, அல்லது, புதுமையான சாயங்கள், புதுமையான நிறங் கள், புதுமையான மணங்கள் ஆகிய இவைபோன்ற பொறிகளின் ஏதாவதொரு கிளர்ச்சியையாவது, அல்லது, ஓர் ஓவியப் புலவனின் முடிந்த ஓர் வேலைப்பாட்டை யாவது, அல்லது, ஒருவனது நண்பனுடைய முகத்தை யாவது நாம் உறுதியாகப் பற்றலாம் அன்றோ! ஒவ் வொரு நொடியும் நம்மைச் சுற்றிலும் உள்ளவர்கள்பால் ஏதாவது ஓர் பேர் உணர்ச்சியின் நிலையையும், அவர் களின் பெறுதற்கரிய வாய்ப்புக்களின் மிக்க ஒளி பொருந் திய தன்மையின்கண்ணேயே அவர்களைத் துயர்வுறச் செய்யும்பொருட்டு நேர்கிற—உரங்களின் எதிர்பாராத— ஏதோ ஒருவகைப் பிரிதலையும் கூர்ந்து உணராது விடுதல் பனியும் ஞாயிறும் சேர்ந்த இந்தக் குறுகிய நாளில் மாலைக்கு முன்னமேயே தூங்கினதுபோல் ஆகும். நம் அநுபவம் ஓர் மாப்பெரு நிலை என்றும், அஃது அச்சம் தருவதான சுருக்கம் உடையது என்றும் தெரிகிற இந்த அறிவோடு பார்த்தலும் தொடுதலும் செய்யும் பொருட்டு, 'நாம்' என்று சொல்லப்படும் எல்லாவற்றையும் ஒருமைப் படுத்தி, பார்ப்பதன் பொருட்டும் தொடுவதின் பொருட் டும் ஒரு தீர்ந்த முயற்சி செய்யா நிற்கையில், நாம் பார்க் கிற, அல்லது, தொடுகிற பொருள்களைப் பற்றிக் கோட் பாடுகளைக் கண்டுபிடித்து நிலைநாட்ட நமக்கு நேரமே யில்லை. மற்று, நாம் செய்ய வேண்டியது என்ன எனில், புதுக் கொள்கைகளை எப்போதும் ஆவலோடு ஆராய்ந் தும், புது அகப்பதிவுகளைக் கோரியும், ஆசிரியர் கோண்டு, அல்லது, ஆசிரியர் ஹேகல் ஆகிய இவர்களுடைய, அல்லது, நம்முடைய எளிய வழக்கமான கோட்பாடு

களில் ஒருபோதும் தலையிட்டுக் கொள்ளாமலும் இருத்தலேதான். உண்மை நூலின் கொள்கைகளும், அல்லது, கருத்துக்களும், நம்மால்—அவற்றின் உதவியில்லாத போது—பார்க்கப்படாது போகக்கூடியவற்றை உற்று நோக்கிச் சேர்க்கும் பொருட்டு, நோக்கக் குறிகளாகவாவது ஆராய்ச்சிக் கருவிகளாகவாவது உதவும். "உண்மை நூல் எண்ண அணுவைக்காட்டும் ஓர் கண்ணுடியாம்."—நாம் அறியக்கூடாத ஓர் நலத்தின் பொருட்டாவது, அல்லது, நாம் நம்பி வாழாத எண்ண அளவேயான ஓர் கொள்கைக்காவது, அல்லது, வழக்கம் மட்டுமாக இருக்கிறது என்றதின் பொருட்டாவது இவ் அநுபவத்தின் எப்பகுதியை யேனும் கைவிட வேண்டுகிற எந்தக்கொள்கையோ கருத்தோ ஏற்பாடோ நம்மால் ஆதரிக்கப்படக்கூடிய எந்த வகையான உரிமையும் உடையதன்று.

"விண்ணப்பம்" என்னும் நூலின் ஆருவது பகுதியில் ஆசிரியர் ரூஸ்ஸோ தமக்குக் கல்வியுணர்வு எழுந்ததை விவரிக்கிற இடம், அவரது ஒப்பற்ற அழகமைந்த உரைத்தொகுதிகளில் ஒன்ரும். சாக்காட்டின் வரையறுக்க முடியாத ஒருவிதமான பசை அவரை எப்போதும் ஒட்டிக்கொண்டிருந்தது என்னலாம்; தவிர, அவரது இளமையில் தாம் ஓர் தீராநோய் கொண்டிருப்பதாக அவர் நம்பினர். எஞ்சியிருக்கும் நாட்களை எவ்வளவு பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அவ்வளவாகப் பயன்படுத்திக் கொள்வது எப்படி என்று தம்மையே வினவினர்; அப்போதுதான் தாம் கண்ட ஆசிரியர் வால்ட்டேர் அவர்களது ஐயமற்றவையும் புதியவையும் ஆன நூல்களில் உள்ள அறிவின் எழுச்சியினுலேயே அங்ஙனம் முடியும் என்று அவர் தீர்மானித்தபோது, அந்நாள்வரை அவர் வாழ்ந்த வாழ்விலுள்ள எதனுலும் அவர் மனம் சாயவில்லை. இனி, ஆசிரியர் விக்டர்ஹ்யூகோ அவர்கள் சொல்லுகிறபடி, நாம் எல்லோரும் இறக்கும்படி தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தான்: ஆனல்,ஒருவகையான குறிக்க முடியாத இடையீட்டோடு அஃது இயைந்திருக்கிறது. நமக்குச் சிறிதுகாலம் உண்டு; அதன் பிறகு, நாம் இருந்த இடமும் நம்மைச் சிறிதும் அறியாது. இந்தச் சிறிது காலத்தைச் சிலர் பராக்கிலும், சிலர் உயர்ந்த பேர்

உணர்ச்சியிலும், "இவ்வுலகின் குழந்தைகளில் உயர்ந்தோர்" என்பார் மட்டுமாவது புலமைகளிலும் பாட்டுக்களிலும் கழிக்கின்றனர். ஏனெனில், நமது இடையீட்டினை விரிவுபடுத்தலிலும் கொடுத்த காலத்திற்குள் எத்தனை உவகை உணர்ச்சிகளை அடைய முடியுமோ அத்தனையும் அடைதலிலுமே நாம் எய்தக்கூடிய முழுப் பயனும் கிடக்கிறது. வாழ்க்கையின் இந்த விரைவுணர்வையும் அன்பின் பேரின்பத்தையும் துயரத்தையும் நம்மில் பலருக்கும் இயல்பாகவே வரும் பொது நன்மையான, அல்லது, வேறுவகையான ஊக்கத்தோடு கூடிய முயற்சியின் வேறுபட்ட வகைகளையும் கழிபெரும் உணர்ச்சிகள் நமக்குத் தரும். விரைவுற்றும் பல்கியும் உள்ள உளத்தின் இந்தப் பயனை உங்களுக்குத் தரக்கூடியது பேர் உணர்ச்சியே என்றுமட்டும் உறுதியாய் இருங்கள். இயற்புலனைப் பற்றிய பேருணர்ச்சியும், அழகில் ஆசையும், புலமையை அதற்குத் தானே விரும்பும் விருப்பமும், அந்த வகையான மூதறிவைப் பெரிதும் கொண்டிருக்கின்றன. ஏனெனில், போய்க்கொண்டிருக்கிற உங்களது நொடிகளுக்கு உயர்வற்றபடி உயர்ந்த நீர்மையைத் தவிர வேறு தருவதில்லை என்றும், அதுவும் அந்த நொடிகளின் பொருட்டே என்றும் தெளிவாய் அறிவித்துக் கொண்டுதான் புலமை உங்களை அணுகுகிறது.

9. ஓர் துறவியின் தனிமை

இஃது ஓர் இன்பமான மாலை. எனது முழு உடலும் இப்போது ஒரே பொறியாக இருந்துகொண்டு, தனது புழை ஒவ்வொன்றின் வழியாகவும், மகிழ்ச்சியை ஏற்றுக்கொள்ளுகிறது. இயற்கையினூடு, அதன் ஒரு பகுதியே என்னும்படியாக, ஒரு புதுமையான உரிமையோடு நான் நடந்துகொண் டிருக்கிறேன். இந்தக் குட்டையினுடைய கற்பாங்கான கரையோரமாக, என்னுடைய உட்சட்டை ஒன்றோடு நான் நடக்கும்போது, வெளியானது மாசுற்றதாயும், பெருங் காற்றோட்டம் உள்ளதாயும், குளிர்ச்சியாயும், என்னை ஈர்க்கும்படியான

யாதொரு சிறப்பின்றியும் இருந்தாலும், எல்லா முதல்களும், எனக்கு, நான் முன் ஒருபோதும் கண்டறியாத இன்பம் தருவனவாய் இருக்கின்றன. பெருந் தவளைகள், இரவின் வரவை நோக்கிக் கத்துகின்றன. நீர்க்கோழியின் இன்னிசை, நீர்ப்புறத்தே இருந்து, அலையிடும் ஓடுகாற்றூடு வந்து, என் காதிற்கு எட்டுகிறது. கடம்பு, பூவரசு ஆகிய இம்மரங்களின் இலைகளினது அசைவின் ஓசையோடு எனக்கு உண்டாகும் இரக்கம், என்னுடைய ஆன்ம ஊக்கத்தைக் குறைக்கிறது; ஆயினும், எனது அமைவான உள்ள நிலைமை ஏரியைப் போல அலையுண்டதே அன்றிக் கலக்கமுறவில்லை. மாலைக் காற்றிஞல் எழுப்பப்பட்ட, ஏரியினுடைய இந்தச் சிறிய அலைகள், நிழல் காட்டும் ஒத்த இடமான மேற்புறத்தினின்றும், எவ்வளவு வேறுபட்டிருக்கின்றனவோ, அவ்வளவு பெருங்காற்றினின்றும் வேறுபட்டிருக்கின்றன. இப்போது இருண்டு விட்டதாகிலும், அடுத்த காட்டில், பெருங்காற்று இன்னும் அடித்துக்கொண்டும் கத்திக்கொண்டும் இருக்கிறது; அலைகள் இன்னும் மோதுகின்றன; சில உயிர்கள் மற்றவைகளைத் தங்களது பண்புகளால் மயக்குகின்றன. ஓய்வு ஒருபோதும் நிறைவுறுதிருக்கிறது. காட்டு விலங்குகள், இப்போது ஓய்வு கொள்ளாது, தங்கள் உணவைத் தேடிப் புறப்படுகின்றன. குள்ள நரியும், குழி முயலும், மரநாயும் இப்போது நிலப்புறங்களிலும் காடுகளிலும் அச்சமின்றிச் சுற்றித் திரிகின்றன. இவைகள் இயற்கையினுடைய இராக் காவலாளர். உயிர்ப்பன்மையின் விழிப்பு நாட்களாகிய சங்கிலியின் சில வளையங்களாகும் இவை.

நான் என்னுடைய வீட்டிற்குத் திரும்பி வரும்போது, என்னைக் காணுமாறு சிலர் வந்திருந்து, தங்களது வரவைத் தெரிவிக்கும்படி பின்விட்டுப்போன பெயர்ச் சீட்டுக்களாகிய ஓர் பூங்கொத்தையோ, ஓர் இலைமாலையையோ, அல்லது ஓர் சிவந்த பூவரசம் பழுப்பின் மீதாவது ஓர் மரச்சிதளின் மீதாவது எழுதுகோலிஞல் வரைந்திருந்த ஓர் பெயரையோ காணுவேன். காட்டிற்கு எப்போதோ ஒருபோது வருபவர்கள், காட்டினுடைய சிறிய துண்டு என்னும்படியான எதாவ தொன்றைக்

கையில் கொண்டு வந்து, அதை வேண்டுமென்றோ, அல்லது, நினைப்பற்றபடியாகவோ, பின் விட்டுச் செல்வார்கள். ஒருவர், நாணலை உரித்து, வளையமாகப் பண்ணி, ஒரு நாள் எனது மேஜைமீது வைத்துச் சென்றிருந்தார். நான் இல்லாதபோது யாராவது வந்திருந்தார்கள் என்பதை, புல், அல்லது, செடிகள் வளைந்திருப்பதினாலாவது அவர்கள்தம் செருப்படியினாலாவது எப்போதும் சொல்ல முடியும். அதுவும் அன்றி, பொதுவாக அவர்களின் பால், வயது, குணம் இவற்றையுங்கூட, அரை நாழிகைக்கு அப்பாலுள்ள இருப்புப் பாதையண்டைக் கீழே விட்டுப்போன ஒரு பூ, அல்லது, பிடுங்கி எறிந்து விட்ட குத்துப்புல் ஆகிய இவைபோன்ற அற்பமான குறிகளினாலாவது, இன்னும் இருந்துகொண்டிருக்கும் சுருட்டு நாற்றத்தினாலாவது, சொல்ல முடியும். அது மட்டுமா? ஆயிரம் அடிக்கு அப்பாலுள்ள பாதையில் ஒரு வழிப்போக்கன் நடந்து போவதை அவனுடைய சுருட்டு நாற்றத்தினால் நான் அறிந்திருக்கின்றேன்.

நம்மைச் சுற்றி நமக்கு வேண்டிய இடம் இருக்கிறது என்னலாம். நமது வான் வரம்பு ஒருபோதும் நமது கால்களின் அருகேயே இருக்கிறதில்லை. அடர்ந்த காடாவது குட்டையாவது, நமது வீட்டு வாசற்படியிலேயே இருப்பதில்லை; ஆனால், இடத்தில் கொஞ்சம் பங்கு தெரிந்ததாகவும், கைபபட்டதாகவும், நம்மால், ஏதோ ஒருவகையில் நமக்கென்று வேலியிடப்பட்டுச் சொந்தமாக்கப் பட்டதாகவும், இயற்கையினின்றும் மீட்கப்பட்டதாகவும் இருக்கிறதினால், எப்போதும் காட்டுத் தன்மை யற்றுப் போய்க்கொண்டிருக்கிறது. என்னுடைய சொந்தத்திற்கு ஆகும்படியாக, பலப்பல சதுர மைல் கொண்டதும், மக்கள் நடமாடாததும் ஆன காடாகிய இந்தப் பெரிய நிலப்பரப்பும் வானவட்டமும் என்ன காரணத்திற்காக ஊரால் எனக்கு விட்டிருக்கின்றன? எனக்கு மிக்க அருகில் இருப்பவன் என்பவன் ஒரு நாழிகை அளவில் இருக்கிறான். என் இடத்திற்கு அரை நாழிகை அளவிற்குள் குன்றுச்சிகள் தவிர வேறெவ்விடத்திலிருந்து பார்த்தாலும் ஒரு வீடும்

தெரியாது. என்னுடைய வானவட்டம் காட்டினுல் ஆகி எனக்கு மட்டும் உரிமையானதாய் இருக்கிறது: ஒரு பக்கம் ஏரியின் கரையைத் தொட்டுச் செல்லுகிற இருப்புப் பாதையையும், மறுபக்கம் காட்டுப்பாதையை வரம்பிடுகிற வேலியையும், சேய்மையில் இருப்பனவாக நான் காண்கிறேன். ஆனுல், மக்கள் நடமாட்டம் இல்லாத 'பிரைரீசு" என்னும் புல் நிலப் பெரும் பரப்புக்களைப் போலவே, நான் குடியிருக்கிற இந்த இடமும் பெரும்பாலும் அவ்வளவு தனிமை வாய்ந்ததாக இருக்கிறது. இதை, புதிய இங்கிலாந்து என்று சொல்வதைப் போலவே, ஆசியா அல்லது ஆப்பிரிக்கா என்றும் சொல்லலாம். எனக்காகவே ஒரு ஞாயிறு, ஒரு திங்கள், பலப்பல வான் மீன்கள், அதாவது, எனக்காக ஒரு சிறிய உலகமே இருக்கின்றது போலும். இராப்போதில் எனது வீட்டைக் கடந்தாவது, எனது கதவைத் தட்டியாவதுசென்ற வழிப்போக்கனே கிடையாது. முதல் வழிப்போக்கனும் கடைசி வழிப்போக்கனும் நானே. ஆனுல், வேனிற் கால இரவில் மட்டும், நெடு நேரத்திற்கு ஒரு முறை, ஊரிலிருந்து சிலர் "வால்டன்" குட்டையில் மீன் பிடிக்க வருவது உண்டு. அப்போது, அவர்கள், தங்களது தூண்டில்களில் இருள் என்பதை இட்டு, தங்கள்தம் மனப்பான்மைகள் உறையும் தங்களது இயற்கையாகிய பெரியகுட்டையில் ஐயமறப் பெரிதும் மீன் பிடித்துவிட்டு, பெரும்பாலும் சுமையற்ற கூடைகளோடு உலகத்தை எனக்கும் இருட்டுக்கும் ஆக விட்டு விட்டுத் திரும்பிச் செல்வார்கள். செல்லலும், இரவின் இருண்ட கொப்பறை மக்களின் அருகாமையினுல் ஒருபோதும் இழிவு படுத்தப் படவில்லை. சூனியக்காரர் எல்லாரும் தூக்கு வாங்கப் பட்டாலும், கிறிஸ்து சமயமும் மெழுகு வர்த்திகளும் எப்பாங்கரும் பரவி இருந்தாலும், பொதுவாக, மக்கள் இன்னும் இருட்டு என்ருல் அச்சப்படுகிருர்கள்.

எனினும், வாழ்க்கையில் நம்பிக்கையற்றவனும் மிக்க சஞ்சல மனதுள்ளவனுங்கூட, மிக்க இன்பமாயும் மிக்க உருக்கமாயும் பெரிதும் குற்றமற்றதாயும் மிக்க உரங்கொடுப்பதாயும் உள்ள ஓர் துணையை, இயற்கைப் பொருள் எதுவாவது ஒன்றில் காணக்கூடும் என்று சிற்

சில வேளைகளில் நான் அநுபவித்து உணர்ந்திருக்கிறேன். இயற்கையின் நாப்பண் குடியிருந்துகொண்டும், தனது எல்லாப் பொறிகளையும் அசைவற்று வைத்துக்கொண்டும் இருக்கும் ஒருவனுக்கு, நீக்க முடியாத எவ்வகைத் துயரமும் இருக்கமுடியாது. செம்மையும் குற்றமற்றதும் ஆன ஒரு செவிக்கு, ஒரு சுழற்காற்று கூட உவப்பளிக்கும் ஒரு பேரிசையாகத்தான் இருக்கும். உள ஒருமைப் பாட்டையும் உள வன்மையையும் அடைந்த ஒருவனுக்கு,எதுவும்,தாழ்ந்த ஒரு துயரத்தை, சரியானது என்று சொல்லும்படி, கொடுக்க முடியாது. வேறுபட்ட பருவங்களின்பால் நான் நட்புக்கொண்டிருக்கும்போது, வாழ்க்கையை நான் சுமை எனக் கருதும்படி எதுவும் என்னைச் செய்ய முடியாது என்று நான் நம்புகிறேன். இன்று என்னுடைய செடிகளுக்குத் தண்ணீர் இறைப்பதும், என்னை வீட்டிற்குள்ளேயே இருக்கச் செய்வதும் ஆன மெல்லெனப் பெய்யும் மழையும் பயனற்றதோ அல்லது துயரந்தருவதோ ஆகாமல் எனக்கு நன்மையையே பயக்கும். என் செடிகளுக்குக் களைவெட்டுவதை அது தடுத்தாலும், என்னுடைய களைவெட்டுதலைக் காட்டிலும் அது அவற்றிற்கு மிக்க பயன் தரக் கூடியதுதானே.

தரையின் கீழுள்ள விதைகள் அழுகிப் போகும்படியாகவும், பள்ளத்தாக்கிலுள்ள உருளைக் கிழங்கு அழிந்து போகும்படியாகவும் அவ்வளவு நீண்ட மழை பெய்யும் ஆனாலும், மேட்டுத் தரையிலுள்ள புற்களுக்கு அது நன்மையையே செய்ததாகும்; அவ்வளவிலே அது எனக்கும் நன்மையையே செய்ததாகும். சிற்சில வேளைகளில் மற்ற மக்களோடு என்னை ஒத்திட்டுப் பார்க்கிறபோது, நான் அறிந்து என்னிடம் உள்ள நற்குணங்களின் தரத்திற்குப் பெரிதும் உயர்ந்த நலங்களை, அவர்களைக் காட்டிலும் அதிகமாக நான் தெய்வங்களால் அடையப் பெற்றேன் என்றும், அத்தெய்வங்களிடத்திருந்தே மற்ற மக்கள் பெற்றிராத ஓர் உரிமையை நான் அடைந்திருக்கிறேன் என்றும், மேலும், நான் மட்டும் அவர்களால் வழி காட்டப்பட்டும் காக்கப்பட்டும் இருக்கிறேன் என்றும் தோன்றுகிறது.

என்னையே நான் பெருமைப்படுத்திக் கொள்ளுகிற தில்லை; ஆகிலும், பிறர், கூடுமென்று நினைத்து, என்னைப் பெருமைப் படுத்துகிறார்கள். தனிமையாக இருக்கிறேன் என்றாவது, தனிமை என்ற உணர்ச்சியால் வருத்தப்படு கிறேன் என்றாவது எனக்குத் தோன்றவில்லை. ஆனால், ஒரு தடவை, அதாவது, நான் முதன் முதல் காட்டிற்கு வந்தபின் சில வாரம் வரையும், 'வாழ்க்கை அமைதியும் செம்மையும் நிறைந்ததாய் இருக்கவேண்டுமானால், பிற மக்களின் நெருங்கிய வாழ்க்கை அதற்கு இன்றி யமையாதது அல்லவா' என்று இரு நாழிகை நேரமாக நான் ஐயமுற்றதுண்டு. தனிமையாக இருத்தல் எனக்கு ஒரு மாதிரி மகிழ்ச்சியற்றதாக இருந்தது. ஆனால், அப்போதே என் உளப் போக்கில் ஒருவிதமான திரிபு கொஞ்சம் இருப்பதாக உணர்ந்து, அத் திரிபு செம்மையாகும் காலத்தை எதிர்பார்ப்பதுபோல் நான் இருந்தேன். சிறு மழையின் இடையில் இப்படிப்பட்ட எண்ணங்கள் குடி கொண்டிருந்தபோது, திடீரென்று ஊரில் உறைவதின் நலங்கள் என்று மயங்கினவை எல்லாம் சிறுமையுறும்படி அவ்வளவு இனிமையும் நன்மை பயப்பதும் ஆன துணைமையை இயற்கையின் கண் கண்டேன்; அளவற்றதும் காரணம் குறிக்கக் கூடாததும் என்னைக் காக்கிற காற்றையே போன்றதும் ஆன அவ்வளவு சிறந்த நட்பை மழைத்துளிகள் கீழ் விழுகிற ஓசையிலும், என்னுடைய வீட்டைச் சூழ்ந்த ஓசை ஒவ்வொன்றிலும், காட்சியிலும் காணப் பெற்றேன். அதன் பின்னர் மேற்சொன்ன எண்ணங் களை எண்ணியறியேன். சிறிய சவுக்குக்கிளை ஒவ் வொன்றும் நீண்டு என்பால் இரக்கம் காட்டி என்னை நேசித்தது. காடுற்றவை என்றும் பயனற்றவை என்றும் நாம் வழக்கமாகச் சொல்லுகிற காட்சிகளில் கூட, எனக்கு உற்ற உறவைப் போன்ற ஒன்று இருப் பதையும், எனக்கு மிக்க நெருங்கிய இரத்தக் கலப் புள்ளதும் என்னிடம் மிக்க இரக்கமுள்ளதும் ஓர் ஆள், அல்லது, ஓர் ஊரான் அல்லன் என்பதையும் நான் மிகத் தெளிவாகக் கண்டமையால் எந்த இடமும் இனி எனக்குப் புதியதாக இருக்காதென்று நான் நம்பினேன்.

"வருந்துவது வருந்தினரின் வாழ்நாளை அழிக்கும்
வாழ்க்கை நிலந் தனில்அவர்தம் வாழ்நாட்கள் சிலவே"

இளவேனிற் காலத்திலும் கூதிர் காலத்திலும் நெடிய மழையும் காற்றும் ஆக இருந்து, முற்பகலிலும் பிற்பகலிலும் என்னைத் தமது இடையருத கூச்சலாலும் துளிகள் சிதறும் ஓசையாலும், இன்பம் எய்துவித்து, வீட்டுக்குள்ளேயே என்னைத் தங்கச் செய்யும் அந்த நாழிகைகளே, எனது முழு வாழ்க்கையிலேயே பேரின்பம் வாழ்ந்த நாழிகைகளில் சில ஆம்; பின்னர், கொஞ்சம் முற்பட்டே உண்டாய மங்கிய வெளிச்சம், நீண்ட மாலையைத் தந்து பலப்பல எண்ணங்களை வேர் ஊன்றச் செய்தும், அவற்றின் முழுப் பொருளையும் மலரச் செய்துமே ஏகும். வடகிழக்கிலிருந்து பெய்யும் மழைநாளில், ஊரிலுள்ள சிறு வீடுகள் எல்லாம் ஆபத்தில் மூழ்கியிருக்கும்போதும், வீட்டுப் பெண்கள் எல்லோரும் கைகளில் துடைப்பத்தையும் சிறு தவலைகளையும் ஆயத்தமாக வைத்துக்கொண்டு, முன் வாயிற் படிகளில் நின்றிருந்து, வரும் வெள்ளத்தைத் தடுத்துக் கொண்டிருக்கும் போதும், நான், எப்பக்கமிருந்தும் வர வழி கொண்டிருக்கும் என்னுடைய சிறுவீட்டின் கதவின் பின்னுகை இருந்துகொண்டு, அதனுடைய காப்பினைச் செவ்விதும் அனுபவித்து இன்புற்றேன். ஒரு தடவை பெரிய இடிமழையாக இருந்தபோது, ஏரிக்கு அக்கரையிலுள்ள பெரிய மருத மரத்தை மின்னல் தாக்கி, உச்சியிலிருந்து அடிவரைக்கும் கோணல்மாணல் சிறிதும் இல்லாததும், பெரியதும், ஓர் அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்ட ஆழமுள்ளதும், நான்கு அல்லது ஐந்து அங்குல அகலம் உள்ளதும் ஆன ஒரு பெரிய வளை புழையை,—நாம், ஒரு கைத்தடியில் நெடுகக் கோடிட்டுப் புழை செய்வது போல்—உண்டுபண்ணிற்று. இப்போது தான் மற்றொரு முறை நான் அந்த வழியாகப் போன போது, எட்டு ஆண்டுகளுக்கு முன்னர், களங்கமில்லாத வானத்தினின்றும் தடுக்க முடியாததும், காது செவிடு படும்படியானதும் ஆன அந்த இடிவீழ்ச்சியினுடைய

அடையாளம், முன் இருந்ததைப் பார்க்கிலும் அதிக விளக்கமாக இருப்பதைக் கண்ணெடுத்து ஒருவித அச்சத்தோடு பார்த்தேன். "அவ்விடத்தில், மழையும் பனியும் உள்ள நெடிய பகலிலும் இரவிலும் கூட, தனிமையாக இருப்பது, உனக்குத் துன்பமாகவிருந்து, ஊரார் தம் அருகில் வர விருப்பம் உண்டாக வில்லையா உனக்கு?" என்று பலர் என்னைப் பலதரம் கேட்கிறார்கள். அன்னவர்களுக்குப் பின்வருமாறு மறுமொழி தர எனக்கு இச்சை உண்டாகிறது: இடம் என்பதில் இந்தப் பெரிய தரை முழுவதும் ஒரு புள்ளியே அன்றோ? நமது கருவிகளால் அளக்கக்கூடாதபடி நுண்ணியதாய் இருக்கிற குறுக்களவை யுடைய அதோ தெரிகிற அந்த வான மீனில் வசிப்பவர்களில் மிக்க சேய்மையில் வசிக்கும் இருவரை எடுத்துக்கொண்டால், அது எவ்வளவு சேய்மையானதாக இருக்கும் என்று நீ நினைக்கிறாய்? நான் ஏன் தனிமையாய் இருக்கிறேன் என்று வருந்த வேண்டும்? நமது கோள், விண்ணிலுள்ள பால்நிற வழியில் நிற்கவில்லையா? உன்னுடைய இந்தக் கேள்வி எனக்குச் சிறப்பானதாகத் தோன்றவில்லை. தன்னுடைய இனத்தாரினின்றும் ஒருவனைப் பிரித்துத் தனிமையாக்குகிற ஓர் இடம் என்ன விதமான இடம்? கால்களினுடைய இயக்கம் இரண்டு நெஞ்சத்தை ஒன்றுக்கொன்று அருகில் கொண்டு வருவதை நான் பார்த்ததில்லை. எதன் அருகில் குடியிருக்க நாம் மிகவும் விரும்புகிறோம்? ஒருதலையாக, பல மக்களின் அருகன்று. பெரிய கடைகள், தபாலிடங்கள், சந்தைகள், அல்லது பொது மன்றங்கள், கோயில்கள் ஆகிய இவற்றின் அருகிலும் அன்று. ஆனால், நமது அநுபவத்தில் எல்லாம், உயிர் எங்கே யிருந்து உண்டாகிறது என்று கண்டிருக்கிறோமோ, அந்த இடையறாத ஊற்றின் அருகே அன்றோ,—நாணல், நீர்க்கு அருகே இருந்து, தனது வேர்களை அந்நீர்ப்பக்கமே செலுத்துமாறு போல, நாம் இருக்க விரும்புவது? பலதிறப்பட்ட இயற்கையுடையவர்கள்பால், இவ்விருப்பமும் பலதிறப்படும். ஆனால், துறவி ஒருவன் இதைப்போன்ற காட்டில்தான் தனது குகையைக் குடைந்து கொள்வான்....

ஒரு நாள் மாலைப்போது, இரண்டு மாடுகளைச் சந்தைக்கு ஓட்டிக்கொண்டு போய்க் கொண்டிருந்த எனது பழைய நகரத்தார் ஒருவரை நான் வால்டன் பாதையில் எதிர்ப்பட்டேன். வேண்டிய செல்வத்தை அவர் ஈட்டி யிருந்தார் என்று எனக்குக் கேள்வி; எனினும், அவரது செல்வத்தை நான் ஒரு போதாவது தெளிவாய்ப் பார்த்ததில்லை. அப்படி எதிர்ப்பட்டதும், வாழ்க்கையிலுள்ள பல சௌகரியங்களை விட்டுவிட நான் எப்படி மனந்துணிந்தேன் என்று அவர் என்னைக் கேட்டார். எனது காட் வாழ்க்கையில் உண்மையாக இன்புற்றிருக்கிறேன் ன்று ஐயமற நம்புவதாகச் சொன்னேன்; நான் வேடிக்கையாகப் பேசவில்லை. பிறகு நான் என் வீட்டிற்குப் போய்ப் படுத்துக் கொண்டேன்; அவர், இருட்டிலும் சேற்றிலும் ஆகத் தடுமாறிக்கொண்டு தமது நகரம் போய்ச் சேர, விடியற் காலை வரைக்கும் பிடித்திருக்கும்.

இறந்தபின் விழிப்பது, அல்லது, திரும்பி உயிரைப் பெறுவது என்ற நம்பிக்கை, எல்லாக் காலங்களையும் எல்லா இடங்களையும் ஒருவனை, வெறுப்பு விருப்பின்றி நோக்கச் செய்கிறது. அது நேரிடும் என்ற இடம், எப்போதும் குறித்த ஏதோ ஒன்றாகவே இருந்து, நமது எல்லாப் பொறிகளுக்கும் எழுத முடியாவண்ணம் இன்பம் உள்ளதாய் இருக்கிறது. பெரும்பாலும் புறத்தே இருப்பவையும், நொடியில் தோன்றி அழியக் கூடியவையும் ஆன பொருள் நிலைமைகளை மட்டுமே, நமது தற்சமயங்களை உண்டாக்குமாறு விட்டுவைக் கிறோம். உண்மையாக, இத் தற்சமயங்களே நமது அறிவு சிதறுவதற்குக் காரணம். எல்லாப் பொருள்களுக்கும் மிக அருகில், அவற்றின் இருப்பை உண்டு பண்ணிய பெருவன்மையே இருக்கிறது. நம்மை அடுத்து, கழி பெருங் கட்டுப்பாடுகள் தொடர்ந்து இயக்கப்படுகின்றன. நம்மை அடுத்தாற்போல் இருப்பவன், நாம் கூலி கொடுத்துக் கொண்டுவந்தவனும், நாம் பேச விரும்பு வனும் ஆன வேலையாளன் அல்லன்; மற்று, நம்மை உண்டாக்குதல் ஆகிய பெரிய வேலையைச் செய்த பெரிய வேலையாளனே ஆம்.

"விசும்பு, நிலம் ஆகியவற்றின் நுண்மையான வன்மைகளுடைய செல்வாக்கு எவ்வளவு பரந்ததாயும் ஆழ்ந்ததாயும் இருக்கிறது."

"நாம் அவைகளைப் பார்ப்பதற்காகத் தேடுகிறோம். நாம் அவைகளைப் பார்ப்பதில்லை. நாம் அவைகளைக் கேட்க விரும்புகிறோம். நாம் அவைகளைக் கேட்குமாறில்லை. பொருள்களினுடைய உள்நிலைமையோடு ஒருமையுற்றிருப்பதால், அவைகள் பொருள்களினின்றும் பிரிக்கப்படா."

"வையகம் முழுவதிலும், மக்கள், தங்கள் நெஞ்சுகளின் அழுக்கை நீக்கித் தங்களைத் தெய்வீகமாக்கும்படியும், தங்கள் முன்னோர்களுக்குப் பிண்டம் அளிக்குமாறு புதிய உடைகளை உடுத்துக் கொள்ளும்படியும் ஆக அவை செய்கின்றன. அவற்றை நுண்ணிய அறிவு விளக்கங்கள் நிறைந்த ஒரு பெருங்கடல் என்றே சொல்லலாம். நம்முடைய வலப்பக்கமும், இடப்பக்கமும் மேலும் ஆக, அவைகள் எங்கும் இருக்கின்றன; எல்லாப் பக்கங்களிலுமாக அவை நம்மைச் சூழ்ந்திருக்கின்றன."

ஒரு சோதனைக்கு உட்பட்ட ஆட்களாக நாம் இருக்கிறோம். அச் சோதனையின்கண் எனக்கு அதிக அக்கரை உண்டாகிறது.

இந்த வகையான நிலைமையில் நாம் இருக்கும் போது, வீண் பேச்சினர்தம் சேர்க்கையை விட்டுவிட்டு, நம்முடைய தனித்த எண்ணங்களால் நாம் மகிழ்ச்சியடைந் திருத்தல் கூடாதா? "நல்லொழுக்கம், கைவிடப் பட்டதும் பெற்றோரில்லாததும் ஆன ஒரு குழந்தையைப் போன்று இருக்கவில்லை. அதற்குக் கூட்டாளிகள் இருந்தே தீரவேண்டும்" என்று சீனர்தம் சமய குரவராகிய **கன்பூசியசு** உண்மையாகக் கூறுகிறார்,

நாம் நீடு நினைக்கும்போது, நமது பழக்க நிலைமையினின்றும் வேறுபட்ட உயர் நிலைமை ஒன்றில் இருப்பதாக நாம் காணலாம். உளத்தின் ஒரு தேர்ந்த சித்தத்தின் முயற்சியால் தொழில்களினின்றும் அவற்றின்

பயன்களினின்றும் நாம் பிரிவுபட்டு நிற்கலாம். அப்போது, நல்லனவும் தீயனவும் ஆகிய எல்லாப் பொருள்களும் நமது பக்கல் ஒரு வெள்ளமே போல் புரண்டோடப் பார்க்கலாம். இயற்கையில் நாம் அடியோடே முழுகி நிற்கவில்லை. ஆற்றில் அடித்தேகும் ஒரு கட்டையாகவாவது, அல்லது, அதனைக் குனிந்து பார்க்கிற வானத்திலுள்ள வருணனுகவாவது நான் இருக்கலாம். கூத்தில் தோற்றுவிக்கிற ஒரு காட்சியால் நான் உள மாறுதல் அடையலாம். அதற்கு எதிராக, எனக்கு நெருங்கிய தொடர்பு வாய்ந்ததாகத் தோன்றுகிற ஓர் உண்மையான செயலால், நான் எவ்வகையிலும் மனம் நெகிழாதிருக்கலாம். என்னை ஒரு தனித்த ஆள் என்று மட்டும் எனக்குத் தெரியும்; அதாவது, நான் எண்ணங்களும் உணர்வுகளும் இயக்கமுறும் ஓர் அரங்கமே போல் இருக்கிறேன் என்பது தெரிகிறது. பிறரிட மிருந்து நான் எவ்வளவு பிரிவுபட்டிருக்கிறேனே, அவ்வளவு என்னிடமிருந்தும் நான் பிரிவுபடக்கூடிய ஒருவித இரட்டை நிலைமை என்னிடம் இருப்பதாக நான் அறிகிறேன். எவ்வளவு கூர்மை வாய்ந்த உரம் உள்ளதாய் எனது அநுபவம் இருப்பினும், என்னில் ஒரு பங்கினுடைய இருப்பையும் நோட்டத்தையும் நான் அறிகிறேன். மேற்சொல்லிய அப்பங்கு, எனது கூறு என்று சொல்ல முடியாத படியாகவும், வேறு ஒரு காண்பானைப் போன்று நின்று என்னுடைய அநுபவத்தில் தான் தலையிட்டுக் கொள்ளாமலும் இருப்பினும், அவ் அநுபவத்தைக் கண்டுமட்டும் வைத்துக்கொள்வதாக இருக்கிறது. அதை நான் எனக் கூறலாம் என்ருல், அவ்வளவே எளிமையாக, அதை, நீ என்றும் கூறலாம். வாழ்க்கையாகிய கூத்து, இனியதாகவோ, அல்லது, கொடியதாகவோ முடிந்துவிட்டால், அந்தக் காண்பானும் தன் வழியே போய்விடுகிருன். அக்கூறு, அல்லது, அவன் வரைக்கும், அவ்வாழ்க்கை ஒரு புனைந்துரையாகவோ, உளக் கண்ணின் ஓர் வேலைமட்டும் ஆகவோ முடிகிறது. இந்த இரட்டைப் பான்மை, நம்மை எளிய அயல் மனையாளராகவும், நண்பர்களாகவும் சிற்சில வேளைகளில் எளிதில் ஆக்குகிறது.

காலத்தின் பெரும்பகுதியில், தனிமையாக இருப்பது நன்மை பயக்கிறது என்று கண்டிருக்கிறேன் நான். கூடியிருப்பது மிக்க நல்லவர்களோடேயே ஆயினும், விரைவில் அலுப்பைத் தருவதாகவும், அழிவு தருவதாகவும் முடிகிறது. தனிமையாக இருப்பதில்தான் எனக்கு விருப்பம். தனிமையைப் போன்ற தோழமை வாய்ந்த எந்தத் தோழனையும் நான் கண்டதில்லை. மக்கள் கூட்டத்தின் இடையில் நாம் வெளியே போகும்போது, நமது இடங்களில் நாம் தங்கியிருக்கையில் இருப்பதைக் காட்டிலும், பெரும்பான்மை அதிகத் தனிமையுற்றிருக்கிறதாகத் தெரிகிறோம். நினைத்தலை அல்லது, வெளிவேலை ஒன்றனை மேற்கொண்ட ஒருவன், அவன் எங்கிருப்பினும், எப்போதும் தனிமையாகவே இருக்கிறான். தனிமை, ஒருவனுக்கும் மற்றவர்களுக்கும் இடையிலுள்ள நாழிகைக் கணக்கான இடமாக அளக்கப்படக் கூடியதில்லை. கேம்பிரிட்ஜ் கல்லூரியின், கூட்டமான சிறிய அறைவீடுகள் ஒன்றில் இருந்து, கல்வியில் உண்மையாகவே ஊக்கங் கொண்டிருக்கும் ஒரு மாணவன், அரபி நாட்டின் பாலை நிலம் ஒன்றில் நடந்து செல்லும் ஒரு தனித்த பக்கிரி அவ்வளவு தனிமையாக இருக்கிறான். ஒரு குடியானவன், நாள் முழுவதும் வயற்புறத்திலாவது அல்லது, காட்டிலாவது தனிமையாகக் களை வெட்டிக் கொண்டோ அல்லது, மரத்தைச் செதுக்கிக்கொண்டோ இருக்கும்போது, அவன், தான் தனிமையாக இருப்பதாக நினைப்பதில்லை. ஏனெனில், அவன் வேலை செய்து கொண்டிருப்பதால்தான் ; ஆனால், இரவில் வீட்டிற்கு வந்தபோது, தனிமையாக ஓர் அறை வீட்டில் தனது எண்ணங்களுக்கு மட்டும் இலக்காக இருக்க அவனால் முடிகிறதில்லை. ஆகையால், மக்கள் கூட்டத்தைக் கண்டு பேசக்கூடிய இடத்திற்குச் சென்று, தன்னுடைய பகற் பொழுதைத் தனிமைக்கு ஈடாக, மனத்திற்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணவேண்டும் என்று அவன் கருதுகிறான்; ஆகையினாலேதான், ஒரு மாணவன், இரா முழுவதும் பகலில் பெரும் பகுதியும், வெறுப்படையாமல் தனியாக எப்படி உட்கார்ந்திருக்கிறான் என்று வியப்படைகிறான்; ஆனால், குடியானவன் தனது காட்டிலும்

வயலிலும் உழைப்பதைப்போலவே, மாணுக்கனும் வீட்டினுள் இருந்த போதிலும் அவனது வயலில் களைகட்டு கிருன் என்பதையும், அவனது காட்டில் மரம் வெட்டு கிருன் என்பதையும், அதன் பிறகு குடியானவன் வேண்டுவது போன்றே, எனினும், கொஞ்சம் சுருக்கமானதான விளையாட்டையும் பேச்சுத் துணையையும் தேடுகிருன் என்பதையும் குடியானவன் அறிகின்ருன் இல்லை.

பெரும்பான்மையும், சேர்ந்திருத்தல் மிகவும் மலிவானதாய் இருக்கிறது. ஒருவரினின்று ஏதாவது ஒரு புதிய நலனைப் பிறர் பெறுவதன்பொருட்டு, அவரே முதலில், அந்நலத்தை அடைவதற்கு வேண்டிய பொழுது கழிவதற்குமுன்,—நெடியவும் குறைந்த நேரங்களுக்குள்,—நாம் ஒருவரை ஒருவர் எதிர்ப்படுகிருேம். ஒரு நாளைக்கு மூன்றுமுறை சாப்பாட்டு வேளையில் நாம் எதிர்ப்பட்டு, பழையதும் சிக்குக் கொண்டதும் ஆன அந்தச் சரக்கையே மறுபடியும் மறுபடியும் சுவை பார்க்க ஒருவருக்கொருவர் நாம் அளிக்கிருேம். அடிக்கடி எதிர்ப்படும் இதை நாம் பொறுப்பதற்காகவும், நேருக்கு நேரே நாம் சண்டையிட்டுக கொள்ளாமல் இருப்பதற்காகவும், மரியாதை என்றும் உபசாரம் என்றுமாக, ஏதோ ஒரு தொகுப்பான சில கட்டுப்பாடுகளைக் கைக்கொள்ள நாம் உடன்பட வேண்டியிருக்கிறது. தபால் இடங்களிலோ, சந்தையிலோ, ஒவ்வொரு இரவிலும் வீட்டின் கண்ணேயோ, நாம் எதிர்ப்படுகிருேம்; நெருங்கிக் குடிகொண்டும், ஒருவர் வழியில் மற்றவர் குறுக்கிட்டுக் கொண்டும், ஒருவர்மேல் மற்றவர் இடறி விழுந்து கொண்டும் நாம் இருப்பதால், ஒருவருக்கொருவர் மரியாதையும் சிறிது குறைய நேரிடுகிறது. சிறப்பானவையும், உளம் ஒன்றுபட்டவையும் ஆன எல்லா வகையான அளவளாவுதல்களுக்கும், ஓர் ஊரின்கண் நேரிடுவதைக் காட்டிலும் குறைந்த எதிர்ப்பாடுகள் போதுமானவை. பெரியதொரு தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்களை எடுத்துக் கொண்டால், அவர்களில் தனித்திருந்தவர்களே, அதாவது, தமது எண்ணப் போக்கில் சிறிது நேரமாவது ஈடுபட்டவர்களே—இல்லை. நான் வாழும் இடத்தில் உள்ள

தைப் போன்று ஒரு சதுர மைலுக்கு ஒருவன் குடி கொண்டிருப்பான் ஆகில், மிக நன்ருய் இருக்கும். ஒருவனது நலந்தரும் நீர்மை, அவனது தோலின் கண்ணேயா இருக்கிறது? பின், ஏன் நாம் அவனைத் தொட்டுக்கொண் டிருக்க வேண்டும்? காட்டில் வழிதப்பி, ஒரு மரத்தடியில் பசியாலும் களைப்பாலும் இறந்துபோன ஒருவனைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உடல் நொய்மையால், அவனது நோய்கொண்ட உளக்கண், அவனைச் சுற்றிலும், அவன் மெய்யென்றே கருதும் வண்ணமாகத் தாறுமாருன காட்சிகளை நிரப்பி, அவனது தனிமையைப் போக்கியதாம். அப்படியே போல், உடலும் உள்ளமும் வன்மையாகவும் தெளிவாகவும் இருப்பதால், நாமும், அந்தப்படியிலேயே, ஆனல், இன்னும், மிகப்பொருத்தமானவையும் இயற்கை யானவையும் ஆன துணைகளால் இடைவிடாது உவகை அடையப் பெற்று, ஒருபோதும் தனியாக இருக்கிறதில்லை என்பதை நாம் அறிந்து கொள்ளுகிறோம்.

என்னுடைய வீட்டில் எனக்கு எத்தனையோ துணைகள் இருக்கின்றன. ஒருவரும் என்னைப் பார்க்க வராதிருக்கும் காலை வேளையில்தான், அத்துணைகள் பெரும்பான்மையும் காணப்படுகின்றன. என்னுடைய நிலைமையைப் பிறர் ஒருவர் சிறிதாவது உணரும் பொருட்டு, சில ஒற்றுமைகளை நான் சுட்டிக்காட்டுகிறேன். மிக உரக்கச் சிரிக்கிறதும் இந்த ஏரியில் வாழ்வதும் ஆன அந்தப் பெரிய நீர்ப் பறவையைக் காட்டிலும் நான் அதிகத் தனிமை வாய்ந்தவனுக இருக்கவில்லை. அந்தத் தனித்த ஏரிக்கு என்ன துணை இருக்கிறது? நினைத்துப் பாருங்கள். அப்படி அது துணையற்றிருந்தும், அதனிடம் கருநிறப் பேய்கள் ஒன்றும் அண்டாமல், அதனுடைய நீல நிறமான நீரில் சாயல் பொருந்திய வானவர்களே இருக்கிருர்கள். மூடுபனி நாளில், சூரியன் சில வேளை இரட்டையாய்த் தெரிகிறது உண்மை! ஆனல், அதில் ஒன்று உண்மையற்ற வெறுந் தோற்றம்: இதைத் தவிர்த்து, சூரியனும் ஒன்றிதானே. கடவுளும் தனித்தவர்தான்; ஆனல் மாயைப் பேயோ, எப்போதும் ஒன்றி

யன்று; அதற்குப் பெருங் கும்பல் உண்டு; அது கணக்கற்ற துணையை உடையது. புல் வெளியிலுள்ள தனித்த ஆமணக்கு, அல்லது எருக்கு ஆகிய இவற்றைக் காட்டிலும், அல்லது துவரை இலை, அல்லது ஆவாரை, அல்லது ஓர் குளவி, அல்லது ஓர் தும்பி ஆகிய இவற்றைக் காட்டிலும் நான் அதிகத் தனிமை வாய்ந்தவன் அல்லன். இதோ, அடுத்தாற்போல் ஓடும் சிற்றாறு, சேய்மையில் தெரியும் காற்றாடி, வடமீன், தென்காற்று, சித்திரைத் திங்களின் மழை, ஐப்பசி மாதத்து வெயில், ஒரு புதிய வீட்டில் முதன் முதல் குடியேறின நூற்பூச்சி ஆகிய இவற்றைக் காடடிலும் மிகத் தனிமையாக நான் இருக்கவில்லை.

நெடிய கார்கால மாலைகளில் பனி அதிகமாகப் பெய்து கொண்டும், காட்டில் காற்று கதறிக்கொண்டும் இருக்கும்போது, இக்காட்டின் பழங்குடியும் முதல் சொந்தக்காரரும் ஆன ஒருவர் வந்து என்னை எப்போதோ ஒரு தடவை பார்ப்பதுண்டு. வால்டன் ஏரியை வெட்டி, அதற்குக் கல் கட்டிச் சுற்றிலும் வேப்ப மரங்களை வைத்தவர் அவர்தான் என்று எனக்குக் கேள்வி உண்டு. பழைய நாட்களில் நடந்த கதைகளையும், இனி, புதிய முடிவற்ற காலத்து நடக்கப்போகும் நிகழ்ச்சிகளையும் அவர் எனக்குக் கூறுவது உண்டு. நாங்கள் இருவரும் கிச்சிலிப் பழங்களும் மாம்பழங்களும் இல்லாவிட்டாலும், துணைமையால் உண்டாகும் மகிழ்ச்சியாலும் பொருள்களைப் பற்றிய இனிய கொள்கைகளாலும் ஒரோவோர் மாலைப்போதை உவப்பாகப் போக்குவது உண்டு. அவர் ஒரு பெரிய அறிவாளியும் நகைச்சுவை உணர்ந்தவரும் ஆக இருந்தார். அவரிடம் எனக்கு அதிக அன்பு உண்டு. ஒரு பூனை, அல்லது ஓர் புலியைப் பார்க்கிலும் அதிக மறைவாக அவர் நடந்து கொண்டார். அவர் இறந்துவிட்டதாகப் பலர் நம்பினாலும் அவர் புதைக்கப்பட்ட இடத்தைக் காட்டுபவர் ஒருவரும் இலர். இரண்டாவதாக, பெரியம்மையார் ஒருவரும் நான் இருக்கும் பக்கத்தில் குடியிருக்கிறார். அந்த அம்மையாரின் இருப்பே, சிலருக்குத்தான் தெரியும். பச்சிலைகளைச்

சேகரித்துக் கொண்டும், அவருடைய கட்டுக் கதைகளுக்குக் காது கொடுத்துக்கொண்டும் ஆக, நான், அவர்தம் நல்ல மணம் பொருந்திய மூலிகைத் தோட்டத்தில் சில வேளை இன்பமாகத் திரிந்தது உண்டு. சில புராணக் கதைகளுக்கு முன்னே நடந்தவற்றை அந்த அம்மையார், தம் ஞாபகம் கொண்டு சொல்லுவார். அவர் சொல்லும் ஒவ்வொரு கட்டுக் கதையின் நிகழ்ச்சிகள், அவர் இளமையாக இருந்தபோது நடந்தன ஆதலால், அவற்றிற்கு ஆதாரமான முதலையும் பக்க நிகழ்ச்சிகளையும் அவர் எனக்குச் சொல்வார். உடல் உரமும் உள வன்மையும் வாய்ந்தவரும், எல்லாப் பொழுதுகளிலும் நாட்களிலும் களிகொள்ளுகிறவரும் ஆதலால், அவர், தமது குழந்தைகளின் வாழ்க்கை முடிவையும் இருந்து காணுவார் என்று எனக்குத் தோன்றுகிறது.

இயற்கையின் சொல்ல முடியாத தூய்மையும் பெரிய நன்மையும் இருந்தவாறு என்னே! ஞாயிறு, காற்று, மழை, வேனில், கார் ஆகிய இவை, எவ்வளவு உடல் நலத்தையும் உள்ள உவப்பையும் எப்போதும் நமக்கு அளிக்கின்றன. மக்கள் பிறப்பினிடம் அவற்றிற்கு எப்போதும் அளத்தற்கரியதும் ஊடுருவியதும் ஆன இரக்கம்இருத்தலால் எவனுவது ஒருவன்,உண்மையான ஓர் வயணத்திற்காக வருந்துவானுகில், இயற்கை முழுவதுமே வருத்தம் எய்தும்; ஞாயிற்றின் விளக்கம் மங்கும்; காற்றும் பரிந்து மெதுவாகத் தேம்பும்; மேகமும் கண்ணீர் வார்க்கும்; காட்டிலுள்ள மரங்களோ என்னில், கோடைகாலத்தும் தங்களது இலையை உதிர்த்து, தமது துயரத்தைத் தெரிவிக்கும். தரையோடு கூடக் கலந்து அளவளாவும்படியான அறிவு என் மாட்டு இருத்தல் அரிதா? நானே, பாதி, தழைகளைப் போன்ற உயிர்ப் பான்மை உடையவன் அல்லனு?

நலமும், பேர் அமைதியும், பெரு நிறைவும் நம் மாட்டு அடைவிக்கும் மருந்து எது ? எனது, அல்லது, உனது மூன்ரும் பாட்டனுர் செய்துவைத்த மாத்திரைகள் அல்ல; நமது மூன்ரும் பாட்டியாராகிய இயற்கையினுடைய—யாவருக்கும் ஒழிபின்றி ஏற்றவையும் ஒருயிர்

உடையவையும் ஆன ம ருந்துகளே யாம். எப்பொழுதும் தன்னை அவள் இளமையாக ஆக்கிக்கொள்வதும் மூப்புற்ற எத்தனையோ தன்வந்தரிகளைத் தனது வாழ்நாளில் அவள் பார்த்திருப்பதும், அன்னார் தம் அழியும் கொழுப்பினுல் தனது உடல் நலத்தை அவள் வளர்க்கிறதும் அம் மருந்துகளின் உதவியால் அன்றோ! அரபி நாட்டிலிருந்து நீண்டதும் தாலம் போன்றதும் ஆன கருநிறக் கப்பல்களில் கொண்டுவரும் மருத்துவரின் பயனற்ற மருந்துக்கு ஈடாக, கலத்தல் இல்லாத காலைக் காற்றினுடைய ஒரு வீச்சே என்னுடைய கற்பமாக இருக்க வேண்டுகிறேன். காலைக்காற்றுத்தான் என்ன செல்வம்! நாளின் ஊற்றுத் தலைப்பின்கண் இச்செல்வத்தைப் பலர் உட்கொள்ளமாட்டார் என்ருல், இவ்வையகத்தில் காலைப்போதில் வெளியே செல்லும் வழக்கத்தை இழந்த அவர்களின் நலத்திற்காக, இதில் கொஞ்சம் எடுத்து, குப்பியில் அடைத்து, கடைகளில் விற்கச் செய்யத்தான் வேண்டும். ஆனுல் இதைமட்டும் நினைப்பில் வையுங்கள். மிகக் குளிர்ச்சியானதும் தரையின்கீழ் உள்ளதும் ஆன அறை வீட்டில் கூட, நடுப்பகல் வரைக்குமாவது அது, குப்பியின் கண் இருக்காமல், அதற்கு முன்பே அதன் மேல் மூடிகளைத் தள்ளிக் கொண்டு மாலையின் பின்னேடு மேற்பக்கத்தில் போய்ச் சேரும். மூலிகை மருத்துவரான மூப்படைந்த ஈஸ் குலாப்பிய கிரேக்கரினுடைய மகளும், ஒரு கையில் பாம்பு ஒன்றையும், மற்ருென்றில் அப்பாம்பு, சில வேளைகளில் தலையை நீட்டிக் குடிப்பதான ஒரு கிண்ணத்தையும் வைத்துக்கொண்டிருப்பதாகக் கல்லில் பொறித்திருக்கிற தோற்றம் வாய்ந்தவளும் ஆன ஹிஜியாவை வணங்குபவன் அல்லன் நான். கிரேக்க புராணத்தில் கண்ட் ஜூனேவுக்கும் காட்டுமரம் ஒன்றிற்கும் பிறந்தவளும்,ஜூப்பிடருக்கு ஏவலாளியும், புத்தேளிர், மாந்தர் ஆகிய இவர்களுக்கு இளமையையும் வன்மையையும் திருப்பித் தருபவளும் ஆன கிரேக்க ஹெபியைத்தான் நான் வணங்க ஒருப்படுவேன். இந்தக் கோளத்தின் மீது அடி வைத்தவர்களில் மிக்க உடல் நலமும் மிக்க வன்மையும் எல்லாவகையிலும் செம்மையும் வாய்ந்த

இளமகள் அவள் ஒருத்தியே போலும்; அவள் எப்போது வருகிருளோ, அந்நாளே நெடிய வேனிற் போதுமாம்.

---

10. ஆசிரியர் கேட்டே.

* * * அவ்வளவு அருமையும் சிக்கலும் ஆன ஒரு நீர்மையைப்பற்றி, ஓர் உண்மையான வரையறை செய்வது அருமை. ஒருவன் ஏதாவது ஒரு வரையறை செய்திருந்தாலும் அதை உள்ளபடி அறிவிப்பதும் அருமையே. கேட்டேயினுடைய உள்ளத்தின்கண் ஒருவனுக்கு முதன்முதல் தோன்றும் தன்மை, அதனுடைய அமைதியே, அடுத்தபடியாக அதன் அழகு; இன்னும் அதிக ஆழமான ஆராய்ச்சி, அதனுடைய விரிவையும் அளக்கமுடியா வன்மையையும் விளக்குகிறது. இவர் ஓர் ஆண்டான்; ஓர் அடிமை அன்று. ஒப்பற்ற வேட்கை பொருந்திய ஓர் ஆன்மாவின் வன்மையும் நெருப்புத் தன்மையும் பொருந்திய உரங்கள், அவருடைய உயிரின் நாப்பண் மௌனமாக இருக்கின்றன. நடுக்குறும் ஓர் உணர்ச்சி, எடுப்பற்ற கூர்மையான இடுக்கண்களை, பின் வாங்காமலும் முறு முறுக்காமலும் நின்று பொருவதற்காகப் பழக்கப்படுத்தப் பட்டிருக்கிறது. வெளியே இருந்தோ உள்ளே இருந்தோ எதுவும் அவரைக் கலக்கமுறச் செய்யவாவது அடக்கவாவது முடியாது. ஒப்பற்ற ஒளியும் உயிர்த்தன்மையும் உடைய உணர்ச்சியும், உயர்ந்த கூர்மையும் ஆராய்தலும் உடைய அறிவும், ஒப்பற்றபடி தடையற்றதும் ஆழ்ந்ததும் ஆன உளக் காட்சியும், மகிழ்வின் ஈடற்ற உடல் இயக்கங்களும், துயரத்தின் மிகக்கொடிய புண்களும் ஆகிய இவை எல்லாம் அவர்தம் உடைமை; அவற்றின் உடைமை அல்லர் அவர். அவர் ஒவ்வொரு நெஞ்சையும் அதனதன் உறுதி நிலையினின்றும் மாற்றும்போது, அவருடைய நெஞ்சோ, உறுதியாகவும் அமைதியாகவும் இருக்கிறது: நம் தன்மையின் உட்புரைகள்பால் சென்று அவற்றை ஆராய்கின்ற மொழிகளை, அவர், வியப்பில்லாததும் வெறுப்பு விருப்பு இல்லாததும் ஆன குரலில் உரைக்கின்றனர். மிக்க ஆழ்ந்த துயரங்களிலும் அவர்

அழுகின்றார் இல்லை. அப்படி அழுதாலும், அவரது கண்ணீர் வைரக்கல் பாறையினின்று சொரியும் நீர்க்கு ஒப்பாம். அவர், தமக்கும் தம்முடைய உலகத்திற்கும் அரசன்; நெப்போலியன் அல்லது பன்னிரண்டாவது சார்லசு ஆகிய இவர்களைப் போன்று, எவ்வகைக் கோட்பாட்டின் கீழ் அமையாததும், அல்லது, தப்பான ஒரு கோட்பாட்டின்கீழ் அமைந்ததும் ஆன தன்னுடைய உறுதிப்பாட்டினது விலங்கின் முயற்சியே தலைக்கொள்ளும் இழிவான உயர்பதவியாளனைப் போன்றுஅவர் ஆண்டார் என்பதும் இல்லை; அவரது புலன்களும் உணர்ச்சிகளும் காமத்தின் இருப்புக்கோல் ஆட்சியின் கீழ், கைத்தலையிடப்படவும் இல்லை; முறிபடவும் இல்லை: மற்று, அவை அறிவின் செவ்விய ஆட்சியின் கீழ் நேர்மையாக ஒன்று சேர்த்து முன்னின்று வழி காட்டப்படுகின்றன; என்னை? இயற்கையின் கொடுமையான ஊழி முதல்கள், கடவுளரின் அருள்ஒளி உண்டானபோது, தம் கொடுமை தணிந்து, அதன் மென்மையான உடுப்பால், அளப்பரும் வியப்புத் தரக்கூடியதும் மாண்பயன் உள்ளதும் ஆய ஓர் கழிபேர் ஆக்கமாக ஒன்றுசேர்கின்ற ஒரு நிகழ்ச்சியே போலாம் அது.

அந்நிலைமை, வளராது தடுக்கப்பட்டதும் நம்பிக்கையில்லாததும் ஆகிய உணர்ச்சியே அற்ற நிலைமையும் அன்று. குருடான இயற்கை வன்மையினிடம் விளைவு கருதாத அடைக்கலமும் அன்று, அபினியால் மயக்கம் கொண்ட நிலைமையும் அன்று; மற்று, அது, ஊழும் முயற்சியும், நமது பிறப்பில் மாறக்கூடியதும் மாறுததும் பொருந்தி ஒருமையாக இயங்கும் நிலைமையே ஆம் என்க. தன்னுடைய இடம் பொருள் ஏவல்களின் மீது, ஆன்மாவின் அமைதி பொருந்திய ஆட்சியாம் அது:— அஃது மக்கள் பிறப்பினர் பெரும்பாலர்தம் தெளிவுறக் கருத முடியாத நோக்கம்; ஏதோ பொறுக்கிய சிலருக்கு மட்டுமே முழுவதும் கைவந்தது—இதுவே மக்கட் பிறப்பினரின் உண்மையானதும் அமைதியுற்றதும் ஆகிய முடிவான நிலைமை. தேடாது ஒருவருக்கும் அது தானே வந்து எய்துகிறதில்லை. ஆனல், அறிஞர்கள் அதைப்

பெற எந்த உழைப்பும் மிகப் பெரியதென்று நினைக்கிற தில்லை என்பதை முன்னிட்டே, அவர்கள் அறிஞர்கள் என்று கொண்டாடப்படுகிறார்கள். ஆசிரியர் கேட்டே யினுடைய உள்வீடு, மெதுவானவையும் மிக நெடிய உழைப்புற்றவையும் ஆகிய முயற்சிகளால் கட்டப் பெற் றது; ஆனால், அது போலியான அல்லது ஏமாற்றமான அடிப்படையின் மேல் நிற்கவில்லை; ஏனெனில், அவரு டைய அமைதி, அறியாமையின் பயனாக இருக்கவில்லை; தெளிவான காட்சியின் பயனேயாம் அது. மாறுதலை எதிர்பார்த்ததும் உறுதியற்றதும் ஆன நம்பிக்கையின் காரியமாக இல்லாது, அது, மாறுதலடையாத் தன்மை வாய்ந்ததை உறுதியாக உள்ளே கண்டறிந்ததை முன் னிட்டு உண்டாயது. அவருடைய உள்ளுலகம், முன்பு ஒருபோது, நம்பிக்கை அறவே ஒழிந்தவனுடையது போன்று பாழ்பட்டதாகவும் துயரமுற்றதாகவும் இருந் தது. ஐயத்தினுடைய ஆட்சிக்கு முற்றிலும் புறத்தி லுள்ள மிக்க ஆழ்ந்த உளவருவாய்களினின்று உண் டாய அழகாலும் அச்சம் பொருந்திய அமைதியாலும், பிறகு, அவர் அதைப் புதுக்கி விளக்கி விட்டனர். அவர் அச்சம் இல்லாது ஆராய்ச்சி செய்தார்; அச்சம் இல்லாது பொய்யைக் கண்டுபிடித்து மறுத்தார். எனினும், முற் குறித்ததற்கு ஒத்த முதன்மையாயும் அதையும்விட அள விடற்கரிய அருமையாயும் உள்ள உண்மையை ஆராய்ந்து மேற்கொள்ளுதலை அவர் மறந்தனர் அல்லர். அவருடைய அறிவு தெள்ளியதாயும் கலக்கமில்லாமலும் இருந்தாலும், அவருடைய நெஞ்சம் எப்போதும் அன்பி னால் நிறைந்திருந்தது; அவர் இவ்வுலகத்தைப் போலி நலங்களால் நிரப்பி வெறும் தூக்குதலாக விவரிக்காவிட் டாலும், அவருக்கு உலகம் எப்போதும் பெரு மேம்பாடு நிறைந்ததாய் இருக்கிறது. மக்கட் பிறப்பினுடைய இழிதகைமை பிறர் கண்களுக்கு விளங்குவதைக் காட்டி லும் அவர் கண்களுக்குத் தெள்ளிதில் விளங்கினாலும், அவர்களைப் போற்றுதலுக்கும் அன்புக்கும் உரியவராகக் கருதினர் அவர். பொருத்தம் அற்றுத் தோன்றும் இவை களைப் பொருந்தச் செய்தலாகிய இது,எல்லா நன்னீர்மை யாளர்களும்,—ஒவ்வொருவரும் தமக்குத் தாமேயும்

தம்முடைய் வழியிலும் முறையிலும்—இயற்ற வேண்டிய ஓர் செய்கையாம். இந்நாளில் இச் செயல் சில புதிய முட்டுப்பாடுகளால் சூழ்ந்திருக்கிறது. மிகச் சிலரே அப்படிச் செய்ய முடியும் என்னும்படியான அவ்வளவு உயர்ந்த தெளிவோடு அதை நமது ஆசிரியர் முடித்து விட்டதாகத் தோன்றுகிறது. இவ் வண்ணமாக ஒருமைப்பட்ட ஓர் உளம், சிறியதும் வறுமையுற்றதும் ஆக இருந்தாலுங்கூட, நமது அன்பு பொருந்திய மதிப்பை மேற்கொள்ளும். ஆனல், இவரது உளம், மக்கட்பிறப்பிற்குள்ளேயே ஒப்பில்லா வலிமையையும் பலவாய கூறுகளின் உயர்வற்ற சிக்கலேயும் உடையவற்றின்பாற்படுகிற காரணத்தினல், விருப்பம் நிறைந்த ஓர் காட்சியாகவும் ஆழ்ந்த கல்வியால் நிறைந்த ஓர் நூலாகவும் ஆகிறது.

ஆசிரியர் கேட்டேயினுடைய உளம்போன்ற ஒன்று இயற்கையின் பெருமிதமான கொடையினுடைய பயன் மட்டுமே அல்லாது, அக்கொடைக்கு ஈடான நிறைகல்வியின் பயனுமாம். கேட்டேயின் ஆன்மாவினது முதல் உருவின்கண் ஆண்தகைமையின் உயரிய குணங்கள், தாழ்ந்த குணங்களிலும் குறைவில்லாதபடி,சேர்ந்து அமைந்திருக்கக் காண்கிறேம். தெய்வத் தன்மையையும் பொதுமையையும் இழிவையும் ஒழிபின்றிக் காண்பதற்கும் உணர்வதற்கும் என அவருக்குக் கண்ணும் நெஞ்சமும் அமைந்திருந்தன; இவை முறையே இயற்புலவன், முதல் ஆரோய்வோன், நகைச்சுவையாளன் ஆகிய இவர்கள் தம் முதல்களாகும். அவர்தம் நிறைகல்வியைப் பற்றி, நாம் முன்னரே பலதரம் சொல்லி யிருக்கிறேம் எனினும், புகழ்ச்சிக்கும் பின்பற்றுதலுக்கும் உரியதாக மறுபடியும் அதை எடுத்துக் கூறுதல் மிகையாகாது. அவரே ஆரவாரமின்றித் தெரிவிக்கிறபடி, இந் நிறைகல்வியே அவரது ஒழுக்கத்திற்கு உயிராகவும் அவரது வாழ்நாளின் அரும் பெரும் ஆள்வினையாகவும் இருந்திருக்கிறது. அவரைத் தெரிந்திருக்கிற எவரும் அவர் நன்ருக வாழ்ந்தார் என்பதை மறுக்க மனங்கொளார்.

அவரை ஓர் ஆசிரியராகக் கருதிப் பார்ப்போம். மக்கள் பிறப்பின் அறிவு செயல் ஆகிய இவற்

றின் கொஞ்சம் குறைய மற்ற எல்லாப் பிரிவு களிலும் இருந்து அவர்தம் உளவருவாய் கள் ஒன்று சேர்ந்திருக்கின்றன. தனித்த ஒரு பிரிவின் ஆசிரியரிடத்து இருந்தாலும், அவரை அதன் பொருட்டு நாம் மதித்திருக்கக்கூடிய அவ்வளவு தேர்ந்த எளிமை யோடு இந்தச் சிக்கலான கருவிகளைக் கையாள அவர் தம்மைக் கற்பித்துக்கொண்டார். அவருடைய நூல்க ளின் சிறப்பியல்புகளாவன, தடங்கலற்ற செலவும் அழகிய சாயலும் புன்னகை பொருந்திய ஊக்கமுமே தான்; அவற்றின் பொருளோ, மிக மென்மையாகச் சேர்க் கப்பட்டு, தூய்மையான ஒரு பெருமிதத்தில் மேற்பாய்ந்து செல்லுகிறது.

அவற்றின் நடையோ, ஜெர்மானிய மொழியின் மிக்க உயர்ச்சியான எடுத்துக்காட்டு என்று அம் மொழி ஆசிரியர்களால் கருதப்படுகிறது. இதைப்பற்றி ஓர் அன்னியனுடைய கருத்து பயனற்றதெனலாம்; எனி னும், ஒருவாறு சொல்ல முயலுமிடத்து, கேட்டேயி னுடைய நடையின் ஆர்வங்கள், சொற்கள் அளவில் நில்லாது அதிக ஆழத்தில் அமைந்திருக்கின்றன. ஏனெனில், ஓர் பேராசிரியரின் கையில், மொழி, எண் ணத்தினுடைய வெளிப்பாடான வடிவமே ஆகும்; அல் லது, எண்ணம் உயிராகில் அதற்காகும் உடலாகிறது மொழி; உடல் உயிரோடு இயைந்து உயருகிறது; உயி ரின் இயக்கத்தினுடைய நிழலாக உடலின் சாயல் உருப்பெறுகிறது. அன்னியனுக்குக்கூட, கேட்டேயி னுடைய நடை பெருங் குணமும் முதன்மையான பொருளே அன்றிப் புறப்பொருளும் நிறைந்ததாய் இருக்கிறது. திருந்தியதாயினும், அது—பேச்சொடு கூடிய இனிய எளிமை வாய்ந்திருப்பதால்—தெள்ளிய முதிய பொய்யடிமையில்லாப் புலவர்தம் பேச்சேபோல் இருக்கிறது. அவரது இயற்பாட்டோ, சுருக்கம் கூர்மை எளிமை தெளிவு ஆகிய இவை பொருந்தியிருக்கிறது.

அவரது உரையோ, பாட்டைக் காட்டிலும் மிக்க இன்பமாக இருக்கிறது என்றே சொல்லலாம். ஏனெனில், அது, ஒருங்கே, சுருக்கமும் நிறைவும்

அணிபொருந்தியதும் தெள்ளியதும், ஆரவாரம் இல்லாததும் இனிய ஓசை உள்ளதும் ஆக இருக்கிறது. பொருளோ, கொஞ்சம் கொஞ்சமாய்த் தோற்றுதலும் மறைத்தலும் ஆகிய மாறும் மின்னலாகக் காண்பிக்கப் படாது, தொடர்ந்த விடியலே என்ன நம் முன்னே எழுந்து, ஒரே காலத்தில் நிறைந்தும், ஞாயிற்றின் மிக்க முதிர்ந்ததும் சிவந்ததும் ஆன ஒளியில் குளித்தும விளங்குகிறது. ஆங்கில ஆசிரியர்களான ஹூக்கர், பேக்கன், மில்ட்டன், பிரௌன் ஆகிய இவர்களுடைய உரைநடை, பிரெஞ்சு மொழியின் திட்டத்தினது நல்ல செல்வாக்கின்கீழ் வந்திருந்தால், எப்படி இருந்திருக்கக் கூடும் என்பதை நினைப்பூட்டுகிறது அது. அந்தப் பிரெஞ்சு மொழியினுடைய கெட்ட செல்வாக்கு, எல்லா ஐரோப்பிய மொழிகளையும் நகாசு பண்ணி, மெல்லிய தாக்கி, கத்தரித்து ஏழைமை யாக்கிற்று; அது, நமது உட்பொருளைத் தெளிவாகத் தெரிவித்தது என்பது என்னவோ உண்மைதான்: ஆனால், அதைப் பெரும் பான்மையும் மேலோட்டமாகவும் செய்தது அது.

ஆனால், கேட்டேயை ஆசிரியர் என்ற தன்மையில் கருதும்போது காணக்கிடக்கிற அவரது கல்வி, அவரை ஓர் ஆண்தகை என்ற தன்மையில் கருதும்போது காணக் கிடக்கிற அவரது உயர் கல்வியினும் தாழ்ந்ததுபோலும். அறிவில் மட்டுமேயன்றிச் சான்றாண்மையிலும் பெரிதும் கற்றிருந்தார் அவர். புலமை நூல்கள் அறிவு நூல்கள் ஆகிய இவற்றிலிருந்துமட்டும் அன்றி, அநுபவம் என்னும் கரடு முரடான பள்ளிக்கூடத்தின்கண், செய்கையாலும் உள வேட்கையாலும் கூட மிகவும் கற்றிருந்தார் அவர். அவர்தம் நூல்களின் மாப்பெரும் சிறப்பு என்னவென்றால், அது விரிந்த அறிவு அன்று மற்றுச் சான்றாண்மையேதான். பார்த்தும் துயர் எய்தியும் உழைத்தும் இருக்கும் ஓர் உள்ளம், தான் முயன்றதையும் வெற்றி கொண்டதையும் பற்றிச் சொல்லுகிறது. மேலோட்டமானது என்று தோன்றும் ஓர் உவகையான கற்பனை, கொடியதும் துனியுற்றதும் ஆன அநுபவங்களையும் ஆன்மப் பேராழியில் செய்த தொழிலைப் பற்றியும் அறி

விக்கும். நோட்டமற்ற கண்ணுக்குச் சின்னஞ் சிறியதாகத் தோன்றும் ஓர் முதுமொழி, நமது வாழ்க்கையில் தியக்கமுறும் நெடிய காலங்களில் தெளிவோடும் நிவர்த்தியோடும் எழுந்து விளங்கும். இவ்வணந்தான், நெஞ்சு நெஞ்சுக்கு உரைக்கிறதும்; ஒருவரின் வாழ்க்கை எல்லாருடைய கைப்பற்ருக ஆகிறதும். ஒப்பற்ற நுண்ணியவையும் அடங்காது பொங்கி எழுபவையும் ஆன முதல்களால் ஆய ஓர் உள்ளம் அன்ரூே இதோ நாம் காணக்கிடப்பது: எனினும், அமைதியான ஊக்கத்தோடு அஃது அடக்கி ஆளப்படுகிறது; அதனுடைய பொறுமையற்றவையும் பிடிபடாத நுட்பம் கொண்டவையும் ஆன தன்மைகள் நல்ல உயரிய முடிவுகளுக்காகச் சேர்ந்து மென்மையாக இயங்குகின்றன.

கேட்டேயை ஓர் ஆன்ரூேர் என்று சொல்லலாம். ஏனெனில், புலவனுகத் தாம் அறிவுறுத்திய சால்பை அவர் காதலித்தும் ஒழுக்கத்தில் கைக்கொண்டும் இருக்கிருர். அமைதியும் மகிழ்ச்சி பொருந்திய நல் அச்சமும் அவர்தம் குணம் முழுவதிலும் உயிர்க்கிறதாகத் தெரிகிறது. மக்களுடைய துன்பங்களேப்பற்றி ஓலமிடுதல் அவரிடத்து இல்லே; நாம் யாவரும் அவற்றைக் குறைக்கவோ அல்லது நீக்கவோ முயலவேண்டியதுதான் என்று அவரிடம் தெரியக்கிடக்கிறது. கொள்கைகளின் பொருட்டுக் கூச்சலான சண்டையிடுதல் அவர்மாட்டு இல்லே. உண்மையை இன்பமாகக் காண்பித்தற்கும், அதை ஓராயிரம் வழிகளால் மேன்மைப் படுத்தி எல்லா மக்களின் நெஞ்சுகளுக்கும் அதை ஏற்பித்தற்கும் ஆகும் விடாமுயற்சி ஒன்றே அவர்பால் காணப்படுகிறது. அவரது பழக்கங்களேப்பற்றி, முற்றத் தேர்ந்த நல்ல பழக்கங்களும் மேம்பாடான நல்ல பார்வையும் உள்ள ஆடவன் என்று யாவராலும் விலக்கின்றி—புகழ்வதற்காக அன்றிப் பலமுறை பழிப்பதற்காகவும்—கூறப்படுவதை நாம் எளிதில் நம்பலாம். ஏனெனில், திருத்தமான பொறுமையும், மேம்பாடான—அரச மேம்பாடு என்றுகூடச் சொல்லலாம் போன்ற—அமைவும், பேரமைதி வாய்ந்த காருண்யமும் பொருந்திய ஒருதன்மை அவரது நூல்கள் முற்றிலுமே புலப்படுகிறது. எவனேயும் வெறுப்பாக அவற்றின்

ஒரு வரியிலாவது அவர் குறிக்கின்ருர் இல்லை; ஒரு பொருளைப் பற்றிக்கூட, பெரும்பான்மையும் அப்படிக் குறிக்கின்ருர் இல்லை. அவர் நல்லதை அறிகிருர், அதை விரும்புகிருர்; கெட்டதையும் வெறுக்கக் கூடியதையும் அறிகிருர், அவற்றை நீக்குகிருர்; ஆனல், எதிலும் மூர்க்கமில்லாமல்தான். அவர்தம் அன்பு அமைவும் செயல் வன்மையும் உடையது. அவர்தம் வெறுப்பு வெளித்தோன்றுதலால் அன்றிக் குறிப்பினுல்தான் விளங்கும். பெரிதும் ஆராய்ந்த முடிவு என்றும் இனி ஒருபோதும் மாற்றமுடியாது என்றும் நாம் தெரிந்து கொள்ளலாம் எனினும், தாழ்மையாகவும் சாந்தமாகவும் உள்ளது அவ்வெறுப்பு. மிக உயர்ந்தவற்றையும் மிகத் தாழ்ந்தவற்றையும் அவர் தெரிந்து கொள்ளுகிருர் என்பது மட்டும் இல்லாது, அவற்றினுடைய அதிக மறைவான உடற்கோடுகளோடு அவற்றை மானுடமாக்கவும் அவற்றிற்கு உடல்தரவும் அவர் அறிந்திருக்கிருர். எனவே, செய்கைகளும் கொள்கைகளும், அவை உண்டாகிற அல்லது நினைக்கப்படுகிற நெஞ்சுகட்கு—அவற்றைக் குற்றம் நீங்கினவை யாகவாவது அல்லது அருமையானவை யாகவாவது செய்யும் இடம் பொருள் ஏவல்களோடு—அவை இயைந்திருப்பதுபோல் அவருக்கு விளங்குகின்றன.

நமது ஆசிரியர் ஷேக்ஸ்பியர்தம் உள்நோக்கமும் இதுவேயாம். ஒருகால் எல்லாப் பெரிய நாடகப்புலவர்களின் உள் நோக்கமும் இப்படியே போலும். ஷேக்ஸ்பியர் ஓர் வகுப்பினர் அல்லர். எல்லோரையும் அவர் முறை வழுவாமலும் இரக்கத்தோடும் நடத்துகிருர். ஏனெனில், யாவரையும் அவர் அறிவர். அவரது மனம் யாவரையும் கொள்ளும் படியான விரிவுள்ளதா யிருக்கிறது. அவர்தம் உள்ளத்தில் உலகம் ஒரு முழுப்பொருளாக விளங்குகிறது. கடவுள் அதை ஆளும் விதமாக, அதை அவர் உருப்படுத்துகிருர். தீயதின் மீதும் நல்லதின்மீதும் ஞாயிற்றை ஒளி செய்யச் செய்வதும், நியாயத்தின்மீதும் அநியாயத்தின்மீதும் மழையைப் பெய்யச் செய்வதும் அவருக்கு விபரீதமாகத் தோன்றவில்லை.

கேட்டேயை ஜெர்மானிய வால்ட்டேர்என்றுசொல்லி யிருக்கிறார்கள். ஆனால், அந்தப் பெயர், அவரைப் போது மானபடி யன்றிக் குறைவாக விவரிப்பதாகவும் அவரைத் தாழ்வுபடுத்துவதாகவும் இருக்கிறது. அவர்களுடைய தொழில்முறைகள்கல்விஆகிய இவற்றின் பல்வேறுபட்ட தன்மை ஒன்றைத் தவிர்த்து மற்றவற்றில் அவ்விருவ ரையும் ஒப்பிட்டுப் பார்த்தல் இயலாது. ஆனால், அந்த ஒரு பொதுத் தன்மையில் இருவரையும் ஒப்பிடுவது வால்ட்டேரைத் தாழ்வுபடுத்துவதுஆகும்.வால்ட்டேர்தம் சிறப்புக்கள் எல்லாவற்றையும்—அவரது உயர்ந்த சிறப் புக்கள் எல்லாவற்றையும்—கேட்டேயினிடம் காணலாம். மேலும் வால்ட்டேர் கனவிலும் கண்டறியாத பலவகைச் சிறப்புக்களைக் கேட்டேயினிடம் காணலாம். பெருமை வாய்ந்ததும் உண்மையுள்ளதும் ஆன அவரது நீர்மை யைப்பற்றிப் பேசுவதை ஒழித்து, ஓர் எண்ணுபவராகவும் ஓர் எழுதுபவராகவும் அவரைக் கருதுமிடத்து, அவர் வால்ட்டேரைப் பார்க்கிலும் பெரிதும் உயர்ந்த ஓர் வகுப் பைச் சேர்ந்தவராக இருக்கிறார். அவர் ஒரு கேள்வி கேட்பவர்—ஓர் இழிவுபடுத்துபவர்—ஆகாது,ஓர் உபாத்தி யாயராகவும் ஒரு பெருமைப்படுத்துபவராகவும், ஒரு சதுரப்பாடானவர் என்பது மட்டும் அன்றி ஓர் அறிஞரா கவும் இருக்கிறார். ...இறந்தவர்கள் இருப்பவர்கள் ஆகிய யாவரிலும் உயர்ந்த சதுரப்பாடுடையவர் வால்ட்டேரே ஆவர். ஆனால் ஓர் ஆன்றோர் என்பவர் இதன்பாற் படாத வேறு சிறப்பையும் பொருந்தியிருப்பர்: வால்ட்டே ரிடம் அவ்வண்ணமான சிறப்பு ஒன்றும் கிடையாது என்பது தெளிவே யன்றோ!

கவிஞர்களாகக் கருதுமிடத்து அவ் இருவரும் இக் கோளத்தின் ஒரே பாதியில் மட்டும் அன்றி ஒரே உலகத் தில் கூட வாழ்கிறார்கள் அல்லர். வால்ட்டேர்தம் கவி யைப்பற்றிக் கூறுமிடத்து, திருத்தமான அறிவின் வன் மையும், தர்க்க முறைமையின்பாற்பட்ட நேர்மையும், நெருப்பின் வெப்பம் அல்லாவிடினும் நெருப்பின் நிறத்தைமட்டுமாவதுஇங்கேயும் அங்கேயுமாகக் காட்டும் மின்னல்களும் அதில் இல்லை யென்பது வெறும் குருட் டுத்தனமே ஆகும். ஆனால் கேட்டேயை ஓர் கவிஞன்

என்பது இதற்குப் பெரிதும் வேறுபட்ட அர்த்தத்திலேயே ஆகும் என்க: அது, பிரஞ்சுப்புலமை நூல்களிலேயே உவமானம் காணக்கூடாத ஒருவித அர்த்தத்தின் பாற்படும். அவரது புலமையரசு உயர்ந்ததாயும், தனிச் சிறப்புற்றதாயும், சென்ற சில தலைமுறைகளில், அவர் ஒழிய வேறு எந்தக் கவிஞனும் கைப்பற்றியதைக் காட்டிலும்—ஒருகால், ஒரே நிலையாய் முயன்றதைக் காட்டிலும்—மிக்குயர்ந்ததாயும் இருக்கிறது என அவரைப் பற்றிச் சொல்ல நாம் முந்தலாம். கேட்டேயினுடைய பாட்டைப் படிக்கிறபோது இந்நாளையதாயும் இந்தத் தலைமுறையினதாயும் உள்ள பாட்டை நாம் படிப்பதாக நமக்கு இடைவிடாது தோன்றுகிறது. நமது வெறும் நம்பும் பான்மையை மட்டும் பற்றி நிற்றல் எதுவுமில்லை. இந்நாளைய அறிவின் விளக்கமும் கல்விமுறையும் ஐயப்பாடும் நம்மினின்றும் மறைக்கப்படவில்லை. பழையனவாய்ப் போன புராண வரலாறுகளில் அவர் தலையிட்டுக் கொள்ளுகிறதும் இல்லை. அல்லது தொன்றுதொட்டு வரும் கவி வகைகளில் ஏதாவது மாறுதல்கள் செய்கின்றதும் இல்லை. விண்ணோ, அன்றி, எரிவாய் நிரயமோ ஆகிய இவற்றைச் சார்ந்து கருதும் கோட்பாடுகள் அவரிடம் இல்லை. என்னை? பௌஸ்ட்டு என்னும் நாடகம் மேற்சொன்னதற்கு உண்மையான ஒழிபல்லாது, ஒழிபாகத் தோன்றுதல் மட்டுமே ஆகும் என்க.

ஆனால், பத்தொன்பதாவது நூற்றாண்டின் படு உரை எனப்படுவதும் நாம் எல்லோரும் வாழ்வதும் ஆகிய கீழ்மையான வாழ்க்கையேதான் அவர் நூலில் காணப்படுகிறது; அது அவருடைய கையில் முன் கண்டறியாத ஓர் அழகாக ஓங்குகிறது; உலர்ந்ததும் கரடுமுரடானதும் ஆன அந்த மண்ணிலிருந்து இயற்புலமையாகிய மலர் அலருவதைக் காணும் பொருட்டு உவகையுற்ற இறும்பூது கொண்டு நாம் கண் இமையாது நிற்கிறோம். அவர் தம் கற்பனைகளான *மிக்னன், ஹார்ப்பர், டாஸ்ஸோ,மெய்ஸ்ட்டர்* ஆகிய இவர்களின்முடிவு இதுவேதான். அவர் கருதுகிறபடி, இயற்புலமை, பொழுதிலாவது இடத்திலாவது இல்லாது ஒருவனது ஆன்மாவின்

கண்ணேயே உளது. முன்னுளில் இயற்கை மட்டும் இயற்றிய ஒன்றை இப்போது புலமை இயற்கையோடு சேர்ந்து இயற்ற வேண்டியிருக்கிறது. தெய்வங்களும் அவுணர்களும் சூனியக்காரர்களும் கறுப்பன்களும் கன்னிமார்களும், மாநிலத்தினின்று, இனி ஒருபோதும் திரும்பி வராதபடி உருக்கரந்து விட்டனர். ஆனல் இவற்றைக் கற்பித்த உளக்கண் இன்னும் இருக்கிறது, இனியும் எஞ்ஞான்றும் ஒருவனது ஆன்மாவில் அது இருந்து கொண்டிருக்கும்; இவ் அண்டத்தின்மீது அது தனது மாய ஒளியைச் சொரிந்து, சாயல் பெற்றவையும் உருக்கம் தருபவையும் அதனேடு உடன்பிறந்த உளத்தின் மற்றக் கூறுகள் மறுக்காதவையும் ஆன மாய இருப்புக்களை எப்பாங்கரிலும் உண்டாக்கும். இவற்றை எல்லாம் கேட்டே செய்து முடித்தார் எனல், இதுகாறும் எவருக்கும் வாய்த்திருந்த ஆன்ம விளக்கத்தைக் காட்டிலும் கேட்டேயினது பெரியது என்பதைக் காட்டும். ஏனெனில், முற்காலங்களைத் தமது கவியின் தனிவகைகளால் குடியேற்றியது பெரியதும் மேம்பாடுடையதும் ஆன ஓர் உளம் அல்லது பல உளங்களின் ஓர் மரபு ஆம் என்க: ஆனல், இக்காலத்தை அந்தப்படி குடியேற்றுவதற்கு இன்னும் மிக உயர்ந்ததும் மிக மேம்பாடுடையதும் ஆன பல உளங்களினுடைய ஓர் மரபு வேண்டியிருக்கும். ஒன்பதாவது நூற்ருண்டில் நம்மைக் கீழ்ப்படுத்தி வயப்படுத்திய தேவர்களினின்றும் அவுணர்களினின்றும் வேறுபட்டதும் அவர்களைப் பார்க்கிலும் மிகச் சூழ்ச்சி பொருந்தியதும் ஆன வகையில் பத்தொன்பதாம் நூற்ருண்டில் நமது நெஞ்சங்களைக் கீழ்ப்படுத்தும் தேவர்களும் அவுணர்களும் இருத்தல் வேண்டும். இந்த அரிய செயலை முயன்றதும் தொடங்கினதுமே மிக உயர்ந்த புகழ்ச்சியைப் பெறற் குரியது என்று கருதப்படலாம். இங்கே விவரித்த வகையில் கேட்டே எப்போதாவது உன்னினரா என்பதைப் பற்றி நமக்கு நேரான சான்று கிடையாது. ஆனல், எல்லாக் காலங்களிலும் பருவங்களிலும், உயர்ந்த இயற்புலமையின் முடிவும் நோக்கமும் அப்படித்தான் இருக்கிறது! ஏனெனில், புலவனின் கற்பனை பொய்மையானதன்றி மிகத் தூய்மை

யான உண்மையாகும்; நம்மில் ஒரு பகுதியை மட்டும் அன்றி நமது முழு உயிரையும் ஒரு கவிஞன் கைதியைப் போல் நடத்த விருப்பங் கொண்டால், அவர், முன்பு நம் முடையனவாய் இருந்த நலங்களை யன்றி இப்போது இருக்கிறவற்றைப் பற்றியே நமக்கு அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தலும் நமது உள்ளங்களுக்கு மாறுகாததும் பொருத்தமானதும் ஆன பேச்சு வழியாய் இருத்தல் வேண்டும்.

நமக்கு அறிவித்தபோது, கேட்டே இந்த வேண்டுதல்களை எப்படி நிறைவேற்றினர் என்பதைப் பற்றி, அவரது நூல்களைக் குறித்த எந்த விவரமும் இன்றி, அந் நூல்களை நேரே ஆராய்தல் மட்டுமே நமக்குத் தெரிவிக்க முடியும். அவற்றைப் பயின்று, பின் அதைக் காணும்படி நான் இதைப் படிப்பவர்க்குச் சொல்ல விரும்புகிறேன். இயற்புலமை, ஒரு விளையாட்டென்றும், வெறும் மேலோட்டமான ஓர் உவகை என்றும், அதன் மிக்க உயர்ந்த நோக்கம், தளர்ந்த ஒரு மனத்துக்குத் தாறுமாறான காட்சிகளையும் சோம்பலான உணர்ச்சிகளையும் தருதலே ஆகும் என்றும் கருதும் ஒரு கொள்கையோடு அந்த ஆராய்ச்சியை ஒருவன் மேற்கொண்டால், அவனது இன்ப நுகர்ச்சியின் அளவு சிறுமை யடைந்ததாகவும், அவனது பணிக்கைகள் கூச்சலுள்ளனவாயும் சினங்கொண்டனவாயும் பலவகைப்பட்டனவாயும் இருக்கும். ஆனல், இயற்புலமை எல்லா ஆராய்ச்சிகளின் சாறு என்றும், எல்லாப் பயிற்சி வகைகளிலும் மிகத் தூய்மையானதையே அது வேண்டுவதாகும் என்றும், ஒருவன் தெரிந்து நம்பினுலும்; புதியவை எப்போதுமே பொய்யானவையாக இரா என்பதையும், ஓர் இமைப் போதில் பார்க்கக்கூடிய அருமை பெரும்பான்மையும் மிக ஆழ்ந்ததொன்ருக இராது என்பதையும் ஒருவன் நினைப்பூட்டினுலும்; ஒருவனுக்குப் பெயராவது பரிகாரமாவது பெரிதும் தெரியாதிருக்கிறவையும்,—தளையவிழ்த்து அவற்றை உரிமைக்கும் ஒளிக்கும் ஆக வெளியில் கொண்டு வரவிருக்கும் மறை என்று கருதக்கூடிய ஒருசொல் சொல்லப்படுவதன்முன்,—அவனது நெஞ்சின் கண் சிறைப்பட்டும் சொல் ஆகாதபடியும் நோய்கொண்

டும் கிடக்கிறவையும் ஆன உணர்ச்சிகளாலும் அநுபவங்களாலும் அவனது நெஞ்சம் நிறைந்திருந்தாலும்:—இம்மன நிலைமைகளில் ஒருவன் இருந்தால்—கேட்டேயின் நூல்களில், அவனது கண்களின் முன்னர் ஓர் புதிய உலகம் இருப்பதாக அவன் கண்டறிவான் என்று நான் நம்புகிறேன்; ஊக்கமும் விளையாட்டும், மருளும் குன்றமும் மகிழும் பள்ளத்தாக்கும் நிறைந்த ஓர் உலகமாக அது இருக்கும்; தங்களது காலத்தின் ஆன்ம விளக்கம் உறைவதற்கு ஷேக்ஸ்பியரும் ஸ்பென்சரும் கட்டியிருக்கும் கோவில்களைப் போன்று, நம் நாளைய ஆன்ம விளக்கத்திற்குத் தகுந்த ஓர் கோவிலாம் அது. பெருமிதத்திலும் அழகிலும் முன் உள்ளவற்றைக் காட்டிலும் தாழ்ந்ததாய்—இருக்கலாம் ஆகையால்—இருப்பினும், அவ்வண்ணமான சிற்ப முறையால் நிறுவப்பட்ட கோவில்தான் இதுவும்.

இது ஒரு தேட்டையான கொள்கையாகக் காணலாம்: ஆனால், ஆய்ந்து பார்க்காமலும் எனது அறிவிற்குக் கிடைக்கக்கூடிய தேர்ச்சியில்லாமலும் நான் இக்கொள்கையை முடிவுபடுத்தினேன் அல்லன். இக்கட்டுரை, இந்த விஷயத்தைப் பற்றிப் பிறரைப் பேசும்படி செய்து, இதன் உண்மை உணர்தலை விரைவுபடுத்தினால், இக்கட்டுரையின் பெருங்கருத்து பயன்பெற்றது என்னலாம்.

நாம் இதுகாறும் ஊக்கத்தோடு அறிய முயன்ற ஆன்மாக்களைக் காட்டிலும் அதிகமாகப் பிற ஆன்மாக்களின் படிப்பாதற்கு உரியது கேட்டேயினுடைய ஆன்மா. இப்படி அப்படியாக,—இன்னும் கொஞ்ச நாளைக்குள் என்றே தோன்றுகிறது—அவர் நியாயமாக விசாரித்துத் தீர்க்கப்படுவர்; அவரே—அவரென்று கருதுகிற தெளிவற்ற ஓர் எண்ணத் தொகுதியன்றி—அவரே காணப்படுவர். அவர் நம்பால் மிக்க ஐயப்பாடான வடிவத்தில் வருகிறார். ஆதலால், பேசாமையும் கவனியாமையும் நமது நோக்கத்திற்குத் தகுந்தது ணைசெய்யா. நியாயம் தனது எல்லா வகைகளோடும் இருத்தற்குத் தெரிந்தெடுத்த வீடாகவும், மிகத் தாழ்ந்த ஒரு மேன்மையே ஆயினும் அஃது போற்றப்படுவதும், மிக உயர்ந்த தவறே

ஆயினும் உரியதல்லாத அளவு அஃது கடியப்படாததும் ஆன நாடாகவும் உள்ள இங்கிலாந்து, இந்தச் சிறந்த நீர்மையாளருக்கு எவ்வித ஓரமும் செய்யாதன்றோ! அதன் நேரான தீர்ப்புச் சொல்லி ஒத்துக் கொண்ட போது, கேட்டேயை முதன் முதல் கொண்டாடினவர்கள் வெறும் புகழ்ச்சியில் உழன்றதாக ஏற்பட்டால், அச் செயலை,மன்னிக்க முடியாத ஒரு பழியாகக் கருதமாட்டார் கள் என்று நான் நம்புகிறேன். இம் மாநிலத்தில் செர் வான்டெசு, டாஸ்ஸோ, ஷேக்ஸ்பியர், அகத் துறவிகள் ஆகிய இவர்களோடு ஒருங்கு சேர்த்து எண்ணக் கூடிய ஒருவர், நாம் பார்க்கிற பொருள்களைப் பார்த்துக் கொண்டும், நாம் எதிர்ப்படுகிற எண்ணங்களையே தாமும் எதிர்ப்பட்டும், நாம் இன்னும் வருத்தத்தோடு சிக்கிக் கொண்டிருக்கிற மதிமயக்கங்கள் முட்டுப்பாடுகள் ஆகிய இவற்றின்மீது அமைவான கொடையோடு ஆளுகிருர் என்பதை—அதாவது, நம் நாளிலே, இங்கே நம்மோடு கூட, கடவுட்காட்சி வாய்ந்தவர்களில் ஒருவர் இருக்கிருர் என்பதைப் பற்றிக் கருதுவது ஆன்ம எழுச்சி தருவதா யிருக்கிறது.

கேட்டேயினுடைய உளம், பொருத்தமற்றவைகளா லும் குறைபாடுகளாலும் நிறைந்திருந்தது என்பது, மக்கள் பிறப்பின் தீமையைக் கேட்டறிந்த எவனுக்கும் ஓர் மறைப்பாய் இருக்க முடியாது. இந்த ஒளியைக் காணும் நமது காட்சியை வேற்றுமுகம் படும்படி, இருட் பண்புகளால் ஆய ஓர் நீண்ட அட்டவணையை இவ்விடத் தில் சேர்ப்பது ஓர் அருமையான காரியம் அன்று; ஆனல், அது அருமையற்றிருக்கிறதைக் காட்டிலும் அதிகமாகத் தாழ்ந்த பயன் உள்ளதாய்த்தானே இருக் கும்; ஏனெனில், கேட்டேயினுடைய நூல்களில், மற்ற உண்மையானபேராசிரியர் எல்லோருடையநூல்களிலும் இருப்பது போலவே, குற்றம் என்று முதலில் படுகிற ஒன்று, இன்னும் முதிர்ந்த படிப்புக்குப் பிறகு, ஓர் அழகு என்னும்படி மாறக்கூடியதாய் இருக்கும். அவரது நூல்கள் அவற்றின் தனித்த பகுதிகளை மட்டும் பார்த்து உணரக்கூடாத தன்மையன: என்னை? அவற்றுள் ஒவ் வொன்றும் ஒவ்வொரு முழுமையாகக் கருதி எழுதப்பட்

டிருக்கிறதாதலின்; அவற்றில், கீழானவையும் பொது வகையானவையும், உயர்ந்தவற்றிற்கும் பெருமிதமான வற்றிற்கும் எவ்வளவும் குறைந்த முதன்மை வாய்ந்தன அன்று ஆதலின்: சீன நாட்டு ஓவியங்கட்கு மட்டுந் தானே நிழல் இல்லை! நடக்கையில் கையாளுவதைக் காட்டிலும் மிக நன்ருய் அறிந்து மட்டும் இருக்கிற முது மொழி ஒன்றிருக்கிறது. அதாவது, மேன்மைகளேக் கண்டறிதலேக் காட்டிலும் குறைகளேக் கண்டுபிடித்தல் மிக்க இழிவான தொழிலாகும் என்பதே. செய்யும்போது மிக்க எளியதாய் இருப்பினும், பயனே நோக்குங்கால் அது ஓர் இம்மியளவுகூட உறுதிதரக் கூடியதாயில்லே. குறித்த பொருளில் உள்ளதைப் போலவே, அவ்வளவிற்கு, நம் மிடத்திலும் இருக்கக்கூடிய ஒரு முட்டோ, பொருந்தாமை யின் ஓர் உணர்ச்சியோ அன்றி வேறென்ன ஒரு தவற் றைக் கண்டுபிடித்தல் என்பது? எதில் என்று யார் சொல்லக்கூடும்? ஒரு பொருளே அது இருக்கிறபடியும், தன்னேத் தானிருக்கிறபடியும் பார்த்தறிகிற ஒருவனே யன்றி வேறெவரும் சொல்ல முடியாதல்லவா? நாம் எல் லோரும் பணிக்கை பார்க்கும் ஈயைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிரேம்; எனினும், நம்மில் எவரும் தமது காட்சி யின் பரப்பைப்பற்றி ஐயப்படுகிறதில்லே. புலமையின் பெரிய ஓர் வேலேப்பாடும், இன்னும் மிகுந்த படியில், உயர்ந்ததும் முதல் தன்மை வாய்ந்ததும் ஆன ஓர் உளமும், இப்படியே எல்லாக் காலங்களிலும், அதிக பய னற்ற பணிக்கையின்பாற் படலாம். பொது இயல்புள்ள ஒருவன் சிறப்பியல்புற்ற ஒருவரைக் காணுங்கால், அவரை மேலிருந்து காண முயல்வதற்குமுன், அவரைத் தான் கண்டு உணர்ந்ததைப் பற்றி மட்டுமாவது நிச்சய மாக இருத்தல் நலம். கேட்டே பிறர் கற்பதற்காகும் ஓர் உடைமை என்பதைத் தெரிந்துகொண்டு, அவரது மேன்மைகளேத் தெளிவாக நாம் மதித்த பின்னர், அவரது தவறுதல்களேக் கண்டிக்க மேற்போகலாம்; நாம் சால்புள்ள நியாயாதிபதிகள் ஆயின், அதற்குமுன் நாம் அப்படிச் செய்யமாட்டோம்! . . .

11. புலமைப் பேரின்பம் பெறும் உண்மை

ஆன்மா மேற்செல்லும் தன்மையது ஆதலால், அது, முற்றிலும் பழைய நிலைமையையே திரும்பி ஒரு போதும் அடையாமல், தனது செயல் ஒவ்வொன்றிலும் புதியதும் புதிய அழகு வாய்ந்ததும் ஆன ஒரு நிறைவையே உண்டாக்க முயல்கிறது. இம்முயற்சி,—பயன் தரும் நோக்கம் இன்பந்தரும் நோக்கம் என்னும் இவற்றைக்கொண்டு செய்வினைகளில் பலரும் காண்கிற வேறுபாட்டினை நாமும் மேற்கொண்டு பார்க்குங்கால்,—பயனுள்ளவை அழகு வாய்ந்தவை ஆகிய இரண்டு வகைப் புலமைகளிலும் தோன்றுகிறது. எனவே, நமது இன்பந் தரும் புலமைகளில் உண்டாக்குதலே அன்றி, ஒப்பச் செய்தல் நோக்கம் அன்று. நிலப்பரப்பினை வரையும் போது, ஓவியப் புலவன், நாம் அறிந்திருக்கிறதைக் காட்டிலும் மிக்க அழகு வாய்ந்த தோற்றம் ஒன்றனைப் புலப்படச் செய்யவேண்டியவன் ஆகிருன். இயற்கையின் பொது வகையின்பாற் படும் சில்லறை இனங்களை ஒழித்து, அதன் உண்மையையும் ஒளியையும் மட்டும் அவன் வரைதல் வேண்டும். ஒரு நிலக் காட்சி அழகியது என்று தனக்குத் தோன்றுவதற்குக் காரணம், அக்காட்சி, தனக்கு ஓர் நன்மை நிரம்பிய எண்ணத்தைத் தோற்றுவித்தலேதான் என்பதையும் இத் தோற்றுவித்தலுக்கு நிமித்தம், அவனது கண்கள் வழியாய் உள்ளிருந்து நோக்குகிற அதே வன்மையே அவ்வெளிக் காட்சியிலும் நோக்கப்படுகிறது என்பதையும் அவன் அறிதல் வேண்டும். அறிதலும், இயற்கையின் குறிப்பையே அன்றி, வெற்று இயற்கையை ஒருபோதும் மதிக்காமல், தனது ஓவியமாகிய இயற்கைப் போலியில் தனக்கு மகிழ்ச்சி தரும் உறுப்புக்களையே அவன் சிறப்பிப்பான். துன்பத்துள் துன்பத்தையும், இன்பத்துள் இன்பத்தையுமே அவன் எழுதுவான். தன் எதிர் அமர்ந்திருக்கும் ஒருவரை, அவர் ஆக விரும்பும் உயர்நிலைமையின் குறைவுற்ற ஒப்புமையாகவே அப்புலவன் கருதி, அவரது உறுப்புக்களை அன்றி, அவரது குணத்தையே அவன் ஓவியத்தில் எழுதுதல் வேண்டும்.

எல்லா ஆன்ம இயக்கத்திலும் காண்கிற சுருக் கமும் தெரிந்தெடுத்தலும் புதுவது புனையும் உள்முயற்சி அன்றி வேறென்ன? ஏனெனில், மிக எளிய குறியீடு களைக் கொண்டு கழிபெரும் பொருளை உணர்த்தக் கற்றுக் கொடுக்கும் பேரான்ம விளக்கத்தின் ஒரு துறையே அன்றோ அச்சுருக்கம்! இயற்கை, தன்னைத்தானே அறி விக்கும் தொழில் முறையின் மிக நுட்பமான தேர்ச்சி அல்லது, வேறென்ன மனிதன் என்பான்? வான் வரம்பு உருப்படுத்தும் தோற்றவகைகளைக் காட்டிலும் மிக நுண்மையானதும் ஒடுக்கமானதும் ஆன தோற்றம் அன்றி, வேறென்னவோ மனிதன்? நமது பேச்சும், ஓவியத்தின் கண் நமக்குள்ள ஆசையும், இயற்கையின் பால் நமக்குள்ள பற்றும் இயற்கையின் இன்னும் சிறந்த நுட்பமான தேர்ச்சி அல்லது வேறென்னவோ? களைப் புறுத்தும் நாழிகை அளவினதான இடை வெளியையும், எண்ணிக்கையற்ற மணங்கு கொண்ட பருமையையும் ஒழித்து, அவற்றின் உண்மையை, அல்லது, உட் கிடையை மட்டும் ஓர் இசை நிரம்பிய சொல்லிலோ, அல்லது, தீட்டுக்கோலின் உயர்ந்த சூழ்ச்சி பொருந்திய ஓர் கோட்டுக்குள்ளேயோ அடக்குவதை வேறென்ன என்னலாம்?

ஆனல், புலவன் தனது விரிவுற்ற உணர்ச்சியைத் தன் காலத்து மக்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டு, தன் காலத்திலும் தனது மக்கட் பொதுவிலும் வழங்கும் குறியீடுகளைக் கையாளுதல் வேண்டும். எனவே, புலமை யில் புதியது என்பது, எப்போதும் பழமையினின்றே உண்டாக்கப்படுகிறது. காலமாகிய பெரும் புலவன், ஒரு வேலைப்பாட்டின்கண் அழிக்கமுடியாத தன் அப்போதைய முத்திரையைப் பதிக்கிறன்; பதித்து, உளக்கண்ணிற்குச் சொல்வதற்கரிய ஓர் இன்பத்தைக் கொடுத்தருளு கின்றன். ஒரு புலவனது காலத்துள்ள ஆன்ம நிலை, அவனை, அதன் வயப்படுத்தி, அவனது வேலைப்பாட்டின் கண் விளங்குமாகில், அவ் வேலைப்பாடு ஒரு முதிர்ந்த மேம்பாட்டினை மேற்கொண்டு, பிற்காலத்தவர்க்கு **அறிவிறந்ததையும், ஊழ் நிலையையும், கடவுட்டன்மையை யும்** அறிவிக்கும். ஊழ்நிலையாகிய இந்தப் பகுதியைத்

தன்னுடைய வேலையினின்றும் நீக்குதல் எவனுக்கும் கூடாதது ஆகும். தனது காலத்திற்கும் நாட்டிற்கும் முழுவதும் புறம்பாக நிற்றலாவது, அல்லது, தனது நாளின் கல்வி முறையோ, சமயமோ, அரசியலோ, வழக்க வகைகளோ, அல்லது புலமைகளோ ஆகிய இவை எவ்வளவும் கலக்காத புத்தம் புதிய ஏற்பாடு ஒன்றனை நிருமித்தலாவது எவனுக்கும் முடியாத ஓர் கருமம் ஆம். அவன், எவ்வளவுதான் தனக்குத் தானே ஆன்ம விளக்கமோ, சித்தப் பிணக்கோ, அல்லது, உணர்ச்சித் தாறுமாறோ வாய்ந்தவனாய் இருப்பினும், தனது வேலைப்பாட்டினின்றும் சுற்றிலும் வழங்குகிற எண்ணத் தொகுதியின் அறிகுறியை, எவ்வகையிலும் நிலவாதபடி ஒழிக்க முடியாது. அங்ஙனம் ஒழிக்கும் முயற்சியே, அவன் ஒழிக்கும் வழக்கத்தைப் புறம்போந்து தெரிவிக்கும். அவனுடைய சித்தத்திற்கு மேலும், அவனது பார்வைக்கு அப்புறமும் ஆக இருந்து, அவன் உட்கொள்ளும் காற்றினாலும், அவனும் அவனது காலத்தினரும் தமது வாழ்க்கைக்கு ஆதரவாக நம்பிக்கொண்டிருக்கும் கருத்தினாலும்,—அவனது காலத்தின் போக்கு இன்னதென அவன் அறியாமலேயே,—அப்போக்கை விடமுடியாது தழுவ வேண்டியவன் ஆகிறான் அவன். ஒருவனது சிறந்த அறிவு அவனது வேலைப்பாட்டுக்குத் தரக்கூடிய இனிமையைக் காட்டிலும், அவ்வேலைப்பாட்டில் தள்ளமுடியாதபடி சேர்ந்துகொள்ளுகிற பகுதியே மேலான இனிமை பொருந்தியதாக இருக்கிறது; ஏனெனில், அப்பகுதி வரையில், புலவன் ஒருவனின் எழுதுகோலை, அல்லது தீட்டுக்கோலை, மக்கட் பிறப்பின் வரலாற்றில் ஒரு வரியை எழுதும்பொருட்டு, கழி பெருங் கை ஒன்று பிடித்து உணர்த்தியதுபோல்அன்றோ தோன்றுகிறது! இந் நிகழ்ச்சியே, எகிப்தியரின் சித்திர எழுத்துக்களுக்கும், இந்தியரோ, சீனரோ, அல்லது மெக்சிகோ நாட்டினரோ ஆகிய இவர்களுடைய வணங்குதற்கு உரிய வடிவங்களுக்கும்—இவை எவ்வளவு பெரும்படியாகவும் சாயல் அற்றவையாகவும் இருப்பினும்,—ஓர் ஏற்றத்தைக் கொடுக்கிறது. இவை, அவ்வக்காலத்தில் மனிதனது ஆன்மப் பொலிவின் உயர்ச்சியைக் குறிக்-

கின்றனவே அன்றி, முறையற்ற வெறுந் தாறுமாற்றின் பயன் அன்று; இவை, உலகம் அவ்வளவு ஆழமான ஓர் இன்றியமையாமையி னின்றே உண்டாயின. இதுகாறும் மறையாதிருக்கும் எல்லாப் படிவங்களும் கட்டடங்களும், மக்கள் வரலாற்றை விளக்கும் முகத்தால், உயர்ந்த பயனை உடையன என்று,—அதாவது உயிர்த் தொகுதி தத்தம் வீடுபேற்றின்பால் விரைந்து செல்லும் முறைகளை நிறுவும் ஊழின் நிறைவுற்றதும் அழகியதும் ஆன உருவப்படத்தில் ஓர் கோட்டினை அவை தீட்டின என்று —மேலும் சொல்லுதல் தகுதியுடையதன்றோ?

இப்படியாக, காலத்தொடர்பு கருதி நோக்கில், அழகை உணரும் உணர்வினைக் கற்பிப்பதே புலமையின் தனித் தொழிலாக இருந்திருக்கிறது. நாம் அழகில்தான் அமிழ்ந்திருக்கிறோம். ஆயினும், நமது கண்களுக்கு மாசற்ற காட்சி புலப்படுவதில்லை. ஒன்றிய தன்மைகளைத் தோற்றுவித்தலால் மட்டுந்தான், அமிழ்ந்து கிடக்கும் உணர்ச்சி துணை பெற்றுத் தலைகாட்டுதல் கூடும். உருவின் அறிவரிய தன்மையில் ஈடுபடுகிற நாம் செதுக்குதலோ, அன்றித் தீட்டுதலோ செய்கிறோம்; அல்லது, செதுக்கியதையோ தீட்டியதையோ நோக்கு கிறோம். பிரித்து வைத்தலிலேதான்,—அதாவது, தியக்கப்படுத்தும் வேறுபட்ட தொகுதியினின்றும் ஒரு பொருளைத் தனிப்படுத்தலிலேதான் புலமையின் நன்மை கிடக்கிறது. பொருட்களின் தொடர்பினின்றும் ஒரு பொருளைத் தனிப்படுத்தும் வரையில் இன்ப நுகர்ச்சியும் பெரு வியப்பும் இருக்கலாம். ஆனால், எண்ணம் இருக்க முடியாது. நமது இன்பமும் துன்பமும் உண்டாக்குவன அல்ல. குழந்தையோ இன்பமான உறக்கத்தில் கிடக்கிறது; ஆனால், அதன் ஆன்மப் பண்பும், செயற்கை வன்மையும் பொருள்களை வேறுபடுத்தி ஒவ்வொரு காலத்து ஒவ்வொன்றைக் கருதும் அதன் நாளுளைய மேற்போக்கைப் பொறுத்து வளர்கின்றன. காதலும் வேட்கை இனம் பலவும் ஏதோ குறித்த உருவம் ஒன்றனைச் சார்ந்தே உயிர்த்து இருக்கின்றன. தாங்கள் அநுபவிக்க நேரிடுகிற ஒரு பொருளையோ, ஓர் எண்ணத்தையோ, அல்லது, ஒரு மொழியையோ, வேறு யாதும்

இல்லை என்னும்படியான அவ்வளவு நிறைவு பெறச் செய்து, அதை, தாம் சொல்லும் அக்காலம் மட்டிலாவது உலகத்தின் ஈடு என்னும் தோற்றம்படக் கூறுவது சிலச் சில பேர்உளங்களின் பழக்கமாக இருக்கிறது. இன்னுரே புலமையாளரும் பேருரையாளரும் நாட்டாண்மையாளரும் ஆவர். பிரிக்கும் வன்மையே—ஒன்றைப் பிரித்துப் பெரியதாய்க் காட்டலேதான்—மன்ருடி, புலவன் ஆகிய இவர்களின் அணி இயலின் உயிர். ஆசிரியர் பர்க்கு, ஆசிரியர் பைரன், ஆசிரியர் கார்லைல் ஆகிய இவர்கள்பால் கண்டு வியக்கக்கூடிய இந்த அணியையே,—அதாவது ஒரு பொருளின் நொடிப்போதைய உயர்ச்சியை நிலைநிறுத்தும் வன்மையையே,—ஓவியப் புலவனும் சிற்பியும் வண்ணவேறுபாட்டிலும் கல்லிலும் தோற்றுவிக்கின்றனர். தான் சிந்திக்கிற பொருளில் தனக்குள்ள விளக்கத்தின் ஆழத்தைப் பொறுத்தே, ஒரு புலவனது வன்மை நிற்கும். ஏனெனில், ஒவ்வொரு பொருளும் தாயகமான இயற்கையின் கண்ணேயே வேர் கொண்டிருக்கிறதாகையால், நமக்கு அந்தப் பொருளை, வையகத்தைக் குறிக்கும்படியான வகையில் தெரியப்படுத்தலாம். ஆகையினுல், பேர் ஆன்மவன்மை வாய்ந்த வேலைப்பாடு எதுவும் குறித்த ஒரு நாழிகையின் தனி அரசாகி, அதன்பாலே நமது முழு நோக்கமும் செலுத்தும்படி நம்மைச் செய்கிறது. அது, ஒரு தனிப்பாட்டே ஆயினும், ஒரு கூத்தே ஆயினும், ஒரு நிலப்படமே ஆயினும், ஓர் பேர் உரையே ஆயினும், அல்லது, ஒரு கோவில், ஒரு போர்க்களம், ஓர் புதியன காணப்போகும் கப்பல் யாத்திரை ஆகியஇவற்றின் நிருமிப்பே ஆயினும், ஏதோ ஒரு குறித்த நேரத்தில் அது மட்டுமே செய்தற்குரியது என்னும்படி விளங்குகிறது. அடுத்த நேரத்தில் நாம் வேருெரு பொருளை நாடுகிருேம். அதுவும், முற்கூறியதைப்போல, தான் ஒருமுழுப்பொருளாகத்தோன்றுகிறது. எடுத்துக்காட்டாக, ஓர் ஏற்பாடானதோட்டத்தை எடுத்துக் கொள்வோம்: அதைப் பார்க்கும்போது, தோட்டம் வைப்பதைப் போன்று வேறெதுவும் செய்தற்குரியது அன்று என்று காண்கிறது. நிலம், நீர், காற்று ஆகிய இவற்றை நான் அறியாதிருப்பேனுகில், நெருப்பே

உலகத்தில் சிறந்த பொருள் என்று நான் நினைக்க வேண்டியிருக்கும். எல்லா இயற்கைப் பொருள்களும், உண்மையான செயற்கை வன்மைகள் பலவும் பலவகையான இயல்பான குணங்கள் எவையும் ஓரோர் குறித்த விஞடியில் உலகின் உச்சி என்னும்படியாக இருக்கும் தன்மையைத் தமது நேரான உரிமையாகக் கொண்டிருக்கின்றன. தனது மகிழ்ச்சியின் பொருட்டு, வனத்தை ஓர் அகன்ற மரம் எனவே கருதி, கிளைக்குக் கிளை தாவும் ஓர் அணில், அழகாகவும், குறைபாடில்லாததாகவும் அந்த நொடிப்போதிற்கு இயற்கையின் அவதாரமாகவும் இருக்கிறது. கண்ணிற்கு ஓர் நிறைவு தருவதில் ஒரு சிங்கத்தின் காட்சியைக் காட்டிலும் இது எவ்வளவும் குறைந்ததன்று. ஒரு நல்ல சிந்தினை நான் கேட்கும் போது, ஒரு காப்பியம் அதற்குமுன் எப்படி என் செவிக்கும் மனத்திற்கும் இன்பம் கொடுத்ததோ, அப்படியே, இதுவும் எனக்கு இன்பம் தருகிறது: தனது ஆண்டாளுல் இழுத்துச் செல்லுகிற ஒரு நாயோ, அல்லது, ஒரு கூட்டிலுள்ள பன்றியின் குருளைகளோ என் உள்ளத்தை நிரப்புகின்றன. அப்படி நிரப்பும்போது, அவை ஏஞ்சலோ என்னும் பெரும் புலவன் தீட்டிய ஓவியங்களைக் காட்டிலும், ஒரு சிறிதும் பெருமையில் தாழ்ந்தனவாய் இல்லை. இவ் வண்ணமான சிறந்த பொருள்களின் தொடர்ந்த காட்சியினின்றும் உலகத்தின் அளப்பரும் தன்மையையும் எப்பக்கத்திலும் முடிவற்ற நிலைமையில் கொண்டுவிடுகிற மக்கட்பிறப்பின் பெருமிதத்தையும் நாம் சிந்தித்து உணருகிரேம். எனினும், எது, முதல் வேலைப்பாட்டில் எனக்கு வியப்பைக் கொடுத்து இன்புறுத்தியதோ, அதுவே இரண்டாவது வேலைப்பாட்டின் கண்ணும் என்னை வியப்பித்தது என்பதையும், எல்லாப் பொருள்களின் சிறப்புடைமை ஒன்றேதான் என்பதையும் நான் தெரிந்து கொள்ளுகிறேன்.

ஓவியம் சிற்பம் ஆகிய இவற்றின் தொழில் வெறும் தொடக்கம் மட்டுமே அன்றி, ஓர் முடிவாகக் காணப்படவில்லை. உயர்ந்த ஓவியங்கள் தமது முடிவான மறைவை எளிதில் நமக்கு உணர்த்தும். உயர்ந்த படங்கள் என்பவை, நம்மைச் சூழ்ந்துள்ள—உருவங்கள் பொருந்திய

தும் எப்போதும் மாறிக்கொண்டே யிருக்கிறதும் ஆன—தோற்றத்தைக் கற்பிக்கிற (அரிய சூழ்ச்சியால் ஆய) புள்ளிகள் கோடுகள் வண்ணங்கள் ஆகிய இவற்றுள் சிலவற்றின் பெரும்படியான தொகுதிகளேயாம். கை கால்களுக்கு நாட்டியம் எப்படியோ, அப்படியே கண்ணிற்கு ஓவியம் ஆகும். நாட்டியப் பயிற்சி, ஒருத்தி உடம்பை அவள் வயப்படுத்தி அதனிடத்து மென்மையையும் சாயலையும் உண்டாக்கிய பின்னர், நாட்டிய ஆசிரியன் கற்பித்த அடிமுறையை அவள் மறத்தலே நன்று. அப்படியே போல, ஓவியமும் நிறத்தின் பெருமிதத்தையும் உருவத்தின் குறிப்பையும் எனக்குக் கற்பிக்கிறது. பற்பல ஓவியங்களையும் ஓவியப் புலமையின்கண் தோன்றும் உயர்ந்த ஆன்ம விளக்கத்தையும் நான் பார்க்கும்போது, தீட்டுக்கோலின் வரம்பற்ற வளமையையும், கருதக்கூடிய கணக்கற்ற வடிவங்களினின்றும் தெரிந்தெடுத்துக் கொள்ளும் உரிமையை உடைய ஓவியப் புலவனின் தடங்கலற்ற நிலையையும் நான் அறிகிறேன். அவன் எதையும் எழுத முடியுமானால், ஏதோ ஒன்றை எழுதுவானேன்? என்ற கேள்வி என் நெஞ்சில் எழுந்ததும், கறுப்பு, சிவப்பு, பச்சை, ஊதா, மஞ்சள் என்னும் பலப்பல வண்ணமான ஆடைகளை உடுத்து, தெருவில் சென்று கொண்டிருக்கிற ஆட்களும், பிள்ளைகளும், வறியர்களும், அழகிய மகளிரும், நீண்ட முடியினரும், நரைத்தவரும், வெளுத்ததும் கறுத்ததும் திரைந்ததும் ஆன முகத்தினரும், பருத்தவரும், குறுகியவரும், அகன்றவரும், தேய்ந்தவரும் ஆகிய இவர்களைக் கொண்டு, வான்கூரையின் கீழும் நிலம் நீர் ஆகிய அடிப்படையின் மேலும் ஆக இயற்கை தோற்றுவிக்கிறதும் எஞ்ஞான்றும் நிலைபெற்றதும் ஆகிய ஓர் படத்தை என் கண் காண்கின்றது.

கற்படிவங்கள் பொருந்திய ஓர் மாடமும் இதே பாடத்தையே இன்னும் அதிக வன்மையாகக் கற்பிக்கிறது. ஓவியம் நிறங்கொண்டவற்றை அறிவிப்பது போலவே சிற்பமும் வடிவின் உட் பொருத்தத்தை அறிவிக்கும். முன்னொருகால் சிறந்த படிவங்களை நான் பார்த்தவுடன் பொது மக்கள் கூட்டம் ஒன்றற்குச் சென்றிருந்தேன்;

"ஆசிரியர் ஹோமரின் நூலை நான் படித்த போது மக்கள் யாவரும் அவுணரே போல் வன்மை பொருந்தியவர்களாக இருக்கக் கண்டேன்" என்று சொன்னவருடைய உட்கருத்தை அப்போது நான் நன்ருக அறிந்தேன். ஓவியமும் சிற்பமும் கட்புலனின் ஒப்பற்ற பயிற்சி என்று—அதாவது, அப்புலனில் கிடக்கிற நுண்மைகளையும் அருமைகளையும் காண்டற்கு வேண்டிய பயிற்சி என்று—நான் அறிகிறேன். எல்லாச் செயற்கைப் படிவங்களுக்கும் மேற்பட்ட அளவற்ற மேம்பாடுடையதும் எஞ்ஞான்றும் புதுமைப்பட்டுக்கொண் டிருக்கிறதும் ஆன இந்த உயிர்ப்பு வாய்ந்த மனித உடலைப்போன்ற படிவம் யாண்டுமில்லை. எவ்வளவு சிறப்பான புலமை நிரம்பிய கூடம் இங்கே இருக்கிறது! பல்வகையவாய இந்தக் கூட்டங்களையும் வேறுபட்ட முதலவாய ஒற்றை வடிவங்களையும் சிற்றறிவுடைய புலவன் எவனும் இயற்றவில்லை. ஆன்மாவாகிய பெரும் புலவன், அவனது கல்லாகிய உடலை விரைவில் வடிவம் ஆக்கிக் கொண்டு, ஒருபோது கடுமுகத்தோடும் மற்றும் ஒரு போது மகிழ்ச்சியோடும் தனது தொழிலை இங்கே இயற்றிக்கொண் டிருக்கிருன். முதலில் ஓர் எண்ணம் அவனுக்குத் தோன்றுகிறது; பிறகு வேருென்று: இப்படியாக, ஒவ்வொரு நொடியிலும் தன் களிமண்ணை உடலின் தோற்றவகை உள் நாட்டம் மெய்ப்பாடு ஆகிய இவை முழுவதையும் அப்பெரும் புலவன் மாற்றுகிருன். உன் அறிவற்ற எண்ணெயையும் தீட்டுக்கோல்களையும் சலவைக்கல்லையும் உளிகளையும் கொண்டு, புலவனே நீ! சேய்மையில் மறைந்து செல்வாயாக: நிலைபெற்ற பெரும் புலமையின் நினைப்பரும் சிறப்புக்களை நீ காணுமாறு அக்கருவிகள் உதவுமே அன்றி வேறு எவ்வகையில் பார்க்கினும் அவை பயனற்ற கூளமே என்றுணர்க.

எல்லாக் கற்பனையும் பெரு முதலான வன்மை ஒன்றனையே முடிவாகக் குறிக்கும். அங்ஙனம் குறித்தலே ஒப்பற்ற புலமையின் தீர்ந்த வேலைகள் எல்லாவற்றிலும் காண்கிற சில பொது அடையாளங்களுக்குக் காரணம் ஆகிறது. அவ் அடையாளங்களாவன: ஒழி

பின்றி யாவருக்கும் தெளிவான விளக்க முடைத்தா யிருத்தல், காண்பார்மாட்டு முதலவாய உள்ளநிலை மைகளை அடைவித்தல், கடவுள் உணர்வு நிறைந்திருத் தல் என்னும் இவையேதான். அவற்றில் காட்டியிருக்கும் சூழ்ச்சி புனிதமான ஆன்மாவின் பிறப்பே—அதாவது மாசற்ற பேரொளியின் தெறிப்பே—ஆகையினால், அது வும் இயற்கைப் பொருள்கள் பிறப்பிப்பதைப் போன்ற உணர்ச்சியையே பிறப்பிக்கிறது. நமது மகிழ்வான நேரங்களில், இயற்கை, நமக்குப் புலமையோடு ஒத்த தாகவும்—அதாவது, நிறைவுற்ற புலமையாகவும்—பேரான்ம வன்மையின்ஓர் செய்பொருளாகவும் தோன்று கிறது. எவனிடத்தில் சிக்கலற்ற புலனுட்பமும், நம் பிறப்பின் பலப்பலவாய உளப்போக்கினை உய்த்துணரும் உணர்வும், ஏதோ குறித்த ஓர் இடத்தில் மட்டும் உள்ள கல்வி முறையின் முதன்மையற்ற கட்டுப்பாடுகளைக் காட்டிலும் மிகுகின்றனவோ, அவனே கற்பனையின் நயங்காணும் உயர்ந்த ஆசிரியனாவான். அழகானவற் றைக் காணும் பொருட்டு நாம் இம் மாநிலத்தைச் சுற்றி னாலும், அவற்றை நம்மோடு நாம் கொண்டுபோகாவிட் டால் நாம் எங்கேயும் அவற்றைக் காணப்போகிறதில்லை. சிறந்த அழகென்பது, மேற்புறங்கள் பெரும்படியான உருவக்கோடுகள் ஆகிய இவற்றைக் கோலுவதில் உள்ள சூழ்ச்சியைக் காட்டிலும்—அல்லது, கற்பனையின் கட்டுப்பாடுகள் நமக்கு அறிவிக்கக் கூடியதைக் காட்டி லும்—அதிக நுட்பமான ஓர் இன்பமாம். அவ் அழகு நல்லொழுக்கம் என்னும் கற்பனையிலிருந்து வெளிப்பர வும் ஓர் ஒளியே ஆக—அதாவது, கல், துணி, இசை ஆகிய இவற்றின் வழி எழும் நம் தன்மையின் ஆழமும் எளிமையும் ஆன வியப்புத்தரும் குறிப்புரையே ஆக—இருத்தலால், அஃது இந்தத் தன்மைகளையுடைய ஆன் மாக்களுக்கு அறிவு விளக்கம் மிகுதியும் பொருந்தி யிருக் கிறது. கிரேக்கர்களினுடைய படிவங்களிலும், உரோ மர்களின் கட்டடங்களிலும், டஸ்கனி, வெனீசு ஆகிய இவற்றின் பேராசிரியர்களின் ஓவியங்களிலும் உள்ள பேரின்பம், அவற்றின் பொதுக் குறிப்பின் பயனேயாம் என்க. அவை எல்லாவற்றிலிருந்தும்

மாசற்ற ஒழுக்கமும் தூய்மையும் அன்பும் நம்பிக்கையும் மறைவின்றி உயிர்த்து வெளிப்படுகின்றன. அவற்றின் பால் நாம் எதைக் கொண்டு போகிறேமோ, அதையே ஞாபகத்தில் அழகாக உவமிக்கப்பட்டு நாம் திரும்பப் பெற்றுவருகிறேம். வாட்டிகன் என்பதைப் பார்க்கப் போய், படிவங்கள் பாண்டங்கள் முதலியவை நிரம்பிய மாடங்கள் வழியாகவும், வளமையான பொருள்களினின் றும் செதுக்கிய அழகான வடிவங்கள் வழியாகவும் ஒரு கூடத்தினின்று மற்றெரு கூடத்திற்குச் சென்றுகொண் டிருக்கும் ஓர் காட்சியாளன், அவை யாவும் உண்டாய எண்ணமுதல்களின் எளிய தன்மையையும், அவனது அகத்திலேயே குடிகொண்ட எண்ணங்கள் கட்டுப்பாடு கள் ஆகிய இவற்றினின்றும் அவை உண்டாயின என் பதையும் மறந்து போகிறுன். மறந்து, அவன் வியப்புத் தரும் அந்தக் கற்பனைகளின் இலக்கணக் கட்டுப்பாடு களைக் கற்கத் தொடங்குகிறுன். ஆனல் அக்கற்பனை கள் எப்போதும் இவ்விதமாக ஒன்றுசேர்ந்திருக்கவில்லை என்பதையும், அவை, வெவ்வேறு காலங்களிலும் வெவ் வேறு நாடுகளிலும் உண்டாயின என்பதையும், வேறு சிற்ப முறையின் இருப்பையே ஒருகால் அறியாது உழைத்தவனும், உயிர்த்தொகுதியையும் இல்வாழ்க்கை யையும், ஒருவரோடொருவர் தொடர்புறுதல், நெஞ்சங் கள் துடித்தல், கண்ணெடு கண் சேர்தல், வறுமை, ஊழ் வினை, நம்பிக்கை, அச்சம் ஆகிய இவற்றிலுள்ள இன்ப துன்பங்களையும் தவிர வேறு ஒரு கற்பனையையும் அறி யாமல் கற்பித்தவனும் ஆகிய ஒரு புலவனது தனித்த பட்டடையினின்றுமே அவை ஒவ்வொன்றும் உண்டா யிற்று என்பதையும் அவன் உய்த்து உணருகின்று னில்லை. மேற்சொன்ன இம்முதல்களே அப்புலவர் களுக்குத் தொடக்கமாக நின்று அறிவுறுத்தியவை; தவிர இம்முதல்களே, அவர்களால் நம் நெஞ்சிற்கும் அறிவிற் கும் நன்ருய்ப் புலப்படுத்தப்படுகிற முடிவான பயன் களும் ஆகும். ஒரு புலவன், தன் வேலையின்கண், தன் உண்மையான குணத்தின் வெளிப்பாட்டிற்கு ஆகும் ஒரு போக்கைத் தன் வன்மைக்கு ஏற்றபடி காண் கிருன். அவனது கருவிப் பொருளால் அவன் எவ்விதத்

திலும் தடைப்படுத்தப் படவோ கட்டுப்படுத்தப்படவோ மாட்டான். தன்னையே பிறருக்குத் தோற்றுவிக்க வேண்டும் என்று உணர்ந்த ஓர் தடுக்கக்கூடாத உணர்ச்சியினால், வைரக் கல்லும் அவனது கைப் பட்டால் மெழுகாகத் தளர்ந்து, போதுமானபடி அவனது குணத்தைப் பிறருக்குத் தெரிவிக்க இடங்கொடுக்கும். இயற்கையையும் கல்வியையும் பற்றித் தொன்று தொட்டு வரும் கருத்துக்களை அவன் வீணே சுமக்க வேண்டியதில்லை. அல்லது, உரோமாபுரி பாரீசு ஆகிய இவற்றில் எவ்விதமான முறை இருந்துவருகிற தென்பதைப் பற்றி அவன் தெரிந்து கொள்ள வேண்டியதும் இல்லை. அமெரிக்காவிலே புது ஹாம்ஷையரிலே ஒரு நன்செயின் மூலையிலுள்ள வர்ணம் இடாத மரக்குடிசைக் குள்ளும், காடுகளுக்குப் பின்புறத்தில் இருக்கும் மரவேலிக் குள்ளும், நகர வறுமையின் வெளிப் பகட்டையும் துன்பங்களையும் பொறுத்துக்கொண்டிருக்கும் குறுகிய இடத்துள்ளும் இருக்கிறவையும், வறுமையும் ஊழால் நேர்ந்த பிறப்பும் எவற்றின்பால் ஒரே காலத்து வெறுப்பையும் விருப்பையும் உண்டாக்குகின்றனவோ அவையும் ஆகிய இல்லமும், பொழுதின் நிலைமையும், வாழ்க்கைத் தன்மையும் கூட, மற்ற எந் நிலைமைக்கும் குறையாத அளவிற்கு, ஓரமின்றி எல்லாவற்றையும் ஊடுருவுகிற ஓர் எண்ணத்தின் குறியீடாக இருக்கத் தகுதியானவையே என்றுணர்தல் வேண்டும்.

நான் சிறுபோதில் இத்தாலியரின் ஓவியத்தின் அரிய சிறப்புக்களைப் பற்றிக் கேள்விப்பட்டபோது, அம் மேன்மையான ஓவியங்கள் சிறந்த புதுமைகளாக இருக்கும் என்று நான் எண்ணியது என் ஞாபகத்திற்கு வருகிறது. நிறமும் வடிவமும் வியப்பைத் தரும்படியான ஒருவகைக் கலப்பை அடைந்திருக்கும் என்றும், பள்ளிக்கூடப் பிள்ளைகளின் புறக்கண்ணோடு அகக்கண்ணையும் ஈர்க்கும் போர்க்கோலங்களைப் போன்று—முன்பின் கண்டறியாத பழங்காலத்து முத்தும் பொன்னும் என்னும்படியான ஒரு பிறநாட்டு அதிசயமாக—அவை இருக்கும் என்றும் நான் கருதினேன். நான் இன்னதென அறியக்கூடாத ஒன்றை நான் பார்த்துத் தெரிந்துகொள்ள

இருப்பதாக நினைத்தேன். ஆனால், நான், பிறகு, உரோமாபுரிக்கு வந்து அந்த ஓவியங்களை நேரே பார்த்த போது, ஆன்மப் பெருவிளக்கமானது, வெறும் களிப்பை யும், அரிய தாறுமாற்றையும், ஆடம்பரத்தையும் கற்றுக் குட்டிகளுக்கு விட்டு விட்டு, தான், முதற்பகுதியும் உண் மையும் ஆனவற்றையே ஊடுருவுகிறது என்பதையும்; அது பழகியதும் பொய்மை ஒழிந்ததும் என்பதையும்; அது, பல் வேறு வடிவங்களில் நான் முன்னமேயே பார்த்தும் நம்பியும் உள்ள பழையதும் எஞ்ஞான்றும் நிலைபெற்றதும் ஆன பொருள் என்பதையும், என் நாட் டில் எத்தனையோ அளவளாவுதல்களில் நான் நன்றாய் அறிந்திருக்கிறவையும் ஆன வெறும் நீயும் நானுமே அது என்பதையும் கண்டு உணர்ந்தேன். அதற்கு முன்னமே நேபிள்ஸ் நகரத்தின் கோவிலில் அவ் வண்ணமான உணர்வுதான் எனக்கு இருந்தது. இடத் தைத் தவிர்த்து வேறெதுவும் என்பால் மாறுதல் கொள்ள வில்லை என்று அங்கே கண்டறிந்தேன். அப்போது நான் என்னையே நோக்கி, “ நீ ஓர் அறிவற்ற குழவியே ஆதல்வேண்டும். இல்லாவிடில், அங்கே, நீ இருந்த ஊரிலேயே உனக்குக் குறைவற்றதாய் இருந்துகொண் டிருக்கிறதையே காண நாலாயிரம் நாழிகை வழிக்கு மேற்பட்ட உவர்நீரைக் கடந்து இங்கே வந்திருக்க மாட்டா யல்லவா?'' என்று சொல்லிக்கொண்டேன். அந்தப் பொருளையே நேபிள்ஸ் நகரத்துள்ள ஓவியச் சாலையிலும் சிற்பம் நிறைந்த கூடங்களிலும், நான் உரோமாபுரிக்கு வந்தபோதும், பேராசிரியர்களான ராபேல், ஏஞ்சலோ, ஸாச்சி, டிஷியன், லியனார்டோடா வின்சி ஆகிய இவர்களது ஓவியங்களைப் பார்த்த போதும்—அந்தப் பொருளையே மறுபடியும் மறுபடியும் கண்டேன். “அந்தப் பொருள் எனக்குத் தெரியாமலே, என்னோடுகூடவே, ஓர் அகழெலியே என, தரைக்குக்கீழே வளைதோண்டிக்கொண்டு வந்தது போலும்.'' நான் எதை எனக்குப்பின் பாஸ்டன் நகரத்தில் விட்டு வந்தேன் என்று நினைத்தேனோ அது, இங்கே வாட்டிகனிலும், மறுபடியும், மிலன், பாரீசு ஆகிய நகரங்களிலும் தோன்றி, எல்லாவித யாத்திரையையும் வீண் எனக்

காட்டிற்று. எல்லா ஓவியங்களிலும் நான் இப்போது காண விரும்புவதாவது, பழக்கமுற்றவையாக அவை காணுதல் வேண்டும் என்பதன்றி, அவை என்னைப் புத்தம் புதுமையில் முழுகி வைக்கவேண்டும் என்பதன்று. ஓவியங்கள் அணிச்செறிவுள்ளனவாக இருத்தல் கூடாது. பொதுவான அறிவும் வெளிப்படையான விவகாரமும் போல எதுவும் நமக்கு வியப்பை அளிப்பதன்று. எல்லாப் பெரிய ஒழுக்கங்களும் எளியனவாகவே இருந்துள்ளன. எல்லாப் பெரிய ஓவியங்களும் அவ்வகையனவே என்றறிதல் வேண்டும்.

ஆசிரியர் ராபேல் அவர்களின் *ஏசு அடிகளின் தெய்வத் தோற்றம்* என்னும் ஓவியமானது, இத்தனிச் சிறப்பிற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். இந்த ஓவியத்தின் எப்பகுதியும்—அதன்கண் அமைதியானதும் அன்பு நிறைந்ததும் ஆன அழகு விளங்குவதால் — பார்ப்பவரின் உள்ளத்தினை உடனே கவர்கிறது. அது உங்களைப் பெயரிட்டழைப்பது போல அவ்வளவு உருக்கமாய்த் தோன்றுகிறது. இனிமையும் தெய்வத் தன்மையும் நிறைந்த ஏசு அடிகளின் முகம் ஏற்றத்தோடு தான் விளங்குகிறது. ஆனல், அணிபொருந்தியதாய் அஃது இருக்கும் என்று நாம் உன்னியதற்கு, அது எவ்வளவு மாருகத் தோன்றுகிறது! இந்தப் பழக்கமான எளிய அன்பு ததும்பும் முகம், ஒருவன் எதிர்ப்படும் தனது நண்பன் முகமே போன்றிருக்கிறது. ஓவியப் படங்களை விற்றல் வாங்குதல் செய்வாருடைய அநுபவத்திற்கும் ஒருவித மதிப்பு உண்டு. ஆனல், ஆன்மவன்மை உங்கள் உள்ளத்தை உருக்கியபோது அவர்களது சொல்லுக்குக் காது கொடுக்காதேயுங்கள். ஏனெனில், அது, உங்களுக்காக அன்றி, அவர்களுக்காக எழுதப்படவே இல்லை. எளிய தோற்றத்தையும் உயர்ந்த உணர்ச்சிகளையும் கண்டு கரையக்கூடிய கண்களை உடையவர்களுக்காக அன்ருே அது எழுதியிருக்கிறது!

ஆகிலும், கற்பனைகளைப் பற்றி உயர்ச்சியாய்ச் சொல்ல வேண்டியவற்றைச் சொன்ன பிறகு நமக்குத் தெரிந்திருக்கிற கற்பனைகள் தொடக்கம் மட்டும் ஆக

இருக்கின்றன என்று மறைவில்லாமல் சொல்லி முடிக்க வேண்டியிருக்கிறது. அவைகளின் நோக்கத்தையும் அவைகள் ஆகக்கூடும் என நினைத்தவற்றையும் கருதியே அல்லது, இதுகாறும் நிகழ்ந்திருக்கும் அவற்றின் பயனுக்காக நாம் அவற்றைப் புகழ்வதில்லை. கற்பனைக்கு உகந்த சிறந்த காலம் இறந்தது என நம்பும் ஒருவன், மக்கட்பிறப்பின் ஆற்றலின் ஊற்றினைப் போதுமானபடி உணர்ந்தானில்லை. இலியடு என்னும் கிரேக்கப் பெருங்காப்பியத்தின் உண்மையான பயனுவது ஏசு அடிகளின் தெய்வத் தோற்றம் என்னும் ஓவியத்தின் பயனுவது, பெருவன்மையின் அறிகுறிகள் என்று அவற்றைக் கருதலின் கண்ணேதான் உளது. ஆன்மப் போக்காகிய ஆற்றில் எழும் அலைகள், அல்லது, திவலைகள் ஆகவாவது, ஆன்மா, தன் மிகத்தாழ்ந்த நிலைமையிலுங்கூட முயல்கிறதும் எக்காலத்தும் நிலைபெற்றதும் ஆன கற்பனை செய்யும் முயற்சியின் அறிகுறிகள் ஆகவாவது அவற்றைக் கூறலாம். புலமையானது, உலகத்தில் மிக்க வன்மையுடைய செல்வாக்குகளோடு ஒத்து இயங்காவிட்டாலும் உலக நடையில் கைவரக் கூடியதாயும் நல்லொழுக்கம் உடையதாயும் இல்லாவிட்டாலும், ஆன்மசாட்சியோடு தொடர்புபட்டு விளங்காவிட்டாலும், ஏழைகளையும் அறிவு முதிர்ச்சி யில்லாதவர்களையும் தங்களோடு மேன்மையான மகிழ்ச்சி பொருந்திய குரலில் அது பேசுகிறது என்று உணரப் பண்ணுவிட்டாலும், அது, தனக்குரிய முதிர்ச்சியை அடைந்தது என்று சொல்வதற்கில்லை. புலமைக்குக் கற்பனைகளைக் காட்டிலும் உயர்ந்தவேலை இருக்கிறது. என்னை ? அக்கற்பனைகள், குறைவும் திரிபும் ஆன உளப்போக்கின்—உரிய காலத்திற்கு முன்னரே பிறந்த—பிறவிகளுக்கு ஒப்பாகும் ஆதலின்.கற்பிக்க வேண்டுதலே புலமையாம். எனினும், உண்மையில் வரம்பற்ற விரிவாயும் ஒழிபற்ற பொதுவாகவும் அப்புலமை இருத்தலால், நொண்டியான, அல்லது, கட்டுப்பட்ட கைகளைக்கொண்டு எழுதுவதற்கும்,—எல்லாப் படிவங்களும் படங்களும் காட்டுவது போல—உறுப்புக்குறைவற்றவர்களையும்அழகற்றவர்களையும் உண்டாக்குவதற்கும் வேண்டிய பொறுமை அதன்

பால் கிடையாது. மக்கட் பிறப்பையும் இயற்கையையும் கற்பித்தலைக் காட்டிலும் குறைந்த நோக்கமும் அதற்குக் கிடையாது. தன் முழு வன்மையையும் ஏற்கும் ஒரு போக்கை அதனிடம் ஒரு புலவன் காணுதல் வேண்டும். அவன் அப்படிக் காணும் வரையில்தான் அவன் எழுது தலோ, அல்லது செதுக்குதலோ கூடும். புலமையானது, பெருங் களிப்பைக் கொடுத்து, எல்லாப் பக்கங்களிலும் உள்ள சூழ்நிலையாகிய சுவர்களை வீழ்த்தி, பார்ப்பவர் மாட்டு, அவ்வேலையின்கண் புலவன் கண்ட ஒழிபற்ற தொடர்பையும் உரத்தையும் உண்டாக்குதல் வேண்டும். என்னை? அதன் உயர்ந்த செயல் புதிய புலவர்களை உண்டு பண்ணலே ஆகும் ஆதலான் என்று உணர்க.

கற்பனை முறைகள் ஒவ்வொன்றின் முதுமையையும் பின் அவற்றின் இறத்தலையும் காணும்படியான அவ் வளவு முதிர்ந்ததாக உலகம்இப்போதே ஆகியிருக்கிறது. சிற்பமாகிய கற்பனை வெகுநாளைக்கு முன்னமேயே எந்த விதமான உண்மையான பயனையும் அளிக்கக்கூடாதபடி இறந்து போய்விட்டது. முதன்முதல், அது, ஓர் உப யோகமான கற்பனையாகவும், ஒருவகையான எழுதலாக வும், முற்காலத்தில் எழுத்துவளமை அறியாதவன் ஒரு வனது நன்றியறிதலையும் அன்பையும் காட்டும் வரி நெடும் புத்தகமாகவும் இருந்தது; வடிவைக் காணும் சிறப்புணர்ச்சி வாய்ந்த ஒரு நாட்டினருக்குள், இந்தப் பிள்ளைத்தனமான சிற்பம், மிக மேன்மையான பயனை அளிக்கும்படியாக, அவ்வளவு நேர்மையாகப் பயிலப் பட்டது. ஆனல் அது, முரட்டுத் தனமும் இளமையும் பொருந்திய மக்கள் கூட்டத்தினரின் ஒரு விளையாட்டே அல்லது, ஞானம் வாய்ந்த ஒரு மக்கட் பொதுவின் முதிர்ந்த வேலையாக மாட்டாது. இலைகளும் காய்களும் நிரம்பிய ஓர் ஆலமரத்தின்கீழும், எக்காலத்தும் நிலை பெற்ற கண்கள் நிரம்பிய வானத்தின் கீழுமாக நான் இருக்கும்போது, நான் ஒரு பெரும்பாட்டையில் நிற்கி றேன் போலும். ஆனல், சிற்பத்தைப் போன்ற கற்பனை களில், உலகத்தோற்றம் ஓர் மூலையில் கொண்டு சேர்க் கப்படுகிறது; சிற்பத்தில், பிள்ளைகளின் விளையாட்டுக் கருவிகளில் உள்ள சிறுமையைப் போன்ற ஒரு தோற்ற

மும், கூத்துக் கொட்டகையின் வீண் ஆரவாரமே போன்ற ஒரு தன்மையும் இருத்தலை நான் மறைத்துப் பேசக்கூடவில்லை. இயற்கை, நம் எல்லாவகையான எண்ணத்தொகுதிகளுக்கும் மேற்பட்டிருப்பதால், நாம் அதன் மறைபொருளை இன்னும் உணரவில்லை. ஆனால், படிவங்கள் நிரம்பிய ஓர் கூடமோ நமது மன நிலையை ஒட்டியிருக்கிறது. ஆதலால், அது விளைவற்ற வெறும் விளையாட்டாக மட்டும் ஆகக்கூடிய ஓர் நேரமும் உண்டு. கோள்கள் ஞாயிறுகள் ஆகிய இவற்றின் வழிகளைப் பழக்கமாக இடையீடின்றிக் கூர்ந்து நோக்கிக்கொண் டிருந்த பேராசிரியரான நியூட்டன், "கல்பொம்மைகளில் பெம்ரோக்கு பிரபு எதைக் கண்டு மகிழ்கிறார்?" என்று வியந்தது எனக்கு ஓர் வியப்பன்று. வடிவின் உட்பொருள் எவ்வளவு ஆழ்ந்தது என்பதையும், ஆன்மா தனது பண்புகளை எல்லாம் அந்தப் பேரகு வாய்ந்த குறிப்புரையினால் எவ்வளவு மாசில்லாமல் வெளிப்படுத்த முடியும் என்பதையும் மாணவனுக்கு அறிவித்தல் சிற்பத்தினால் ஆகும். எல்லாப் பொருள்களையும் ஊடுருவிச் சுவைகாண விருப்புற்றதும், உயிரற்ற பொருள்களையும் போலிப் பொருள்களையும் காண விருப்பற்றதும் ஆன ஆன்மாவின் உயர்ந்த இயக்கத்தின் முன்னிலையில், ஒரு கற்படிவம் உணர்ச்சியற்றதாகவும் உண்மையற்றதாகவும் தோன்றும். ஓவியமும் சிற்பமும் உருவத்தின் விழாவாகும். ஆனால், உண்மையான புலமை எப்போதும் ஒரே வகையாக இருப்பதன்றி, மேற்செல்லும் தன்மையதாகும். மிக்க இனிமையான இசை வீணையின்கண் இல்லை. ஆனால், அது, ஒருவன் அப்போதைக்கப் போது பேசநேரிடுகிற அன்பும் உண்மையும் வன்மையும் உள்ள குரலில் நிலைபெற்றிருக்கிறது என்றறிக. வீணையானது, வைகறை, ஞாயிறு, நிலம் என்னும் இயற்கைத் தோற்றங்களோடு இயைந்த பொருத்தத்தை முன்னமேயே இழந்துவிட்டது. ஆனால், ஆன்மாவின் நயமான உரையோ எனில், இவற்றோடு எஞ்ஞான்றும் ஒத்தியங்குகிறது. கற்பனைகள் பிரிவு படுத்தப் படாது இயற்கையின் தொடர்ச்சியேபோல நிலவுதல் வேண்டும். ஆன்ம நிறைவுள்ள ஒருவனது ஒவ்வொரு உடல் நிலை

யையும் செயலையும் கருதுங்கால், அவன் ஒரு புதிய படிவம் என்பது தெளிவாம். அழகிய ஓர் மங்கை, தன்னைப் பார்ப்பவர்களைச் சிறந்த அன்பெய்தச் செய்கிற ஓர் ஓவியமே ஆகிருள். வாழ்க்கையானது, ஒரு செய்யுளாகவோ அல்லது ஒரு புனைந்துரையாகவோ இருப்பதையே போன்று, அகப்புற உணர்ச்சிகளின் இயக்கமாகவும் இருக்கலாம் அன்ருே!

கற்பனையின் விதியைப்பற்றிய உள்ளபடியான அறிவிப்பு—அங்ஙனம் அறிவிப்பதற்குத் தகுந்த ஒருவரைக் காணப் பெறுவேமோ என்பதுதான் கேள்வி—இயற்கையின் அரசுக்குள்ளேயே கற்பனையையும் கொண்டு சேர்த்து, பிரிந்ததும் எதிர்ப்பட்டதும் ஆன அதன் இருப்பை அழிக்கும். இக்காலத்திய மக்களது வாழ்க்கையில் சூழ்ச்சியும் அழகும் ஆகிய இவற்றின் ஊற்றுக்கள் வற்றியே போயிற்று என்னலாம். ஊரார் விரும்பும் ஓர் கதை, அல்லது, ஓர் கூத்து, அல்லது, ஓர் விளையாட்டு, நம்மை, இந்த உலகமாகிய சோற்றுச் சத்திரத்தின் முன் காத்திருக்கின்ற பெருமையும் சூழ்ச்சியும் உழைப்பும் அற்ற வறியர்கள் என்று கருதச் செய்கிறது: அதைப்போல் கற்பனையும் வறுமையுற்றும் தாழ்வடைந்தும் இருக்கிறது. பழைய நாளில் கிரேக்கரது ரதி மன்மதன் என்பவர்களின் முகத்தில்கூடத் தோன்றும் ஊழாகிய முதற்பகுதியானது இக்காலத்துச் சிற்றுளியையாவது தீட்டுக் கோலையாவது பெருமைப் படுத்துகிறதில்லை. ஆனல் புலவனும் அழகில் ஈடுபட்டவனும், இந்நாளில், தங்களது புலமையைக் காட்டிக் கொள்வதற்கு ஒரு வழியாகவும், வாழ்க்கைத் துன்பங்களிலிருந்து ஓடிக்காணும் ஓர் களைகண் ஆகவும் கருதிக் கற்பனையைக் கைக்கொள்ளுகிருர்கள். மக்கள், தம்முடைய உளக் காட்சிகளில் தம்மைக் காணும் வகையில் அமைதியடையாமல்—கற்பனையாகிய களைகண்பால் சென்று தமது மேலான எண்ணத்தை ஒரு பண் வழியாகவோ, ஓர் கற்படிவம் வாயிலாகவோ, அன்றி, ஓர் ஓவியம் மூலமாகவோ தெரிவிக்கிருர்கள். உடலின்பம் துய்த்தலையே மேற்கொண்ட செல்வத்தின் முயற்சியைப்போல, கற்பனையும், உபயோகமானவற்றினின்றும் அழகானவற்றைப்

பிரிப்பதும், தள்ள முடியாது என்று கருதியபடி மட்டும் வேலையைச் செய்வதும்; வேலையை இவ்விதமாகச் செய்வதால் அதன்கண் வெறுப்பு உண்டாகும் ஆகையால், அவ் வெறுப்பை மாற்ற— இன்பம் நுகர்வதற்குச் செல்வதும் ஆக முயன்று கொண்டிருக்கிறது. பயன்படு பொருளினின்றும் அழகை வேறு படப் பிரித்தலின் பயன்களான இவ்வகை ஆறுதல்களும் ஈடுகளும் இயற்கையின் கட்டுப் பாடுகளுக்குப் பொருத்தமானவை அன்று. ஆன்மத் தூய்மைக்கும் அன்பு செலுத்துதற்கும் அன்றி, களியாட்டிற்காக அழகைத் தேடினால், அது, அத்தேடுபவனை இழிவுபடுத்துகிறது. துணியிலாவது, கல்லின் கண்ணாவது, ஓசையிலாவது, தனிச் செய்யுளிலாவது, அப்படிப்பட்டவனுக்கு உயர்ந்த அழகு அமையப் போகிறதில்லை. மெலிவுற்றதும், கட்டுப் பட்டதும், உண்மையில் அழகற்றதும் ஆன 'அழகு' என்று பெயர் கொண்டதை மட்டுமே அவன் உண்டாக்கக் கூடும்: என்னை? ஒருவனது ஒழுக்கம் தெரிவிக்கக் கூடியதற்கு மேல் எதையும் அவனது கை ஆக்க முடியாது என்றுய்த்துணர்க.

இவ்வண்ணமாகப் பயன்படு பொருளினின்றும் அழகுள்ள பொருளை வேறுபடப் பிரிக்கின்ற கற்பனையானது, தானே முதலில் பிரிக்கப்படுகிறது. மேலோட்டமான சதுரப்பாடாக இல்லாது, கற்பனை, ஆன்மாவின் ஆழத்தினின்றே தொடங்குதல் வேண்டும். இயற்கையின் அழகை எவரும் காண்பதில்லை. கற்படிவம் அழகாக இருக்கும் என்று கருதி அதைச் செய்யப் பலர் முன் வருகிறார்கள். பொதுமக்களை உணர்ச்சியற்றவர் என்றும், மட்டிகள் என்றும், கருத்து மாறுதல் அடையக் கூடாதவர் என்றும் சொல்லிவிட்டு, பலர் நிற மூட்டைகளைக் கொண்டும், சலவைக் கற்களைக் கொண்டும் தங்கள் வேட்கையைத் தணிக்கிறார்கள். உயிரைச் சாறெழிந்தது என்று தள்ளிவிட்டு, இனிமை என்று தாங்கள் நினைக்கும் ஒரு சாவை உண்டாக்குகிறார்கள். அயர்வுதரும் நாணுளைய வேலையை விரைவாக ஒழித்து விட்டு, சிறுமையான உடற்களிப்பைத் தரும் விழிப்புக்கனுவினைக் காண்கிறார்கள். தங்களது பெரு நோக்கத்தைப் பிறகு செய்து முடிக்கப் போகிறதாக நினைத்து, அதன் பொருட்டு,

இப்போது தின்னலும் குடித்தலும் ஆகிய செயல்களைச் செய்கிறார்களாம். இவ் வகையாகக் 'கற்பனை' பழி தூற்றப்படுகிறது; இந்தப் பெயர், இதன் இரண்டாவதும் இழிவானதும் ஆன அர்த்தத்தையே மனத்திற்குக் குறிக்கிறது; இது, இயற்கைக்கு மாறானதாகவும், பிறப்பிலிருந்தே சாவுண்டதாகவும் தோற்றுகிறது. இழிவென்று கழித்தலுக்கு எதுவும் இல்லாதபடி, தொடக்கத்திலிருந்தே உயர் நிலைமையில் இருந்துகொண்டு, தமது பெரு நோக்கத்திற்காக உழைப்பது—அதாவது, உண்ணல், பருகல், உயிர்த்தல் ஆகிய இவைபோன்ற உயிரின் எல்லாத் தொழின் முறைகளிலும் தமது பெரு நோக்கத்தின் பொருட்டு உழைப்பது,—அதைக் காட்டிலும் மிக நல்லதல்லவா? பயன்படு கற்பனைகளிடத்தே அழகு திரும்பியும் வந்தடைதல் வேண்டும். அழகிய கற்பனைகள் என்றும் பயன்படு கற்பனைகள் என்றும் குறிக்கும் வேறுபாடு மறக்கப்படுதல் வேண்டும். காலத்தின் வரலாறு உண்மையாகச் சொல்லி யிருக்கிறது என்றும் மக்கள் வாழ்க்கை மேன்மையாக நடந்திருக்கிறது என்றும் கருதினால், மேற் சொன்னபடி வேறுபடுத்திக் கூறுதல் எளியதும்—அன்றிக் கூடுவதுமே கூட—இல்லை. இயற்கையின்கண் எல்லாம் உபயோகமானவையே; எல்லாம் அழகானவையே. ஒரு பொருள் உயிருள்ளது, இயங்குவது, தன்னைப் போன்ற பிறிதொன்றைப் பெறக்கூடியது என்பதனாலன்றோ, அழகானது என்று சொல்லப்படுகிறது! ஒன்று உறுப்புப் பொருத்தமாகவும் கண்ணுக்கு இனிமையாகவும் இருப்பதனாலன்றோ, அஃது, உபயோக மானதென்று சொல்லப்படுகிறது! ஓர் சட்டசபையின் சட்டத்திற் கிணங்கி அழகு அணுகாது; அல்லது, கிரேக்கர் நாட்டில் முன்பு எய்தியிருந்த அதன் பொலிவை, அது இப்போது, அமெரிக்காவிலோ இங்கிலாந்திலோ எய்திக் காட்டாது. எப்போதும் போல் இனியும், அது, கட்டியங் கூறாமலே வந்து சேரும்; சேர்ந்து, துணிவும் முயற்சியும் அன்பும் நிறைந்த சான்றோர்களின் அடியிணைக் கீழிருந்தே தோன்றி விளங்கும். பழைய கற்பனைகளில் காட்டிய தன் தெய்வத் தன்மையான நிகழ்ச்சிகளை, ஆன்ம

வன்மை, மறுபடியும், அவற்றின் வழியாகவே நடத்திக் காட்டும் என்று எதிர்பார்ப்பது வெறுமையே ; வயற்புறம், வழியோரம், கடைப்பக்கம், கைவினைக் கூடங்கள் ஆகிய இவைபோன்ற புதியவையும் இந்நாளில் இன்றியமையாதவையும் ஆன பொருள்நிலைகளிலேயே அழகையும் தெய்வத் தன்மையையும் காணுவது அதன் நிலைபெற்ற போக்கென அறிதல் கடனும். கடவுட்காட்சி வாய்ந்த ஒருவரிடம், அவ்வான்ம விளக்கம் தோன்றினால், நாம் இப்போது பிழைப்பதற்காக மட்டில் வேண்டியன என்று கருதும் இருப்புப் பாதையிலும், இடரைக் குறைக்கும் முறையிலும், கூட்டு வாணிபத்திலும், நம் சட்டத்திலும், நம் அரசியல் கூட்டத்திலும், நமது பல்நாட்டுப் பண்டமாற்றுதலிலும், மின்சாரம் விளையும் தொட்டியிலும், மின்சாரம் கொள்ளும் குப்பியிலும், ஒளியைக் கூறுசெயும் கண்ணாடியிலும், பொருட் கூட்டுறவை ஆராயும் கருவிகளிலும் ஏற்றதொரு பெரும்பயன் இருப்பதாகக் கண்டு அஃது அறிவிக்கும். பெரிய கைத்தொழிற் கூடங்கள், இருப்புப்பாதைகள், பெரும்பொறிகள் முதலிய உயிரற்ற பெருந்தொழின் முறைகளில் தோன்றும் தன்னலமும், ஈரமற்ற குணமேயுங்கூட, ஆதாயத்தை மட்டுமே நோக்கும் நம் இழிதன்மையின் பயன் அல்லவா? நீராவிக் கப்பல் ஒன்று, கருங்கடலைத் தாண்டி அமெரிக்கா இங்கிலாந்து என்னும் இரண்டு நாட்டிற்குமாகப் பாலம் இட்டதென உதவி, அவற்றின் துறைகளில், ஒரு கோள், வான்மீன்களுக்கு இடையில் வரும் கணக்கேபோல் வருவது—அதன் நோக்கம் பெருந்தன்மையாக மட்டும் இருந்தால்—இயற்கையோடு பொருத்தமான நிலைக்கு நாம் வருவதற்காகும் ஒரு படியாக இருக்கும் அல்லவா? செண்ட் பீடர்ஸ்பர்க்குவி லிருந்து ஓர் படகு வீணை வழியாகக் காந்தத்தின் செயலால் இழுக்கப்பட்டுப் பாய்ந்து செல்வதைக் கடவுள்தன்மை என்று சொல்வதற்கு இடம் இல்லையா? பொருளைப் பற்றிய ஆராய்ச்சியை அன்போடு செய்து கற்றாலும் அதனால் விளையும் வன்மைகளை அன்பு வழியில் பயன்படுத்தினாலும், அவ்வன்மைகள், பொருள் உலகத்தின் குறைவை நிறைப்பன போலவும், அதன் தொடர்ச்சியே போலவும் தோன்றும்.

12. மகளிர் மேற்றுய முடிவுரை

இந்த விரிவுரை, நான் முன்செய்த மற்றென்றின் தொடர்ச்சி ஆதலால், இவ்விரண்டிலும் நான் சொல்ல விரும்புகிற எனது பொது நோக்கத்தை உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்லுவது நன்மை பயக்கக்கூடும்.

முதற் கட்டுரையில் சிறப்பாகக் கிளந்த கேள்விகளாகிய "எப்படிப் படிப்பது" "எவற்றைப் படிப்பது" என்னும் இவை, உங்களை ஆவலோடு எந்தக் கேள்வியை நீங்களே கேட்டுக்கொள்ள வேண்டும் என்று நான் முயன்றேனே, அந்தப் பெரிதும் ஆழ்ந்த கேள்வியான "ஏன் படித்தல் வேண்டும்" என்பதினின்றுமே உண்டாயின. படிப்பும் நூல்களும் பரவியிருக்கும் இந்த நாளில் நமக்கு எந்த விதமான செல்வாக்கு இருப்பினும், படிப்பு எதனிடம் கொண்டு சேர்க்கும், நூல்கள் எதைக் கற்பிக்கும் என்பனவற்றை நாம் தெளிவாகத் தெரிந்துகொண்ட பின்னரே, அச் செல்வாக்கை நம்மில் எவரேனும் கையாளுதல் கூடும் என்று, நான் உணர்வது போலவே நீங்களும் உணர்தல் வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நல்வழியில் நிற்கும் ஒழுக்கப் பயிற்சியும், நன்கு ஆராய்ந்தெடுத்த நூல்களின் படிப்பும் ஆகிய இரண்டும், புல்லிய ஒழுக்கத்தினரும், படியாதவரும் ஆகிய இவர்களை வயப்படுத்தும்படியான ஓர் வன்மை உடைமையை உண்டாக்குகின்றன என்பதையும், அவ்வன்மை, அதன் அளவுக்குத் தக, உண்மையான கோஇயல் வாய்ந்தது என்பதையும் நீங்கள் அறிதல் வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மக்களுக்குள் இருக்கக்கூடிய ஒப்பற்றுயர்ந்த கோஇயலை அதுதான் உண்மையாகத் தருகிறது. கண்ணுல் காணக் கூடிய கோலங்களாலாவது, அல்லது, பொருளை ஒட்டிய செல்வாக்கினுலாவது எவ்வளவு சிறப்பிக்கப்பட்ட போதிலும், மற்ற கோஇயல்கள் பலப்பலவும் உயிர் அற்ற வெறும் தோற்றங்களாகவாவது அல்லது கொடுங்கோலனவாகவாவது இருக்கின்றன: அவை உயிரற்ற வெறும் தோற்றங்கள் என்பது எங்ஙனம் எனில்,—அவை, சாவைப் போன்ற போலானவையும், போலி அரசமுடி

ஒன்று மட்டும் தரித்திருப்பவையும் ஆன அரசின் மாதிரிகளும் சாயைகளும் ஆக இருத்தலால் தான்; அவை கொடுங்கோன்மை வாய்ந்தவை என்பது எங்ஙனம் எனில்,—உண்மையான வேந்தர் எல்லாருடைய ஆளுகையிலும் நிலவும் நடுநிலையும் அன்பும் ஆகிய இவற்றை அல்லாமல், தமது உளத்தின் விருப்பத்தையே அவை விதியாகக் கொள்வதால்தான்.

ஆகவே,—இந்த எண்ணத்தை உங்கள் உள்ளத்தில் பதிக்க விரும்புகிறேன் ஆகையால், இதைத் தொடக்கமாக வைத்துக்கொண்டதைப் போலவே, இதை முடிவாகவும் வைத்துக்கொள்வேன்—ஒரே வகையான தூய்மையான கோஇயல்தான் இருக்கிறதென்றும், அதாவது, இருந்தேதீருவதும், எந்நாளும் நிலைபெறுவதும் ஆன அந்த வகை முடிபுனைந்தோ அல்லாமலோ இருக்கிறது என்றும், மற்றவைகளைக் காட்டிலும் மிக்க வன்மை பொருந்திய நல்லொழுக்க நிலைமையும், மிக்க உண்மையுள்ள அறிவு நிரம்பிய நிலைமையும் ஆகிய கோஇயலாக அவ்இயல் இருக்கும் என்றும், ஆகையால், மற்ற கோஇயல்களுக்கு வழிகாட்டவும், அவற்றை உயர்த்தவும் உங்களுக்கு அது உரம் தரும் என்றும் நான் மறுபடியும் சொல்லுகிறேன். . . .

1

எல்லா நூலும் எல்லாப் படிப்பும் நம்மையும் நம் வழியாக நம்மைச் சூழ்ந்துள்ள யாவரையும் கைக்குள்ளாக்குகிற இந்த அமைதியானதும் நன்மை பயப்பதும், ஆகையினுலே, கோஇயல் வாய்ந்ததும் ஆன வன்மையை நிலைநாட்டுகிற அளவிற்கு மட்டும் பயன் அளிப்பதாகும் என்று நம்பி, உயர்ந்த கல்வியினின்றும் உண்டாகிற இந்த அரச அதிகாரத்தில், சிறப்பான எந்தக் கூறு அல்லது வகை மகளிரால் தகுதியாகப் பெறற்கு உரியது என்பதையும்; உண்மையான ஓர் அரசியின் வன்மையைப் பெறும்படி அவர்களும் எவ்வளவு வரையில் கடமைப்பட்டிருக்கிறுர்கள் என்பதையும்; அவர்கள் தம் வீடுகளில் மட்டும் இன்றி, அவர்கள் தம் வழியில் குறுக்கிடும் எல்லாரும் மதிக்கத்தக்கதாக வேண்டும் அது

என்பதையும்; இந்த அரசியல் அல்லது பேர் இரக்கம் வாய்ந்த செல்வாக்கை அவர்கள் சரியாக அறிந்து கையாண்டால், எந்தவித அர்த்தத்தில், மேற்கூறிய பேர் இரக்கம் வாய்ந்த வன்மைக்குணத்தால் தோன்றுவித்த ஒழுங்கும் அழகும் அவர்களில் ஒவ்வொருவரும் ஆளும் நாடுகளை "அரசிகள் சோலை" என்று பெயர் இட நமக்கு இடங்கொடுக்கும் என்பதையும், இனி என்னேடு ஆலோசிக்குமாறு இப்போது நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்.

இங்கே முதலிலேயே, மிகவும் ஆழ்ந்த கேள்வி ஒன்று எழுகிறது. இது அளப்பரும் முதன்மையான தாக இருந்தாலுங்கூட, நம்மில் பலரும் இன்னும் இக் கேள்விக்கு மறுமொழி ஒரு சிறிதும் கூற முடியாவண் ணமே இருக்கிறோம்: இஃது ஓர் விபரீத நிலையே ஆகும்.

பெண்டிர்தம் பொதுமையான செல்வாக்கு என்ன வாகஇருத்தல்வேண்டும் என்பதைப்பற்றி நாம் ஒரு முடி வுக்கு வரும்வரையில், அவர்கள் தம் கோஇயல் வாய்ந்த செல்வாக்கு என்னவாக இருத்தல் வேண்டும் என்று நம்மால் வரையறுக்க முடியாது. அவர்களது நிலைபெற்ற கடமை இன்னது என்று நாம் ஒத்துக்கொள்ளுகிற வரைக்கும், எப்படி, கல்வி, பரந்து விரியும் ஏதாவது ஓர் கடமையைச் செலுத்த அவர்களைத் தகுதியாக்கும் என்று நாம் நினைத்துப்பார்க்க முடியாது. மக்கட் பொதுவின் எல்லாவித இன்பத்துக்கும் உயிர்போன்றிருக்கிற இக் கேள்வியைப் பற்றி இப்பொழுதிற் காட்டிலும் அதிக அறிவில்லாத மொழிகள் பேசிய, அல்லது, அதிக வீணான வெறும் கருத்தியக்கம் நடந்த காலம் வேறு எதுவும் கிடையாது. ஆடவர் மகளிர் ஆகிய இவ்விரு வர் இயற்கைகளுக்கும் உள்ள தொடர்புகளும், அவர் களது அறிவு, அல்லது, ஒழுக்க நிலைகளின் வேறுபட்ட ஆற்றல்களும், முழு ஒற்றுமையோடு இதுகாறும் அளக் கப்படவில்லையெனத் தோற்றுகிறது. பெண்ணுக்கு உற்ற வேலையும் உரிமைகளும், ஆடவனுக்கு உற்ற வேலை உரிமைகள் ஆகிய இவற்றினின்று ஏதோ ஒரு போதா வது பிரிவுபடக்கூடும் என்றும், அவளும் அவளுடைய

துணைவனும் தனித்தனி வாழும் தன்மையும் ஒருவருக் கொருவர் விரோதப்பட்டு எதிர்ப்பட்ட பற்றுதலும் உடைய உயிர்களாக இருக்கிறார்கள் என்றும் பேசப்படு கிறது. இது மட்டுமாவது தப்பேயாம். அறிவற்றதும், அடிமைத் தனம் உற்றதும் ஆன கீழ்ப்படிதலைத் தனது பதியினிடம்கொண்டும், தனது வலிவற்ற நொய்ம்மைக்கு எதிராக அவனது பெருவன்மை கொண்டு அவனால் முழுவதும் காப்பாற்றப்பட்டும், அவனது நிழலும் அவனோடு கூட இருக்கிற வடிவமும் ஆகமட்டும் பெண் இருக்கிறாள் என்னும் எண்ணம் இதைக் காட்டிலும் குறைந்த தவறு அன்று! ஒருகால், மிக்க அதிகமான முட்டாள்தன்மை வாய்ந்த தவறேயாம். நான் நிலை நாட்டப் போவதில் இவ்வளவு வரைக்கும் நான் இப் போதே குறித்துவிடுகிறேன்.

ஆடவனுக்குத் துணையாகப் படைக்கப்பட்ட அவளைப் பற்றிய எல்லாத் தப்புக்களிலும் மிக்க அறி யாமை வாய்ந்தது இதுவே. அவன், ஒரு நிழலினால் பயன்தரும்படியானதும் ஓர் அடிமையால் போதுமான தும் ஆன துணைபெறுதல் முடியுமா ?

ஆகவே, ஆடவனுடைய உள்ளத்தையும் ஒழுக்கத் தையும் பொறுத்து, பெண்டினுடைய எந்த வகையான உளமும் ஒழுக்கமும் செல்வாக்கும் உள்ளன என்பதை யும், எப்படி, அவர்களுடைய தொடர்புகள் சரியானபடி மேற்கொண்டால், அவ் இருவரினுடைய உரத்தையும் பெருமையையும், துணையாக நின்று, பெருகச் செய்கின் றன என்பதையும்—ஆகிய இவற்றைப் பற்றித் தெள்ளி யதும் பொருத்தமானதும் ஆன (ஏனெனில், உண்மை யானதாக இருந்தால் அது பொருத்த முற்றதாக இருத் தல் வேண்டும்) கருத்து ஒன்றைப் பெற முடியுமா என்று நாம் முயலலாம்.

போன கட்டுரையில் சொல்லிய ஒன்றை மறுபடியும் இப்போது நான் திருப்பிச் சொல்லுதல் வேண்டும். அதா வது, உண்மையான சிக்கலுள்ள எல்லா விஷயங்களைப் பற்றியும், மிகுந்த அறிவாளிகளும் மிகுந்த சால்புடைய வர்களும் ஆகிய ஆன்றோர்களைக் கேட்டுக் கொள்வது

தான் படிப்பின் முதற் பயன். நூல்களைச் சரியானபடி பயன் படுத்திக்கொள்வது என்றால் என்ன? உதவிக்காக அவற்றினிடம் செல்லுதலும்; நமது கல்வியும் நினைப் பின் வன்மையும் போதாதபோது, அவைகளிடம் முறை யிட்டுக் கொள்ளுவதும்; நம்மிடம் உள்ளவற்றைப் பார்க்கிலும் அதிகத் தூய்மையான எண்ணத் தொகுதியும் அகன்ற காட்சியும் ஆகிய இவற்றின்பால் கொண்டு போகப்படுதலும்; தனித்ததும் நிலையற்றதும் ஆன நமது கொள்கைக்கு எதிராக, அவற்றினிட மிருந்து, எஞ்ஞான்றும் உள்ள நியாயாதிபதிகள் மந்திரத் தலைவர் கள் ஆகிய இவர்கள்தம் சேர்ந்ததும் தேர்ந்ததும் ஆன கொள்கையைப் பெறுதலும் ஆகிய இவைகளேயாம்.

இதை நாம் இப்போது செய்வோமாக. இந்த விஷ யத்தில், எல்லாக் காலத்திலும் உள்ள ஒப்புயர்வற்ற பெரியோர்களும், அறிவாளிகளும், தூயநெஞ்சத்தினரும் ஒத்திருக்கிறார்களா என்று பார்க்கலாம். மகளினது மெய் உயர்வையும், ஆடவனுக்கு அவள் செய்யும் உதவி யின் தன்மையையும் பற்றி அவர்கள் பின்விட்டுப் போன சான்றைக் கேட்போமாக.

முதலில் ஷேக்ஸ்பியரை எடுத்துக்கொள்வோம்.

அவருடைய நூல்களில் ஆண்தகைகள் இல்லை, பெண் தகைகள் மட்டும்தான் இருக்கிறார்கள் என்பதைத் தொடக்கத்திலேயே நோக்குங்கள். அவருடைய நாடகங் கள் எல்லாவற்றிலும், தகைமை வாய்ந்தவர் என்று கரு தும் படியான ஓர் ஆண்மகனாவது கிடையாது. ஆனால், உயர்ந்த நம்பிக்கையிலும், தவறில்லாத நோக்கத்திலும் உறுதிபூண்ட நிறைவுற்ற ஓர் பெண் தகையைத் தன் கண் காணக்கிடையாத ஒரு நாடகமே கூட அவரிடத்து இல்லை என்று சொல்லிவிடலாம். கார்டீலியா, டெஸ்டெ மோனா, இஸபெல்லா, ஹெர்மியோன், இமோஜன், காத ரையின் அரசி, பெர்டிட்டா, சில்வியா, வியோலா, ராஸ லிண்டு, ஹெலனா, கடைசியாய், ஒப்பற்ற இனிமை வாய்ந்தவளான வர்ஜிலியா ஆகிய இவர்கள் யாவரும் குற்ற மற்ற பெண்தகைகளே; மக்கள் பிறப்பின்

ஒப்பற்ற தகைசால் சிறப்பிற்கு எடுத்துக் காட்டாகக் கற்பிக்கப்பட்டவர்களே ஆவர்.

அடுத்தாற்போல் நோக்குங்கள்.

ஒவ்வொரு கூத்தின் கீழ்ச்செலவும், ஓர் ஆடவனுடையஅறியாமையினுலும் தவற்றினுலுமேஎப்போதும் தொடங்குகிறது; ஏதாவது தடுத்தல் அல்லது மீட்சியிருந்தால், அது ஓர் பெண்ணினுடைய அறிவு ஒழுக்கம் ஆகிய இவற்றின் பயனுகத்தான் இருக்கிறது; இவை இல்லாதபோது, தடுத்தல் ஒன்றும் இருக்கக் காணும்....

மூன்ருவதாக, ஷேக்ஸ்பியரது கூத்துக்களில் உள்ள எல்லாத் தலைமையான கற்பனைகளுக்குள்ளும் ஒரே ஒரு வன்மை யற்ற பெண்தான் இருக்கிருள்; ஒபீலியாவைத்தான் குறிக்கிறேன். நெருக்கடியான சமயத்தில் ஹாம்லெட்டுக்குப் பயன்படாது போவதனுலும், அவளை அவன் பெரிதும் வேண்டுகிறபோது, அவனுக்குத் துணை நிற்காது,—அவளது இயல்பால் அவள் துணைநிற்க முடியாது—இருப்பதனுலும்தான் எல்லாக் கொடுமையான துன்பங்களும் தொடர்ந்து உண்டாகின்றன. கடைசியாக, தலைமையான கற்பனைகளுக்குள், மக்பெத்து பெருமாட்டி, ரீகன், கோனெரில் ஆகிய மூன்று கெட்ட மகளிர் இருப்பினும், வாழ்க்கையினுடைய பொதுவான கட்டுப்பாடுகளுக்கு அச்சந்தரும் விலக்குகளாக அவர்கள் இருக்கிருர்கள் என்பதையும், அவர்கள் கைவிட்ட நன்மையின் பொருட்டுள்ள செல்வாக்கின் அளவுக்கு ஈடான தீமையின் பொருட்டான செல்வாக்கின் வன்மையால், அவர்கள் கழிபெருந் தீமையைக் குறிக்கிருர்கள் என்பதையும் உடனே உணர்கிருேம்.

பரந்து மேலோட்டமாகப் பார்க்கும்போது, மக்கள் வாழ்க்கையில் மகளிரின் நிலைமையையும் நீர்மையையும் குறித்த ஷேக்ஸ்பியரது சான்று இப்படி இருக்கிறது. எப்போதும்,—தாம் தப்பிவைக்க முடியாதபோதும் கூட,— தெய்விகப்படுத்தற்கு வேண்டிய உளவன்மையுற்றதும் தவறுதலற்றதும் ஆன மெய்ப்பற்றும், நல்லறிவும் வாய்ந்த ஆலோசனை சொல்பவர்களாக, அதாவது— இழிவு அடையக் கூடாதபடியான நடுவு நிலைமையும்

தூய்மையும் ஆன எடுத்துக் காட்டுக்களாக—அவர்களை அவர் கற்பித்திருக்கிருர்.

மக்கட்பிறப்பின் இயற்கையைப் பற்றிய கல்வியிலாவது, அல்லது இன்னும் அருமையான ஊழின் நிமித்தங்களையும் துறைகளையும் பற்றிய உணர்விலாவது, ஷேக்ஸ்பியரோடு உற்ற எந்த விதமான ஒப்புமையும்பற்றி அல்லாது, இந்நாளின் வாழ்க்கையின் சாதாரண எண்ணப் போக்கின் நங்கூரங்களையும் தன்மைகளையும் விரிவாகக் காண்பித்த புலமையோர் என்றபடியில் மட்டும், அடுத்தாற்போல், வால்ட்டர் ஸ்காட்டு அவர்களுடைய சாட்சியத்தைக் கருதும்படியாக உங்களைக் கேட்கிறேன்.

அவரது வெறும் கற்பனையான உரை நடை நூல்களைப் பயனற்றவை என்று தள்ளி வைக்கிறேன். தொடக்கத்தில் அவர் எழுதிய வெறும் கற்பனையான செய்யுள் மிக்க அழகானதாயினும், ஒரு பையனுடைய ஆன்ம நோக்கத்திற்கு மேற்பட்ட பெருமையை, அதன் சான்று உடையதன்று. ஆனல், ஸ்காட்லண்டு நாட்டின் வாழ்க்கையை ஆராய்ந்தறிந்ததன் பயனுய் அவரது மெய்ந் நூல்கள் உண்மையான சான்று பகர்கின்றன. இவற்றுள் எல்லாம் செயற்கரியன செய்பவர்களாக உயர்ந்திருக்கிறவர்கள் மூவரே ஆடவர்—டாண்டி டின் மாண்டு, ராப்ராய், கிளேவர்ஹௌஸ் ஆகிய இவர்களே: இவர்களில் ஒருவன் நாட்டின் புறத்தில் பயிரிடுபவன்; மற்றெருவன் ஆறலைப்பவன்; மூன்ருமவன் தப்பான ஒரு விஷயத்திற்காகப் போர்புரிபவன். இவர்களும் பெருமையின் உயர்ச்சியை, வன்மையானதும், எனினும் பண்படுத்தப்படாததும், அல்லது, தவருகக் காரியப்படுத்தியதும் ஆன அறிவின் ஆற்றலோடு கூடிய தங்களது அஞ்சாமையாலும் உறுதியாலுமே நெருங்கி அணுகுகிருர்கள். அவருடைய இளைஞர்களோ தாறுமாருன ஊழின் உயர்ந்த விளையாட்டுக் கருவிகளாக இருந்து தங்களுக்குத் தற்செயலாய் நேரிடுகிற இடுக்கண்களை முயற்சியால் வெல்லாது அந்த ஊழின் உதவியால், அல்லது, அதன் இருப்பால் மட்டுமே அவற்றிற்குத் தப்புகிருர்கள். அறிவோடு கருதப்பட்ட ஓர் நோக்கத்

தில் ஆர்வமும், பகைமையான தீமையின் வகைகளை அறுதியாக எதிர்த்தலும், கடைப்பிடியோடு கீழ்ப்படுத்தலும் ஆகிய பொருதலும் உள்ள, எந்தவிதமான பண்படுத்தப்பட்டதும் அல்லது பொருத்தம் உள்ளதும் ஆன குணச்சிறப்பு, அவரது ஆடவரைப் பற்றிய உன்னிப்பில் ஓர் இம்மிகூடக் கிடையாது.

ஆனல், முடிவற்ற வகைகளான சாயல், உளஉருக்கம்,அறிவின்வன்மை ஆகியஇவற்ருேடு கூடியமகளிரைப் பற்றிய அவரது உளக்காட்சியில்—அதாவது, எல்லன் டுகிளஸ், பிளோரா மாக்இவர், ரோஸ் பிராட்வர்டைன், காதரைன் சேடன், டியாஞ வெர்ஞன், லிலியஸ் ரெட் கான்ட்லெட்டு, ஆலிசு பிரிட்ஜ்ஞர்த்து, ஆலிஸ்லீ, ஜீனி டீன்சு ஆகிய இவர்களின் நீர்மைகள் எல்லாவற்றிலும் —பெருந்தன்மையையும் நடுவுநிலையையும் பற்றிய பிறழ்ச்சியற்ற உணர்ச்சியையும்; கடமையின் உண்மையான உரிமைகளுக்காக மட்டும் இன்றி, அதனுடைய தோற்றத்திற்காகவும் கூடச் செய்யட் பெறும் அச்சமற்றதும், தாமதமற்றதும், களைப்பற்றதும் ஆன தன்னல மறுத்தலையும்; கடைசியாக, ஆடவர்களை, ஒரு நொடிப் போதின் தவறுதலினின்றும் காப்பாற்றுதலைக் காட்டிலும் வரம்பற்ற அளவு மிகுதியாகத் துணைநிற்கிற ஆசையை ஆழத்தில் அடக்கிவைத்திருக்கிறதிஞல் ஆய ஓர் பொறுமையுற்ற ஞானத்தையும் நாம் காண்கிருேம்; பின்சொன்ன அந்த ஞானமானது தகுதியற்ற காதலர்களின் குணங்களைப் படிப்படியாக ஆக்கியும் உயிர்த்தும் மேன்மைப்படுத்தியும் நிற்பதன் பயஞக, கதை முடியும் தறுவாயில் அவர்களது—உரியதல்லாத—வெற்றியைக் கேட்பதற்கு மட்டும் வேண்டிய பொறுமை நம்மிடம் உண்டாகிறது.

ஆகவே, மேற்சொன்ன இடத்தெல்லாம், ஷேக்ஸ்பியரைப் போலவே, ஸ்காட்டு அவர்களிடத்திலும், மைந்தனைக் காப்பதும், அவனுக்கு அறிவுறுத்துவதும் வழிகாட்டுவதும் மகளே; தனது காதலியைக் காத்தலையும், அல்லது, அவளுக்குக் கற்பித்தலையும், ஒருபோதும் தவறிக் கூட மைந்தன் மேற்கொள்வதாய் இல்லை.

அடுத்தாற்போல், இத்தாலியா, கிரீக்கு ஆகிய இந்த நாடுகளின் ஆசிரியர்களினுடைய இன்னும் உயர்ந்த சான்றைக் கொஞ்சம் சுருக்கமாகவே கருதுவோம். டான்ட்டேயின் பெரிய செய்யுள்நூலின் போக்கு உங்களுக்குத் தெரியுமல்லவா? இறந்துபோன தமது காதலிக்காக இயற்றப்பட்ட ஓர் காதற் காப்பியமோ, அல்லது, தமது ஆன்மாவை அவள் காப்பதை முன்னிட்டுப் புகழ்ந்து கூறும் ஓர் பாட்டோ ஆகும் அது. ஒருபோதும் அன்பு செலுத்துவதற்கல்லாது, இரங்குவதற்கு மட்டுமே அவள் குனிந்தாலுங்கூட, அழிவினின்றும், அதாவது, எரிவாய் நிரயத்தினின்றும் அவரை அவள் காப்பாற்றுகிருள்; நம்பிக்கையற்று அவர் முடிவில்லாமல் தவறிப்போய்க் கொண்டிருக்கிருர்; விண்ணிலிருந்து அவருக்குத் துணைபுரிய அவள் வருகிருள்; வந்து, வானத்திற்கு ஏறிப்போகும் வழியெல்லாம், மக்களுக்கும் வானவர்களுக்கும் தெரிந்த மிகச் சிக்கலான உண்மைகளை விளக்கிக்கொண்டும், கண்டிப்பின் மேல் கண்டிப்பாகச் சொல்லி ஒரு விண்மீனிலிருந்து மற்றொரு விண்மீனுக்கு அவரை நடத்திக்கொண்டும் முன்செல்லும் அவரது ஓர் உபாத்தியாயராக அவள் இருக்கிருள்...

ஒரு கிரேக்கப் போர்வீரன், ஒரு கிறிஸ்தவ காதலனைக் காட்டிலும் தாழ்ந்த மதிப்பைத்தான் பெண்டிரிடம் கொண்டிருப்பான் என்று நீங்கள் ஒருகால் நினைக்கலாம். உண்மையில் அவர்கள்பால் உள்ள அவனது ஆன்மக் குடிமை அவ்வளவு நிறைவுற்றதாய் இல்லைத்தான். ஆனல், அவர்களது தனிக்குணச் சிறப்புக்களை நோக்கும்போது, நீங்கள் அவ்வளவு எளிதாய் என்னைப் பின்பற்றியிருக்க முடியாது என்பதால் மட்டுமே, ஷேக்ஸ்பியர் தம் பெண்டிரைப்பற்றி விவரித்து, கிரேக்க மகளிரை விவரியாது விடுத்தேன்; அதை முன்னிட்டே, அண்டிரோமாக்கி, தாயாகவும் மனைவியாகவும் நடந்துகொண்டதில் விளங்கும் அவளது தூய்மையான நெஞ்சத்தையும்; காஸ்ஸாண்டிராவின் தெய்விகமானது எனினும், மதிக்கப்படாது போன ஞானத்தையும்; மகிழ்ச்சியுடைய நாஸிகாவின் விளையாட்டுத் தனமான அன்பையும், எளிய அரசி வாழ்க்கையையும்; கடலைப் பார்த்துக்

கொண்டே காலங்கழித்த பெனலொபியின்வாழ்க்கையின் மனையாட்டிக்குரிய அமைதியையும்; ஆண்டிகனி, உடன் பிறந்தாளாகவும் மகளாகவும் கொண்டிருந்த தவருத பொறுமையும், அஞ்சாததும், நம்பிக்கை யற்றபடியிற்கூட பூண்டிருந்ததும் ஆன பத்தியையும்; இபிஜீனியாவின் மறியைப் போன்றதும் வாய்திறவாத தும் ஆன தலைதாழ்த்தலையும்; கடைசியாக, தன் கணவனைக் காப்பாற்றும் பொருட்டு, சாவின் இடும்பை வழியாக அமைதியாகச் சென்றவளான ஆல்செஸ்டிசு பிணக்குழி யினின்று மீண்டதின் மூலமாகக் கிரேக்கர்களின் ஆன்மாவுக்குத் தெளிவாக்கப்பட்ட ஆன்ம மீட்சியின் எதிர் பார்த்தலையும்—மக்கட் பிறப்பின்அழகு நம்பிக்கை ஆகிய இவற்றின் முதன்மையான நினைப்பின் முடிந்த வகைகளாகக் காணுமாறு எடுத்துக்காட்டாது ஒழிந்தேன்.

எனக்கு நேரம் இருந்தால், இந்த வகையான சாட்சியத்தை ஒன்றன்பின் ஒன்ருகப் பல்குவித்து உங்களுக்கு நான் சொல்லக்கூடும். சாஸரை எடுத்து, அவர் ஏன் நல்ல பெண்டிரது பழைய வரலாற்றை அன்றி, நல்ல ஆடவரது பழைய வரலாற்றை எழுதவில்லை என்பதைக் காட்டுவேன். ஸ்பென்சரை எடுத்து, அவருடைய மாயப் போர்வீரர்கள் எல்லாரும் சில வேளைகளில் ஏமாறியும் சில வேளைகளில் தோல்வியடைந்தும் இருக்கிருர்கள் என்பதையும்; ஆனல், எப்படி யூனுவின் ஆன்மா ஒருபோதும் மங்கவில்லை என்பதையும்; எப்படி பிரிட்டோமார்ட்டின் ஈட்டி ஒருபோதும் உடைபடவில்லை என்பதையும் உங்களுக்குக் காட்டுவேன். இவையன்றி, மிகப் பழைய காலங்களின் வெறும் புராணக் கற்பித்தல்களை எடுத்து, எப்படி அந்தப் பெரிய நாட்டினர்—அதாவது, மக்கட் பிறப்பினருக்கு விதிவிலக்குகளை ஏற்படுத்தியவர், தம் உறவினரால் அன்றி, எந்த நாட்டின் அரசி ஒருவரால் கல்வி கற்பிக்கப்படல் வேண்டுமென்று ஏற்பட்டிருந்ததோ—அப்போதைய நாட்டினருள் எல்லாரிலும் மிக்க அறிவுள்ள அந்தப் பெரிய நாட்டினர், தங்களது கடவுட் கல்வியின் உயிருக்கு ஓர் பெண் வடிவத்தைக் கொடுத்தார்கள் என்பதையும்; எப்படி, அவள் கையில், ஓர் குறியீடாக, நெய்யும் நூல்குழலை வைத்தார்கள்

என்பதையும்; எப்படி அந்த உயிரின் வடிவமும் பெயரும்—கிரேக்கர்களால் அவை மேற்கொண்டு நம்பி வணங்கப்பட்டபடியால்—சந்தனத் தழையாலாய முடியையும் மேகத்தாலாய கேடயத்தையும் கொண்டவளும், புலமையிலும் இலக்கியத்திலும் நாட்டு ஒழுக்கச் சிறப்பின் எடுத்துக்காட்டுக்களிலும் நீங்கள் மிக்க அருமருந்தாகக் கருதுவது எல்லாம் இன்று வரையும் உங்களுக்கு இருத்தல் எவளைப் பற்றிய நம்பிக்கையின் காரணமோ அவளும் ஆன அதீனவாக ஆயிற்று என்பதையும் நான் உங்களுக்கு விளக்கக்கூடும்.

சேய்மையில் உள்ளதும் கற்பனையானதும் ஆன இதில் அலைந்து பார்ப்பதை நான் நிறுத்துகிறேன். பெரும் புலவர்களும் உலகநடை யறிந்தவர்களும் ஆன இவர்களுடைய — இந்த விஷயத்தில் — பொருத்தமான சாட்சியத்திற்கு உரிய மதிப்பை மட்டும் கொடுக்கும்படி உங்களைக் கேட்கிறேன். இவர்கள், தங்கள் வாழ்க்கையின் பேருழைப்பில், ஆடவனுக்கும் மகளுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றிய உண்மையற்ற வெறும் காட்சி ஒன்றினல் தங்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தார்கள் என்று எண்ணக்கூடுமா என்று நான் உங்களைக் கேட்கிறேன். அதுவேயன்றி, அவை, உண்மையற்றதற்கும் வெறுமையானதிற்கும் தாழ்ந்தவை என்னலாம். ஏனெனில், ஒரு பொருள் நடக்கக் கூடியதானல், அஃது வெறுங் கற்பனையாய் இருந்தாலுங்கூட வேண்டப்படுவதாய் இருக்கும்; ஆனல், மகளிரைப் பற்றிய அவர்களது உயர் நோக்கம், நம் பொதுக் கருத்துப்படி, முழுவதும் வேண்டப்படாததாகும்; நாம் சொல்வதாவது, மகள் வழிகாட்டியாக இல்லாதிருப்பது மட்டுமே அன்றி, தனக்குத் தானே எண்ணிக் கொள்ளக் கூடியவள் அன்று என்றும் நாம் சொல்லுகிறோம். எப்போதும், மகனே, மேற்பட்ட அறிவாளியாக இருப்பான் என்றும், அவனே எண்ணுபவனகவும் ஆளுபவனகவும்,—உடல் வன்மையைப் போன்றே கல்வியிலும் சீர்தூக்குதலிலும் உயர்ந்தவன் அவனே என்றும்—நாம் கருதுகிறோம்.

இந்த விஷயத்தைப் பற்றி நாம் ஒரு வகையான முடிவுக்கு வரவேண்டியது முதன்மையானதல்லவா?

மேற் சொன்ன பெரியோர்கள் எல்லாருமா, அல்லது, தாமா தவறுடையவர்கள் ? ஷேக்ஸ்பியரும் ஈஸ்கயிலசும், டான்டேயும், ஹோமரும், நமக்குப் பாவைகளை அலங்க ரித்தல் என்பதை மட்டும் செய்தார்களா ? அல்லது, முடியும் என்றபோது, அநுபவம் ஆக்க முயன்ருல், எல்லா இல்லின்கண்ணும் முறைத் திரிபையும், எல்லா அன்பின்கண்ணும் அழிவையும் உண்டாக்கும் தன்மை வாய்ந்தவையும் வெறும் பாவைகளுக்குத் தாழ்ந்தவை யும் ஆன இயற்கைக்கு முரண்பட்ட வெற்றுக் கற்பனை களைக் கற்பித்தார்களா? இப்படி நீங்கள் கருதக்கூடு மாஞல், நமது நெஞ்சு, பொருள்களைப்பற்றி அறிவிக்கும் சாட்சியத்தை முடிவாக எடுத்துக்கொள்வோம். கிறிஸ்து சமயம் தொடங்கிப் பரவி, தூய்மையும் வளர்ச்சியும் பெரி தும் பொருந்தியிருந்த எல்லாக் காலங்களிலும், காத லிக்கு, அவளது காதலஞல் அடக்கமான பராமரிப்பு குறைவில்லாமல் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் அடக்கம் என்று சொல்வது ஏன் எனில், வெறும் ஆர்வ மும் உளத்தில் வழிபாடு செய்வது மட்டும் அன்றி, தன்னிடம் அன்பு பொருந்திய மகள் எவ்வளவு இளைய ளாய் இருப்பினும், அவளிடம் இருந்துதான் எல்லா உழைப்பிற்கும் வேண்டிய ஊக்கத்தையும் புகழ்ச்சியை யும் பரிசையும் மட்டுமே யன்றி, ஒன்றிற்கு மேற்பட்ட வழிதோன்றும்போதும், முடிவுக்கு வரக்கூடாத—எதிர்ப் படும் எந்த வகையான—சமயத்திலும் பலவகையிலும் உழைப்பின் போக்கையும் தான் பெறும் வகையில் அவன் முழுவதும் ஆட்பட்டிருக்கும் காரணத்திஞல்தான். போரில் குரூரமாய் இருத்தலும், மற்றக் காலத்தில் முறைதவறி இருத்தலும், இல்வாழ்க்கையில் தூய்மை யற்றும் தாழ்வடைந்தும் இருத்தலும் ஆகிய இவை எல்லாம், முதன்மையாக, இந்நாளில், பழைய வீரத்தி னுடைய ஒழுங்கு தப்பான வழியில் சென்றதும், அதன் பெருமை குறைந்ததும் ஆகிய இவற்றின் பயன்களாம். சமய முறையும் ஒழுக்க முறையும் காதல் முறையும் ஆகிய இவற்றின் நிலைப்புக்குக் காரணம், வீரத்தி னுடைய தொடக்கத்திலிருந்த தூய்மையும் வன்மையுமே ஆகும். அவ்வீரத்தின் முறைமை, நல்வாழ்க்கையைப்

பற்றிய அதன் எண்ணத் தொகுப்பின் முதலிலேயே, போர்வீரனுன ஓர் இளமகன், தனது காதலியின் கட்டளைக்கு—அஃது, தாறுமாருன ஓர் உள்ள நிலையின் கீழ் வந்த கட்டளையே ஆயினும்,—அதற்குக் கீழ்ப்படி தலையே மேற்கொண் டிருக்கிறது. இப்படி இதை மேற் கொள்வது ஏன் எனில், நன்ருய்க் கற்பிக்கப்பட்டதும் வீரத்தன்மை பொருந்தியதும் ஆன ஒவ்வொரு நெஞ் சத்தின் முதன்மையானதும் இன்றியமையாததும் ஆன ஏவுதல், தனது காதலிக்கு நேரும் முற்றுழைப்பாகும் என்பதையும்; எங்கே அந்த உண்மையான நம்பிக்கை யும் சிறையும் இல்லையோ, அங்கே எல்லாவகையான தாறு மாருனவையும் கொடியவையும் ஆன ஆசைகள் இருக் கும் என்பதையும்; அவளது இளமையின் ஒருமையான அன்புக்கு மெய்ம் மறந்து கீழ்ப்படியும் இந்த ஒழுக்கத்தில், மக்கட் பிறப்பினுடைய பலப்பல வன்மையின் தூய்மை யாக்கலும் அவனுடைய பலப்பல நோக்கங்களின் தொடர்ச்சியும் இருக்கிறது என்பதையும், அவ் ஆசிரியர் கள் நன்கு அறிந்த காரணத்தினுல்தான். அப்படிப்பட்ட கீழ்ப்படிதல் தகாதவர்களுக்குக் காட்டினுல் நலமாகவா வது மேன்மையுள்ளதாகவாவது இருக்கும் என்பதற்காக ஏற்படுத்தப்படவில்லை; ஆனுல், எந்த மேம்பாடுள்ள இளையவனும் அவன் நம்பக்கூடாத சாந்தமான அறி வுறுத்தலைக் கூறுகிறவளும், அல்லது, அவன் கீழ்ப்படியப் பின்வாங்குகிற — வழிபாட்டுடன் கூடிய — கட்டளையை இடுகிறவளும் ஆகிய எந்த மகளையும் நேசிக்க இயலா திருக்க வேண்டும் என்பதனுற்ருன். உண்மையில் நேர்மையாய் வளர்க்கப்பட்ட எவனுக்கும் அப்படி நேசித்தல் முடியாததொன்றே.

இதைப்பற்றி இனி எந்தப் புதிய முறையைக் கொண்டாவது நான் வற்புறுத்தப் போகிறதில்லை. என்ன இருந்திருக்கிறது என்பதைப் பற்றிய உங்க ளுடைய கல்வியினுலும், என்ன இருக்கவேண்டும் என் னும் உங்கள் உணர்ச்சியினுலும் அது உங்களுக்கு ஏற்கும் என நான் நினைக்கிறேன். போர்வீரன் ஒரு வனது கவசம் அவனுடைய காதலியின் கையால் கட்டப் படுவது கோலாகலமான வழக்கத்தின் வெறுந் தாறுமாறு

என்று நீங்கள் எண்ணக்கூடாது. அது, எஞ்ஞான்றும் நிலைபெற்ற ஓர் உண்மையின் ஒப்பாகும். அதாவது ஆன் மாவினுடைய கவசம் ஒரு மகளின் கையால் கட்டப்பட் டாலொழிய, அது ஒருபோதும் நெஞ்சத்தோடு இயைகிற தில்லை. அதை அவள் தளர்வாகக் கட்டியபோதுதான், ஆன்மாவினுடைய மானம் தவறுகிறது. . . .

இவ்வளவுமட்டும் காதலர்களினுடைய உரிமை களைப்பற்றி நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் நாம் பன்முறையும் ஐயப்படுவ தாவது, நமது வாழ்க்கை முழுவதிலும் மேற்சொன்ன உரிமை தொடர்ந்திருத்தல் தகுதியானதா என்பதேயாம். காதலன்-காதலியின் பால் அது சரியாயிருக்கும் என்றும், ஆனால், கணவன் - மனைவி என்னும் இவர்கள்பால் இங் ஙனம் இராதென்றும் நாம் நினைக்கிறோம். அதாவது, நாம் இன்னும் ஐயப்படுகிற அன்புடையாளும், நாம் இன்னும் கொஞ்சமாயும் தொலைவிலிருந்தும் அறிகிற பண்புடையாளும் ஆன ஒருத்திக்கு வணக்கமும் மென் மையும் வாய்ந்த இந்தக் கடமை உரியது என்றும், அவ் அன்பு முழுதும் கரையற்றபடி நமக்குச் சொந்தமாக ஆனபோதும், நமது வாழ்க்கையின் மகிழ்ச்சியை அப் பண்பினிடம் ஒப்புவிக்க நாம் அஞ்சவில்லை என்னும் படியாக அவ்வளவு நன்றாக அது ஆராய்ந்தும் பரி சோதித்தும் ஆன பிறகும், இந்தக் கடமையையும் வணக்கத்தையும் செலுத்த வேண்டியதில்லை என்றும் நாம் கருதுகிறோம். இது எவ்வளவு மானக்கேடாகவும் அறிவற்றதாகவும் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியவில்லையா? மணவினையானது, அதாவது, உண் மையான ஒரு மண வினையானது, ஒவ்வொரு போதைய உழைப்பு களைக்காத உழைப்பாகவும், ஓரோர் காலத்து அன்பு எஞ்ஞான்றும் நிலைபெற்ற அன்பாகவும் மாறி னதை உறுதிமொழிகொண்டு தெரிவிக்கிற ஒரு முத்தி ரையே ஆகும் என்று நீங்கள் உணரவில்லையா?

மகளினது இந்த வழிகாட்டும் தொழில் உண்மை யான ஒரு மனைவியின் கீழ்ப்படிதலோடு எப்படிப்பொருந் தும் என்று நீங்கள் கேட்கலாம்? அஃது ஒரு வழிகாட்டும் தொழிலே அன்றி முடிவுபடுத்தும் ஓர் தொழில் அன்று

என்பதினுலேயே அது பொருத்தம் உடைத்து. இந்தக் குணங்கள் எப்படிச் செவ்வையாய் வேறுபடுத்திக் காட்டக்கூடியன என்று நான் உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்ல முயல்கிறேன்.

ஒரு பால் மற்றதைக் காட்டிலும் உயர்வு என்றும், ஒரே வகையான பொருள்களை ஒத்துநோக்குவதைப் போலவும் சொல்வது காரணம் அற்ற ஓர் அறியாமை ஆகும். ஒன்றில் இல்லாதது மற்ருென்றில் இருக்கிறது. ஒன்று, மற்ருென்றை முடிக்கிறது, மற்ருென்றில் முடிக்கப்படுகிறது. அவை எதிலும் ஒருவகையாய் இல்லை. அவ் இருபாலின் மகிழ்ச்சியும் நிறைவும் ஒன்றுமட்டுமே கொடுக்கக் கூடியவற்றை, ஒன்றைக் கேட்டு, மற்ருென்று பெறுவதையே பற்றி நிற்கிறது.

அவர்களது வேறுபட்ட பண்புகள், சுருக்கமாகச் சொல்லுமிடத்து இவையாம்: ஆண்மகனது வன்மை இயங்குவது, மேற் செல்வது, பாதுகாப்பது; பெருமிதமாக, அவன் செய்பவன், ஆக்குபவன், காண்பவன், காப்பாற்றுபவன்; அவனுடைய அறிவு தொடர்ந்த எண்ணப்போக்கிற்கும் புதுவன புனைதற்கும் ஏற்றது. அவனது உரம் துணிவிற்கும், எவ்வெவ்விடத்து போர் முறை ஆகுமோ, அவ்வவ்விடத்துப் போரிற்கும், எவ்வெவ்விடத்துக் கைப்பற்றுதல் இன்றியமையாததோ, அவ்வவ்விடத்துக் கைப்பற்றுவதற்கும் ஆகிறது. ஆனல் மகளின் வன்மையோ போரிற்காக ஏற்பட்டதன்றி, ஆளுதற்காகவே ஆயது. அவளது அறிவு புதுவது புனைவதற்காகவாவது, அல்லது, ஆக்குவதற்காகவாவது, அல்லாது, இனிமையான ஒழுங்குபடுத்தற்கும் முடிவுபடுத்தற்கும் ஆகிறது. பொருள்களினுடைய பண்புகளையும் அவற்றின் உரிமைகளையும் அவள் காண்கிருள். அவளுடைய பெரிய தொழில், புனைந்து கூறுதல். அவள் வழக்கில் நுழைகிருள் இல்லை. தவறுதல் இல்லாமல் வழக்குத் தீர்ப்பவள் ஆகிருள் அவள். அவளது தொழில் முறையால், அவள் எந்தவிதமான துன்பத்தினின்றும் கெடுதல் நேரிடக்கூடிய நிலைமையினின்றும் காப்பாற்றப் படுகிருள். ஆண்மகன், மறைவற்ற உலகத்தில் தனது முரடான வேலையில் பலப்பல அபாயத்தையும் பரிசோ

தனையையும் எதிர்ப்பட வேண்டியிருக்கிறான். ஆகையால் அவனுக்கே உள்ளன இழத்தலும், குற்றமும், நேர்ந்தே தீருகிற தவறுதலும்; பலதடவை அவன் புண்படுவான், அல்லது, அடக்கப்படுவான், அல்லது, தவறான வழியில் செலுத்தப்படுவான்; எப்போதுமே கன்னெஞ்சன் ஆக்கப்படுகிறான். ஆனால், இவை எல்லாவற்றினின்றும் மகளினை அவன் காப்பாற்றுகிறான். அவளால் ஆளப்படுகிற அவனது வீட்டில், அவளே அழைத்தால் ஒழிய எவ்வித அபாயமும்,எவ்விதக் கெட்ட எண்ணமும், தவறுதலோ அல்லது குற்றமோ ஆகிய இவற்றினுடைய எவ்விதக் காரணமும் நுழையாது. இதுதான் வீட்டினது மெய்இயற்கை. வீடு அமைதிக்கு உறைவிடம். எல்லா வகையான கெடுதியினின்றுமே அன்றி, பற்பலவகையான பேர்அச்சம், ஐயம், மாறுபாடு ஆகிய இவற்றினின்றும் காக்கின்ற களைகண் ஆகும் அது. வெளி வாழ்க்கையின் கவலைகள் அதற்குள் நுழைந்தபோதும், வெளி உலகத்தின் பொருத்தமற்ற மனதுடையதும், தெரியாததும், அன்பு செலுத்தப்படாததும், அல்லது, இகல்உடையதும் ஆன சமுகத்தைக் கணவனாவது மனைவியாவது வெளிவாயிலைக் கடந்து உள்வர விட்டால், அது வீடு என்கிற பண்பை இழக்கிறது; அப்போது உங்கள் வீடு, நீங்கள் கூரை வேய்ந்ததும் நெருப்பு எரியவிட்டதும் ஆகிய வெளி உலகத்தின் ஓர் சிறிய பகுதியாகிறது. அது ஒரு தூய்மையான இடமாகவும்,ஓர் கன்னிமாடமாகவும், அன்போடு ஏற்றுக்கொள்ளுமவர்கள் தவிர வேறெவரும் தம் எதிரில் வரக்கூடாதிருக்கிற வீட்டுத் தெய்வங்களால் காக்கப்பட்டிருக்கிற இல்வாழ்க்கையின் ஓர் கோயிலாகவும் இருக்கும்வரையில்—அது இந்தப்படி இருக்கிறவரையிலும், கூரையும் நெருப்பும், சிறந்த நிழல் வெளிச்சம் ஆகிய இவற்றின் ஒப்புவமைகளாக, அதாவது, ஒரு பாலை நிலத்துள்ள பாறை நிழலைப்போலவும், கொதிக்கும் கடலில் தடுமாறுகிறவர்களுக்குத் தெரிகிற கலங்கரை விளக்கமே போலவும் அது இருக்கிறவரைக்கும்—அது வீடு என்பதன் பெயரை நிலைநாட்டுதலும், வீடு என்கிற புகழைத் தகுதியாக்குதலும் செய்கிறது.

எங்கெங்கே உண்மையான ஓர் இல்லாள் இருக்கிருளோ, அங்கங்கே அவளைச்சுற்றி எப்போதும் இவ் வீடு இருக்கிறது. விண்மீன்கள் மட்டுமே அவளது தலைக்கு மேல் இருக்கலாம். இரவில் குளிர்ந்த புல்லின்கண் உள்ள மின்மினிப் புழுவே அவளது காலின்கீழுள்ள நெருப்பாய் இருக்கலாம். ஆனால், அவள் எங்கு இருப்பினும் அங்கே வீடு உளது. பெருந்தன்மை வாய்ந்த ஓர் மடந்தைக்கு, அது, அவளைச் சுற்றி வெகுதூரம், தேக்கினுல் மாடியமைத்ததைப் பார்க்கிலும், சாதிலிங்கத்தால் நிறம் பூசப்பட்டதைப் பார்க்கிலும், மிக நன்றாகப் பரவி வேறு வகையில் வீடு அற்றவர்களுக்கு அதன் அமைதியான வெளிச்சத்தை மிக்க தூரம் உதிர்த்துக் கொண்டு பரவி நிற்கிறது.

பெண்பாலின் உண்மையான இடமும் ஏவலும் இது என்று நான் நம்புவதைப் போலவே, நீங்களும் ஒத்துக் கொள்ள மாட்டீர்களா? இதை நிறைவேற்றும் பொருட்டு அவள்—மக்கட் பிறப்பைப் பற்றிக் கூறக் கூடிய வரையில்—தவறுதல் செய்யக்கூடாதவளாக இருத்தல் வேண்டாமா? அவள் ஆளுகிறவரையில் எல்லாம் சரியாய் இருத்தல் வேண்டும். அல்லாக்கால், ஒன்றும் சரியாய் இராது. அவள், நிலைபெற்றதும், மாசடையாததும் ஆன நன்மை உடையவளாய் இருத்தல் வேண்டும்; வாய்க்கப்பெற்றதும் தவறுதல் இல்லாததும் ஆன நல்லறிவுள்ளவளாய் இருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட அறிவானது, தன்னலம் கருதுவதற்காக அன்றி, தன்னலம் விடுவதற்காகவே வேண்டியிருக்கிறது. தனது கணவனுக்குமேல் தன்னை உயர்த்திக் கொள்வதற்காக அன்று அவ்வறிவு; மற்று, அவனது பக்கத்தைவிட்டு, அவள் ஒருபோதும் நீங்காமல் இருக்கும்படி உதவுவதற்கு ஆகிறது அது. அவமதிப்பும் அன்பற்றதும் ஆன பெருமிதத்தினுடைய குறுகிய உள்ளத்தோடு கூடிய அறிவையன்றி,—முடிவற்ற விதம் பொருத்தம் படக் கூடியதால்—முடிவற்ற விதம் மாறுதல் எய்துகிற பணிவுடைய வேலையின் ஆர்வம் நிறைந்த அமைதியோடு கூடியிருக்கிற அறிவையே இங்குக் குறிக்கிறேன். பெண்பாலின் உண்மையான மாறுந்தன்மை இதுவே.

...இந்தப் பொருளில், நொய்ம்மையானதும், நடுங்குகிற தும் ஆன ஓர் இலையால் உண்டாகிற நிழலைப் போல மாறும் தன்மையுடையவள் அல்லள் மகள். ஆனல், தான் படுகிற எந்தப் பொருளின் எந் நிறத்தையும் தன்மேற் கொண்டு, அவ்வப்பொருளை அவ் அவ்வழியில் விளக்குவிக்கும் பொருட்டு ஒழுங்கும் அமைதியும் ஆன கூறுகளாகப் பல்கும் தன்மையை உடைய ஒளியைப் போன்று மாறுந்தன்மை வாய்ந்தது அன்றே பெண்மை!

2

பெண்பாலின் தொழிலும் செல்வாக்கும் எவ்விதமாய் இருத்தல் வேண்டும் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க இவ்வளவு தொலை முயன்றேன். இப்போது, இரண் டாவதாக, அவளை இவற்றிற்குத் தகுதியாக்குவதற்கு எவ்விதமான கல்வி வேண்டும் என்பதைப் பற்றி நாம் ஆராய்வோமாக.

இது அவளது தொழிலையும் உயர் நிலையையும் பற்றிய உண்மையான ஓர் முடிவாக இருக்கிறது என்று நீங்கள் கருதினல், அவளை அத்தொழிலுக்குத் தகுதி யாக்குவதற்கும் அந்த நிலைமைக்கு அவளை உயர்த்துவ தற்கும் வேண்டிய கல்வி முறையைத் தொடர்பு படுத்திக் கூறுவது ஓர் அரிய செய்கை அன்று.

அவளைப் பற்றிய நமது கடமைகளில் முதன்மை யானது—எந்த ஓர் அறிவாளியும் இதைப்பற்றி இப் போது ஐயப்படுவதில்லை—அவளது உடல்நலத்தை உறுதிப்படுத்தற்கும், அவளது அழகை நிறைவுபடுத்தற் கும் ஆகும் உடற்பயிற்சியும் பழக்கமும் அவளுக்கு அடை விப்பதே ஆகும். அவ் அழகின் சிறந்த செம்மையானது, உடல் இயக்கம், மென்மையான வன்மை ஆகிய இவற் றின் பேர் ஒளியில்லாது அடையாது என்பது தேற்றம். அவளது அழகை நிறைவுறச் செய்து, அதன் செல் வாக்கை அதிகப்படுத்துவதையேதான் முடிந்த நோக்க மாகக் கொள்ளுதல் வேண்டும். என்னை? அவ் வழகு ஒருபோதும் வேண்டிய அளவுக்கு மேற்பட்ட செல்வாக் குள்ளது என்ருவது, அதன் தூய்மையான ஒளியை வேண்டுவதற்குமேல் அதிகமான தூரம் சிந்துகிறது

என்ருவது கருதும்படியாய் இராதாகையினுல்தான் அத் தொழில் முடிவாகிறது. எனினும், அழகை உண்டாக் குவதற்கு, பல்வகையான உடல் இயக்க உரிமைமட்டும்—அதற்கு நேரான நெஞ்சியக்க உரிமையும் இல்லாது—பயன் படாது என்பதை உடன் நினைத்தல் வேண்டும்....

நெஞ்சியக்கமாகிய உணர்ச்சியைக் குறிக்கும்போது, அவை உயிர் வளர்ச்சிக்கு உதவுவனவாய் இருந்தால், அவை களிப்பு உணர்ச்சியாக இருத்தல் வேண்டும். ஓர் சிறுமியை மகிழ்ச்சி அடையச் செய்யாதிருந்தால், அவளைச் சாயல்பெறச் செய்யலாம் என்று கருதாதே யுங்கள். ஒரு நல்ல சிறுமியின் இயற்கைக்குத் தடங்க லாக வைப்பதற்கு வேண்டிய ஒரு கட்டேனும், அவளது அன்பு, முயற்சி ஆகிய இவற்றைப் பற்றிய இயற்கை அறிவுப் பதிவுகளைத் தடுத்தற்கு வேண்டிய ஒரு தடங்க லேனும் அவளது உறுப்புக்களில் அழியக்கூடாதபடி கடினமாக எழுதப் பெருமல் இருக்கும் வண்ணம் கிடை யாது. புனிதமான கண்களினின்றும் ஒளியையும், அறத் துறை மேற் கொள்ளும் நெற்றியினின்றும் இனிமையை யும் அஃது ஒழிப்பதால், அந்தக் கடினம் மிக்க வருத்தம் தரக் கூடியதாய் இருக்கிறது.

இவ்வளவும் வழி, இப்போது முடிவை நோக்குங்கள். இனிமையான ஞாபகங்களும் அவ்வளவு இனிமையான எதிர்கால விளைவுகளும் பொருந்தி விளங்கும் ஒரு பெண் ணின் முகமாகிய பேரழகே முடிவாம்.

மகிழ்வும் உபயோகமும் ஆன ஆண்டுகளின்—அதா வது, இன்பமான உளப்பதிவுகள் நிறைந்த ஆண்டு களின் நினைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு மேம் பாடு உடைய அமைதியே ஓர் பெண்பாலின் முகத்தி னுடைய நிறைவுற்ற விருப்பந் தரும் பண்பாகிறது. மேலும், எப்போதும் மாறுதலும், உண்டாக இருக்கும் தேர்ச்சியும் நிறைந்திருக்கிற இன்னும் உயரிய மேம் பாடுடைய சிறுபிள்ளைத்தனத்தோடு இவ் அமைதி சேர்வதினின்றும் அந்த நிறைந்த இன்பம் உண்டா கிறது. இன்னும் உயர்ந்த பொருள்களை அடையவும் அளிக்கவும் இருக்கிற நம்பிக்கை காரணமாக ஒரே

சமயத்து அடக்கமும் பொலிவும் உள்ள—அதாவது, எப்போதும் அலர்ந்து கொண்டிருக்கிறது என்னும்படியான ஒரு சிறுபிள்ளைத்தனமே மேலே குறித்தது. அந்த எதிர் கால விளைவைக் குறிக்கும் தேர்ச்சி யாரிடம் எப்போதும் குடிகொள்ளுகிறதோ அவருக்கு மூப்பேயில்லை.

இப்படியாக, முதலில் அவளுடைய உடற்கூட்டை நீங்கள் உருப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். பிறகு, அவள் பெற்ற உடல்வன்மைக்குத் தகுந்தபடி, நடுவு நிலையைப்பற்றிய அவளது உளச்சார்புகளை உறுதிப் படுத்தற்கும், அன்பை அடிப்படையாகக் கொண்ட அவளது அகத்தின் சூழ்ச்சியை நுணுகிய தூய்மை ஆக்குவதற்கும் உதவும் கல்வியாலும் எண்ணங்களாலும் அவள் அகத்தை நீங்கள் நிறைக்கவும் தணிக்கவும் வேண்டும்.

ஆடவரது தொழிலை அறிந்து கொள்வதற்கும்-தானும் அதைச் சிறிதாவது இயற்றித் துணை நிற்பதற்குங்கூட வேண்டியிருக்கும் பலவகைப்பட்ட கல்வியை அவளுக்குக் கற்பித்தல் வேண்டும். எனினும், கல்வி என்பதாகவாவது, அவள் தெரியக்கூடிய ஒரு பொருளாக அக்கல்வி இருக்கிறதாகவாவது, அல்லது, இருக்கக்கூடும் என்றுவது இல்லாமல், உணர்வதற்கும் நடுத்தீர்ப்பதற்கும் மட்டுமே ஆக, அக்கல்வியை அவளுக்குக் கொடுத்தல் வேண்டும். பல மொழிகளோ அல்லது ஒன்றே அவள் அறிகிறுள் என்பது அம்மொழிகள் அவளுக்குப் பெருமையையோ, அல்லது, நிறைவையோ தரும் என்று கருதும் வகையில் பெரிய விஷயம் அன்று; ஆனால் விருந்தினர் ஒருவருக்கு அவள் ஈரங்காட்டுவதற்கும், அவருடைய மொழியின் இனிமையை அவள் அறிவதற்கும் அவளைத் தகுதியாக்குகிற வகையில், அது மிகவும் கவனிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. குறித்த ஓர் அறிவு நூலையாவது, அல்லது, மற்றொன்றையாவது அவள் அறிதல் வேண்டும் என்பது, அவளது பெறுமானத்திற்கும் மேம்பாட்டிற்கும் ஆக வேண்டப் படுவதில்லை; ஆனால், நேர்மையான எண்ணப் பழக்கத்தில் அவள் பயிலவேண்டுதலும்; இயற்கையின் கட்டுப்

பாடுகளின் பொருளேயும், விலக்க வொண்ணுமையையும்' இனிமையையும் அவள் அறிந்து, கரையற்ற கடலின் பாங்கர் கற்களேப் பொறுக்கும் குழந்தைகளாகத் தங்களே எஞ்ஞான்றும் கருதும் உயர்ந்த அறிவாளிகளும் வன்மை யாளர்களும் மட்டுமே இறங்கக்கூடிய அந்த அரிய (வருத்தம் தரும்) தாழ்வு என்னும் பள்ளத்தாக்கின் வெளிவாயிலே அடையும் வரைக்குமாவது, கல்விப் பேற் றின் எந்த ஒரு பாதையூடாவது சென்று பார்த்தலும்—ஆகிய இவை முதன்மையாக வேண்டப்படுவன ஆகும். எத்தனே நகரங்களின் வைப்புக்களே அல்லது, எத்தனேப் பெருஞ்செயல்களின் நாட்களே, அல்லது எத்தனேப் புகழாளர்களின் பெயர்களே அவள் அறிகிருள் என்பது பயனற்றதே ஆகும். கல்வியின் நோக்கம் ஒரு மடந்தையை ஓர் அகராதியாக மாற்றுதல் அன்று; ஆனுல், அவள் படிக்கிற வரலாற்றுக்குள் தனது முழு ஆன்மவிளக்கத்தோடும் அவள் நுழைந்து பார்க்கவும்; தனது ஒளி பொருந்திய உளக்காட்சியில் அதன் போக் குக்களே உயிருள்ளன என்னும்படி வடிவுபடுத்திப் பார்க்க வும்; வரலாறு கூறுபவன் பலப்பல தடவை தன் தர்க்க முறையால் மறைத்துச் சொல்லுகிறதும், தன் ஒழுங்கு படுத்தும் முறையால் பிரிவுபடுத்துகிறதும், ஆன இரக்கம் தரும் நிலேத்தொகுதிகளேயும் வியப்புத்தரும் தொடர்பு களேயும் தனது நுண்மையான இயற்கை அறிவால் கருதித் தெளியவும் அவள் கற்பிக்கப்படல் வேண்டியது பெரிதும் இன்றி யமையாதது ஆகும்; கடவுளரது பரிசைக் கொண்டு மறைந்திருக்கும் நடுவு நிலேயை வகைப்படுத்திக் காட்டுதலும், ஒறுத்தலேத் தவறுதலோடு பொருத்துகிற ஊழ் நெய்யும் நெருப்பால் ஆய இழை களே இருளூடு பார்க்க முயலுதலும் அவள் செய்ய வேண்டியவையே. ஆனுல் எல்லாவற்றிலும் முதன்மை யாக, அவள் அமைவோடு வாழ்கிற இமைகள் கழியும் போதே, மாற்ற முடியா வண்ணம் முடிவுபடுத்தப்படுகிற இந்த நிகழ்கால வரலாற்றைப் பற்றியும்; அவளால் இப்போது சரியானபடி மட்டும் புலம்பப்பட்டால், இனி ஒருபோதும் திரும்பி நேரமுடியாததாகிய நிகழ்காலத்திய பேர் இடுக்கணேப் பற்றியும்—தனது இரக்கத்தின்

வரம்புகளை விரிவுபடுத்த அவள் கற்பிக்கப்படல் வேண்டும். அவளது பார்வைக்குப் புறம்பில் இருப்பதால் ஒரு வகையிலும் உண்மையற்ற தல்லாத வருத்தத்தைப் படுபவர்களின் முன்பு அவள் நாணுளும் போவதானுல் அவள் உளத்திலும் ஒழுக்கத்திலும் எந்த வகையான மாறுதல்கள் உண்டாகும் என்பதை நினைத்துப் பார்ப்பதில் அவள் தன்னைப் பயில்வித்தல் வேண்டும். அவள் வாழ்வதும் அன்பு செலுத்துவதும் ஆகிய சிறிய உலகம், கடவுள் வாழ்வதும் அன்பு செலுத்துவதும் ஆகிய உலகத்தை நோக்க எவ்வளவு ஒன்றுமில்லாதிருக்கிறது என்பதை ஒருவாறு அறிய அவள் கற்பிக்கப்படல் வேண்டும்;—அவளது கடவுள் வணக்கம், அது குறிக்கிறவர்களின் எண்ணிக்கையை நோக்கி வலிவு கொள்ளாதபடியும்; அது, அவளது கணவன் அல்லது குழந்தை ஆகிய இவர்களின் சிறு போதைய நோய்தீர்தலுக்கு ஆகும்போது இருப்பதைக் காட்டிலும், தங்கள் மீது அன்பு செலுத்த எவரும் இல்லாத பெருங்கூட்டத்தினருக்காகவும் திக்கற்றவர்களும் கொடுமைக்கு ஆட்பட்டவர்களும் ஆகிய எல்லாருக்குமாகவும் அது சொன்னபோதும், அதிகச் சோர்வுற்றதாக இல்லாமற்படியும்—இருக்கமுயல, அவள் அச்சத்தோடும் அன்போடும் கற்பிக்கப்படல் வேண்டும்.

இவ்வளவு தொலை உங்களது கருத்தொற்றுமையைப் பெற்றிருக்கிறேன் என்று நான் நினைக்கிறேன்; ஒருகால் நான் எதைச் சொல்லவேண்டும் என்று நம்புகிறேனே, அதை நீங்கள் ஏற்காது போகலாம். பெண்டிர் தமக்கு இடுக்கண் விளைக்கும் கல்வி ஒன்றுளது. அவர்கள் அதை அச்சமற்றுத் தொடாதிருக்கும் ஆறு நினைப்போடிருப்பார்களாக—அது சமய மதக் கோட்பாட்டுக் கல்வியே ஆகும். ஒவ்வொரு படியும் முறைவகுத்துச் சொல்லக் கூடியதாக இருக்கிற கல்வித் துறைகளின் வாயிலின்கண் தங்கள் அறிவின் வன்மையை ஐயுற்று நிற்கும்படியான அவ்வளவு பணிவுடையவர்கள்—சிறந்த பெரியோர்கள் நுழைய நடுங்கினதும், சிறந்த பேரறிவாளர்கள் தவறியதும் ஆன— அந்தக் கல்வியில் நுழையத் தாங்கள் தகுதியற் றிருப்பதைப்பற்றி ஓர் எண்ணங்கூடக் கொள்ளா

மல், அதில் தலைகீழாக முழுகுவது புதுமையினும் ஓர் இழிவான புதுமையாக இருக்கிறது. தங்களிடத்துள்ள பல்வகைத்தாய தீமையையும், தவறுதலையும், செருக்கையும், வெடுவெடுப்பையும், குருட்டறியாமையையும், கடவுளுக்கு ஏற்பிக்கும் பொருட்டு, பிசினலாய ஒரு நாற்றக்கத்தையாக, அவர்கள் கவலையற்றும் மேம்பாடுற்றும் கட்டுவது ஓர் புதுமையே. தாங்கள் பெரும்பான்மையும் அறியக்கூடாத ஒன்றை முதலில் கண்டித்துப் பேசுவதும், கடவுளது தவிசின் படிகளை — அவரோடு தாங்களும் அதைப் பங்கிட்டுக் கொள்ளுமாறு—பிராண்டி ஏறி, தங்கள் ஆண்டவனிடம் தங்களை ஏற்பிக்க நினைப்பது, வடிவுகொண்ட அன்பாக இருக்குமாறு பிறந்த உயிர்கள் பால், புதுமையே. மனைவாழ்க்கையின் கலக்கத்தின் உரிய பகுதிகளாக நிலைத்த தங்கள் மனப் பழக்கங்களின் பால், மக்களுக்கு ஆறுதலைத் தந்தவரின் அருளால் தாங்கள் ஏவப்பட்டார்கள் என்பதும்; கிறிஸ்து சமயம் வீட்டுத் தெய்வங்களாகக் கருதும் மனையாட்டிகளைத் தங்களுக்குரிய விகார விக்கிரகங்களாக, அதாவது, தங்கள் எளிய மனப்போக்கின்படி அலங்கரிப்பதற்காகும் சமய மரப் பாச்சிகளாக, அவர்கள் அஞ்சாது மாற்றுவதும்—புதுமையினும் புதுமையே; அவை தங்களால் உடைபட்டால் உண்டாகும் கூக்குரலைத் தாங்கள் பொறுக்கமுடியாது என்று கருதி அவர்கள் கணவர்கள் வருத்தமுறும் ஓர் இகழ்வோடு அவற்றினின்றும் தங்கள் முகத்தைத் திருப்பிக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

இந்த ஒன்று நீங்கலாக, மற்றவகைப் படிப்பின் பொருளிலும் வழியிலும் ஒரு பெண்ணின் கல்வி ஒரு பையன் கல்வியைப் போலவே இருத்தல் வேண்டும். ஓர் பெண், எந்தக்குடியில் பிறப்பினும், அக்குடி மரபுப்படி அவளது கணவன் தெரிந்திருக்கக் கூடியது எதுவோ அதை அவளும் தெரிந்திருத்தல் வேண்டும். ஆனல் அவள் அதை வேறுவகையாகத் தெரிந்திருத்தல் வேண்டும். ஆடவனுடைய தொழிலைப்பற்றிய கல்வி அடிப்படை பெற்றதாகவும் வளர்ச்சிக் குரியதாகவும் இருத்தல் வேண்டும். மகளினுடைய கல்வி பொதுமையானதாயும் நாளும் பயன்படுவதன் பொருட்டுத் தேறியதாயும்

இருத்தல்வேண்டும். நிகழ்கால உபயோகத்திற்காக, பெண்பாலர்தம் கல்விமுறையைப் போன்ற ஓர் வகையில் ஆடவர்கள் பொருள்களைக் கற்பதும், பிறகு பொது மக்கள் ஊழியத்திற்கு மிகத் தகுதியாக இருக்கும் கல்வித் துறைகளில் தங்கள் உளவன்மைகளை ஒழுங்குபடுத் தற்கும் பழக்குவதற்கும் பயில்வதும் பலவாற்ருலும் சரியானதாக இல்லாதிருக்கும் என்பதில்லை. ஆனுல், மேலோட்டமாகப் பேசும்போது, ஆடவன் ஒருவன் தான் கற்கிற எந்த மொழியையாவது கல்வித் துறையை யாவது ஐயந்திரிபின்றி அறிந்திருத்தல் வேண்டும். ஆனுல் ஒரு மகள், அதே மொழியையாவது அதே கல்வித் துறையையாவது அவளுடைய கணவனது இன் பங்களிலும் அவனது சிறந்த நண்பர்களின் இன்பங்களி லும் ஒத்துணர்வு செலுத்த அவளைத் தகுதியாக்கும் அம்மட்டே தெரிதல் வேண்டும்.

என்ருலும், கல்வியில் அவள் செல்லுகிற வரையில், நுண்மையான திருத்தத்தோடு கற்றல் வேண்டும் என்பதைக் கவனியுங்கள். முதற் கல்விக்கும் மேலோட்ட மான கல்விக்கும்—அதாவது, ஓர் உறுதியான தொடக்கத் திற்கும் ஒரு நொய்ம்மையான மேலோட்டத்திற்கும் அகன்ற வேறுபாடு உண்டு. ஒன்று எவ்வளவு கொஞ்சம் எனினும், அதை நன்ருகத் தான் தெரிந்திருப்பதால், எப்போதும் தன் கணவனுக்கு அவள் உதவி செய்தல் கூடும். தனக்கு அரை வாசியே தெரிந்தது ஒன்ருலும், தான் மாறுபாடாகத் தெரிந்ததனுலும் அவனை அவள் அலைக்கழிக்கத்தான் செய்வாள்.

ஒரு பெண்ணினுடைய படிப்பிற்கும் ஒரு பைய னுடைய படிப்பிற்கும் வேறுபாடு இருக்கவேண்டுமானுல், இருவரில் பெண்ணின் அறிவு விரைவாக முதிர்கிற தாகையால், ஆழ்ந்தவையும் பெரியவையும் ஆன கல்வி களில் அவள் முன்னரே பயில்ப்படல் வேண்டும் என்றும்; அவளது இலக்கியத் தொகுதி—அவளது அறிவின் இயல்பான கூர்மையோடும், சூழ்ச்சியான விரைவோடும், பொறுமையும் கவலையும் ஆகிய பண்புகளைச் சேர்க்கும் பொருட்டும்; அவளை உயர்வும் தூய்மையும் ஆன

எண்ணத்தின்பால் இருத்திவைக்கும் பொருட்டும்—மேலோட்ட மானவையாக இல்லாது ஆழ்ந்தனவாக இருத்தல் வேண்டும் என்றும் நான் சொல்ல வேண்டுகிறேன். நான் இப்போது நூல்களைத் தெரிந்தெடுப்பதைப் பற்றிக் கூறவரவில்லை; ஆனால், நூற்கூடத்திலிருந்து வரும் நூற்கட்டிலிருந்து அவிழ்த்து எடுக்கப்படுகிற—பேதைமை என்னும் ஊற்றிலிருந்து இப்போது தான் எழுந்த நொய்ம்மையாகிய நுரையால் நனைந்த—நூல்கள் அவளது மடிமீது குவிந்து போகாதிருக்கும்படி பார்த்துக் கொள்வீர்களாக.

அல்லது, அவை, உத்தியின் ஊற்றிலிருந்து தோன்றினாலுங்கூட, வேண்டப் படாதவையே ஆகும்; ஏனெனில் (நாவல் என்னும்) கற்பனைக் கதைகளைப் படித்தற்கு எழும் கெட்ட வேட்கையைப் பற்றிக் கூறுமிடத்து, நாம் அஞ்சவேண்டியது ஒரு கதையின்கண் உள்ள இழிந்த விஷயம் அன்று. மற்று, அதன் மிக முறுக்கிய நயமேதான். மிக எளிய கட்டுக் கதையானது, சமயச் சார்பான கிளர்ச்சியைத் தரும் இலக்கியத்தின் தாழ்ந்த வகைகளைப் போல அவ்வளவு மதிமயக்கம் தருவதன்று; மிகக் கெட்ட புனைந்துரை ஒன்று, பொய் வரலாற்று நூல், பொய்த் தத்துவநூல், பொய் அரசியற் கோவைகள் ஆகிய இவற்றைப்போல, அவ்வளவு பாழ்படுத்தக் கூடியது அன்று. ஆனால், மிக நல்ல கதை ஒன்றேயும், மன எழுச்சி உண்டாக்கும் அதன் பண்பால், வாழ்க்கையின் பொதுவகையின் பாற்பட்ட ஒரு வழியை நயமில்லாமலும், நாம் ஒருபோதும் நடந்துகொள்ள வேண்டியிராத காட்சிகளில் பயனற்ற நட்பைக் கோரும் நிலைபெற்ற வேட்கையை மிகுதிப்படுத்தலும் செய்வதால், அது கேடுநிறைந்ததாக ஆகிறது.

ஆகையால், நல்ல கதைகளைப்பற்றி மட்டுமே நான் கூறுகிறேன். நமது இந்நாளைய இலக்கியம் அவ்வண்ணமான நூல்களில் சிறந்து பெருகி இருக்கிறது. சரியானபடி பார்க்கப் பட்டால், இந்நூல்கள் ஒழுக்கத்தின் பெரும்படியான அமைப்பும் ஒழுக்கத்தின் நுட்பமான முதற்பொருள்களும் ஆகிய இவற்றைப் பற்றிய விரிவுரைகளே

ஆகும். ஆதலான், அவை போற்றத்தகுந்த பயன் உள்ளவைகளாக, அதாவது, மக்கள் இயற்கையை அதன் முதற்பகுதிகளில் கருதும் பாடங்களாக இருக்கும். ஆனால், இந்தப் பயனை நான் பெரிதும் பாராட்ட வில்லை. ஏனெனில், இந்தப் பயனை நிறைவேற்றத் தம்மைத் தகுதியாக்குவதற்கு வேண்டியிருக்கும் ஊக்கத்தோடு அவை படிக்கப்படுவதில்லை. ஆதலின் அவை வெகுவாய் இயற்றுகிற உயர்ச்சி, படிப்பவரில் ஈரமுள்ளவள் ஒருத்தியின் ஈகையையும், கொடியவள் ஒருத்தியின் அழுக்காற்றினையும் ஒருவாறு விரிவுபடுத்தலே ஆகும். ஏனெனில், ஓர் வரலாற்றினின்று ஒவ்வொருத்தியும் அவளவள் உள்ளநிலைமைக்குத் தகுந்த உணவையே அன்றோ சேகரிப்பாள். இயற்கையிலேயே செருக்கும் பொறாமையும் உடையவர்கள், ஆசிரியர் தாக்கரேயிடத்தினின்று, மக்களை இழிவு படுத்தவும், இயல்பாக இளகிய நெஞ்சுடையவர்கள் மக்களைப்பற்றி வருத்தப்படவும், மிதப்பான உள்ளம் உடைய இயல்பினர் நகையாடவும் கற்றுக் கொள்ளுவார்கள். அதைப் போன்று, நாம் முன்பு மங்கலாய்க் கருதிய மக்களைப்பற்றிய உண்மை ஒன்றை மிகத் தெளிவாய் நம் முன்னிலையில் கொண்டு வருகிற உபயோகமான ஓர் வன்மை நாவல்களில் இருக்கலாம். ஆனால், சொல்லுவதை எவ்விதத்திலாயினும் வடிவு படுத்தற்குத் தூண்டுதல் அவற்றின்கண் மிகப் பெரியதாய் இருப்பதால், பல தடவை, புனைந்துரையில் வல்ல ஆசிரியர்களும் அத்தூண்டுதலைத் தடுக்கிறார்கள் இல்லை. இன்னும், நமது கொள்கைகள் பெரிதும் வெம்மையாகவும் ஒற்றைச் சார்பாகவும் ஆக்கப்படுகிறதினால், அவற்றின் உயிர் உரம் பெரும்பாலும் நல்லதற்காக அன்றிக் கெட்டதற்காகவே செலுத்தப்படுகிறது.

எவ்வளவு கதைப்படிப்பினுக்கு நாம் இணங்க வேண்டும் என்பதைப் பற்றித் தீர்மானத்திற்கு வருவதைக் குறித்த முயற்சியை நாம் ஓர்மிக்காமல், கதையோ கவியோ வரலாறோ எதைப் படித்தாலும் அதில், இல்லாதவற்றிற்கு அன்றி, அவற்றில் உள்ளவற்றிற்காகவே அது தெரிந்தெடுக்கப்படுதல் வேண்டும் என்னும் இதை மட்டுமாவது நான் ஐயந்திரிபு இல்லாமல் வற்புறுத்த

விரும்புகிறேன். ஒரு வன்மையுள்ள நூலில் இவ்விடத்திலும் அவ்விடத்திலும் ஆகத் தோன்றுகிறதும், அல்லது, அதில் மறைந்து கிடக்கிறதும், தற்செயலாயும் சிதறியும் இருக்கிறதும் ஆன தீமையானது பெருந்தகை வாய்ந்த ஒரு பெண்ணிற்கு ஒருபோதும் எவ்வகைத் தீங்கும் தராது. ஆனல், ஓர் ஆசிரியனது வெறுமை அவளை ஒடுக்கிவிடும். அவனது இணக்கமான பேதைமை அவளை இழிவுபடுத்திவிடும். செம்மையான பழைய நூல்கள் நிறைந்த ஓர் நல்ல நூற்கூடத்திற்குச் சேர்பு இருக்கக்கூடுமானல், எந்தவிதமான தெரிந்தெடுத்தலும் வேண்டியதில்லை. புதிய திங்கள்தாள்களையும் புது நாவல்களையும் உங்கள் பெண்ணின் கண்ணிற் படாமல் ஒதுக்கிவையுங்கள். மழை தூறுகிற ஒவ்வொரு நாளும் பழைய நூற்கூடத்தில் அவளைத் தடங்கலின்றிப் போக விடுங்கள். அங்கே அவளைத் தனிமையாகவும் இருக்கவிடுங்கள். அவளுக்கு நல்லது எதுவோ அதை அவளே கண்டு கொள்வாள். அது உங்களால் முடியாது. ஏனெனில், ஒரு பெண்ணின் குணத்தை உண்டுபண்ணும் வழிக்கும் ஒரு பையனது குணத்தை உண்டுபண்ணும் வழிக்கும் உள்ள இந்த ஒரு வேறுபாடு குறிக்கத் தகுந்தது. நீங்கள் ஒரு பாறையில் வடிவம் செய்வது போல, ஒரு பையனை ஓர் வடிவங் கொள்ளும்படியாகச் செதுக்கலாம். அல்லது, அவன் இன்னும் நல்ல இயல்புடையவனுய் இருந்தால், ஒரு துண்டு பித்தளைத் தகட்டைச் செய்வதைப்போல, வடிவங் கொள்ளும்படியாக அவனைச் சுத்திகொண்டு அடிக்கலாம். ஆனல் ஒரு பெண்ணைக் கடுமையாக நடத்தி எதுவாகவும் செய்யமுடியாது—அவள் ஓர் மலரையே போல் வளர்கிருள். பொழுது இல்லாதொழிந்தால் அவள் வாடிப்போவாள். அவளுக்குப் போதிய காற்றைக் கொடுக்காவிட்டால், மல்லிகை மலரைப்போல, அவளது உறையிலேயே அவள் வதங்கிப் போய்விடுவாள். அவளது வாழ்க்கையின் சில போதுகளில், அவளைத் துணையின்றி விட்டுவிட்டால், அவள், கீழ்விழுந்து, புழுதியில் தன் தலையை மாசுபடுத்திக் கொள்வாள். ஆனல் அவளை நீங்கள் விலங்கிட முடியாது. உடலிலும் உளத்திலும் அவள்

ஏதாவது உருப்படுவதா யிருந்தால், அவளது நல்ல வடிவையும் வழியையும் அவளே செய்துகொள்ளுதல் வேண்டும். . . . நூற்கூடத்தில் அவளைத் தன் விருப்ப வழி ஒரு தோட்டத்தில் மான்கன்று ஒன்றை விட்டு வைப்பதைப்போல, விட்டுவிடுங்கள். உங்களைப் பார்க்கிலும் இருபது மடங்கு நன்ருய், கெட்ட புற்கள் இன்னவை என அஃது அறியும். நல்லவைகளையும் அப்படியே அறிந்து—நீங்கள் அதற்கு நல்லவை என்று அணுவளவும் கருதாதவையும் ஆனுல் அதற்கு நல்லவையும் ஆன கசப்பும் முள்ளும் உடைய சிலவற்றைத் தெரிந்து—அது தின்னும்.

அப்படியே மற்றப் புலமையிலும் அவள் முன்னிலையில் சிறந்த வகைகளையே வையுங்கள். அவள் தேற்றம் அடைவதற்கு மேலேயே அவள் அறிந்துகொள்ள அவளைத் தகுதியாக்கும்படியாக, எல்லாப் புலமைகளிலும் அவளுக்குள்ள பழக்கம் திருத்தமாகவும் ஐயம் திரிபு அற்றும் இருத்தல் வேண்டும். சிறந்த வகைகள் என்பவை சிறந்த உண்மையும், சிறந்த எளிமையும், சிறந்த பயனும் உள்ளனவாய் இருத்தல் வேண்டும். இந்தச் சொற்களைக் கூர்ந்து நோக்குங்கள்; இவை எல்லாப் புலமைகள் உள்ளும் ஊடுருவி நிற்கின்றன. இவை ஒரு சிறிதும் வழங்கா என்று நீங்கள் நினைக்கக்கூடிய இசைப் புலமையில் இவற்றைப் பொருத்திப் பாருங்கள். சொற்களின் பொருளையும், அல்லது, கோரிய உள்ள உணர்ச்சியின் பண்பையும் மிக இணக்கமாயும் வேறுபாடின்றியும் வெளியிடுகிற பண்களையுடைய இசையை நான் சிறந்த உண்மை வாய்ந்தது என்று சொல்லுகிறேன். இரண்டாவதாக, பொருளும் வண்ணமும், எதில் கூடிய வரையில், மிகச் சிலவும் மிக்க பொருள் வாய்ந்தவையும் ஆன பண்களால் தேர்ந்திருக்கின்றனவோ அவ் இசையே சிறந்த எளிமை வாய்ந்ததாகும். கடைசியாக, சிறந்த சொற்களை எடுப்பற்ற அழகாக்குகிறதும், நமது ஞாபகத்தில் ஒவ்வொன்றும் அதனதன் ஓசையாகிற மாட்சிமையோடு விளங்கும்படி அவற்றை மயக்குவிக்கிறதும், நாம் வேண்டுகிற அந்த இமைப்போதில் நெஞ்

சுக்கு மிக அருகில் அவற்றைப் பொருத்துவதும் ஆகிய அந்த இசையே சிறந்த பயன் உள்ளது ஆகும்.

பொருளிலும் துறையிலும் மட்டுமே இன்றி, இன்னும் அதிக ஊக்கமாக, அதன் ஆன்மப் பொலிவில் ஓர் பெண்ணின் கல்வி ஒரு பையனுடைய கல்வியைப் போன்றே அவ்வளவு ஆழ்ந்ததாய் இருத்தல் வேண்டும். 'சுவரின் அணிகளாக ஆதற்கே உரியவர்' என்னும் வகையில் உங்கள் பெண்களை வளர்த்துவிட்டு, பிறகு அவர்களது சிறுமையுற்ற உளமாறுதலைப்பற்றிச் சொல்லிக் கொள்ளுகிறீர்கள். அவர்களது உடன்பிறந்தார்க்கு நீங்கள் கொடுக்கிற விதமான வாய்ப்புக்களை அவர்களுக்கும் கொடுங்கள்—அவர்கள் இடத்துள்ள அதே வகையான நல்லொழுக்கத்தின் சீரிய இயற்கை அறிவுப்பதிவுகளை நோக்கி முறைப்பாடு செய்து பாருங்கள்; உளவன்மையும் உண்மையும் அவர்களது ஆன்மாவின் தூண்கள் ஆகும் என்பதை அவர்களுக்கும் கற்பியுங்கள்: பெண்மக்களது உளத்தின் வன்மையையும் நேர்மையையும், அவர்கள் தெருவாயிலில் வந்து நிற்கிற வ கையைக் கருதுகிற அளவில் பாதியளவுகூட முதன்மையாகக் கருதக்கூடிய பெண் பள்ளிக்கூடம் ஒன்றேனும் இந்தக் கிறிஸ்தவநாட்டில்இருப்பது அருமை என்று அறிகிற இப்போதும்—வாழ்க்கையில் அவர்களை நிலை பெறச் செய்கிற வகையை நோக்கிப் பார்க்குங்கால் மக்கள் தொகுதியின் முழு ஏற்பாடும் பேரச்சமும் ஏய்ப்பும் பொருந்திய ஓர் ஊழலான வேதனையாய் இருக்கும் இப்போதும்—(பேரச்சம் பொருந்தியது எப்படி எனில்: தங்கள் அயலார்கள் கருதுவது போலன்றி வேறெவ் விதத்திலும் பெண்களை வாழவோ, அல்லது, அன்பு செலுத்தவோ விடத்துணியாது இருக்கும் ஆற்றுல்; ஏய்ப்பாகிறது எங்ஙனம் எனில்: ஓர் பெண்ணின் எதிர் காலத்தின் முழுமகிழ்ச்சியும் அவள் எந்தக் காலத்தில் மதிமயங்காதிருப்பதைப் பற்றி இருக்கின்றதோ அந்தக் காலத்தில், நமது பொய்உயர்வு கருதி உலகத்தின் கீழற்றபடி கீழ்மையான வீண்பெருமையின் கடுவேக்காடு முழுவதையும் ஒரு பேதையின் கண்களுக்குமுன் கொண்டு வந்து நிறுவும் ஆற்றுல்தான்)—மேலே விவ

ரித்த இந் நிலைமைகளில்கூட, அவர்கள் துணிவாகவும் உண்மையாகவும் இருக்கிறார்கள் என்றால், நாம் முற்குறித்த முறைப்பாட்டினைச் செய்துகொண்டால், அதற்குத் தக அவர்கள் நடக்கமாட்டார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

முடிவாக உயர்ந்த கல்வியே அன்றி, உயர்ந்த கற்பிப்பவர்களையும் அவர்களுக்கு உதவுங்கள். உங்கள் பையனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கு முன், உபாத்தியாயர் எப்படிப்பட்டவர் என்று ஒருவகையில் நீங்கள் கருதுகிறீர்கள்; எப்படிப்பட்ட வகையாளியாக அவர் இருப்பினும், உங்கள் மகனை அவரது முழு ஆட்சியின்கீழ் விட்டுவிட்டு, நீங்களும் அவருக்கு ஏதோ ஒரு வகையில் மரியாதையாக நடந்து கொள்ளுகிறீர்கள். அவர் உங்களிடம் விருந்தினராக வந்தால் ஒரு மூலையில் அவரை ஒதுக்கி வைப்பதில்லை; கல்விக் கூடத்தில் உங்கள் பிள்ளையின் நேரான கற்பிப்பவர் உங்கள் நிறைந்த வழிபாட்டினைப் பெறுகிற வேறு உயர்ந்த கற்பிப்பவர் ஒருவரது ஆணையில் நிற்பவராவர். கிறிஸ்து சர்ச்சு 'டீன்' அவர்களையும் டிரினிடியின் தலைவரையும் உங்களுக்குத் தாழ்ந்தவர்களாக நீங்கள் நடத்துகிறீர்கள் இல்லை அன்றோ?

ஆனால், உங்கள் பெண்களுக்கு எந்த வகையான உபாத்தியாயர்களை நீங்கள் ஏற்படுத்துகிறீர்கள்? அப்படித் தெரிந்தெடுத்த உபாத்தியாயர்களுக்கு என்ன மரியாதை செய்கிறீர்கள்? உண்டி வகைகளைப் பார்க்கிலும் உங்கள் பெண்ணின் ஆன்மா குறைந்தது போல, உங்கள் வீட்டுப் பண்டப் பொறுப்பாளியை அவர்கள் மதிப்பதைக் காட்டிலும் குறைந்தபடியில் உங்கள் ஏவலாளர்களால் கருதப்படுகிறவரும், மாலையில் கூடத்தில் உட்கார விடுதலே அவர்பால் செய்கிற பெரு மதிப்பு என்று உங்களால் கருதப்படுகிறவரும் ஆகிய ஒருவரிடம் ஓர் பெண்ணின் ஒழுக்கமும் அறிவும் ஆகிய பண்புகளின் முழு உண்டாதலையும் நீங்கள் ஒப்புவிக்கிறபோது, தன் ஒழுக்கத்தையும் தன் அறிவையும் அதிகப் பெரியனவாக ஒரு பெண் கருத வழி இருக்கிறதா?

அவளுக்குத் துணையாக நிற்கும் இலக்கியத்தைப் பற்றியும் புலமையைப் பற்றியும் இவ்வளவும் சொன்னேன். அவளுக்கு இன்றியமையாதது ஆகிற இன்னும் ஓர் துணை இருக்கிறது. மற்ற வகைகள் எல்லாம் சேர்ந்து செய்வதைக் காட்டிலும் அது மட்டும் சிற்சில போது அதிகமாகச் செய்திருக்கிறது. தானே வளர்ந்ததும் உளக்கனிவைக் கொடுக்கிறதும் ஆகிய இயற்கையே அத்துணை. ஆர்க்கில் பிறந்த ஜோன் என்னும் பெண்தகையின் கல்வி இதில் கற்றுக் கொண்டதே.

ஆங்கில நாட்டு அரிவைமார்களே! வேல்சு நாட்டின் இளவரசி தொடங்கி உங்களில் மிக்க ஏழை வரையில் உள்ளவர்கள் எல்லாரையும் நான் சுட்டுகிறேன். இடையன் இல்லாதிருக்கும் ஆடுகளைப்போன்று, குன்றுகளின் பாங்கர் உங்கள் பெண்மக்கள் பராமரிக்காது கிடப்ப, தங்குவதற்காகும் அவர்களுக்குரிய உண்மையான பட்டிக்குள் அவர்களைக் கொண்டுவருதல் கூடும் என்று நினையாதீர்கள். ஒரே சமயத்து, பெண்களின் பள்ளிக்கூடமாகவும் அவர்களது விளையாட்டிடமாகவும் கடவுள் உண்டாக்கியிருக்கிற நேர்த்தியான இடங்கள் பாழாகவும் இழிவுற்றும் கிடக்கும்போது, மக்கட் பிறப்பின் அழகின் உண்மையைக் கண்டறியும்படியாக உங்கள் பெண் மக்களைப் பழக்குதல் கூடும் என்று கருதாதீர்கள், நீங்கள் பிறந்த நாட்டுப் பாறைகளினின்றும் மாபெரும் முறையாளி வெளிப்படுத்துகிற இனிமையான தண்ணீர்த் துறைகளில்—அதாவது, அவற்றின் மாசின்மைக்காக முன்னோயவன் ஒருவன் தொழுதிருக்கக் கூடியவையும், நீங்கள் அவற்றைக் களங்கமாக்குகிற வகையில்தான் உங்களால் தொழப்படுகிறவையும் ஆகிய அத்துறைகளில்—உங்கள் பெண்மக்களை முழுக வைத்தால் ஒழிய, உங்கள் விரல் ஆழமே உள்ள ஊற்றுக்களில் மட்டும் அவர்களைச் சரியானபடி ஞான ஸ்நானம் செய்துவைக்க முடியாது. வான்கண் உள்ள இருண்ட நீல நிறப் பலி பீடங்களாம் அவை—உங்கள் தீவாசனத்தைத் தாங்குகிறவையும், முன்னோயவன், தம்மீதுள்ள மாலை என வளைந்த எழிலி ஒவ்வொன்றி

லும் கடவுள் வல்லமைகளைக் காணக் கிடந்தவையும் ஆன மலைகளைத்தான் குறிக்கிறேன்—அறியக்கூடாத கடவுளர் தமக்கு, மக்களால் அன்றி, அவராலேயே கட்டிய இப்பலி பீடங்கள்—மறையொன்றும் இல்லாமல் உங்களுக்குத் தோன்றும் வரைக்கும், குறுகியவையும் உளியால் செதுக்கியவையும் ஆன அந்த உங்கள் கோயிற் பலிபீடங்களின்பால் உங்கள் பெண்மக்களை நீங்கள் கடவுள் நம்பிக்கையோடு கொண்டுபோதல் கூடாத ஒரு கருமமாம்.

3

இதுவரையிலும் பெண்மையின் இயல்பைப் பற்றியும், பெண்ணிற்கு வேண்டிய கல்வியைப் பற்றியும், அவளது மனைத் தொழிலின் தன்மையைப் பற்றியும் சொன்னேன். இப்போது நமது கடைசியும் மிக்க அகன்றதும் ஆன கேள்வியாகிய ‘ அரசியலில் அவளது சிறந்த தொழில் என்ன ’ என்பதைப் பற்றி நாம் ஆராய்வோமாக.

பொதுவாக, ஓர் ஆடவனது கடமைகள் வெளிவகை என்றும் ஒரு பெண்டின் கடமைகள் உள்வகை என்றும் கருதுகிற ஓர் எண்ணத்தின்கீழ் நாம் ஆட்பட்டிருக்கிறோம். ஆனால் இது முற்றிலும் இப்படி அன்று. தன்னுடையதே ஆன வீட்டைப் பற்றிய தன்னைப் பொறுத்த ஒரு வேலை, அல்லது, கடமையோடுகூட இக் கடமையின் தொடர்ச்சியானதும் அரசின்பால் தொடர்பு உடையதும் ஆன பொது வகையான ஓர் உழைப்பு அல்லது கடமையையும் ஓர் ஆடவன் செய்ய வேண்டியவன் ஆகிறான், அப்படியே போல ஒரு மகளும் தனது மனையைப் பற்றிய தன்வகையான தொழில் அல்லது கடமை ஒன்றைத் தவிர அதன் தொடர்ந்த பெருக்கம் ஆகிற பொதுவகையான தொழில், அல்லது, கடமை ஒன்றையும் மேற்கொள்ள வேண்டியவள் ஆகிறாள்.

தன் வீட்டைப் பற்றிய ஆடவனது வேலை என்னவென்றால், அதன் காப்பாற்றுதலையும் அதன் மேற்செலவையும் அதன் காப்பையும் அதற்கு அடைவிப்பது தான். மகளின் கடப்பாடு, அதன் நேர்மையையும் நலத்தையும் அழகையும் அதற்கு அடைவிப்பதுதான்.

இந்த இருகூறுன தொழிற் பாகுபாடுகளை அகற்றிப் பாருங்கள். ஓர் அரசின் ஓர் அங்கமாகவுள்ள ஓர் ஆடவனது கடமை, அவ் அரசைப் போற்றுதலிலும் அதன் மேற்போக்கிலும் அதைக் காப்பதிலும் துணை நிற்பதே ஆகும். ஓர் அரசின் ஓர் அங்கமாகிய ஒரு மகளின் கடமையானது அவ்வரசை ஒழுங்கு செய்தலிலும், ஆற்றுதலிலும், அழகுபெற அணி செய்வதிலும் துணையாக நிற்றலேதான்.

ஒருவன், தன் வீட்டு வாயிலில் இருந்து, வேண்டிய போது, மானக் கேட்டையும் கொள்ளையையும் உள் நுழையாதபடி தடுக்க வேண்டியிருப்பதைப் போலவே; வேண்டியபோது, கொள்ளைக்காரனுக்குத் தன் வீட்டை விட்டுவிட்டு, தன் நாட்டின் வாயிலில் நின்றுகொண்டு, முன்பு உள்ளதைக் காட்டிலும்—குறைந்த ஆர்வத்தின் அளவோடு அல்லாது—உயர்ந்த ஆர்வத்தின் அளவோடு அவ்விடத்தில் தன் அதிகக் கடப்பாடுள்ள வேலையைச் செய்ய வேண்டியவன் ஆகிருன்.

அதைப்போல, ஒரு மகள், தன் வீட்டிற்குள், ஒழுங்கின் நடுவாகவும் நோயின் மருந்தாகவும், அழகின் ஆடியாகவும் இருக்க வேண்டுவதைப் போன்றே, ஒழுங்கு அதிக இடைஞ்சலுற்றதாகவும், வருத்தம் அதிக விரைவுள்ள தாகவும், அழகு அதிகக் குறைவுள்ளதாகவும் இருக்கிறதும், அவளது வீட்டு வாயில்களுக்குப் புறம்பாக உள்ளதும் ஆன இடத்திலும் அவள் இருக்க வேண்டியவள் ஆகிருள்.

நாம், அதன் உண்மையான நோக்கத்தினின்றும் அதைப் பின்னுக்கு இழுத்தால், அதை—புரட்டவும் கலக்கமுறவும் செய்யலாமே அன்றி—அழிக்க முடியாதிருக்கிற ஓர் உளப்போக்கு நமது நெஞ்சுக்குள் நம் உண்மையான எல்லாக் கடமைகளையும் இயற்றுவதன் பொருட்டு எப்போதும் அமைக்கப்பட் டிருப்பது போலவே:—எடுத்துக் காட்டாக, நேர்மையானபடி முறைப்படுத்திஞல் வாழ்க்கையின் எல்லாத் தூய்மைகளையும் போற்றுகிறதும், தவருகத் திருப்பிஞல் அவற்றை வேரறுப்பதும், இவற்றுள் ஒன்றையாவது

மற்றென்றையாவது செய்தே தீர்வதும் ஆன அன்பு என்னும் உரம் வாய்ந்த ஓர் உளப்போக்கு இருக்கிறதைப் போன்று—நமது நெஞ்சின் கண், சரியானபடி வழிகாட்டப் பட்டால், மக்கட் பொதுவின் திட்டம் வாழ்க்கை ஆகிய இவ்விரண்டி னுடைய மேம்பாட்டைப் போற்றுதல் செய்வதும், தவருகத் திருப்பினுல் அவற்றை முறிபட ஒழிப்பதும் ஆன வன்மையின்கண் விருப்பம் ஆகிய ஓர் அவிக்க முடியாத உளப்போக்கு இருக்கிறது.

ஆடவனுடைய உள்ளத்தின் நெருங்கிய வாழ்க்கையிலும், அதைப்போன்று, பெண்ணின் உள்ளத்தினுடைய உள் வாழ்க்கையிலும் ஆழ்ந்து வேர் ஊன்றும்படியாகக் கடவுள் அதை அங்கே நட்டிருக்கிருர்; கடவுள் அதை அங்கே போற்றி வருகிருர்; வீணுகவும் அவ்வளவு பொய்மையாகவும் நீங்கள் வன்மையின்கண் உள்ள விருப்பத்தைக் குறைகூறுதலும் கண்டித்தலும் செய்கிறீர்கள். கடவுளுக்காகவும் மக்களுக்காகவும் எவ்வாற்ருனும் உங்களுக்குக் கூடுமளவும் அதை விரும்புங்கள். ஆனுல், ‘என்ன வன்மையோ?’ என்னும் இது தான் முழுக் கேள்வியும். அழிப்பதன் பொருட்டு வன்மையா? மடங்கலின் உறுப்பா? அவுணன் கையா? அப்படியன்று: நோய் தீர்ப்பதற்கும் கரையேற்றுவதற்கும் வழி காட்டுவதற்கும் காவல் காப்பதற்கும் வேண்டிய வன்மையே. செங்கோலும் வெண்குடையும் ஆகிய இவற்றின் வன்மையே; கொடுந் தொழிலாளரைச் சிறைப்படுத்துவதும் வன்மையற்றவரை மீட்பதும்போன்ற—தொட்டுத் துன்பம் அகற்றுகிற—அரசர் கையின் வன்மையே ஆகும்; நேர்மையாகிய பாறையின்மீது வெட்டி இரக்கமாகிய படிகளினுல் மட்டுமே இறங்கக்கூடிய பொன் தவிசின் வன்மையே அன்றே அது. இதைப் போன்ற வன்மைக்காக வெஃகுதலும் இதைப்போன்ற பொன் தவிசினைத் தேடுதலும் செய்து நீங்கள் மனையாட்டிகளாக மட்டும் இல்லாது, அரசிகளாகவும் இருக்கமாட்டீர்களா?

தெரிந்தோ தெரியாமலோ நீங்கள் பலர் உள்ளத்தில் தவிசேறி இருத்தல் வேண்டும். அம்முடியை ஒதுக்கி வைப்பதற்கில்லை. அரசிகளாக நீங்கள் எப்போ

தும் இருத்தல் வேண்டும். உங்கள் காதலருக்கு நீங்கள் அரசிகள். உங்கள் கணவர்களுக்கும் உங்கள் மக்களுக்கும் அரசிகள். சந்தனத்தழையால் ஆய முடியையும் மாசு படாத செங்கோலேயும் உடைய பெண்மைக்கு முன்பு தலேவணங்குவதும் ஆகிய அப்பாலுள்ள உலகத்திற்கு இன்னும் உயர்ந்த மறை பொருந்திய அரசிகள். ஆனல் பாவம்! ஒப்பற்றுயர்ந்த பொருள்களில் அரச மேம்பாட்டை ஒழித்துவிட்டும், பேர் அமைதியின் அரசினிடம் இருந்து நேரே பரிசாகப் பெற்று, உங்களில் கெட்டவர்கள் வெளியே காட்டுவதும் நல்லவர்கள் மறந்து போவதும் ஆன வன்மைக்கு நேர் எதிராக, ஒழுங்கற்ற ஆட்சியையும் தீவன்மையையும் தத்தம் எண்ணத்தை ஆண் மக்கள்பால் நிறைவேற்றுமாறு விட்டு விட்டும், மிகச் சிறிய பொருள்களில் அரச மேம்பாட்டைப் பற்ற முயன்று கொண்டும் இருக்கும் சோம்பலும் பொறுப்பின்மையும் உற்ற அரசிகளாக நீங்கள் பெரும்பான்மையும் இருக்கிறீர்கள்.

"அமைதியின் அரசன்"—இந்தப் பெயரைக் கூர்ந்து நோக்குங்கள். இந்தப் பெயரின் கீழ் அரசர்களும் சிற்றரசர்களும் இம் மாநிலத்தின் முறைமையாளர்களும் ஆளும்போது அவர்களும் தங்கள் சுருங்கிய இடத்திற்கும் மக்கட்பிறப்பின் அளவுக்கும் தகுந்தபடி அதன் வன்மையைப் பெறுகிறுர்கள். அவர்களே விட்டு வேறு அரசர்கள் இல்லே. அவர்களுடைய தல்லாத வேற்றுளுகை தவருன ஆளுகையே ஆகும். உண்மையாகக் கடவுளரின் அருளால் ஆளுகிறவர்கள் எல்லாரும் அமைதியின் அரசர்களே,அல்லது, அரசிகளேயும் ஆவர். பெண்மக்களாகிய நீங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ளாமல் இருக்கும்படியான ஒரு போராவது ஓர் ஓரமாவது இவ்வுலகத்தில் கிடையாது. அதை நீங்கள் தூண்டிவிட்டீர்கள் என்பதில்லே, அதை நீங்கள் தடுக்கவில்லே என்பதுதான். ஆண்மக்கள், அவர்கள் இயற்கையின்படி, பொருவதற்காக முன்வருபவர்கள். அவர்கள் எந்தக் காரியத்திற்காகவும் பூசல் புரிவார்கள்; இல்லே யென்றுல், ஏதொன்றிற்காகவும் புரியார்கள். அவர்களுக்காக ஒரு காரியத்தைத் தெரிந்தெடுத்தலும், காரியம்

இல்லாதபோது அவர்களைத் தடங்கல் செய்வதும் உங்கள் கடமையாகும். தன் குற்றத்தை உங்கள் தலைமேல் சுமத்தும்படியில்லாத எந்த வகையான துன்பமும் முறைபிறழ்ச்சியும் தாழ்வும் இவ்வையகத்தில் கிடையாது. அதன் துன்பத் தோற்றத்தை ஆண்மக்கள் பார்த்துக்கொண் டிருப்பார்கள். ஆனால் நீங்கள் அதைப் பார்த்துப் பொறுத்திருக்கும்படியான வன்னெஞ்சினராய் இருத்தல் கூடாது. தங்கள் முயற்சி வருத்தத்தில் அதை இரக்கம் இல்லாமல் ஆடவர்கள் மிதித்து ஒழிக்கலாம். ஆனால், ஆடவரோ, இரக்கத்தில் மெலிவுற்றவரும் நம்பிக்கையில் சுருங்கியவரும் ஆவர். நீங்கள் மட்டுமே நோயின் ஆழத்தை உணர்ந்து அது தீரும்வழியைத் தெரிகிறவர்களாக இருக்கிறீர்கள். இதை இயற்ற முயற்சி செய்வதற்கு எதிராக, இதினின்றும் நீங்கள் முகத்தைத் திருப்பிக் கொள்கிறீர்கள். உங்கள் சோலை வாயிற்படிக்குள்ளும் தோட்டச் சுவர்க்குள்ளும் நீங்கள் உங்களைத் தாளிட்டுக்கொள்ளுகிறீர்கள். நீங்கள் புகுந்து பார்க்க அஞ்சுகிற மறைவுகளாலும், நீங்கள் உன்னிப் பார்க்க உளம் ஒப்பாத துன்பங்களாலும் நிறைந்த ஓர் உலகம் முழுவதும் காடுமூடிப்போய் அவற்றிற்கு அப்புறம் இருக்கிறது என்பதை மட்டும் தெரிந்து கொண்டால் போதும் என்று இருக்கிறீர்கள்.

இது எனக்கு மக்கட் பிறப்பினுடைய நிகழ்ச்சிகளுக்குள் முழுவதும் ஒப்பற்றபடியாக மதிமயக்கம் தருவதாய் இருக்கிறது என்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டுகிறேன். மக்கள் தன்மை ஒரு தடவை தன்மானத்தினின்றும் புரட்டப்பட்டால், அது இழிவடையக் கூடிய எந்த அளவுள்ள தாழ்வுகளைப் பற்றியும் நான் வியப்படையவில்லை. தன் கைகள் துவளும்போது பொன்னை நழுவவிடுகிற கருமி ஒருவனுடைய சாவைப் பற்றியும் நான் வியப்படையவில்லை. தன் கால்களைப் போர்வையால் சுற்றியிருக்கும் காமி ஒருவனுடைய வாழ்க்கையைக் கண்டும் நான் வியப்படையவில்லை. இருப்புப் பாதையின் இருட்டில், அல்லது, சதுப்புநிலப் புதர் மறைவில் ஒருவனை ஒருவன் கொன்ற ஓரியான கொலையைப்

பற்றியும் நான் வியப்படையவில்லை. வெவ்வேறுபட்ட மக்கள் கூட்டத்தினரின் வெறியால் பட்டப் பகலிலேயே செருக்கோடு கூடச் செய்யப்பட்ட பெருங் கும்பல்களின் ஆயிரங் கைக் கொலையைப் பற்றியும், எரிவாய் நிரயத் திற்கும் வானத்திற்கும் ஆகக் குவிக்கப்பட்ட அவர்களது புரோகிதர்கள் அரசர்கள் ஆகிய இவர்களின் அளக்க முடி யாததும் நினைக்க முடியாததும் ஆகிய குற்றத்தைப் பற்றி யுங்கூட நான் வியப்படையவில்லை. ஆனால், கையில் தன் குழந்தையோடும், அவள் அதைச் செலுத்த ஒருப்பட் டால், அக்குழந்தை மேலும் அதன் தகப்பன் மேலும் செல்லக் கூடியதும், வானத்தின் காற்றைவிடத் தூய்மை யானதும், வையகத்தின் கடல்களைவிட வன்மையானதும் ஆகிய ஒரு செல்வாக்கோடும் இருக்கிற உங்களில் மிக்க மென்மையும் இளமையும் வாய்ந்தவளான ஒரு மகள்— உலகம் நிறைநததும் குறைவற்றதும் ஆன ஓர் பச்சைப் பசுமணியாய் இருந்தாலுங்கூட, அதற்காக, அவளது கணவன் அவளைப் பிரிந்திருப்பதற்கு ஒப்பாதிருக்கிற பெரு மேம்பாடு உடைய ஓர் உயர்நலமாய் விளங்கும் ஒரு மனையாட்டி—தனது அடுத்த வீட்டினளோடு உயர்வு காட்டி வீண் போது போக்குவதன் பொருட்டு, இந்தப் பெரு மேம்பாட்டைக் கைவிடுவதைக்காண எனக்குப் பெரு வியப்பாய் இருக்கிறது. தனது தோட்டத்தினு டைய சிறிய கொடி மல்லிகை மூடிய சுவரிற்கு வெளிப் புறம் வான் வரம்பு வரையும், காட்டுப்புல், ஆண்மக்கள் தம் பொறுக்க முடியாத துயரத்தினால் சிதைக்கப்பட்டும் அவர்கள் தம் உடம்பின் செந்நீரின் ஓட்டத்தால் தரை யோடு சாய்க்கப்பட்டும் இருக்கிறதை, அவள்—தனது நெஞ்சின்கண் வேண்டும் என்று மட்டும் பார்த்தால் அதை அறியக் கூடும் ஆகையால்—அறிந்திருந்தும், அவளது அமைதியான இடத்தைச் சுற்றி ஓர் சுவர் இருப்பதால்—அவள் உளத்தில் எல்லாவித தூய உணர்ச்சிகளும் மங்காதிருந்தும்—தன் புருவத்தில் யாதொரு துயரமும் தோன்றுமற்படி, காலையில் அவளது தோட்டத்திற்கு, அதிலுள்ள பெரிதும் காக்கப்பட்ட பூக் களினுடைய ஓரங்களோடு விளையாடுவதற்காகவும், அவை தொங்கிக்கொண் டிருந்தால் அவற்றை மேல்

தூக்கி விடுவதற்காகவும், தன் முகத்தில் மகிழ்ச்சியான புன்சிரிப்போடு அவள் செல்லுவது எனக்குப் பெருவியப்பாய் இருக்கிறது.

மிக்க மகிழ்வுடையவர் என்று நாம் கருதுகிறவர்கள் முன்பு மலர்களைத் தூவுகிற நமது பழக்கத்தில் என்ன ஆழ்ந்த உட்கருத்து கிடக்கிறது, அல்லது, வேண்டுமானால், என்ன ஆழ்ந்த உட்கருத்தை உன்னிக் கற்றுக் கொள்ளலாம் என்று நீங்கள் எப்போதாவது சிந்தித்தீர்களா? அவர்களுடைய அடிகளில் இவ்வண்ணம் மாரியாக மகிழ்ச்சி பெய்யும் என்று—அதாவது, அவர்கள் எங்குச் சென்றாலும் இனி அம் மணமுடைய பூண்டுகளின்மீது நடப்பார்கள் என்றும், கரடுமுரடான தரை அவர்களுக்காக மல்லிகையின் ஆழ்ந்த பரப்பினால் ஒற்றுமையான இடமாக ஆக்கப்படும் என்றும்—இவ்வகையில் ஓர் நம்பிக்கையை உண்டாக்கி அவர்களை ஏமாற்றுவதற்காக மட்டும் அது வழங்கி வருகிறது என்று நீங்கள் கருதுகிறீர்களா? அதை அவர்கள் எவ்வளவு உறுதியாக நம்புகிறார்களோ அவ்வளவு உறுதியாக, அவர்கள், அதற்கு எதிராக, துன்பமான பூண்டுகள் முட்கள் ஆகிய இவற்றின் மீது நடக்க வேண்டியவர்கள் ஆவார்கள்; அவர்களின் கால்களுக்குத் தெரியும் ஒரே வகையான மென்மை பனியினுடைய மென்மையே ஆகும். ஆனால் அவர்கள் இவ்வண்ணம் நம்புவதற்கு அது ஏற்பட்டதன்று; அந்தப் பழைய வழக்கத்தில் சிறந்த ஓர் உட்கருத்து இருக்கிறது. ஒரு நல்ல மடந்தை போகிற இடமெல்லாம் மலர்கள் தூவி இருக்கிறது. ஆனால், அவளுடைய அடிகளுக்கு முன்னேயன்றிப் பின்தான் அவைகள் மலர்ந்து விளங்குகின்றன. " அவளுடைய அடிகள் புல் நிலங்களைத் தொட்டுச் சென்றன; தொட்டும், குவளைகளை அழகிய கருமையாகவே விட்டுச் சென்றன."

இதை நீங்கள் ஓர் காதலனது பொய்யும் வீணும் ஆன மயக்கவுரை என்று மட்டும் கருதுகிறீர்கள் அல்லவா? அது உண்மையாய் இருக்கக் கூடுமானால் எப்படி? . . . ஒரு மடந்தையைப்பற்றி, அவள் போகிற இடத்தில் உள்ளதை அவள் அழிக்காமலிருக்கிறாள்

என்பது மட்டும் மிகச் சிறுமையானது ஒன்ரும்: அவள் உயிர்பெறச் செய்தல் வேண்டும். அவள் நடந்தபோது குவளைகள் குனியாமல் மட்டும் இருப்பதல்லாமல், அவை பூக்கவும் வேண்டும். பெருமிதமான உயர்வு நவிற்சி அணியாக நான் பேசுகிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? என்னை மன்னியுங்கள், சிறிது கூட அப்படியன்று. நான் சொல்லுவதை அமைதியான மொழியில் உறுதியான உண்மையோடு சொல்லுகிறேன். தம்மைப் பாராட்டுகிற ஒருவருடைய தோட்டத்தில் மட்டும் மலர்கள் சரியானபடி செழிப்படைகின்றன என்று சொல்வதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அந்தக் கூற்றிலும், வெறுமையான ஓர் கற்பனையைக் காட்டிலும் மிகுந்த உண்மை உள்ளது என்று நான் நம்புகிறேன். ஆனல் அது ஒரு வெறுங் கற்பனையாகவே உங்களால் கருதப்பட்டாலும், அது உண்மையாக இருக்கவேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள் என்று எனக்குத் தெரியும்; ஓர் அன்பான பார்வையால் உங்களது மலர்களை ஒள்ளிய நிறங் கொண்டனவாக அலரும்படி நீங்கள் செய்யக்கூடுமாஞல்; இன்னும் மேலாக, உங்களது பார்வை, மகிழ்ச்சி தருவது மட்டும் இன்றி, காக்கும் வன்மையும் உடையதாய் இருந்தால்—அதாவது, கொடிய வெதுப்பு நோயைத் திரும்பிப் போகும்படியும், முடிகொண்ட கம்பளிப் பூச்சு விழாமல் இருக்கும்படியும், நீங்கள் கட்டளையிடக் கூடுமாஞல்—கோடைக் காலத்தில் அவற்றின்மீது பெய்யும் படியாகப் பனிக்குக் கட்டளை யிடுதலும், பனிக் காலத்தில் தென்றலைப் பார்த்து, "ஓ தென்றலே! என் தோட்டத்தில் உள்ள நறுமணம் பொருந்திய மகரந்தம் வெளியே பரவும்படியாக நீ வந்து அதில் வீசு" என்று சொல்லுதலும் கூடுமாஞல், இது ஒரு விரும்பத்தக்க மாயம் என்று நீங்கள் நினைப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். இதை நீங்கள் ஓர் அரிய பொருள் என்று நினைக்கிறீர்கள் அல்லவா? இவற்றைக் காட்டிலும் அழகான மலர்களுக்காக—அவற்றை வாழ்த்தியதற்கு ஈடாக அவை உங்களை வாழ்த்துவதும், அவற்றைப் பாராட்டியதற்காக அவை உங்களைப் பாராட்டுதல் செய்வதும் ஆன மலர்களுக்காக—அவை உங்களைப் போன்ற

எண்ணத்தையும் வாழ்க்கையையும் உடைய பூக்கள் ஆதலால், அவற்றை ஒருதடவை காப்பாற்றிவிட்டால் எப்போதைக்கும் உங்களால் காப்பாற்றப் படுகிறவை என்று கருதக்கூடிய மலர்களுக்காக—மேற்சொல்லிய எல்லாவற்றையும்--இவற்றைக் காட்டிலும் இன்னும் அதிகமாகவும்—நீங்கள் செய்யக்கூடுமானால் அச்செயல், மேற்குறித்த செயலைக்காட்டிலும் அரியது என்று நீங்கள் கருதமாட்டீர்களா? இச்செல்வாக்கு மிகச் சிறியதாகுமா? சேய்மையில் உள்ள சதுப்பு நிலங்கள் பாறைகள் ஆகிய இவற்றிற்கு இடையிலும், தொலைவிலுள்ள நடுக்கந் தரும் இருட்டுத் தெருக்களிலும் இந்த நொய்ய மலர்கள் தம்முடைய தளிர்கள் எல்லாம் நசுங்கியும் தம்முடைய காம்புகள் ஒடிந்தும் கிடக்கின்றன. அவற்றினிடம் பரிந்து நீங்கள் போகமாட்டீர்களா? அவற்றின் சிறிய நறுமணம் உள்ள படுக்கையில் அவற்றை ஒழுங்காகக் கிடத்த மாட்டீர்களா? கொடிய பெருங் காற்றினால் உண்டாகும் நடுக்கத்தினின்றும் அவற்றைக் காப்பாற்ற மாட்டீர்களா? அவற்றிற்கு இல்லாதபடி உங்களுக்கு மட்டும் ஒரு காலைக் குப்பின் மற்றொரு காலை வந்துகொண் டிருக்கலாமா? மதி மயக்கங்கொண்ட பெண்டிரின் ஆட்டங்களை நோக்குவ தற்காக, தொலைவிலிருந்தும், பொழுது புலர்ந்து கொண் டிருக்கலாமா? மல்லிகை, முல்லை, தானே வளரும் குவளை ஆகிய இவற்றினுடைய இந்த உயிர்க்கரைகளின் மீது உயிர்க்கும் பொருட்டு எந்தப் பொழுதும் புலராதா?* உங்கள் வீட்டுச் சிறு சாளரங்களி னூடு வந்து,

* அங்ஙனம் புலர்ந்த அரிய பொழுது ஒன்று மற்றோர் புலவர் பெருமானால் விவரிக்கப்பட்டிருக்கும் வகையை ஈண்டு ஒத்துணர்தல் பெரிதும் பொருந்தும் :—

பெற்றோரற்ற ஓர் ஏழைச் சிறுமியின் பெறுதற்கரிய ஓர் ஓய்வுநாட் காலை

ஓஓ விடிந்தே விட்டது! என்ன விரைவு! இதோ இரவின் விளிம்பைக் கடந்து பகல் பொங்குகின்றது; இதுவரையிலும் மாசுக்கிண்ணத்தில்சிதறிக்கொண்டு அடங்கியிருந்தது இப்போது பொன்னே எனக் கொதித்து வெளியிற் பொங்கிச் செல்லுகிறது—ஒரு

"ஓ மகளே! இரவாகிய வௌவால் பறந்து போயிற்று, மல்லிகையின் மகரந்தங்கள் எப்பக்கமும் தூற்றுகின்றன. கோமலரின் நறுமணம் கிளம்பிவிட்டது : நீ விரைவில் பூம் பொழிற்கண் புகுவாயாக."

என்று ஒரு வைகறையேனும் உங்களை அழைக்கவில்லையா?

அவற்றிற்கு இடையில் நீங்கள் பரிந்து போகமாட்டீர்களா? எவற்றின்—வானத்தின் ஆழ்ந்த நிறத்தைத் தன் மேற்கொண்டு தரையினின்றும் பிறந்த—உள வன்மையானது நல்ல முறுக்கான வன்மையுள்ள உடல் விளங்க வளர்கின்றதோ அவைகளும்,எவற்றின்—புழுதியினின்றும் கழுவிய—தூய்மை மொக்கு மொக்காய் விருப்பந்தரும் மலராக விரிந்து கொண்டிருக்கிறதோ அவைகளும் ஆகிய அந்த இனிய உயிர்க்கும் பொருள்களுக்கு இடையில் நீங்கள் பரிந்து போகமாட்டீர்களா? இன்னும் அவை உங்கள் முகத்துக்காகவே பார்த்துக் கொண்டிருக்கின்றன:— "செவ்வந்தி—இதோ இதோ என்றுன்னிச் செவி சாய்க்கிறது, முல்லை—ஆயிற்று இதோ என்று வாயசைக்கிறது."

அத் திருமகளில் ஓர் அடியை நான் முன் விட்டுவிட்டேன் என்பதை நீங்கள் கவனித்தீர்களா? அதை நான் மறந்து போனேன் என்று கருதாதீர்கள். இப்போது அதைக் கேளுங்கள் :

"மகளே! நீ இப் பூம் பொழிற்கண் விரைவில் வருவாயாக. இரவாகிய வௌவால் பறந்தே போயிற்று. வாயிலின்கண் நான்மட்டும் ஒன்றியாய் இருக்கிறேன்."

தனிமையாக, இந்தப் பெரிதும் இனிமையான தோட்டத்தின் வாயிலில் நின்றுகொண்டு உங்களுக்காகக்

நாழிகைக்கு முன் அந்தப் பெரிய சாம்பல் நிறக் கீழ் மாசின் அதோ தெரியும் கமரின் கரையை ஒரு நுரைச் செதிளே கூடத் தொட்டதில்லை. அம்மவோ! முன் ஒரு சிறு அலை. மற்றும் ஒன்று எழுந்து, சுருண்டது; பின்பு அடக்கப்படாது, முழு ஞாயிறும் எழுந்து, சிவந்து, புழுங்கும் தன் மார்பின் எல்லைகளை அலைத்துப் பொன்னேயாய் உலகத்தைத் தேக்கிற்று.

காத்துக்கொண் டிருப்பவர் யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? காலையில் தமது தோட்டத்திற்குப்போய், தாம் தோட்டக்காரன் என்று மாறுபடக் கருதிய ஒருவர்அதன் வாயிலில் காத்துக்கொண் டிருப்பதைக் கண்ட ஓர் அம்மையாரைப் பற்றி நீங்கள் எப்போதாவது கேள்விப் பட்டது உண்டா? அவரைப் பலமுறை நீங்கள் தேடியது கிடையாதா? இரவெல்லாம் அவரைக் காணுமாறு நீங்கள் வீணுக அலையவில்லையா? நெருப்பாலாகிய வாள் வைத்திருக்கும் அந்தப் பழைய தோட்டத்தினுடைய வாயிலில் அவரைக் காணுமாறு நீங்கள் வீணுக அலையவில்லையா? அங்கே ஒருபோதும் அவர் இருப்பதில்லை; ஆனல் இந்தத் தோட்டத்தினுடைய வாயிலில்—வயலில் உள்ள கனிகளையும் கொடி முந்திரி செழித்து வளர்வதையும் மாதுளை மலர்வதையும் பார்ப்பதற்காக இதன் வாயிலில்—உங்கள் கையைப் பிடித்துக்கொண்டு செல்லும் பொருட்டு அவர் எப்போதும் காத்துக்கொண் டிருக்கிருர். அங்கே அவரது செப்பம் செய்கிற முந்திரிக் கொடியினுடைய நுண்ணிய கூந்தல்களையும், அவரது கை நல்ல விதையைத் தூவிய இடத்தினின்றும் மாதுளை கிளம்புகிறதையும் அவரோடுகூட நீங்களும் பார்க்கலாம்;—இது மட்டுமா? அவர் விதைத்த பாதை ஓரங்களினின்றும் பசியாநின்ற வன்கண் பறவைகளைத் தமது தெய்வச் சிறகினுல் ஓட்டுகின்றவையும், முந்திரிச் சாலைகளுக்கு இடையில் நின்று ஒன்றுக்கொன்று "நமது கொடி முந்திரிகள் நாகிளம்பிஞ் சுடையன: ஆதலால், அம்முந்திரிகளைஅழிக்கின்ற நரிகளை—அக்கொடுந் தொழிற் சிறு நரிகளை—அப்புறப் படுத்துவோம் ஆக" என்று சொல்லிக் கொள்ளுகிறவையும் ஆன காவல் காக்கும் புத்தேளிருடைய படைகளையும் நீங்கள் காண்பீர்கள். ஓ அரசிமார்களே! அரசிமார்களே! உங்களுடைய இந்த நாட்டில் குன்றுகளுக்கும் இன்பந்தரும் பசுங்காட்டிற்கும் இடையில் கொடு நரிகள் நுழையும்படியான குழிகளும் வன்கண் வான்பறவைகள் தங்குவதற்கான கூடுகளும் இருத்தல் தகுமா? உங்கள் நகரங்களில் கடவுட் காட்சியாளர் தம் தலையைச் சாய்ப்பதற்கு உதவும் தலையணைகளாகத் தாங்கள் மட்டும் இருக்கின்றன என்று கற்கள் உங்களைப்பற்றிக் குறை கூறுதல் தகுதியான தாகுமா?

முற்றிற்று

உரை

1. நக்கீரன் கனவில் கண்ட உண்மை

1. ஆசிரியரது வரலாறு

இங்கிலாந்து நாட்டிலே, கி. பி. 1775-ஆம் ஆண்டு, ஆசிரியர் வால்டர் சாவேஜ் லாண்டார் (Walter Savage Landor) பிறந்தார். அவரது தந்தை ஓர் மருத்துவர். ஆசிரியருக்கு நல்ல வன்மையான உடம்பும் மிகுந்த செல்வமும் உண்டு. இளமையிலேயே அவர் இலத்தீன் (Latin) மொழியிலுள்ள பெரு நூல்களில் மிகப் பழகி, அவற்றின் கண் உள்ள நிகழ்ச்சிகளை நினைப்பூட்டி மனக்கண்ணுல் கண்டு மகிழ்ந்து, ஆற்றோரங்களிலும் வயற்புறங்களிலும் திரிந்துகொண்டிருப்பர். அவருக்கு ஒவ்வொரு சமயம் உண்டாகும் கடுங்கோபம் அவரது கல்லூரிப் படிப்பிற்குத் தடங்கலாக முடிந்தது. இருந்தாலும், அவர் தாமே விரிவாகக் கற்றுக் கொண்டார். கெபிர் (Gebir) என்ற செய்யுள் நூலை 1798-இல் அச்சிட்டார். 1821 முதல் 'கற்பனைப் பேச்சுக்கள்' என்று பொருள்படும் உரைக் கோவையை (Imaginary Conversations) வெளிப்படுத்தி வந்தனர். அவர் 1811-இல் மணம் புரிந்தார். முதுமையில் அவர் இத்தாலி நாட்டில் பிளாரென்சு நகரத்தில் வாழுங் காலத்து, அவர் மக்கள் அவரைச் சீராகப் பராமரியாததால், அவர் புலவர் பெருமானுன பிரௌனிங் (Browning) அவர்களது ஆதரவில் இருந்து, 1864-இல் இறந்துபோனுர்.

2. ஆசிரியரது புலமை

ஆசிரியர், செய்யுள், உரைநடை ஆகிய இவ் இரண்டையும் இயற்றுவதில் வல்லவர் எனினும், அவருடைய உரை நூல்களே பெரிதும் கொண்டாடப்படுகின்றன. உரை வளத்தில், அவர் ஆசிரியர் டிகுவின்சியோடு (DeQuincey) ஒருங்கு சேர்த்து எண்ணக் கூடியவர். ஆங்கில உரைநடைக்கண் பலப்பல மாறுதல்களை அவர் உண்டு பண்ணினுர். 'கற்பனைப் பேச்சுக்களின்' பொருள் நயமும் சொல் நயமும் ஒருங்கே உயர்வானவை. என்றுலும், அவ் இரண்டிலும் அவரது சொல் நயமே மிகச் சிறந்தது. அப் பேச்சுக்களின் பொருள் உயர்ந்த ஒழுக்கங்களே ஆகும். அளவறிந்து சொல்லுந்திறன் ஆசிரியரின் மிகப் பெருஞ் சிறப்பியல்பு. கிரேக்கர் ரோமர் ஆகிய இவர்கள்தம் பழைய நூல்களின் மேம்பாடும் அழகும் அளவும் நடையும் பின்னுளைச் சிறப்புக்களான சுட்டிக் காட்டுதலும் கட்புலனுறக் காட்டுதலும் ஆகிய இவ் இரண்டு எதிர்ப்பட்ட சிறப்புக்கள் முதல் முதல் அவர் நூல்களில்தான் கலந்தமையக் காணலாம்.

3. கட்டுரையின் வழி

இக்கட்டுரை, 'கற்பனைப் பேச்சுக்களில்' ஒன்றான 'மார்க்கஸ் டல்லியஸ் சிசரோவும் குவின்க்டஸ் சிசரோவும்' (Marcus Tullius and Quinctus Cicero) என்பதிலுள்ள 'கிரைடாபுலஸ்' என்னும் கிரேக்கரின் அறவுரை' (The apologue of Critobulus) என்பதின் மொழி பெயர்ப்பு. தமிழொடு நெருங்கி இயைபுறும்படி, இதை, நக்கீரரது அற வுரையாகப் புனைந்துரைத்தும், ஒன்றிரண்டு இடங்களில் தமிழ்க் கதை களை மேற்கொள்வதாகத் திரித்தும் இங்கு உரைத்திருக்கிறது.

4. கட்டுரையின் கருத்து

வாய்மை ஒழுக்கம் பூண்டவர் அருளைத் துணையாகப் பெறுவர் என்பது இதன் கருத்து.

5. கட்டுரையின் சுருக்கம்

புலவர் பெருமானான நக்கீரர் ஓர் அரமகளைக் காணப் பெறுதலும்; அவர், அவளது இணையற்ற இளமையையும் அழகையும் வியந்து, அவ ளிடம் காதல்கொள்வதும்; அவள், ஓர் கடவுளரிடம் களவொழுக்கம் நிகழ்த்துகிறவள் என்று அறிந்து, அவர் வருந்துதலும்; பின்னர், ஓர் வகையில், அவள், அவரிடம் அன்புகொண்டு, மக்கட்பிறப்பின் குறைகளான நரை திரை மூப்பினைத் தம் உடலின்கண் சுட்டிக்காட்ட அவர் நாணமடைதலும்; அவள் எல்லாம் வல்ல கடவுளின் மகள் (அருட் சத்தி) என பிறகு அவர் அறிதலும்; கடைசியாக, அவள் தன்னிடம் அன்புகொண்டவர் துயரமடையார் என்று அறிவுறுத்தி மறைதலும்— இவைபோன்ற பிறவும் கதைப்போக்கு.

அறக்கடவுள், பொய்யடிமையற்ற ஆன்றோர் ஒருவருக்கு அருள் புரிய எண்ணி, அறத்தின் மாண்பு விளங்கும்படி அவருக்குக் காட்சி கொடுத்து, அவரது அறிவு நுணுக்கத்திற்கு எட்டாது அவரிடத்து அருகிக்கிடந்த பொய்மைகளை எடுத்துக் காட்டி, அவற்றைக் களைந்து, வீடுபெறும்படி அவரை ஏவிற்று என்பதும் பிறவும் பொருட்போக்கு.

உண்மை நிலையின் அளப்பருஞ் சிறப்பை நோக்கும்போது, ஆன் றோர்களின் நிலையே பெரிதும் குறைவுபட்டிருக்கிறது என்பதையும்; ஆகவே, மற்ற மக்கள் எங்ஙனம் தங்கள் தங்கள் உள்ளநிலையை நுணுகி ஆராய்ந்து, மேலும் மேலும் அதைத் தூய்மை செய்யக் கடமைப்பட் டிருக்கிறார்கள் என்பதையும்;—இவற்றோடு, 'வேண்டின் உண் டாகத் துறக்க: துறந்தபின், ஈண்டியற் பால பல' என்ற பேருரையின் கருத் தையும் ஆராய்ந்து உணர்தல் நமது கடனும்.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 1. பருந்தும் நிழலும்-பொருளும் அதன் உரையும்; பறக்கும் ஓர் பருந்தின் அப்போதப் போதைய வடிவத்தை முன் னிட்டு, அதன் சாயல் வடிவங்கொள்ளும். அதுபோன்று,

பொருளின் தன்மைக்குத் தக்கவாறு அதை உணர்த்தும் உரையும் வெவ்வேறு படும்; இங்கு, பலவகைப்பட்ட பொருளும் அததற்கேற்ற உரைநடையும் என்பதைக் குறிக்கும். புலவர்பெருமான்க ளான திருத்தக்க தேவ ராலும், கம்பநாடராலும், இராமலிங்க அடிகளாராலும் இந்த வகையான உவமை கையாளப்பட் டிருக்கின்றதைக் காண்க.

நக்கீரன் – பொய்யடிமை யில்லாத புலவர்களில் மிகச் சிறந்தவர்.

உண்மை – நக்கீரருக்கு அருளும்பொருட்டு ஓர் அரமகள் வடிவங்கொண்டு வந்த அறக்கடவுள்; அருட்சத்தி என லும் ஆம்.

முன்னம் - முற்பக்கம்.

பளிக்கறையில் நின்ற மணிமேகலை – தன்னைப் பின்தொடர்ந்த அரசகுமாரன் தன்னைக் காணாதவாறு, சோலைப் பளிங்கு மாடத்தில் புகுந்து நின்ற மணிமேகலை; இதை 'மணி மேகலை' நூலுள் காண்க.

தியக்கம் – கலக்கம்.

பக்கம் 2. ஒளி நிறைந்த ஓர் மேகம் – சூரிய வெளிச்சத்தால் சூழப் பட்ட ஓர் மாசு.

சாதாரணமானவள் – ஆழ்ந்த அறிவில்லாதவள்.

முகநய இச்சை – தன் முகத்திற்கு முன் பிறர் காட்டும் நட்பில் விருப்பம்.

அருள் - மக்கள் உருக்கத்திற்கு அளவிறந்த வகையில் மேம் பட்ட பேர் உருக்கம்; தனிப் பெருங் கருணை; கடவுட் கருணை.

பக்கம் 3. மேலுலகத்திலிருந்து···இருந்தது–விண்ணுலகத்தின் அளப்ப ரும் உயர்வு கட்புலனாகி, அதுகாறும் நினைத்தறியக் கூடாத எனது இழிவை நான் உணர்ந்து வருந்தச் செய்தது.

அவளது···உரியதன்றி – அவளது இளம் பருவத்திற்கு ஏற்றதென்னலாமே அன்றி அவளது களவொழுக்கத்திற் குப் பொருந்ாத.

முழுப்பெருக்கும்···இருப்பதுபோல் – நிறைந்ததும், இடை யீடற்றதும் ஆன வெளிச்சத்தில் அதன் நிறங்கள் குழம்பிக் காணப்படுவது போல்.

பக்கம் 4. ஆர்ந்த – நிறைந்த, அமைதியான.

இளங்குறும்பு – சிறு பெண்களின் கருத்தற்ற விளையாட்டுத் தன்மை.

ஒருமைப்பாடு–ஒன்றிப்பு; கலக்கமற்று ஒரே நோக்கமாக நிற் கும் தன்மை; தம்முள் முரண்படும் பல நோக்கங்களுக்கு எதிரான நிலை.

2. நகர்க்கண் ஓர் இரவு

1. ஆசிரியரது வரலாறு

ஆலிவர் கோல்டுஸ்மித் (Oliver Goldsmith) என்னும் ஆங்கிலப் புலமையாளர், ஐர்லாந்து நாட்டில், 1728-ஆம் ஆண்டு, ஓர் ஏழைக் கோவிற் குருக்கள் குடியில் பிறந்தார். 1749-இல் அவர் பி.ஏ. பட்டம் பெற்று, மருத்துவ நூல் கற்கும் பொருட்டு, ஸ்காட்லண்டு நாட்டிற்குச் சென்றார். சென்ற இரண்டு வருஷத்திற்குள், அவர் கையில் பொருளில்லாதிருந்தும், ஐரோப்பாவின் பற்பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து, மருத்துவ நூல் வல்லவர் என்று பட்டம் பெற்று, இங்கிலாந்திற்குத் திரும்பினர். பொருளில்லாக் குறையால், தொந்தரவான பற்பல தொழில்கள் செய்து பிழைக்கும்படி நேர்ந்தது. 1759 முதல் அவர் பலப்பல நூல்கள் எழுதி வெளியிட்டனர். அவர்தம் செய்யுள் நூல்களில் 'நத்தப் பாழான சிற்றூர்' (Deserted Village), 'வழிப்போக்கி' (The Traveller), என்பவையும், அவரது உரை நூல்களில் 'வேக்பீல்டு ஊரிக் குருக்கள்' (The vicar of wakefield) 'உலகத்தின் குடிமக்கள்' (The citizen of the world) என்பவையும், அவரது நாடக நூல்களாகிய 'நன்னீர்மையாளன்' (The good natured man) 'வெற்றிக்காக வளைந்து கொடுத்தல்' (She stoops to conquer) என்பவையும் சிறந்தவை. உயிர் இரக்கம் பெரிதும் நிறைந்தவராதலால், அவர் வறுமையாலும் நோயாலும் வருந்துபவர்களுக்கு முன்பின் பாராமல், கையிலுள்ளதைக் கொடுத்து விடுகிற வழக்கம். அதனால் அவருக்கு எவ்வளவு பொருள் வந்தும், கடனாலும் வறுமையாலும் வருந்தி 1774-இல் இறந்துபோனர். தமக்கென்று ஒரு காசுகூட வைத்து அறியாதவரில் அவருக்கு இணையே கிடையாது.

2. ஆசிரியரது புலமை

அவரது புலமை அவர் நாளிலேயே பெரிதும் போற்றப்பட்டது. ஒரு தேவனேபோல் எழுதுகிறார் என்று அவரைப் பலரும் வியந்ததுண்டு. அவருடைய செய்யுள் நூல்கள் அழகாகவும், நுண்ணுணர்வு செறிந்தும், வளம் பொருந்தியும், ஓர்வித உயிர் உரமும் மேம்பாடும் கொண்டும் விளங்குகின்றன. அவருடைய நாடக நூல்களோ, உலகியலுக்குப் பொருத்தமான தலைவன் தலைவி முதலிய மக்களையும் நிகழ்ச்சிகளையும் வினைச் செலவையும் கொண்டு, பல நுட்பமான பேச்சும், சதுரப்பாடும், தூய்மையான உணர்ச்சிகளும் நிறைந்துள்ளன. அவர்தம் உரை நூல்கள் உயிர் இரக்கத்தினைத் தலைமையான உணர்ச்சியாகக்கொண்டு, ஆண் பெண் மக்களை உருப்படுத்துவதில் வியக்கும்படியான திறமை பூண்டிருக்கின்றன. இனிய செலவுடைய அவற்றின் நடையோ, பிரித்து விளக்க முடியாத ஓர் உயர்ந்த அழகுள்ளதாய் இருப்பதால், இதுகாறும், அது பிறிதொருவரால் பின்பற்ற முடியாமல் இருக்கிறது.

3. கட்டுரையின் வழி

இது 'உலகத்தின் குடிமக்கள்' என்னும் கட்டுரைத் தொகுதியில் 117–ஆவது கட்டுரையின் மொழிபெயர்ப்பு.

4. கட்டுரையின் கருத்து

கருணையில்லாத ஆட்சி இறந்துபடும் என்பதே இதன் கருத்து.

5. கட்டுரையின் சுருக்கம்

ஆசிரியர் நேரில் கண்ட ஒரு நகரத்திலே, பகற்போதில் நடைபெற்ற ஆரவாரத்திற்கு முற்றிலும் எதிராக, எப்படி இராப்போதில் அதன்கண் ஒடுக்கநிலை நிலைபெற்றிருந்தது என்பதும்; எப்படி முன்னுள்ள நகரங்களில் பல, முறையின்மையால் அழிந்து, அது போன்ற ஒடுக்கநிலையை எக்காலத்தும் தமக்கு இயல்பாக அடைந்திருக்கின்றன என்பதும்; மேற்குறித்த நகரத்தில், எப்படி அநாதைகள் பசியாலும் குளிராலும் நோயாலும் வருந்தி, பகற்காலத்து வெளிவர அஞ்சி, இரவில் கும்பல் கும்பலாய்த் தென்பட்டார்கள் என்பதும்; எப்படி முறையின்மையே அவர்களின் துன்பநிலை உண்டாதற்கும் நிலைபெற்றிருத்தற்கும் காரணம் ஆகிறது என்பதும்; அவர்களின் கொடிய துன்பத்தைக் கண்ட ஆசிரியரின் உள்ளம் எப்படி ஆற்ருது உருகியது என்பதும்; அவர்களின் அந்நிலைமைக்குக் காரணமாக இயங்கும் முறையின்மையை ஒழிக்காவிட்டால், அந்நகரமும் அழிந்தொழியும் என்று சொல்லாமல் சொல்லி இருத்தல் போன்ற பிறவும் இக்கட்டுரையின் பொருள்.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 4. நகர்க்கண் ஓர் இரவு – நகரத்தின் பகற்கால நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட அதன் இராப்போதைய நிலை.

சிந்தனை . . . ஏக்கம் – சிந்தனையுள்ளவர் . . . . ஏக்கம் பிடித்தவர்.

பக்கம் 5. நிர்ப்பந்தங்கள் – தொந்தரைகள்.

சேதம் – அழிந்த பொருள்.

பக்கம் 6. மந்திரக்கூடம் – ஆலோசனைக்கூடம்.

நச்சுயிர் – விஷமுடைய உயிர்.

அவர்களது . . . . தாழ்ந்திருக்கிறது – மக்கட்பொதுவில் மேல் நிலையிலுள்ளவர்கள் என்பவர்களுக்குள்தான் நியாயம் அநியாயம் என்பவை பேசப்படுகின்றன; கீழ்ப் படியிலிருப்பவர்களைக் குறித்து அந்தப் பேச்சே பேசுவதில்லை.

பக்கம் 7. வன்கண்ணர்கள் - கல்நெஞ்சினர்.

3. பாலை

1. ஆசிரியரது வரலாறு

'அலெக்ஸாந்தர் கிங்லேக்' (Alexander kinglake) என்னும் ஆசிரியர் இங்கிலாந்து நாட்டிலே, 1811-ஆம் ஆண்டில் பிறந்தார். அவர், பிறப்பிலேயே செல்வவான். கேம்பிரிட்ஜ் கல்லூரியில் கல்வி பயின்று, இங்கிலாந்தின் சட்டசபையில் ஒருவராகச் சிலகாலம் இருந்தார். வெளி நாடுகள் பலவற்றை விருப்பத்தோடு சுற்றிப்பார்த்தவர் அவர். 1891-இல் அவர் இறந்து போனார்.

2. ஆசிரியரது புலமை

'இயோதன்' (Eothen) என்னும் யாத்திரை நூலை 1844-இலும் 'கிரிமியப்போர் வரலாற்று நூலை' (The History of Crimean war) அவரது முதுமையிலும் அச்சிட்டனர். மேற்சொன்ன யாத்திரை நூலின் உரைநடை ஆங்கில மொழிக்குப் புதியது. பலர் இந்நடையைப் பின் பற்றினர். புதுமையாகவும், பிறர் நடையிலிருந்து வேறுபட்டதாகவும், நகை மொழியாகவும், மேலோட்டமாகவும், ஒருவகை சாமர்த்தியமானதாகவும் உள்ளது அவர் நடை. எப்பொருளையும் நகைச்சுவைபடப் பேசுவது அவரது இயற்கை. சொல் தொடர்கள் புதுவகையில் இணைந்திருக்கின்றன. அவர்தம் நடையைப் பின்பற்றுவதற்காகும் ஓர் எடுத்துக் காட்டாக ஒழிபின்றிச் சொல்வதற்கில்லை என்பது நடை ஆராய்பவரின் முடிவு.

3. கட்டுரையின் வழி

'இயோதன்' என்னும் யாத்திரை நூலின் 17-ஆவது உட்பிரிவாகிய 'பாலை' என்பதன் பொருளைத் தழுவியும், ஆசிரியரது உரை நடையின் போக்கைப் பின்பற்றியும், தமிழில் நேரே சுருக்கமாக எழுதியது இது.

4. கட்டுரையின் கருத்து

படைப்பின் எந்தக் கூறும் கடவுளது கருணையைக் குறிக்கும் என்பது இதன் கருத்து.

5. கட்டுரையின் சுருக்கம்

அரபி நாட்டின் கோடியிலுள்ள கேசா (Gaza) நகரத்திற்கும் எகிப்து நாட்டின் தலை நகராகிய கைரோவுக்கும் இடையிலுள்ள பாலை நிலத்தை ஆசிரியர் கடந்த எட்டு நாளைய செலவின் சார்பும் நேரும் ஆன விவரங்களில் முதன்மையான உணவு சேகரித்தல், யாத்திரைச் சத்திரத்தின் காட்சிகள், மேல் நாட்டார் கீழ் நாட்டாரோடு நடந்துகொள்ளும் விவகார முறை, பெடுயினர் என்ற பாலை நிலக்குடிகளின் வாழ்க்கை, பாலை நிலத்தின் நினைத்தற்கரிய சூடு, பாலை நிலப் பசுந்தரை ஆகிய இவையும் பிறவும் இதன் பொருட் போக்காகும்.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 8. பாலை - வெறும் மணல் நிறைந்த நிலப்பரப்பு.
விபரீதமான - நேர்மையில்லாத.
கரிய - வெந்து சூடான.

பக்கம் 8. கைரோ – (Cairo) எகிப்து நாட்டின் தலைநகர்.

பக்கம் 9. நுகர்ந்தாவது – தின்று கொண்டாவது.

பாலை நிலப் படகுகள் – பாலைநிலத்தைக் கடலுக்கும், ஒட்டகத்தைப் படகுக்கும் ஒப்பிட்டிருக்கிறது.

இலக்கு – குறிப்பு.

மெய்காப்பாளர் – உடம்பிற்கு ஊறு நேராமல் காவல் செய்பவர்.

பக்கம் 10. ஒப்பனை – உவமை.

கானல்நீர் – நீர்ப்பொருளாகத் தூரத்தில் தோன்றும் கானல்; பேய்த்தேர்.

கூடுபாய்ந்த – பறவைக் கூட்டைப் போல் குடைவான; உள்ளடங்கிய.

பக்கம் 11. சமயம்–மேல் நெறி; கடவுட் கல்வியில் ஏதாவது ஒரு துறை.

பேய்த்தேர் – கானல்நீர்.

கவுட்புறம் – கன்னம்.

பக்கம் 12. பாலைநிலப் பசுந்தரை - (oasis) பாலை நிலத்தின் இடை இடையே அருகிக் காணும் நீர்வளமுள்ள சிறு இடம்.

மக்கள் வாழும் வையகம் – மக்கள் வாழாப் பாலை நிலத்திற்கு எதிரானது.

---

4. ஓர் துறவியின் மக்கள் வேட்கை

1. ஆசிரியரது வரலாறு

சார்லஸ் லாம் (Charles Lamb) என்பவர் சிறப்பியல்புற்ற ஓர் ஆங்கிலப் புலமையாளர். அவர் 1775–ஆம் வருஷத்திலே, லண்டன் நகரின்கண் பிறந்தார். அவர் தந்தையார் வக்கிலிடம் எழுதுபவர். பள்ளிக்கூடத்தை விட்டவுடனே அவர் இந்தியா கம்பெனியின் தொழில் நிலையத்தில் ஓர் எழுதுபவராக அமர்ந்தார். ஆசிரியர் கோல்ரிட்ஜும் (Coleridge) அவரும் பள்ளிக்கூடநாள் முதற்கொண்டே நண்பர்கள். தம் தமக்கையார் அடிக்கடி பைத்தியங்கொண்டு வருந்தியதால், தாம் மணஞ்செய்து கொள்ளாமல், தமக்கையாருக்குத் தமது வாழ்நாள் முழுவதும் துணைநிற்கும் செயற்கரிய செயலை மேற்கொண்ட ஓர் ஆண்தகை ஆவர் அவர். 1834–இல் அவர் இறந்துவிட்டார்.

2. ஆசிரியரது புலமை

அவரும் அவர் தமக்கையாருமாக பேராசிரியர் ஷேக்ஸ்பியருடைய நாடகங்களைச் சுருக்கி உரை நூலாக அச்சிட்டனர். அவை இன்னும் பெரிதும் போற்றப்படுகின்றன. அவர், தம் வேலையினின்று

நீங்கி, உபகாரச் சம்பளம் பெற்றபின், 'லண்டன் மாகசின்' (London Magazine) என்னும் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரைகளே அவரது மிகச்சிறந்த நூல்கோவையாம். அவற்றை விவரிப்பது எளிதன்று: அவை இன்னின்ன பொருள்களைத்தான் பற்றியவை என்று பாகுபாடு செய்யக் கூடாத வகையில், அவர் உளத்தின் ஓர் சிறந்த போக்கின்படி, ஒன்றிலிருந்து மற்றொன்றினையும், அதனின்றும் பிறிதொன்றையும் அம் மூன்றுவதினின்றும் வேறொன்றையும் பிணைத்துக்கொண்டு விளங்கும். அவர் எழுதும் இவ் வகையில் அவர்க்கு முன்னுமாவது பின்னுமாவது, ஒரு புலவரும் எழுதவில்லை. அவரது உரை நடையும் இத்தன்மையதே. அவரிடத்தன்றி வேறெவரிடத்தும் இதுகாறும் காணக்கிடையாத அரு மருந்தாகும் அது. நகைச்சுவையைக் கட்டுரையின் எப்பாங்கரும் சுவைக்கலாம். இந்த வகையான நகைச்சுவையை வேறு எப்புலவர் சமைத்த எந்நூலுணவிலும் கண்டதில்லை. இச்சுவையோடு கூட ஓர் அரிய இரக்க உணர்ச்சியைக் காணலாம். இதை எப்படி அவர் விளங்க வைக்கிறார் என்பதை நடை ஆராய்ச்சியாளரும் கூட அறிந்துகொள்ளக் கூடாமல் மயங்குகிறார்கள். இவரது கட்டுரையின் சொற்களும் சொற்றொடர்களும் ஏதோ ஒரு வகையில் பழமை பட்டவைபோல் தோன்றும்; கருத்துக்களும், உணர்வுகளும், இயற்கைத் தோற்றங்கள் உள்ளிட்ட காட்சிகளும், நிகழ்ச்சிகளும், மாலைப்போதின் மங்கிய வெளிச்சத்தில் மூழ்கிக் கிடப்பனபோல், ஒருவகை இரக்கத்தினை நகைச்சுவையோடு பிணைத்தே எய்தியிருக்கும்.

3. கட்டுரையின் வழி

இது ஆசிரியரின் 'எலியாவின் கட்டுரைகள்' (Essays of Elia) என்பதனுள் ஒன்றின் (The Dream Children—a Reverie) மொழி பெயர்ப்பு. இதில் கண்ட சில ஆண்பால், பெண்பால், ஊர், பொருள், ஆகிய இவற்றின் பெயர்கள், நூற்பயன் கருதி, தமிழ்ப் பெயர்களாக மாற்றப்பட்டிருக்கின்றன.

4. கட்டுரையின் கருத்து

குழந்தைகளைப் பெற்று அவற்றோடு அளவளாவி மகிழவேண்டும் என்னும் இயல்பான விருப்பம் (பிரமசரிய விரதம் பூண்டவரையும் விடாத) பெருவன்மையுடையது என்பது இதன் முதன்மையான கருத்து என்னலாம். பிறவற்றைக் கட்டுரையை ஆராய்ந்து தெளிந்து கொள்க.

5. கட்டுரையின் சுருக்கம்

பிரமசரிய விரதம் பூண்டவர் ஒருவர் ஓர் பகற்போது (பார்வதி என்னும் தமது தமக்கையார் தம் பக்கத்தில் இருக்க) தம் நாற்காலியில் சாய்ந்து சிறிது இளந்தூக்கங் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு நேர்ந்த கனவில், தாம் இளவயதில் உண்மையில் காதலித்த 'அழகிய கருங்கண் மாதவியை'த் தாம் அரிதில் மணந்ததாகவும், சுந்தரன். மாதவி என்ற இரு குழந்தைகள் மாதவி வயிற்றில் பிறந்ததாகவும்; அக் குழந்தைகள் தங்களுடைய பாட்டியார், பெரியப்பா முதலியவர்கள்

வரலாறுகளைத் தங்களுக்குச் சொல்லும்படி தம்மை விடாது கேட்டதாக வும்; தாம், அப்படியே, அவ்விருவரின் உண்மை வரலாறுகளோடு, தமது இளமையில் தமக்கு நேர்ந்த நிகழ்ச்சிகளையும் தாம் செய்த செயல் களையும் சொல்லிக்கொண்டு வந்ததாகவும்; அவற்றை ஒரே மனதாய்க் கேட்ட சிறுவரின் உள்ளம் அவற்றில் ஈடுபட்டு, அவர்களின் வேறுபட்ட பாலிற்குத் தக்கபடி அவர்களுடைய செயல்களில் வெளிப்பட்டது ஆகவும்; பிறகு, அவர்கள் தங்கள் தாயாரைப் பற்றிய விவரத்தை அறிய விரும்பினதாகவும்—தோன்றின: பின்னர், அவ்விருப்பத்திற்கு இணங்கி அவர் அதைச் சொல்லிக்கொண்டு வரும்போது, குழந்தையாகிய மாதவி, தாயாராகிய 'கருங்கண் மாதவி' போல் தெரியவே, அவர் கனவு கலக்க முற்றதுபோலும்: கலக்கமுறலும், அக்குழந்தைகளின் தோற்றம் கரைந்து, பின்சென்று, இரண்டு துன்ப வடிவங்களாய்ச் சேய்மையில் நின்று, அவர் காதலித்த 'கருங்கண் மாதவி' சாமிநாதன் என்ற வேறொரு வனை மணந்து சென்றதால், அக்குழந்தைகள் இதுகாறும் உயிராவது பெயராவது பெறாத எண்ணங்கள் மாத்திரமாம் என்று அவை சொன் னதுபோல், தெளியும் தூக்கத்தில், அவருக்கு உண்மை புலப்படுதலும் அவர் நன்றாய் விழித்துக்கொண்டார்:--என்பவையே இதன் சுருக்கம். இக்கட்டுரையில் உண்மை வரலாறுகள் புனைந்துரைகளோடு பொருத்த முறக் கூறியிருக்கும் புலமை நுட்பம் வேறெவர் நூலிலும் காணக் கிடையாத ஓர் அருமையாகும்.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 12. துறவி – இங்கு, பிரமசரிய விரதம் பூண்டொழுகுபவர்; ஓர் மாணி.

மக்கள் வேட்கை – குழந்தைகளைப் பெற விரும்பும் இயல் பான விருப்பம்.

கேள்வியால் மட்டும் அறிந்த – நேரே பார்த்தறியாத.

அகற்றுவார்கள் – பெரிதும் தொழிற்படுத்துவார்கள்.

சிறார்கள் – சின்னஞ் சிறு பிள்ளைகள்.

மூன்றும் பாட்டி – பாட்டியின் அம்மை.

வருத்தினர் – ஒழியாது சிறு தொந்தரவு செய்தனர்.

பக்கம் 13. அப்பா – அக்குழந்தைகளின் அப்பா; வரலாறு கூறுபவர்.

சிந்து – யாவரும் எளிதில் பாடக்கூடிய ஒருவகைப் பா.

குழந்தைகளையும் . . . உட்பட – 'காட்டில் விட்ட சிறுவர்' (Children in the wood) என்ற சிந்துவின் கதை விவரம் முழுவதும்.

புகைக்கூண்டின் மீது மரத்தில் – குளிர்காலத்தை முன் னிட்டு அமைத்திருக்கும் கணப்பின் புகைப்போக்கி யின் பக்கங்களில் நேர்மைக்காக அமைத்திருக்கும் மரப் பலகைகள்; தமிழ்நாட்டின்கண், கோடைக் கானல், ஒற்றைக்கல்மந்து (Ootacamund) ஆகிய இவற்றிலுள்ள வீடுகள் சிலவற்றில் உள்ளது போன்றவற்றில்.

பக்கம் 13. முகச்சாயல் – முகத்தின் கண் விளங்கும் தோற்ற வகை
சித்திரங்கள் – அணிகள்.

பக்கம் 14. மயானக்கட்டிடம் – மதில் வரம்புகொண்ட இடுகாடு.
பிணமேடை – பிணத்தை நிலத்தில் இட்டு அதன்மேற் கட்டிய மேடை.

ஆடம்பர அம்மாள் – வெளிப் பகட்டில் தொழிற்பட்டு நிற்கும் அம்மையார்.

பொன்னிறங் காட்டும் – (பொன்னல்லாத ஒன்று பொன்னின் அழகிய வண்ணத்தைக் காட்டித் தன்னைப்) பொன்னெனக் கருதும்படி மயக்கஞ் செய்யும்.

ஒய்யாரம் – அழகற்றதும், பகட்டுள்ளதும், எனவே, தாழ்ந்ததும்.

விறலி – ஆடல் பாடல் வல்லவள்.

பக்கம் 15. செவிலித்தாய் – வளர்ப்புத்தாய்.
தேட்டை – அச்சமின்மை.
சீசர்கள்-(Caesars) இச்சிறப்புப் பெயர் புனைந்த உரோமப் பேரரசின் மன்னர்கள்.
சிலைகள் – செதுக்கிய அல்லது உருக்கி வார்த்த திட்பமான வடிவங்கள்.

சித்திரத் தொங்கல்கள் – துணிகளால் ஆய அணிகள்.
தேவதாரு – ஓர் வகை மரம்.

பக்கம் 16. நாப்பண் – நடுவில்.
சுறுசுறுப்புச் சோம்பல் பொழுது போக்குகள் – தொழிற்படுவதால் சுறுசுறுப்பு உற்றவை என்றும், விவகார முறையில், முயற்சியற்றவை பயனற்றவை என்று கருதப்படுமாகையால் சோம்பல் கொண்டவை என்றும் குறிக்கக்கூடிய செயல் வகைகள்.

பக்கம் 17. உளவன்மை – அஞ்சாமை.
பராமரிக்கவாவது – ஆதரிக்கவாவது.
பட்சம் – உருக்கம், நேயம்.
தாறுமாறும் – பிடிவாதங்களும் சச்சரவுகளும்.
பூசல் – சண்டை.

பக்கம் 18. சத்திரம் வைத்தபோது – நோய் தீரும்பொருட்டு, நோய் கொண்ட காலை அறுத்து எடுத்துவிட்டபோது.

துன்பக் கோலம் – தீவினை நாட்போது மேற்கொள்ளும் துயரங் குறிக்கு உடல் தோற்றம் உடை முதலியன:

மறுத்தல் – உளத்தில் ஒத்துக்கொண்டதைப் பேச்சிலும் செய்கையிலும் வெளிப்பட ஒத்துக்கொள்ள முடியாதிருக்கிற ஓர் நாணநிலை: கன்னிகைகளிடத்துக் காணக்கிடப்பது.

பக்கம் 18. உயிரே என – ஆன்மச்சாயலே என.
மறுதோற்றம் – சாயல்.

உயிர் ஆற்றின் கரை – (Shores of Lethe) இங்கு, உயிருள்ளவற்றை ஓடும் நீராகவும், உயிர்பெறும் தன்மையுள்ள வித்துக்கள் என்பவற்றை ஆற்றின் பாங்கருள்ள இயங்காப் பொருள்களாகவும் கொண்டிருக்கிறது.

பக்கம் 19. பிரமசாரி நாற்காலி – ஒருவர்மட்டுமே இருக்கக்கூடிய நாற்காலி.

---

5. மூவர் துயர மகளிர்

1. ஆசிரியரது வரலாறு

ஆசிரியர் தாமஸ் டிகுவின்சி (Thomas De Quincey) இங்கிலாந்திலே, மான்செஸ்ட்டர் நகரத்திலே, 1785-இல், பிறந்தார். அவர் தந்தையார் ஓர் வணிகர். அவர் இளமையிலேயே தமது தந்தையை இழந்துவிட்டார். தந்தை பின்விட்டுப்போன செல்வத்தை, அவர், புலவர்களுக்குக் கொடுத்தும், எதிர்கால ஊதியத்தைக் கருதிச் செலவிட்டும், எத்தொழிலையும் மேற்கொள்ளாமலிருந்தும் போக்கடித்துக்கொண்டார். கல்லூரியில் கல்வி கற்றும் அவர் பட்டம் பெற்றாரில்லை. 1816-இல் அவருக்குக் கல்யாணம் ஆயிற்று. அவர், அபினி அருந்தும் கொடிய பழக்கத்தைக் கைக்கொண்டு அதனால் பெரிதும் இடர்ப்பட்டார். 1859-இல் அவர் இறந்தனர்.

2. ஆசிரியரது புலமை

'தமது வாழ்க்கை வரலாறு' (Autobiography),'அபினி அருந்தும் ஒருவன் அநுபவங்கள்' (The Confessions of an English Opium Eater) என்னும் நூல்களை அவர் 1821-க்கு முன்னமேயே வெளியிட்டுவிட்டனர். அவர் மிக்க ஆழ்ந்தும் பரந்தும் கற்றவர். ஆசிரியர் எமர்சன், அவரை மிக மிக உயர்ந்த மரியாதைப் பழக்கம் உடையவர் என்று கூறுவர். அவர் 40 வருஷங்கள் ஒழிவில்லாது எழுதிய நூல்களின் வழியாக நல்ல வரும்படி வந்தும், அவர், விவகாரத் துறைகளைப் பொருட்படுத்தாததால், அது அவருக்குப் பெரிதும் பயன்கொடாமலே ஒழிந்தது. பல பொருள்களைப்பற்றி அவர் எழுதியவற்றைத் திரட்டின நூல் ஆங்கிலத்திரட்டு நூல்கள் முழுவதிலுமே மிகப்பெரியது. அவர் ஐயம் திரிபு இன்றிக் கற்றவர். வரலாற்றைத் தாம் கண்ட ஓர் சிறந்த வகையில் கூறுவர். ஒருவித நகைப்புச் சுவை அவரிடம் உண்டு. எடுப்பற்றது என்று சொல்லும்படியான மிக்க மேம்பாடான உரை நடை அவருடையது. 'மூவர் துயர மகளிர்' (The Three Ladies of Sorrow) உள்ளிட்ட அவரது நூல்களிற் சில ஆங்கில உரை நூல்களில் முதன்மையானவை என்று போற்றப்படுகின்றன. 18-ஆம் நூற்றாண்டில் வழங்கி

வந்த எளிய உரை நடைக்கு எதிர்ப்பட்ட அணிச்செறிவுள்ள உரை நடையை அவர்தான் முதல் முதல் தொடங்கினர். கனவில் கண்ட நிகழ்ச்சிகளைக் கூறுமுகத்தான் இம் மேம் பாடான நடையை உருப்படுத்தினர் அவர்.

3. கட்டுரையின் வழி

இது, 'அபினி அருந்தும் ஒருவன் அநுபவங்கள்' என்னும் நூலின் புறவுரைகளில் ஒன்றின் மொழிபெயர்ப்பாகும். முதல் கட்டுரையிலுள்ள கிரேக்கர் முதலியவரது புராணத்தில் கண்ட கதைகள், பெயர்கள், மேல் நாட்டாரது அரசியல் விவரங்கள், சில பொருட்பெயர்கள் ஆகிய இவற்றை, விளக்கங்கருதி, நம் நாட்டில் வழங்கும் புராணங்களில் கண்ட கதைகளாகவும், பெயர்களாகவும், அரசியல் விவரங்களாகவும், பொருட்பெயர்களாகவும் மாற்றி எழுதி இருக்கிறது.

4. கட்டுரையின் கருத்து

துயரம் இன்னின்ன தன்மையது என்று அறிவிப்பது இதன் நோக்கம்.

5. கட்டுரையின் சுருக்கம்

உலகத்தில் மக்கட் பிறப்பினரின் துயரங்களை மூன்று பிரிவாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு அரசியாகவும், அந்தந்த வகைத் துயரத்தால் வருந்துபவர்களை அவ் அவ் அரசிகளின் குடிமக்களாகவும் உருவகப்படுத்தி; அவ் அரசிகளுக்கு முறையே, கண்ணீர் அம்மை என்றும், தேம்பல் அம்மை என்றும், பேரிருள் அம்மை என்றும் காரணப்பெயர்கள் இட்டு; சந்திரமதி, துரோபதை, ஒரு குருட்டுப் பிச்சைக்காரக் கிழவன், ஓர் ருஷ்ய சக்ரவர்த்தி ஆகிய இவர்கள் போன்றவர்களைக் கண்ணீர் அம்மையின் குடி மக்கள் என்றும்; பறையர், யூதர், இடைக்கடலில் கடுமையான வேலை செய்யும் மேல் நாட்டுக் குற்றவாளிகள், அந்தமான் தீவுக்கனுப்பப்படும் இந்நாட்டுக் குற்றவாளிகள், தான் கொலைசெய்து புதைத்தவனது பிணமேடையைக் கண்டு ஆறாத் துயரங்கொள்ளும் கொலையாளி, அடிமைகள், கைம்பெண்டிர், கன்னிமாட இளந்துறவிகள் சூத்திரர் ஆகிய இவர்களைப் போன்றவர்களைத் தேம்பல் அம்மையின் குடி மக்கள் என்றும்; பயித்தியம் கொண்டவர்களையும் தற்கொலையாளர்களையும் போன்றவர்களைப் பேர் இருள் அம்மையின் குடிமக்கள் என்றும் எடுத்துக் காட்டுவது இதன் போக்கு.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 19. துயரமகளிர் – துன்பப்படும் மக்கட் பிறப்பினரின் அரசிகள் ; துயர வகைகள்.

மூவர் துயர மகளிர் – துயரத்தின் மூன்று பிரிவுகள்.

எனக்கு – ஆசிரியர்க்கு ; ஆசிரியர் பலவகையில் துன்பப்பட்டவர்.

மாயமான – அறிதற்கரிய.

ஒரே குடி - துயரம் என்னும் முதல்.

பக்கம் 19. நாமகள் – (Levana, the Roman Goddess of Education) கல்விக்குரிய தெய்வம்; சரஸ்வதி; கல்வியாளர் பெரும்பாலரும் வறுமையால் துன்புறுவது தெரிந்தது. கற்றதனுலாய பயனை அடைந்தவர்கள் உலகியலில் விளக்கமுறுவதற்குப் பெரும்பாலும் வேண்டப்படும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் செய்கைகளையும் கைக்கொள்வதற்கு ஒருப்படார் ஆகையால், அவர்கள் உலகியலில் அநேகமாய்த் தாழ்வடைந்தே இருப்பார். "இருவேறு உலகத்தியற்கை திருவேறு தெள்ளியராதலும் வேறு" என்ற தேவர் குறளும் இதனையே குறிக்கும் அன்ருே.

மாயாவிகள் – இருப்பதுபோல் தோன்றும் ஆவிகள்; மக்கள் அளவளாவுதற்கு ஏலாத வெறுந் தோற்றங்கள்; மாயை செய்பவர்கள்.

மொழியின் . . . இகழ்கின்றனர் – பேசுதலாகிய ஓர் குறைவினை மேற்கொள்ளார்.

பண்ணுமை – பழந் தமிழ் நாட்டின் ஓர் இசைக் கருவி.

மறைகள் – இரகசியங்கள், உள்ளுறைகள்.

பக்கம் 20. விண்ணிலுள்ள குறிகள் – தூமகேது தோன்றலும், கோள்களின் அச்சந்தரும் நிலைகளும், பிறவும்.

தரையின் . . . மாறுபாடுகள் – நில அதிர்ச்சி, நெருப்புமழை முதலியவை.

எவரும் . . . திவலை–பிறர் எவரும் காணுது கொலைபுரிந்து, மறைவான ஆற்று நீரில் போடப்பட்ட மக்கள் உடம்பு முழுகிப் போவதால் அவ்வாற்று நீரில் உண்டான சிறு அலைகள்.

இருட்டில் . . . விருதுகள் – பொதுமக்களின் கண் காணுது, இரவில் நடந்தேறி, மறைக்கப்பட்ட (துயரத்தின் வெற்றிக்கொடிகள் ஆகும்) கொடுஞ்செயல்கள்.

தலையோட்டில் . . . மொழி – சுடுகாட்டில், இன்னுனுடையதென்று அறியக்கூடாத ஓர் தலையோட்டினைக் கண்டவிடத்து—ஒநி அறிபவர், உத்தியால் அத்தலை ஓட்டினன் இன்னின்ன துன்பங்களை அநுபவித்தான் என்று அறிவதற்குக் கருவியாக உள்ள அவ் ஓட்டில் காணும் எழுத்துக்கள் போன்ற வரி வடிவங்கள்.

விபரீதமாக – தெளிவில்லாமல், மிகச் சிக்கலாக.

தந்தி பேசினர் – கம்பிவழியாய்ப் பேசுவதுபோல், பேசாது பேசினர்.

பொல்லாச் சூழ்ச்சி – மக்களுக்கு நிகழவிருக்கும் துன்பங்களைக் குறித்த முன் ஏற்பாடு.

பக்கம் 20. இருட்கண்ணுடி . . . கண்டறிந்தன – வெளிச்சத்தில் உள்ள பொருள்களையும், நிகழும் நிகழ்ச்சிகளையும், மனநிலைகளையும் எல்லாரும் அறிவது போல், மறைந்து கிடக்கும் நிகழ்ச்சிகளையும், பொருள்களையும் உள்ள நிலைகளையும் நுண்ணறிவுடைய புலவர், தம் துன்ப அநுபவத்தையும் பிறவற்றையுங் கொண்டு கண்டார் என்க.

குறிகள் . . . என்னுடையன – சிற்சிலவற்றைக் கொண்டு, ஆசிரியர், பிறர் உணருமாறு, பின் வரும் சொற்களால் கூறுகிருர் என்பது.

வரம்பிலும் . . . வடிவம் எனில் – கோடிட்டுப் பெரும்படியாகக் கூடக் காட்ட முடியாதவைகளை வடிவங்கள் என்று வைத்துக் கொள்வோம் ஆனல்; உருவம் இல்லாதவற்றை உருவம் உள்ளனவாகக் கொள்வோம் ஆனல்.

எப்போதும் . . . சந்நிதி எனில் – நிலையாய் ஓரிடத்தில் விளங்காது முன்னும் பின்னுமாக இயங்குவதைத் திருமுன் என்று கொள்வோம் ஆனல்; அருவத்திற்கு இடம் குறிக்கக் கூடுமானல்.

மூத்தவள் – பெரியவள்; பெரும்பாலருக்குத் தெரிந்தவள்; பெரும்பான்மையாய் நிகழும் துயரம்.

கண்ணீர் அம்மை – கண்ணீர் பெருக்கித் துன்புறுவது பெரும்பான்மையான துயரத்தின் செயலாதலால், அதைத் துணைக் கொண்டு, அவ்வகைத் துன்பத்திற்குப் பெயரிட்டிருக்கிறது.

மறைந்த முகங்கள் – இறந்தவரின் முகங்கள்; அவற்றில் விளங்கிய அன்பும், அழகும், ஆற்றலும் அவற்ருேடு தரையில் புதைக்கப்பட்டு அழியாது மறைந்து மட்டும் போயின என்பது.

சந்திரமதி . . . இருந்தாள் – Rachel weeping for her children in Rama.

சந்திரமதி . . . காசி – காசிநகரின்கண் சந்திரமதி, தன் பிள்ளையையும் அவனேடு தன் மன அமைதியையும் இழந்திருந்தபோது.

துரோபதை . . . அவளே – Herod's sword swept Bethlehem's nurseries of innocents; பாரதக் கதையின் நிகழ்ச்சி இங்கே சிறிது திரித்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அரண்மனை . . . ஓசை – குழந்தைகள், மேல்மாடியில் இருந்து, தளர் நடை பயில்வதினு லுண்டாகும் ஓசை.

பக்கம் 20. விண்ணுலகில் குறிக்கத்தவருத – தாயின் அன்புநிகழ்ச்சிகள் பெருண்மை வாய்ந்தன ஆகலால், அவை எப்போதும் வானோரால் விரும்பி அறிந்து கொண்டாடப் படுகின்றன என்பது.

அன்புநாடி – உள உருக்கம்.

அவ் அன்னை – துரோபதை.

அடிகள் . . . விறைத்தபோதும் – தாயின் அன்பு நிகழ்ச்சிக்கு உரிய காரணங்களில் ஒன்றான குழந்தைகளின் தளர் நடை இனி ஒரு போதும் நடைபெறாத படி, அக்குழந்தைகள் இறந்தபோதும்.

குருக்ஷேத்திரம் – பாரதக்கதையில் கண்ட இடம்.

மேகங்கள் . . . உயர்ந்தும்–துயரத்தின் மிகுதியை உயரங்காட்டிக் குறித்திருக்கிறது.

விண்ணுலகங்களை அறை கூவியும் – தேவர்களையும் கடவுளையும் ஓரக்காரர் வஞ்சனையுள்ளார் என்று அஞ்சாது பழிகூறியும்.

பக்கம் 21. மகுடம் – அரசி என்பதன் அறிகுறி.

கடவுள் . . . தேம்புதலையும் – வழிபடுபவர், தாம் செய்த குற்றங்களை நினைந்து நினைந்து வருந்துவதையும்.

கோடைகால மேகங்கள் – திடீரென்று உண்டாகவிருக்கும் துன்பங்களின் வித்துக்களுக்கு ஒப்பனை.

வேற்று நாடுகள் – மேற் சொன்னவை நடைபெறும் நாடுகள்.

காற்றின் மீது . . . செய்து – விரைவாய்.

ஒவ்வொரு . . . திறக்கக்கூடியதும் – ஏழைகளின் வீட்டிலும், அரசரின் அரண்மனையிலும் துயரம் உண்டு என்பது.

வானுலகம் . . . திறவுகோல் – இன்பத்தைக் காட்டிலும் துன்பமே அதிக விரிவுடையது என்பது; தீக்ஷா மந்திரத்தால் இன்ப உலகத்தையும், துயரால் துன்ப உலகத்தையும் மக்கள் காண்பார் என்று கொள்க.

அவளுடைய . . . அலர்ந்து கொண்டிருக்கும்போது– அவளது பெண்மை முதிர்ந்து வரும்போது.

அழைத்துக்கொண்டார் – இறந்து விட்டாள்.

துயர இருளின் . . . வெளி இருளை – துயரம் பேர் இருளாகவும், அதன்கண் குருடாலான வெளி இருள் சிறுமையுற்று நிற்பதாகவும் கூறியிருக்கிறது.

பக்கம் 21. இப்பெண் போலவே . . . உட்கார்ந்திருந்தவளும் – 1845-ஆம் வருஷத்தில் ருஷ்ய சக்ரவர்த்தியாகிய சார் இறந்த தமது மகளை நினைந்து நினைந்து வருந்தினர் என்பது.

பக்கம் 22. நைல் – எகிப்து நாட்டிலுள்ள ஓர் பேராறு.

மிசிசிபி – அமெரிக்கா நாட்டிலுள்ள ஓர் பேராறு.

பெரு மூதாட்டி – பெருமை பொருந்திய மூத்தவள்.

தேம்பல் அம்மை – வெளிச்செயல் குறைவுபட்டு மனத்திலேயே புழுங்கும் துயரவகை.

மேகங்களை . . . செய்யாள் – இவ்வகைத் துயரம் வெளி அலங்கோலமும் விரைவும் அற்றது.

அவளுக்கு . . . இல்லை – எந்தவகை உயர்வும் இல்லை; துயரம் என்றே பிறர் இரங்கார்.

அழியும் . . . பிதற்றலாலுமே – விவகார மற்றது, அறிவற்றது என்பது.

கண்களை . . . இல்லை – பரிகாரம் இருக்கிறது என்ற நம்பிக்கை இல்லை.

பக்கம் 23. யூதர் - கிறிஸ்தவரால் இழிவாக நடத்தப்படும் ஓர் வகுப்பினர்.

இடைக்கடல் – (Mediterranean Sea) ஐரோப்பாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையிலுள்ள கடல்.

தண்டனை···அடிமைகள் – ஆயுள் உள்ள வரையும் நிர்ப்பந்தமான வேலை செய்யுமாறு தண்டிக்கப்பட்டவர்கள்.

ஞாபகப் புத்தகங்கள் – தாய் நாட்டவரின் நினைவு.

ஈட்டின் பொருட்டாவது – பிரதியாக; பரிகாரமாக; செய்துவிட்ட கொடுமைக்கு ஒரு வகையில் பரிகாரமாகச் செய்யத் தோன்றும் நன்மையின் பொருட்டாவது.

காவு – பலி.

பீடிகை – பலிபீடம்; காவு கொடுக்கும் மேடை.

தான் வேண்டிக்···கொலையாளிக்கும் – ஒருவனை மறைவில் கொலை புரிந்து, அவன் உடலை ஓரிடத்தில் புதைத்து, பின்னர் அக்கொடுஞ் செய்கைக்காக வருந்தி, ஒருவித பரிகாரமும் செய்ய முடியாமற்படியும், அவனிடம் மன்னிப்பும் பெறமுடியாதபடியும் இருந்து, அவன் பிணமேடையைப் பலிபீடமாகக் கருதி வெளியில் சொல்லாது வருந்தும் ஒருவனுக்கும்.

பொது அன்னை – யாவருக்கும் உணவளிக்கும் தாய்.

மாற்றாந்தாய் – போதுமான உணவளிக்காமல் வேலை மட்டும் இடும் மாற்றாந்தாய்.

பக்கம் 23. மாநில மடந்தை – பூமிதேவி, தரை.
நமக்கு···வேதம் – அறிவுறுத்தும் வேதங்களைக் கீழ்வகுப்பினர் காதாலுங் கேட்கக்கூடாது என்பது.

பக்கம் 24. கடவுளரால்···பெண்துறவி – சிறுபோதில் சுற்றத்தாரால் கன்னிமாடத்தில் விடப்பட்ட பெண்டிர்.

கிருஷ்ணமூர்த்தியின் பெருவடிவக் காட்சி – (Cybel's head) கிருஷ்ணமூர்த்தியின் விசுவரூபக்காட்சி.

அவைகள்···இருப்பதால் – அவைகள் நெருப்புப் போல் கொழுந்து விட்டு எரிவதால்.

மும்மடிப்பு மென்துணி – முகத்திற்குக் காப்பாக அணியும் வலைத்துணி.

பக்கம் 25. ஆற்றலின் வேர்கள்···உள – இவ்வகைத் துயரம் உயிருக்கே கேடு விளைக்கும்.

வாழ்வின்···நம்பிக்கைகள் – கடவுள் உண்டு, அவர் அருள் வடிவினர் என்பனபோன்ற உண்மைகள்.

பேரிருள் அம்மை – கடுந் துயரவகைகள்.

---

6. ஆசிரியர் ஹைனே அவர்களின் ஓர் திருமுகம்

1. ஆசிரியரது வரலாறு

1799-இல் ஜெர்மனி நாட்டிலே, டுஸ்ஸல்டோர்பு என்னும் நகரிலே, ஆசிரியர் ஹென்ரிக்ஹைனே அவர்கள், பொருளற்ற ஓர் யூதர் குடியில் பிறந்தார். சில இடங்களில் கல்வி கற்றபின் 1820-இல் அவர் பெர்லின் நகரில் இருந்து, தத்துவநூல் கரைகண்டவரான பேராசிரியர் ஹேகல் அவர்களிடம் தத்துவநூலைப் பாடங்கேட்டறிந்தார். 1822-இல் 'இளமையின் துன்பங்கள்' என்னும் செய்யுள் நூலும், 1823-இல் இரண்டு நாடக நூல்களும் அவர் வெளியிட்டார். சட்ட நூல்களில் வல்லவராகி 1825-இல் அவற்றில் பெரும்பட்டம் பெற்றார். அந்த ஆண்டிலேயே அவர் கிறிஸ்து சமயத்தை மேற்கோண்டார். 1826 முதல் 1831 வரையில் 'யாத்திரைப் படங்கள்' என்பதைப் பாதி செய்யுளாகவும் பாதி உரையாகவும் அச்சிட்டனர். 1830-இல் நேர்ந்த குடியரசுக் குழப்பம் அவர் மனத்தை ஒருவகையில் திருப்பிவிடவே, அதன் பிறகு, அவர், அரசியல் துறைகளில் தலையிட்டுப் பத்திரிகைகளுக்கு எழுதிவந்தார். 1831-ஆம் ஆண்டு, அவர் பிரஞ்சுநாட்டுத் தலைநகராகிய பாரிசுக்குப்போய் அங்கேயே கடைசிவரையில் தங்கிவிட்டார். அவருக்கு ஜெர்மன் மொழியில் இருந்த வல்லமை பிரஞ்சு மொழியிலும் இருந்தது. அவரது பெயர்பெற்ற உரைநூல்கள் எல்லாம், பிரஞ்சு நாட்டில்தான் எழுதப்பட்டன. 1841-க்குப் பிறகு அவர் கல்யாணம் செய்துகொண்டார். 1844-இல் 'புதுப்பாட்டுக்கள்' என்னும் திரட்டு வெளிவந்தது. 1848-இல் அவர் பாரிச வாய்வு என்னும் கொடும்

பிணிகொண்டு, உடம்பை நகர்த்த முடியாமற்படியும் கண்ணிமை மூடியபடியும் எட்டு வருஷம் படுக்கையிலேயே கிடந்து 1856-இல் உயிர் துறந்தார். இப்படிக் கடுநோய் கொண்டிருந்த காலத்தும், பல செய்யுள் நூல்கள் புனைந்தும், தமது நூல் ஒன்றினைப் பிரஞ்சுமொழியில் பெயர்த்தும் அச்சிட்டனர். கடைசிவரையில் தமது மின் போன்ற அறிவு நுட்பத்தையும் பரந்த கல்வியையும் இழவாமலே இருந்தார். ஜெர்மனியிலிருந்த தமது தாயார்க்குத் துயரம் விளைக்க அஞ்சி, தாம் இறக்கும் வரையில் தாம் உடல் நலத்தோடு இருப்பதாகவே எழுதி வந்தார் அவர்: என்னே மகன் அன்பு!

2. ஆசிரியரது புலமை

ஜெர்மனி நாட்டில், புலவர் பெருமானுன கேட்டேய்க்கு அடுத்த புலவர்தகை இவரே. இவரது பெரும்புலமையும், அரிய அறிவு நுட்பமும், யாவரையும் ஒப்பநோக்கும் தன்மையும், போலிப்பழக்க வகைகளையும், முறையற்ற அரசியல் நடவடிக்கைகளையும் கண்டித்து வீழ்க்கும் ஆற்றலும், அருமையான கல்விப்பெருக்கும் ஐரோப்பா கண்ட முழுவதிலும் போற்றப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இணையற்ற நுண்ணறிவாளர் என்று அக்கண்டத்தின் எப்பாங்கரும் புகழப்பட்டார். இவர் ஒரே காலத்து, விருப்புள்ளவராகவும் வெறுப் புள்ளவராகவும், நம்பிக்கை கொண்டவராகவும் நம்பிக்கை அற்றவ ராகவும், இரக்கமுள்ளவராகவும் இரக்கமில்லாதவராகவும், நயமானவ ராகவும் குறும்புரைப்பவராகவும், அமைதியுள்ளவராகவும் ஆத்திரப் படுபவராகவும் இருப்பதான ஓர்வகைச் சிறப்பியல்பை இவரது நூல்கள் குறிக்கின்றன என்று இவர் நாளைய புலவர்களே எழுதியிருக் கிறார்கள். மிக உயர்ந்த தெளிவும், பொருளுக்குத் தகுந்த சொல்லோ சையும், உயர்ந்த அழகும் விளக்கமும் நிறைந்த கருத்துக்களும், உணர்ச்சிகளும், தாழ்ந்தவற்றைத் தலைகாட்டாது மறையும்படி இகழும் இகழ்ச்சியும் இவரது உரையின் சிறப்புக்களில் சிலவாம். எதையும் நேரே பார்ப்பதுபோல் வடிவுபடுத்திச் சுருங்கக்கூறுவது இவருக்கு மிக்க எளிதில் கைவந்தது. பொன் பூவிற்கு நறுமணம் வாய்த்ததுபோல், இவரது உரை அறிவையும் நுண்புலனையும் வரிக்கு வரி ஈர்க்கும் தன்மையது.

3. கட்டுரையின் வழி

"ராஸ்ஸினியும் மேயர்பியரும்" (Rossini and Meyerbeer) என்ற ஜெர்மன் கட்டுரையை எலிஸபெத் எ. ஷார்ப் என்பவர் ஆங்கிலத் தில் மொழிபெயர்த்திருக்கிறார். அதில் ஓர் பகுதி இங்குத் தமிழில் ஆக்கி யிருக்கிறது.

4. கட்டுரையின் கருத்து

இசை இன்னின்ன தன்மைகள் உடையது என்கிற விவரமே இதில் உள்ளது.

5. கட்டுரையின் சுருக்கம்

இசை, அகப்பொருளுக்கும் புறப்பொருளுக்கும் இடையில், அவற்றை ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும் பொதுத் தன்மையை உடையது என்றும்; இசையைத் தர்க்க முறையாகச் சீர்தூக்கிப் பார்க்க முயல்வது அறியாமையே என்றும், அநுபவ முறையாக அதன் நயத்தைக் காணுதல் வேண்டும் என்றும்; ராஸ்ஸீனியின் இசை, ஓர் தனித்த ஆன்மாவின் இசை என்றும்; மேயர்பியரது இசை மக்கட் பொதுவின் இசை என்றும்; ஆசிரியர் ஜெர்மனி பிரஞ்சு ஆகிய நாடுகளின் அரசியலைச் சார்ந்த பொது விவகாரங்களில் தொழிற்பட்டார் எனினும், அவரது உள்ளம் அப் பொது நிகழ்ச்சிகளில் ஒருபோதும் மூழ்கிப் போகவில்லை என்றும்; ஆகவே, அவரைப்போன்று தனிப்பட்ட ஆன்மாக்களின் இன்பதுன்பத்திற்கு ஏற்றது ராஸ்ஸீனியின் இசையே என்றும்; பிரஞ்சுநாட்டுக் குடியரசுக் குழப்பம் போன்ற காலங்களுக்கும், மன்னர் மன்னனை நெப்போலியனது படைகள் போன்றவைகளுக்கும் மிகப் பொருத்தமுடையது மேயர்பியரது இசையே என்றும் இக் கட்டுரை கூறும்.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 25. திருமுகம் – கடிதம்.

இசையின் வெறும் இருப்பு – இசை என்று ஒன்று இருத்தல்.

ஆளுகை – செல்வாக்கு, பரப்பு.

பொருள் – அணுக்களாலாய பொருள்.

பக்கம் 26. கூட்டு இயைபு – இரண்டு வேறுபட்ட பொருள்களை அல்லது நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தும் இடைப் பொருள் அல்லது இடைநிகழ்ச்சி.

ஆன்மவிளக்கம் – அறிவின் ஒளிநிலை.

இசை-நயம்-காணல் – இசைவகைகளின் வெவ்வேறு சிறப்புக்களைச் சீர்தூக்கிப் பிரித்துக்காட்டல்.

கூட்டிப்பார்க்கும் அறிவின்முறை – மொத்தமான நிகழ்ச்சியை முதலில் பிரித்துப் பல கூறுகளாக ஆக்கிய பின், அவற்றில் சிலவற்றைக் கூட்டிப் பயன்காணும் ஓர் முறை.

அவற்றின் உவமைப் போலிகள் – அவற்றை ஒத்திருக்கின்றன என்று காணும் பிறபொருள்களும் நிகழ்ச்சிகளும்.

மொத்த உணர்ச்சி – பிரிவுபடாது நிற்கும் உணர்ச்சித் தொகுதி.

முதற்கொள்கை – அடிப்படையான கோட்பாடு; இதனினும் பரந்த கோட்பாடு இல்லை என்னும்படியாக விரிந்த கோட்பாடு.

பக்கம் 26. கோட்டுத் தொகுதி – பெரும்படியாக ஓர் வடிவத்தைக் கோல்வதற்காகும் கோடுகள்.

பிரித்து - ஆராயும் - முறை – கூட்டிப்பார்த்தற்கு முந்திய முறை.

சீர் தூக்குதல் - உயர்வு தாழ்வு கருதி ஊன்றிப்பார்க்கும் முறை.

பயிற்சிநூல் – நேரே செய்துபார்க்க வேண்டியவற்றைக் கொண்ட நூல்.

பக்கம் 27. தர்க்க வழி–செய்துபார்த்தல் அற்ற வெறுங் காரண காரியப் பேச்சுமுறை.

சங்கேதச் சொற்கள் - குறிப்பு அல்லது குழூஉக்குறிச் சொற்கள்.

சொற்கோவை - சொற்களாலாய கொடி; சொற்களை முன்னும் பின்னும் வரிசைபடக்கொண்ட ஓர் வெறுமை.

டெட்மால்டு - (Detmold) ஓர் ஓவியப்புலவர்.

ஓவியம் - துணியில் அல்லது பிறவற்றில் நிறவேற்றுமைகளைக் கொண்டு வடிவம் தீட்டும் புலமை.

கைந்நூல் - சிறு நூல்.

இரண்டு அர்த்தமுடைய சொற்கள் - நேராகப் பொருள் கொண்டால் ஓர் அர்த்தமும், மற்றோர் வகையில் பொருள் கொண்டால், கேலியான அர்த்தமும் தரும் சொற்கள்.

நோட்டம் - நுட்பமான ஆராய்தல்.

மார்சேல்ஸ் (Marseilles) ஓர் பிரஞ்சு நகரம்.

பிற நாடுகள் - பிரஞ்சல்லாத மற்றைய நாடுகள்.

ஊர்ப்பேச்சு - ஓரிடத்தில் மக்களில் பெரும்பான்மையோர் விரும்பிப் பேசும் பேச்சு.

இத்தாலிய நாடு - (Italy) ஓர் மேல் நாடு.

ராஸ்ஸினி - பெயர் பெற்ற ஓர் இசைப்புலவர்.

பசையற்ற - உணர்வற்ற.

மேயர்பியர் - ஓர் பேரிசைப்புலவர்.

பக்கம் 28. பார்பியர் - 'Le Barbier de Seville'.

தொடர்கள் - சொற்றொடர்கள்.

இசை நாடகம் - பாடும் சமயங்கள் மிகப் பல்கியும் ஆடும் சமயங்கள் மிகக் குறைந்தும் உள்ள ஓர் கூத்து நூல்.

பக்கம் 28. கனவெளி - கனவில் காணும் நிகழ்ச்சிகளுக்கும் பொருள்களுக்கும் ஆதாரமாக நிற்கும் இடம்.

பக்கம் 29. என் காளைய ...... நேர்ந்தது - ஆசிரியர் அரசியல் நடவடிக்கைகளில் தொழிற்பட்டதைக் குறிக்கிறது.

வீரர்கள் - அரசியல் நிபுணர்கள்.

உணர்ச்சிகள் - அன்பு, உருக்கம், பகை, கோபம் போன்றவை.

போர்ப்புரவி - சண்டைக்காலத்துச் சவாரி செய்யும் குதிரை. இங்கு, ஆசிரியர் அச்சமில்லாமல் தொழிற்பட்டார் என்பதைக் குறிக்கும்.

துருக்கியர் - துருக்க நாட்டினர்.

கணச்சுற்றுக்கள் - எண்ண அளவேயான படைச்செலவுகள்.

டேனிசு நாடு - (Denmark) ஓர் மேல்நாடு.

ஓகியர் - Ogier, the Dane.

பக்கம் 30. நேர்மொழி - சுற்றற்ற சொல்.

தனியிசை - சிக்கலற்ற பண்.

கொழித்தல் - மேலுமேலும் ஒரே பான்மையாய் ஒன்றன் பின் ஒன்ருய் வருதல்.

இயைந்து செல்லும் - பொருந்தி மேற்பாயும்.

கூட்டிசைச் செல்வம் - பல்வகையான இசைக்கூறுகள் இனிமையாக ஒன்றுசேர்ந்து இயங்கும் ஓர் மேம்பாடு.

அகப்புறத் துன்பங்கள் - வெளி உலகத்தில் காணக்கிடக்கும் துன்பங்களும், உள்ளத்தில் சிறைப்பட்டு, சொன்னலன்றிக் காணக்கூடாத துன்பங்களும்.

ஆன்மச் சச்சரவுகள்- எடுப்பற்ற பெரு நம்பிக்கைகளைப்பற்றி உண்டான ஐயுறவுகள்.

குடியரசுக் குழப்பம் - (French Revolution) குடியரசை, பிரஞ்சு நாட்டில், முதன் முதல், நாட்டுவதற்கு முன் உண்டாகிய குழப்ப நிலை.

மல்லுகள் - உயிரை ஒட்டிய போர்கள்.

பக்கம் 31. ராப்ஸ்பியர் - Robespierre.

பெஸாரோ - (Pesaro) இத்தாலி நாட்டிலுள்ள ஓர் நகரம்; ராஸ்ஸினி பிறந்த இடம்.

பெஸாரோ......அன்னமே - புலவர்களை அன்னம் என்று அருமையாக அழைத்தல் மேல் நாட்டாரின் நூல் வழக்கு.

காலிக் நாட்டின் சேவல் - காலிக் என்னும் பிரஞ்சு நாட்டின் ஓர் பகுதியில் பிறந்தவராகிய ராப்ஸ்பியர்: வெற்றி கொண்டவரைச் சேவல் என்று குறித்திருக்கிறது.

பேரரசின் வல்லூறு - நெப்போலியன்.

ஜுலைமாதக் குழப்பம் - (The July Revolution) பிரஞ்சு நாட்டின் பெயர்போன அரசியல் குழப்பம்:

பக்கம் 31. தனித்த உணர்ச்சி - ஒருவனது உள்ளத்தில் உண்டான உணர்ச்சி; பிறர் தொடர்பற்றது.
ராபர்ட் - (Robert Le Diable) ஓர் இசைநாடகம்.
ஹ்யூஜ்னுட்ஸ் - (Les Huguenots) ஓர் இசை நாடகம்.
பக்கம் 32. கேடயம் - வாளைத் தடுப்பதற்காகும் வட்டமான போர்க் கருவி.
கொற்றம் - வெற்றி.
இத்தாலிய இதழ்கள் - இத்தாலி நாட்டினர் மென்மையும் அழகும் வாய்ந்த இதழினர்.

---

7. ஆன்ம உருக்கம் ஈன்ற அறநிலை

1. ஆசிரியரது வரலாறு

லியோ டால்ஸ்ட்டாய் பிரபு (Count Leo Tolstoy) ருஷ்யா (Russia) தேசத்திலே, மாஸ்கோ (Moscow) நகருக்கருகிலே, யாஸ்னயா பால்யானு (Yasnaya Polyana) என்னும் சிற்றூரிலே, அரசமரபைச் சார்ந்த பெருங்குடி ஒன்றில், 1828-ஆம் ஆண்டு, ஆகஸ்ட்டு மாதம், 28-ஆம் நாள், பிறந்தவர் ஆவர். அவர் தந்தை யாகிய நிக்கொலஸ் டால்ஸ்ட்டாய் பிரபு (Count Nicolas Tolstoy) ருஷ்ய தேசத்தில் 1813, 1814-இல் நடந்த பெரும் போரில் படைவீரராகப் போர்புரிந்தவர். அரசகுமாரி மேரி வால்கான்ஸ்கி (Princess Marie Volkonsky) என்னும் அவர் தாயாரது அரிய மனத்தூய்மையையும் மேம்பாடான ஒழுக்கத்தையும் பிற்காலம், பலரால் சொல்லக்கேட்ட ஆசிரியர் அவர்கள், தமது பெருநூலாகிய 'போரும் அமைதியும்' (War and Peace) என்பதில் அரசகுமாரி மேரியா பால்கான்ஸ்கியாக அவர்களை மிக்க நேர்மையாக உருப்படுத்தி யிருக்கிறார்கள். தமது பதினெட்டாவது மாதத்தில் தாயாரையும், ஒன்பதாவது வயதில் தந்தையாரையும் அவர் இழந்தனர். ஆசிரியரையும் அவரோடு உடன் பிறந்தார் ஐவரையும் அவர்களுடைய உறவினரான டாஷியானு எர்கோல்ஸ்கி (Tatiana Yergolsky) என்னும் அம்மையாரே வளர்த்துப் பாராட்டி வந்தனர். அவரிடமிருந்துதான், அன்பின் மகிழ்ச்சியையும் அமைதி பொருந்திய தனிவாழ்க்கையின் அழகையும் ஆசிரியர் அறிந்து கொண்டதாகத் தெரிகிறது. நிக்கோலஸ் டால்ஸ்ட்டாய் என்னும் ஒரு தமையனிடத்திலே ஆசிரியர்க்கு அதிகப்பற்றிருந்தது. சிறு குழந்தைகளாக விளையாடும் பருவத்திலேயே இவ்விருவரும், 'உலகத்தில் உள்ள யாவரும் கூடிய ஓர் சங்கம்' என்று ஒன்றை ஏற்படுத்தி, அதற்கு அடையாளமாக, பச்சைமரம் ஒன்றை ஓர் குன்றோரம் நட்டு வைத்தார்கள். நமது ஆசிரியர் இறக்கும் தருவாயில், தாம் இறந்தபின் தம்மை அம்மரத்தின்கீழ்ப் புதைக்கும்படி தெரிவித்தார். சின்னஞ் சிறு போதிலேயே, துறவிகளோடும் பிச்சைக்காரர்களோடும் கலந்து கொள்

வதிலேயே அவர் அதிகப் பிரியம்காட்டி வந்தார். கொஞ்சம் வயது வந்ததும், அவர் காஸான் (Kazan) கலாசாலைக்குப் போய் கீழ் நாட்டு மொழிகளையும், சட்டக்கலையையும், கற்கத்தொடங்கினர். எனினும், அவர் அவற்றில் ஊக்கங்கொள்ளாது வெறுப்படைந்து தம் ஊருக்குத் திரும்பிவந்து, தம் குடும்ப நிலங்களை மேற்பார்வையிட்டு, அவற்றைப் பயிரிடும் குடியானவர்களிடம் பெரிதும் நெருங்கிப் பழகிவந்தார். அப்போதுதான் அவர் குடியானவர்களின் ஒழியாத வறுமையையும் அதனோடுகூடவே அதன் காரணத்தையும் அறிந்துகொண்டார். சிறிது காலத்திற்குப்பின் செண்ட் பீட்டர்ஸ்பர்க்கு (St. Petersburg) என்னும் நகரத்தில் அவர் வந்திருந்தபோது, ஓர் மிருகமேபோல் அதிக இழிவாகத் தாம் நடந்து கொண்டதாக அவர் எழுதியிருக்கிறார். மக்கட் பொதுவில் மேல் வகுப்பு என்று சொல்லப்படுபவர்களின் சுயநலப் பெரும்பயித்தியத்தை முதன்முதல் அவர் இங்கேதான் தெளிவாகத் தெரிந்துகொண்டதாக ஏற்படுகிறது. 1851-இல் அவர் காகசஸ் (Caucases) மலைநாட்டில் நடந்துகொண்டிருந்த போரில் தம் தமையனோடு சேர்ந்து தொழிற்பட்டனர். அச்சமயம், மலையிலும் காட்டிலும் வாழும் குறவர் வேடர் முதலியவர்களின் வாழ்க்கையை அவர் காண நேர்ந்தது. 1853-இல் அவர் காகசஸைவிட்டு, கிரிமியாவிற்கு (Crimea) வந்து, அக்கிரிமியப் போரின் சேனைத்தலைவரோடு உடனிருந்து, சிபாஸ்ட்டபூல் (Cebastopol) என்னும் இடத்தில் நடந்த கடும்போரின் அதிக பயங்கரமான இடத்திலும் சமயத்திலும் தாமே வலிந்து சென்று போர்புரிந்தனர். பிறகு, போரில் காயம்பட்ட வீரர்கள் இருந்த ஆஸ்பத்திரிக்கு அவரும் கொண்டு வரப்பட்டபோது, அங்கே தம்முடைய படிப்பைத் திரும்பவும் கைக்கொண்டார் அவர்.

சிபாஸ்ட்டபூல் சண்டை முடிந்தவுடன், அவர் போரில் வெறுப்புற்று, செண்ட் பீட்டர்ஸ்பர்க்குவிற்கு வந்து, அங்குள்ள புலவர்களோடு சிலகாலம் அளவளாவி இருந்து, ஐரோப்பாவைச் சுற்றிப் பார்ப்பதற்காக அவர் 1857-ஆம் வருஷம் புறப்பட்டார். பாரிசு நகரத்தில் ஒருவன் மரண தண்டனை அடைவதை அவர் பார்க்க நேர்ட்ட போது, போரின்கண் ஆயிரக்கணக்காக ஜனங்கள் கொலையுண்டதைப் பார்த்தபோதுகூட தோன்றாத ஒருவித ஆன்மநடுக்கத்தையும் அயர்வையும் அவர் அடைந்ததாகத் தெரிகிறது. 1860-இல் அவர் தமையன் நிக்கொலஸ் அவர் மடிமீது கிடந்து இறந்தபோது, சாக்காட்டின் இடும்பை முழுவதையும் அவர் தமது நினைவை விட்டு அகலாத வகையாகக் கண்டு வைத்துக்கொண்டார்.

1861-ஆம் ஆண்டு, ருஷ்யாவின் குடிகளில் அடிமையாக இருந்தவர் விடுவிக்கப்பட்டபோது, நமது ஆசிரியர், அவர்களின் குழந்தைகளுக்காகப் பல பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்தி வந்தனர். அச்சமயம் சிறுவர்களுக்காகப் பல பாடபுத்தகங்களும், எழுதி வெளியிட்டனர். அவரது கல்விமுறை மிகச் சிறந்ததாக இருந்ததால், அரசாங்கத்தார் அஞ்சி, அவற்றை மூடும்படியான வழி தேடிவிட்டனர். அந்நாட்டின் நிலங்களைக் குடிகளுக்கும் பிரபுக்களுக்கும் பங்கிட்ட காலத்தும், தம்மோடு

ஒத்த பிரபு இனத்தாரின் பகையைப் பொருட்படுத்தாது, அவர் குடிகள் சார்பாகவே நடந்து வந்தார்.

அவர் 1862-இல் சோபியா பேர்ஸ் (Sophia Behrs) என்பவரை மணம்புரிந்தார். அதன் பிறகு சுமார் 15 வருஷம் தம் மனைவி மக்களோடு மிகச்சிறந்த வாழ்க்கை என்று பலரும் மதிக்கும்படி வாழ்ந்தனர். அக்காலத்தில் தான் ஐரோப்பா முழுவதும் போற்றப் பட்ட 'போரும் அமைதியும்', 'ஆனா கரெனினா' (Anna Karenina) என்னும் பெயர்பெற்ற நாவல்களை வெளியிட்டனர்.

ஆனால், அவரது 50-ஆம் வயதில், அவருக்கு உலகியல்படி பற்பல சிறப்புக்கள், அதாவது, உயர்ந்த குணமும் ஒழுக்கமும் வாய்ந்த மனையாட்டி, நல்ல அறிவு நிறைந்த மக்கள், திரண்ட செல்வம், நோயற்ற உடல், ஒருகண்டம் முழுவதும் மதிக்கும் கீர்த்தி--பொருந்தியிருந்தா லும், அவரது மனம் உலகியலில் இருந்து வேறுபட்டு விட்டது. இந்நில உலகவாழ்க்கையின் உண்மையான முடிவு இன்னதுதான் என்பது அறியாது அவர் மயங்கினார். சிறுவயது முதற்கொண்டே அவர் இவ் வினாவுக்கு விடைதெரிய விரும்பினாலும், அது இதுகாறும் வாழ்க்கையின் சிறுசந்தோஷங்களிலும் கடமைகளிலும் ஒருபக்கம் ஒடுங்கிக் கிடந்தது. அது இப்போது அவர் உள்ளத்தில் முன்னையினும் பன்மடங்கு அதிகம் வலிவு கொண்டு எழுந்தது. 'எனது இரகசியம்' (My Confession) என்னும் அவரது நூலில் இக்காலத்து அவர் பட்டபாட்டை மிகத் தெளிவாக எழுதியிருக்கிறார். அப்பாட்டின் பயனாக, ஏசு அடிகள், மலையின்கண் இருந்து, திருவாய் மலர்ந்தருளிய அறவுரைகளை அங்ஙனமே நேர்நேராகத் திரிபின்றிப் பொருள்கொண்டு கைப்பற்றி நடத்தலே மக்களுக்கு எல்லாப் பேறுகளையும் அடைவிக்கும் மார்க்கம் என்று தெளிந்தார். தேவர் குறளும் ஏசுஅடிகளின் அவ்அறவுரையும் ஒன்று போல்வன என்பது அறிவார் அறிவதாகும். அப்படித் தெளிந்த 1879-ஆம் ஆண்டு தொடங்கி தமது இறுதிவரை, நல்லொழுக்கத்தையும் கடவுள் வழிபாட்டையும் பற்றியே அறிவுறுத்தி வந்தார். ஊன் தின்னுவதை அறவே ஒழித்தார். ஏழைகளின் எளிய உடையையே உடுத்தினார். தம்மைச் சார்ந்த வேலைகளை எல்லாம் ஒவ்வொரு நாளும் தாமே செய்துகொள்வார். வயலில் பண்ணை ஆட்களோடு கலந்து, அறுப்பு அடிப்பு முதலிய எல்லா வேலைகளையும் செய்வார். வேண்டும் என்றபோது காட்டில் சென்று மரம் வெட்டிக்கொண்டு வருவார். மழைக்காலத்து வெளியில்போக முடியாதபோது, வீட்டில் இருந்து செருப்புத் தைப்பார். நாளும் ஏதாவது ஒரு கைவேலை செய்தே அமர்வார். காய் கறிகள் சேர்ந்த எளிய உணவையே உண்ணுவார். பலர்க்கும் அன்பொடு நல்லுரை கூறுவர். அவற்றை எளிய நடையில் கல்லார்க்கும் பயன்படும் வகையில் எழுதி வெளியிடுவர். அப்படி யிருக்கும் நாளில், வழியடியார்கள் எல்லாரையும் போலவே நமது ஆசிரியரும் பொருட்செல்வம் எல்லாவற்றையும் தம்மைவிட்டு உதறிவிட ஏற்பட்டனர். ஏற்படவே, அவருடைய துறவறநிலையை உணர மாட்டாத அவரது மனைவியார் தம் பிள்ளைகளின் பொருட்டுப்

பெரிதும் வருந்தத் தலைப்பட்டனர். எவரையும் நோவச்செய்தல் ஆசிரியர்க்குக் கூடாத காரியம் ஆகையால், தம்மனைவி மக்களிடமே செல்வத்தை எல்லாம் விட்டுவிட்டு, தமக்கு அவற்றில் ஒரு பற்றும் இல்லாது ஒழித்துக்கொண்டார். மெய்யன்பைக் குறித்துப் பல நூல்கள் வெளியிட்டனர். 1882-இல் ஜனசங்கியை எடுத்தபோது அவர் தாமே வேலைசெய்ய முன்வந்தார். அச்சமயத்தில்தான் மாஸ்கோ நகரத்தின் ஏழைகளின் துன்பமெல்லாம் அவர்களின் ஊடே ஊடே நுழைந்து பார்த்து மனம் புழுங்கினார். அதன் பயனாக, 'இனி என் செய்வது?' (What must we do ?) என்ற நூலை 1886-இல் அச்சிட்டனர். நகர வாழ்க்கையின் வேண்டாத வெறும் ஆடம்பரங்களை வெறுத்துத் திரும்பியும் நாட்டுப்புறமே சென்று, கற்றவர்க்கு மட்டும் எழுதும் நூல்களில் விருப்பற்று, கல்லாதவரும் கேட்டுணரும் வகையில் எளிமையாக பற்பல கைந்நூல்கள் எழுதிக் கோடிக்கணக்கான பிரதிகள் அச்சிட்டு உதவினர். 1892-இல் ருஷ்யா நாட்டில் நேர்ந்த கொடிய பஞ்சத்தில் ஏழைகளுக்குத் தகுந்த உதவிகளை அங்கங்குத் தாம் முன்னின்று ஏற்படுத்தி வைத்தார். புலைகொலை வெறுத்தவரும், வெற்றுச் சடங்குகளை ஒழித்தவரும், ருஷ்ய ராஜாங்கத்தால் கடுமையாக நடத்தப்பட்டவரும் ஆன டுக்கோ போர்ஸ் (Doukhobors) என்னும் ஓர் சங்கத்தார் வேற்று நாட்டிற்குக் குடியேறுவதற்குத் தடையாயிருந்த பணக்கஷ்டத்தை நீக்கும் பொருட்டு 1899-இல் 'செத்தார் எழுந்தார்' (Resurrection) என்னும் அரியநூலை முடித்து, அதனால் வந்த பொருளை அவர்களுக்கு உதவினர்.

1901-இல் ருஷ்யநாட்டுச் சமயாசாரியர்கள் அவரைக் கிறிஸ்து சமயப் பொதுவினின்றும் நீக்கிவிட்டதாக வெளியிட்டார்கள். ஆனால், அதற்கு முற்றிலும் எதிராக, அந்நாட்டின் கோடிக்கணக்கான குடிமக்கள் அவரையே தங்கள் தங்கள் அருள்ஞான தேசிகன் என்று கொண்டு, பன்முறையும் அவரைத் திரள் திரளாக வந்து கண்டு கண்டு வழிபாடு செய்துவந்தார்கள். சிறிது காலத்திற்குப் பின் நாட்டில் உட்குழப்பம் உண்டாகிச் சொல்லமுடியாத அக்கிரமங்கள் நடந்தபோது, 'இப்போது வாயை மூடிக்கொண்டிருக்க என்னால் முடியவில்லை' என்று பற்பல அறவுரைகள் எழுதி, வேண்டுமானால், நாட்டின் பொது நன்மைக்காக, தம்மைப் பலியிடும்படி அரசாங்கத்தாரை வேண்டிக்கொண்டார். பிறகு தம் மனைவி முதலியவர்களின் உலகியல் விவகாரங்களைப் பார்க்கவும் பிடிக்காமல் தனிமையையும் அமைதியையும் கருதி, ஓர் நாள் இரவு ஒரு நண்பரோடு வீட்டை விட்டு வெளியேறி விட்டார். வழியில் கடுமையான பனியிலும் குளிரிலும் வருந்தியபோது ஒரு குடியானவன் தனது வீட்டில் அவரை வரவேற்று உபசரித்தான். அவ்வீட்டிலே, 1910-ஆம் வருஷம் நவம்பர் மாதம் 26-ஆம் நாள் அவர் உயிர் துறந்தார். உயிர் போகும் நேரத்தில் கூட, தம்மைச் சுற்றி நின்ற யாவரையும் பார்த்து "உலகத்தில் கோடிக்கணக்கான ஜனங்கள் துன்பத்தினால் வருந்தும் போது நீங்கள் எல்லாரும் ஏன் என்னைச் சூழ்ந்து கொண்டு நிற்கிறீர்கள்?" என்று அவர் பரிவாகக் கேட்டார்.

2. ஆசிரியரது சான்றாண்மையும் புலமையும்

டால்ஸ்டாய் பெருமானின் ஆன்ம உருக்கமும் துறவற நிலையும் உலகம் அறிந்தவை. இந்நாளைய மக்கட் பொதுவின் ஏற்பாட்டிலுள்ள பெரும் அநியாயத்தை அவர் விளக்கமுற எடுத்துக்காட்டினார். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும், அன்பு விளங்க விளங்க, அன்புருவமாகிய கடவுள் விளங்குவர் என்பது அவரது முடிவான கருத்து. உயிர்க்குயிராக இருக்கும் கடவுளையே அவர் மனச்சாட்சி என்பர். ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் எளிமையாகவும் தூய்மையாகவும் கையுழைப்புள்ளதாகவும் இருக்கவேண்டும் என்றும், அதற்கேற்ற ஏற்பாடுகளை மக்கட் பொதுவில் அமைத்தல் வேண்டும் என்றும் வற்புறுத்தி வந்தார். ஏசு அடிகளின் அறவுரைகளை மூடியிருந்த வெறும் பழக்க வழக்கமான மூடக் குப்பைகளைக் களைந்து அவற்றை விளங்க வைத்தார் அவர். வெறுப்பை விருப்பாலும், துன்பத்தை இன்பத்தாலுமே அவர் எதிர்த்து வந்தார். தூய்மையான வாழ்க்கையைக் கடைப்பிடித்தவனது மனச்சாட்சிக்கு விரோதமாக, இவ் உலகமே எதிர்த்தாலும் பொருட்படுத்தலாகாது என்பது அவர் நடந்து காட்டியதாகும். குடும்பப்பற்று, மக்கட் பிறப்பினர் யாவரையும் ஒப்பு நோக்கி நடக்க விடாத பேரிடும்பையாகும் என்பது அவருங்கண்ட ஓர் உண்மையாகும். உயிர்க்கொலையே—சண்டையோ, சட்டமோ, சாப்பாடோ, விளையாட்டோ ஆகிய—எதை முன்னிட்டும் கூடாதென்பர். பெரும்பாலும் நாட்டுச் சட்ட திட்டங்கள், ஏழைகளையும் அறிவில்லாதவரையும் நசுக்கி மேலுமேலும் அவர்களைத் துன்பத்திற்குள்ளாக்குகின்றன என்று வருந்தினார். சட்டதிட்டங்களின்படி ஒருவன் நடந்ததனாலேயே அவன் வாழ்க்கையில் தூய்மையானவன் ஆகமாட்டான் என்று நல்லொழுக்கத்தின் அளப்பரும் அகநிலையை வலியுறுத்தினர். மேல் வகுப்பாரின் ஆடம்பரமான வாழ்க்கை கீழ் வகுப்பிலுள்ள பல்லாயிரவருக்குச் சுமக்க மாட்டாத உழைப்பைத் தருகிறது என்று ஆடம்பரத்திலுள்ள அநியாயத்தைத் தோற்றுவித்தார். உயர்வான புலமை, அகத்திலும் புறத்திலும் ஆன்ம உருக்கத்தால் நனையப் பெற்றதாயும் கல்லார்க்கும் கற்றவர்க்கும் ஒருங்கே பயன்படுவதாயும் இருக்கவேண்டுமே அல்லாது, சிறுபான்மையோரே வழக்கத்தால் அறியக்கூடியதாக இருக்கக்கூடாது என்பது அவர் கருதி எழுதிக் காட்டியதாகும்.

3. கட்டுரையின் வழி

வறுமை, கெட்ட நடவடிக்கை முதலியவற்றின் துன்பத்தைஎல்லாம் விவரித்து அவற்றின் காரணங்களை விளக்கியபின், அவை அப்படியாக அவற்றை ஒழிக்கும் வழிகள் என்னென்ன என்று பொருள்படும் ' இனி என் செய்வது' என்ற ருஷ்ய நூலின் 16-ஆவது உட்பிரிவாகும் இது. ஆங்கில முதல் மொழிபெயர்ப்பின் மொழி பெயர்ப்பாகும் இத்தமிழ் உரை. ஒன்றிரண்டு இடங்களில் தமிழ் வழக்கம் மேற்கொண்டு தழுவப் பட்டிருக்கிறது.

4. கட்டுரையின் கருத்து

செல்வமுள்ள வகுப்பினர் தர்மம் செய்வதென்பதால் கீழ் வகுப்பின ரின் வறுமையும் கெட்ட நடக்கையும் ஒருகாலும் ஒழியா என்றும்; ஒருவன் நேரே கையுழைத்துப் பெற்ற பொருள்தான் செல்வம் என்றும்; மற்ற வழியில் பெற்றவை எல்லாம் அக்கிரமமாகக் கைக்கொள்ளப் பட்டவை என்றும் இது கூறும்.

5. கட்டுரையின் சுருக்கம்.

வேலையாளரது வேலையின் பயன்களை எல்லாம் வேலை செய்யாத வகுப்பினர் பற்பல சூழ்ச்சிகளால் கவர்ந்து கொள்ளுகிறார்கள் என்றும்; இச்சூழ்ச்சிகள் இந்நாளைய மக்கட்பொதுவில் நிலைபெற்றுச் சட்டதிட்டங் களால் உரம்பெற்று வளர்வதால், வேலையாளரது நிலை ஒவ்வொரு ஆண்டும் மேன்மேலும் ஏலாததாகப் போய்க்கொண்டிருக்கிறது என்றும்; வேலையினின்று நீங்கியவர்களது வாழ்க்கை வருஷந்தோறும் அச்சம் இல்லாததாக ஆய்க்கொண்டிருக்கிறது என்றும்; மக்கட்பொது வின் அடிப்படை சிறுத்தும் உச்சி விரிந்தும் வரும் இந்த நிலைமை அழி வைக்குறிக்கும் இயல்பற்ற நிலைமை என்றும்; ஒழியா உழைப்பிற்கு எதிராக, தானே வளரும் பணத்தை இக்காலத்தவர் முடிவான நலனாகக் கொண்டிருக்கிறார்கள் என்றும்; நேரே கையுழைத்துப் பெறாத செல்வர் கள் எல்லாம், ஏழைகள் என்ற பெருவகுப்பினர் தோன்றி நிலைத் தற்குக் காரணமாவர் என்றும்; அவர்களது பெருஞ்செல்வம் அவர்க ளுடைய உழைப்பின் பயன் இல்லையாகவே, அவர்கள்தான் உண்மையில் சோம்பேறிகளும் முதல் அற்றவர்களும் ஆவர் என்றும்; அப்படிப்பட்ட வர்கள், உழைப்பாளிகளை ஏழை என்று அழைத்து, அவர்களுக்கு உதவப் போவது வெட்கக்கேடு என்றும்; தாம் உழைக்காது பெற்ற பொருளைக் கைவிட்டு, தாம் உழைத்து ஏழைகளைப் போல் முதலாளிகள் ஆவதே அவர்கள் செயக்கடவது என்றும்; ஆகவே உலக வழக்கில் 'செல்வம்' என்றால் என்ன என்றும் கூறுவதும் பிறவும் இதன் போக்கு.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 32. ஆன்ம உருக்கம்-பேரன்பு, உயிரிரக்கம், ஜீவகாருண்யம்.
ஈன்ற – பெற்ற, உண்டாக்கிய, காரியப்படுத்திய.
அறநிலை – நல்லொழுக்கம்.
நான் செல்வவான் – ஆசிரியர் பிறவியிலேயே பொரு ளுடையார்.

பக்கம் 33. போலி நினைப்புத் தொகுதி–உலகத்தின் நிகழ்ச்சிகளிலும் பொருள்களிலும் தொடர்புபடாத வெற்றெண்ணங்கள்.
பேரச்சம் – பொறுக்கமுடியாத அச்சம்.
கடுமைகள் – இரக்கமற்ற செயல்கள்.
பறித்தல்கள்–முறைமைக்கு எதிரான வெறும் பிடுங்கு தல்கள்; கொள்ளைகள்.

பக்கம் 33. பண்ணைக்காரர்கள் – நிலத்தின் சொந்தக்காரர்கள்; பிறரைக் கொண்டு தம் நிலத்தைப் பயிர் செய்பவர்கள்.

அரசியலாளர்கள் – ஆளுந் தொழிற்கூறுகளை மேற்கொண்டவர்கள்.

பாதுகாப்பு வேலைக்காரர் – போலிசுக்காரர்.

பக்கம் 34. ஏலாதது–முடியாதது, இயலாதது.

அறிவு நூல்கள் – Sciences.

தொழில் நூல்கள் – Arts.

ஊண் – வெறும் உணவு.

வெறும் பெருமிதங்கள் – முதன்மையற்றவைகள், தள்ளக் கூடிய பொருள்கள்.

மாயப்பை – இயற்கையில் காணக்கூடாத அநியாயமான ஓர் உளவு; தானே இரட்டித்து வரும் பணம்.

இயற்கைவிதி – ஒழிபின்றி யாவரும் உண்மை என்று உணரக் கிடக்கும் காரண காரியத் திட்டம்.

பக்கம் 35. பொதுமக்கள் . . . கோபுரம்–பொதுமக்களைப் பற்பல வகுப்பினராக்கிக் கண்டபோது, அவர்களை மேல் கீழ் என்று முறைவகுத்து, ஒரு வகுப்பினரின் மேல் மற்றொரு வகுப்பை நிறுவி அமைத்த வடிவம்.

அடிக்கற்கள் . . . போகின்றன– நாட்டுப்புறத்தார் மேன்மேலும் நகர்ப்புறத்துக்குப் போகிறார்.

இப்படி . . . வளர்கிறது – இவ்வண்ணமான புது நிரும்பின் விரைவு மிக்க அதிகம் என்பது கருத்து.

எடுத்துக்காட்டு – உதாரணம்.

நிலவி – பொருந்தி, உள்நின்று.

விரும்பி . . . பெருநலன் – முடிவெனக் கண்டு, அடையுமாறு விரும்பி, முயலப்படும் நன்மை.

போலிநலம் – உண்மையில் நலமற்றது.

நாங்கள் – நகரத்தார்கள், செல்வர்கள்.

மாயவராகன் – தானே வளரும் செல்வம்.

பக்கம் 36. ஒப்படைத்தல் – சீர்செய்தல், முன்பின் முறைமைப்படுத்திக் கோலுதல்.

கொடுப்பனை யற்ற – அதிர்ஷ்டமில்லாத, கொடுத்துவைக்காத.

பக்கம் 37. பப்பத்து - பற்பல பத்து, பத்துப்பத்து.
பிடிமானம் - கையிருப்பு, பேச்சுமுறை, அன்பான பற்று.
ஒழுக்கமுறை - நடந்துகொள்ளவேண்டிய வகை.

பக்கம் 37. ஒள்ளிய – நல்ல.
சீட்டு ஆடுதல் - நால் வேறுபட்ட அரசுகளின் போரினை விளையாட்டாக நடத்திக் காட்டல்.

பக்கம் 38. உரம் - வலிவு.
நொய்ம்மை - வலுவின்மை.
பொதுவீடு - ஏழைகளின் சத்திரம்.
நிலுவை - இறுத்து மிஞ்சின தொகை; பாக்கி.
முதலாளி - உழைப்பில் முதலாளி.

ஆயிரவர் - ஆயிரம் பெயர்.
புல்லுருவி - பெருமரங்களின் கிளைகளில் உண்டாய் அவற்றின் சாற்றைக்கொண்டு வளரும் பயனற்ற செடி வகை.

பக்கம் 39. வைகறை - விடியல் நேரம்.
கலன்கள் - தட்டுமுட்டுக்கள்.
செருப்புச்சாந்து - செருப்பின் மேற்புறத்துத் தோலை மாசின்றி வைப்பதற்குப் பூசும் ஒரு கூட்டு.
நாளும் - ஒவ்வொரு நாளும்.

பக்கம் 40. பிணியாளனை . . . ஆவான் - இவை, ஆசிரியர் முன்பு ஒருகால் நேரில் கண்டவை.

---

8. இன்ப நிலை

1. ஆசிரியரது வரலாறு

ஆசிரியர் ஹொரேஷியோ வால்ட்டர் பேட்டர் அவர்கள் (Horatio Walter Pater), லண்டன் நகரத்திலே, 1839-இல் பிறந்தவர். புலமைக் கல்வியில் மிகச் சிறந்த ஆக்ஸ்போர்டு கல்லூரியில் அவர் கல்வி கற்றார். ஐரோப்பாக் கண்டத்து உள்ளக் கிளர்ச்சியின் வரலாற்றின் சில கூறுகள் (The Renaissance) என்னும் நூலை அவர் 1873-இல் வெளியிட்டார். இது மிகச் சிறு நூலேயாயினும் இதன் ஒவ்வொரு கட்டுரைப் பொருளும் மிகத் தேர்ந்தெடுத்து, பிழையே இன்றி அருமையாக அச்சிடப்பட்டதாகும். பெரும்பான்மையோர் படித்துணரும் தன்மையதன்றி, இது, ஆழ்ந்து கற்ற சிற்சிலர்க்கு மட்டுமேதான் வெளிவந்தது முதல், பயன்பட்டு வருகிறது. 1885-இல் 'மெரையஸ்' என்னும் ஓர் நீண்ட நாவலை அச்சிட்டனர். உரை நடையைப் பற்றியே அவர் மற்றொரு நூலில் எழுதி இருக்கிறார். 1887-இல் 'கற்பனை ஓவியங்கள்' என்பதையும், 1893-இல்

'பேராசிரியர் பிளேட்டோவும் அவரது கொள்கையும்' என்னும் நூலையும் பதித்தனர். 1894-இல் அவர் உயிர் நீத்தனர்.

2. ஆசிரியரது புலமை

இவர், சொல் தொடர்களையும், வாக்கியங்களையும், பத்திகளையும் அரிய தேர்தலோடு உருப்படுத்தி, நூலின் தொகுப்பையே அன்றி, அதன் பலப்பல கூறுகளையும் நுணுகி நுணுகி ஆராய்ந்து வரையறுப்பர். உரையின் ஒலிப் போக்கு, செய்யுளின் ஒலிப்போக்காக மாறிவிடாமல் அளவறிந்து சொற்களை வரிசைப்படுத்துவர். சொற்களைத் துருவித் துருவிப் பொறுக்கிய பின்னரே அவைகளைக் கையாள ஒருப்படுவர். பெயர்ச்சொல்லும் அதன் அடைமொழியும் முன் கண்டறியாத ஒருவிதப் புதுமையைத் தோற்றுவிக்கும் படி பிணைத்திருக்கும். படிக்கும்போது புதுமை என்று பட்டாலும், அஃது, ஓர் வியப்புணர்ச்சியை உண்டாக்கி இன்பந் தரும். அவருடைய உயர்ந்த உரைப்பத்திகள் ஆங்கில மொழியிலேயே மிக்குயர்ந்த உரைநடையைக் கொண்டவை என்று போற்றப்படுகின்றன.

3. கட்டுரையின் வழி

இது, 'ஐரோப்பாக் கண்டத்து உள்ளக் கிளர்ச்சியின் வரலாற்றின் சில கூறுகள்' என்னும் நூலின் முடிவுரையினுடைய விளக்கமான மொழிபெயர்ப்பு; வெறும் நேர் மொழிபெயர்ப் பன்று.

4. கட்டுரையின் கருத்து

அகப்பொருளும் புறப் பொருளும் ஆனவற்றைப்பற்றி அளவை வகைகளால் பெற்ற கோட்பாடுகள் ஒருபோதும் இன்ப நிலையங்கள் ஆகா என்பதும்; தூய்மையால் சூழ்ந்த அழகினைப்பற்றி எழும் உணர்வே இன்பநிலையம் என்பதும்; அவ்வகையான உணர்வை இடைவிடாது பெற முயல்வதே மக்கட்பிறப்பினர் செயக் கடவது என்பதும்; அது புலமையைக் கொண்டு பெறப்படும் என்பதும் இதன் கருத்தாகும்.

5. கட்டுரையின் சுருக்கம்

நமது உடம்பின் வெளி வாழ்க்கையினை அறியுமாறு, கோடைக்கால வெப்பத்தில் குளித்து இன்பமாக வெளிவரும் நொடிப்போதில் அதை ஆராய்ந்தால், அது, எரிபொருள் (Phosphorus), சுண்ணம், நரம்புகள் ஆகிய இவற்றின்

நொடிப் போதைய சேர்க்கையாக இருக்கிறது என்றும்; இரத்த ஓட்டம்போன்ற உடல் நிகழ்ச்சிகளை ஆராய்ந்தால், அவையும் பொருண் முதல்களின் தொடர்ந்த சேர்க்கையாக இருக்கின்றன என்றும்; ஒருவனது பிறப்பு முதல் இறப்பு வரையில் ஏறக்குறைய ஒருமாதிரி என்று தோன்றும் முகம் கைகால்களின் வடிவங்களை ஆராய்ந்தால், அவை, அகத் தோற்றங்களாக இருக்கின்றன என்றும்; ஆகவே, நம் உடல்வாழ்க்கை, அனற்கொழுந்துபோல், இயங்கிக்கொண் டிருக்கும் பொருள் முதல்கள் நொடிக்கு நொடி சேர்வதால் ஆகியிருக்கிறது என்றும்; நினைப்பாலும் உணர்ச்சியாலும் ஆகிய உள்வாழ்க்கையை ஆராய்ந்தால், அது, நொடிப் போதில் தோன்றி மறையும் உணர்ச்சி எண்ணம் ஆகிய இவற்றின் கொழித்தலாக இருக்கிறது என்றும்; வெளிப் பொருள்களைப்பற்றிய அநுபவமாகிய உள்வாழ்க்கையின் ஓர் பிரிவை ஆராய்ந்தால், ஒவ்வொரு பொருளும், நிறம், மணம், வடிவம் என்னும் அகப்பதிவுகளாகச் சிதைந்து போகிறது என்றும்; அந்த அகப்பதிவுகளையே ஆராய்ந்தால், அவை, கற்குள் தேரைபோல், ஒடுங்கிக் கிடக்கின்றன என்றும்; அவற்றை, தேரையைக் கல் சூழ்ந்திருப்பதுபோல், எப்பாங் கரும் ஆன்மா சூழ்ந்துகொண்டிருக்கிறது என்றும்; அவை, தோன்றி மறைவதால், காலத்திற்கு உட்பட்டவை என்றும்; காலம் எண்ணிறந்த அளவு கூறுபடுமாகையால், அவையும் அப்படி முடிவின்றிக் கூறுபடும் என்றும்; ஆகவே, 'நாம்' என்பது ஒவ்வொரு நொடியும் தோன்றி அழியும் பொருளாக இருக்கிறது என்றும் ; இதற்குமேல் ஆராய்ச்சி செல்லக்கூட வில்லை என்றும்; இப்படி ஆராய்வதின் பயன் இன்புடைய வாழ்வு வாழும்படி ஆன்மாவைத் தூண்டுதலேதான் என் றும்; ஒவ்வொரு நொடியிலும் நம்மைச் சுற்றி எப்பக்கத்தி லாவது நமக்கு அப்போது உணர்வு உண்டாக்கி இன்பந் தரும் நிகழ்ச்சிகள் தோன்றி மறைந்து கொண்டிருக்கின்றன என்றும்; அவற்றை அநுபவிப்பதே வாழ்க்கையின் முடிவு என்றும்; நாம் சிறிது காலமே உயிரோடிருப்போம் ஆகை யால், அந்தக் காலமெல்லாம் ஒவ்வொரு நொடியும் இன்பந் தரும் நிகழ்ச்சிகளை நுகரப்பெறுவதே பேரின்பம் என்றும்; அதுவே இவ்வாழ்க்கையில் எய்தக்கூடிய பெரும்பயன் என்றும்; இது இப்படியாக, இன்பந்தரும் அந்நிகழ்ச்சிகளைப் பற்றிய கோட்பாடுகளைக் கண்டுபிடிக்க நேரமில்லை என்றும்; ஏதோ ஒருவருடைய அப்படிப்பட்ட கோட்பாடுகளை முன் னிட்டு, நமது அநுபவத்தைக் கைவிடுதல் தகாது என்றும்; பேருணர்ச்சிகளே நமக்கு ஒழியா இன்பமளிக்கும் என்றும்;

அவ்வுணர்ச்சிகளை நமக்கு அடைவிப்பதுதான் புலமையின் நோக்கம் என்றும்—சொல்லி, புலமைக்கும் இன்பத்துக்கும் உள்ள காரணகாரியத் தொடர்பு இதில் விளக்கியிருக்கிறது.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 40. இன்ப நிலை - இன்பத்திற்கு உறைவிடம்.

பொருள் முதல்கள் - பொருளின் முதற் காரணங்கள்.

பக்கம் 41. அறிவு நூல் - Science.
செந்நீர் - இரத்தம்.
ஒளிவட்டங்கள் - Lenses.
ஒளி ஓசைகளின் அலை - Ray of light and sound.
ஒருமைப்பாடுற்றவை - எளிய தன்மையுடையவை.
உரங்கள் - வன்மைகள்; Forces.
விதைக்கப்பட்டு - தூற்றப்பட்டு.
ஓட்டங்கள் - Currents.
பெரும்படியான உருவப் பாகுபாடு - Outline.
எதன் கீழ் - எந்த அகத்தோற்றத்தின் கீழ்.
அகத் தோற்றம் - Image.
தனக்கு - குறிப்பிட்ட ஆடைக்கு.

உத்தியால் அறியக்கிடக்கும் - யூகித்தறிய வேண்டிய.

பொருட் போலி - பொருளைப் போன்ற வடிவம்.

பக்கம் 42. மீட்கப்பட்ட - வேறு பின்வருவன வற்றுல் மீட்கப்பட்ட.

சேர்ந்த இயக்கம் - ஒருங்கே தொழிற்படுதல்.

அனற் கொழுந்து - சுடர்க்கொழுந்து.

நீர்மை - தன்மை.

அக உலகம் - மனம் புத்தி முதலியவை.

'நீர்ச்சுழி' 'அனற் கொழுந்து' - உரங்கள் ஒருங்கே விரைவில் தொழிற்படுவதை நீர்ச் சுழியாகவும், அனற் கொழுந்தாகவும் உவமித்திருக்கிறது.

பக்கம் 42. வெளிப்பொருள்களால் ஆய ஓர் வெள்ளத்தில் - வெள்ளம் எனப் பல்கி நிறைந்து இயங்குகின்ற வெளிப் பொருள்களில்.

இடையீடற்றது - விடாதது, காலத்தில் இடையீடற்றது.

ஓர் உண்மையால் நம்மை நசுக்குவதும் - நமக்குப் புறம்பான ஓர் பொருண்மையைக் கட்டாயமாய் நமக்கு ஏற்பிக்கிறதும்.

செப்படிவித்தை - செப்பிடுவித்தை, ஜால வித்தை.

பொருளுக்கு ஒருமை தரும் உரம் - பொருளை ஒன்று என்று தோற்றுவிக்கும் சத்தி.

பொருத்தப் பாகுபாடு - Texture.

அகப்பதிவு - உள்ளத்தின் நிகழ்ச்சி.

பேச்சினின்று பெற்ற உறுதியையுடைய பொருள்கள் - பொருள்களைக் குறிக்கும் சொற்கள் மாருது நிற்றலால், திட்பம் உடையன போல் கருதப்படும் அப் பொருள்கள்.

எரிகிறவையும்...போகிறவையும் - எரிந்து, அதாவது, நினைப்போடு வந்து, மறப்போடு போகிறவை.

பக்கம் 43. உண்மை...சூழப்பட் டிருக்கிறது - நாம் என்பதை விழிப்பு நிலை என்றும், ஆன்மா என்பதை நமது மற்ற நிலை என்றும், நமக்குப் புறம் என்று யூகிப்பதை வெளியிலுள்ள மற்றவை என்றும் கொண்டிருக்கிறது.

பிரித்தறியும் முறை - குறித்த ஒரு பொருளை அல்லது நிகழ்ச்சியை அதன் கூறுகள் அல்லது தன்மைகள் ஆகப் பிரித்து, ஆராயும் அறிவின் முறை.

ஓடிக்கொண்டே யிருக்கின்றன - தோன்றி மறைந்து கொண்டே யிருக்கின்றன.

தன்னை உடனுக்குடன் சரிப்படுத்திக் கொண் டிருக்கும் - தான் நீரால் சாய்ந்த போதெல்லாம் தன்னை நிமிர்த்திக்கொண் டிருக்கும்.

எச்சம் - குறைந்து நிற்பது.

பக்கம் 44. நோவாலிசு - Novalis.

நாடக வாழ்வு - நாடகத்திற்போல அடிக்கடி மாறுந் தன்மையுள்ள வாழ்வு.

உயிர்நாடிகள் - pulses, இரத்த நாடிகள்.

முனை - அகத்திலாவது புறத்திலாவது தோன்றும் ஓர் குறித்த நிகழ்ச்சி அல்லது பொருள்.

எரிந்துகொண் டிருத்தல் - வேட்கையோடு அநுபவித்தல்.

பக்கம் 45. வாய்ப்புக்கள் - பேறுகள்.

மிக்க ஒளிபொருந்திய தன்மை - அரிய மேம்பாடு.

கோண்ட்டு - August Comte.

ஹேகல் - Hegel.

பக்கம் 46. விண்ணப்பம் என்னும் நூல் - Confession.

ரூஸ்ஸோ - Rousseau.

வால்ட்டேர் - Voltaire.

விக்டர் ஹ்யூகோ - Victor Hugo.

பக்கம் 47. வாழ்க்கையின் இந்த விரைவுணர்வு - This quickened sense of life.

உணர்ச்சிகள் - Passions

9. ஓர் துறவியின் தனிமை

1. ஆசிரியரது வரலாறும் ஞானமும்

ஆசிரியர் ஹென்றி டேவிட் தோரோ (Henry David Thoreau), 1817-இல், அமெரிக்காவிலே, புது இங்கிலாந்து நாட்டிலே, கான்கார்டு என்னும் ஊரிலே, பிறந்தார். அவர் தந்தையார் எழுதுகோல் செய்யும் கைத் தொழிலால் பிழைத் தனர். தோரோ அவர்கள், தமது இளமையில், மாடு மேய்த் தவர். ஆசிரியர் எமர்சனும் அப்படி மாடு மேய்த்தவரே. பின்னர், ஹார்வார்டு கலைக்கூடத்தில் (Hardvard College) கல்வி கற்றுப் பட்டம் பெற்றனர். அவர், பல இலக்கிய நூல்களை நுட்பமாக ஆராய்ந்து தெளிந்தவரே எனினும், வயற்புறங்களிலும், புல் வெளிகளிலும், காடுகளுக்கிடையி லும், ஆற்றோரங்களிலும் திரிந்து பார்த்து உணர்ந்த தன் பயனுன அவரது ஞானம்தான் மிகச்சிறந்தது. தமது 20-ஆம் ஆண்டு தொடங்கி வாழ்நாள் முழுதும் ஒவ்வொரு நாளும் நடப்பவற்றைத் தம் நாட்குறிப்பில் குறித்து வந்தார். 30 வயது வரையில், சிற்சில சமயம் கூலிக்காகத் தோட்ட வேலி கட்டியும், வீட்டிற்குச் சுண்ணும்பு பூசியும், முடிந்த போது தோட்டம் வைத்துக் கொஞ்சமாகப் பயிர்செய்தும் பிழைத்தனர். கடன் வாங்குகிற வழக்கம் அவரிடம் இல்லை. 1847 முதல் தம் நூல்களாலும் விரிவுரைகளாலும் சிறிது வருமானம் பெற்ருர். இளமையிலேயே, ஆசிரியர் எமர்சன் அவர்களின் கல்வி வகையிலும் சங்கத்திலும் ஈடுபட்டு 1841 முதல் 1843 வரையில் அவ் ஆசிரியர் வீட்டிலேயே தங்கியிருந்தார். அமெரிக்காவில் நீக்ரோ வகுப்பாருடைய அடிமைத்தனத்தை வேரோடு களைய எழுந்த இயக்கத்தில் பெரிதும் உழைத்தவர்களில் அவர் ஒருவர்.

1845-இல் அவர் ஒரு கோடரியை மட்டும் கைக் கொண்டு, கொஞ்ச தூரத்திலுள்ள வால்டன் (walden) என் னும் ஒரு காட்டிற்குப் போய், அதிலிருந்த ஒரு குட்டையின் ஓரம் ஒரு குடிசை கோலிக்கொண்டு, அதில் இரண்டு வரு ஷத்திற்கு மேல் தனியே இருந்தார். அங்கே தோட்டம் வைத்துக்கொண்டும், பாடிக்கொண்டும், எண்ணமிட்டுக் கொண்டும், படித்துக்கொண்டும், எழுதிக்கொண்டும் வாழ்ந்தனர். இன்னின்னவைகள் வாழ்க்கைக்கு வேண்டா தவைகள் என்பதைக் காணும்பொருட்டே அவர் அப்படிச் சென்றிருந்தார். அங்கேதான் அவர் வாழ்க்கையின் நங்

கூரங்களை உள்ளபடி உணர்ந்தார். தம்மை அக்காட்டில் உள்ள இயற்கைப் பொருள்களில் ஒன்றெனவே கருதி, அக்காடெல்லாம் சுற்றித் திரிவார். இறைச்சி தின்னுவதை அறவே ஒழித்தார். இங்ஙனம் அவர் தனிமையாய்க் காட்டில் மரங்களோடும், செடிகொடிகளோடும், பறவை முதலிய உயிர்களோடும் காற்று வானம் முதலிய முதல்களோடும் கலந்து, எல்லாக் காலங்களையும், எல்லா இடங்களையும், எல்லாப் பொருள்களையும், எல்லா உயிர்களையும் வேறுபாடின்றி ஊடுருவி நிற்கும் அறிவுருவமாகிய கடவுளது காட்சி எய்தியவர் என மன அமைதி அடைந்திருந்தார். இவ்வகையான காட்டு வாழ்க்கையும் உள ஒருமைப்பாடும் மேல் நாட்டவர் அதுவரையில் காணாதவை. அவருக்குக் கல்யாணம் ஆகவில்லை. 1862-இல் அவர் உயிர் துறந்தனர். எங்கெங்கே ஞானமும், அழகும், தூய்மையும் விளங்குகின்றனவோ, அங்கங்கே அவருக்கு வீடு எப்போதும் உண்டு என்று ஆசிரியர் எமர்சன் அவரைப்பற்றி எழுதியிருக்கிறார்.

2. ஆசிரியரது புலமை

ஆசிரியரது உரை நடை மனத்திற்கு இசைந்ததாகவும், விளக்கமானதாகவும், உள அயர்வைப் போக்கக்கூடியதாகவும், எளியதாகவும், இனிய ஓசையுள்ளதாகவும், எப்போதும் ஆழ்ந்த கருத்துக்கள் கொண்டதாகவும் உள்ளது. அவரது புலமை அவருடைய ஞானத்தினுடைய ஓர் கூறாக விளங்குகிறது.

3. கட்டுரையின் வழி

'வால்டன்' என்ற கட்டுரைத் தொகுதியிலுள்ள 'தனிமை' (Solitude) என்ற கட்டுரையின் மொழிபெயர்ப்பாகும் இது. ஏதோ சிற்சில பொருட் பெயர்களைத் தமிழ் நாட்டுப் பொருட் பெயர்களாகத் திரித்திருக்கிறது.

4. கட்டுரையின் கருத்து

ஒருவன் மக்கட் பொதுவினின்றும் விலகி, தனித்து வாழ்வதால் உயர்ந்த பேறுகளைப் பெறுவான் என்பது இதன் கருத்து.

5. கட்டுரையின் சுருக்கம்

படைப்பின் எண்ணரிய தோற்ற வகைகளில் தாமும் ஒன்று என்றும்; அப்படிப்பட்ட எண்ணம் தமக்கு மன அமைதியைக் கொடுத்து, முயற்சியாகிய காய்ச்சலைத்

தணிக்கிறது என்றும்; படைப்பின்கண் இராப்போது நிகழும் நிகழ்ச்சிகள் மக்கட்பொதுவில் காணப்படாது போகின்றன என்றும்; தமது குடிசையில் இன்னின்ன நிகழ்ச்சிகள் நடை பெறுகின்றன என்றும்; தாம் வால்டன் காட்டில் பழக்கப் பட்டவர் போலும் அதன் காணியாளர் போலும் பேருரிமை யோடு வாழ்ந்தார் என்றும்; அங்கே இரவில், நாட்டில் பகற் போதிய வாழ்வினர் கண்டறியாத உள்ளத்தின் சில சிறப் பியல்புகளைத் தாம் கண்டார் என்றும்; இயற்கையின் நிகழ்ச்சிகள் எப்போதும் பெருநன்மை உடையன என்றும்; தமது உயிரில் விளங்குவது போன்ற அறிவு, மற்ற இயற்கை நிகழ்ச்சிகளிலும் விளங்குகிறது என்றும்; சிற்சில இயற்கை நிகழ்ச்சிகள் கெடுதி உடையன என்று வீணில் வருந்துவது தவறு என்றும்; பெருங்கூட்டமாக வாழ்கின்ற நாட்டினர் வாழ்க்கையில் துன்பம் உண்டாகிறது என்றும்; பெரும் பொருள்களாகிய கோள்கள், விண்மீன்கள், இம்மாநிலம் யாவும், படைப்பின் விரிவைக் கருதும்போது, தனிப்பட்ட ஒவ்வோர் புள்ளியாகும் என்றும்; இந்தப் புள்ளி ஒன்றில் கூட்டம் என்றும் தனிமை என்றும் சொல்வது சிறப்பான பேச்சன்று என்றும்; மறுபிறப்பில் நம்பிக்கை உள்ளவர் களுக்கு எல்லா இடங்களிலும் பற்று உண்டாகும் என்றும்; பேரறிவு எங்கும் நிறைந்திருக்கிறது என்றும்; பேரறிவினுல் இயக்கப்படும் சக்திகள் புற உலகத்திலும் அக உலகத்திலும் தொழிற்படுகின்றன என்றும்; நமதுஉளத்திலேயே இரட்டை நிலைகள் இருக்கின்றன என்றும்; அதில் ஒன்று மற்றென் றிற்கு எப்போதும் துணை என்றும்; ஒருவர் உடலை மற்றொரு வர் உடல் அடுத்திருப்பதனுலேயே அவர்கள் ஒவ்வொரு வரின் அகத்தனிமை போகாதென்றும்; மக்கள் அடிக்கடி சந்திப்பதால், போது வீணில் கழிந்து, மரியாதை நட்பு முதலியவை குறைகின்றன என்றும்; ஓர் துறவி தன் அறிவை எப்போதும் துணைக் கொண்டிருக்கிறுன் என்றும்; படைப்பில் பல இயங்கியற் பொருள்களும், நிலை இயற் பொருள்களும் துணையற்றிருந்தும் இயல்பாக வாழ்கின்றன என்றும்; வால்டனில் அவரைப்போன்று இருவர் உண்டு என்றும்; நல்லொழுக்கம் உடைய ஒருவனை இயற்கைப் பொருள்கள் எதுவும் நன்கு அறியும் என்றும்; இப்படி இயல் பான வாழ்க்கையுடையவன் நீண்ட ஆயுளைப் பெறுவான் என்றும்; தாம் மருத்துவத் தெய்வத்தைவிட்டு, படைப்பில் ஊடுருவி நிற்கும் கடவுளையே வணங்குகிறுர் என்றும் பலப் பல இக்கட்டுரையில் ஆசிரியர் கூறுவர்.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 47. துறவி - நாட்டு வாழ்க்கையைத் துறந்த ஓர் பிரமசாரி, மாணி.

தனிமை - பிறரின் துணையின்றி இருக்கும் தன்மை.

பொறி - இந்திரியம், உடலின் சிறந்த வாயில் வகை.

புழை - துவாரம், சந்து.

வெளி - ஆகாயம், வானம், இடம்.

ஈர்க்கும்படியான - கவரும்படியான, இழுக்கும் படியான.

பக்கம் 48. முதல்கள் - நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகிய முதல்கள்.

இரக்கம் . . . குறைக்கிறது - இரக்கம், ஓசையோடு மனத்தை ஒருமைப்படுத்தி, முயற்சியின்றி வாளா இருக்கச் செய்கிறது.

ஆன்ம ஊக்கம் - முயற்சி; தான் என்ற நினைப்பினைக்கொண்டு எழும் முயற்சிவகை.

எனது அமைவான...கலக்கமுறவில்லை - என் வயமான அமைதி பெரிதும் மாறுபடவில்லை.

மாலைக்காற்றினால்...வேறு பட்டிருக்கின்றன - ஏரி மென்மையாக அலைத்தது என்பது.

உயிர்ப்பன்மை-உயிர்த் தொகுதி.

உயிர்ப்பன்மை...இவை-இரவும் பகலும் இடைவிடாது தொழிற்பட்டு விழித்துக்கொண்டிருக்கும் உயிர் என்னும் சங்கிலியின் ஒரு பகுதியாகும் இந்த உயிர்கள்.

பெயர்ச்சீட்டு-பெயர் எழுதிய குறுக்கம்.

பக்கம் 49. வான்வரம்பு-வானம் தரையோடு மோதிநிற்கிறதென்று தோன்றும் வட்டம்.

கைப்பட்டதாகவும்-நடமாட்டம் உள்ளதாகவும்.

மீட்கப்பட்டதாகவும்-மக்களுக்கென்று மீட்கப்பட்டதாகவும்.

வானவட்டம் - வான்வரம்பு.

ஊரால் - ஊராரால்.

பக்கம் 50. பிரைரீசு - Prairies.

பக்கம் 50. அப்போது...செல்லுவார்கள் - இருட்டில், தங்கள் உளத்தின்கண் உள்ள அச்சம், திகில், மனத் தளர்வு முதலியன வெளிப்பட, அவற்றையே அவர்கள் கண்டுபிடித்து, மீன் பிடிக்க இயலாது, வெறுமையாகத் திரும்புவார்கள்.

தூண்டில்கள்-இங்கு, மீன்பிடிக்க வந்த சமயங்கள்.

தங்களது இயற்கையாகிய பெரிய குட்டை-உளம்.

சுமையற்ற - கனமில்லாத, வெறும்.

கொப்பறை-தேங்காய் முதலியவற்றுள் உள்ள சதை.

இரவின் ... இழிவு படுத்தப் படவில்லை - இருட்டு என்பதைத் தேங்காயின் ஓடாகவும், இருட்டால் சூழப்பட்ட பொருள்களை எல்லாம் ஓட்டின் உட்புறம் உள்ள சதையாகவும் கொண்டு, இருளால் சூழப்பட்ட பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் மக்கள் எவரும் பயன்படுத்துகிறார்கள் இல்லை என்பது இதன் கருத்து.

சூனியக்காரர் ... இருந்தாலும் - மேல் நாட்டின் பிற்காலத்திய சட்ட திட்டங்களின்கீழ், சூனியக்காரர் நூற்றுக்கணக்காக உயிரிழந்தனர்; கிறிஸ்து சமயம் மேல் நாட்டவருக்கு முதன் முதல் கடவுளரின் அருள் ஒளியைக் காட்டியது; மெழுகு வர்த்திகள் புற இருளை நீக்கக் கருவியாக உதவுவன.

பக்கம் 51. நாப்பண் – நடுவில்.

உள ஒருமைப்பாடு - மனத்தின் ஒன்றிய நிலை.

வேறுபட்ட பருவங்கள்-மாரிக்காலம். கோடைக் காலம் முதலியன.

தரம் - உயர்வு, நிலைமை, வகை.

பக்கம் 52. உளப் போக்கில்-அப்போதைய மனவீழ்ச்சியில்.
திரிபு - விபரீதம், மாறுனது.

பக்கம் 52. காடுற்றவை - காட்டுத்தன்மை பொருந்தியவை.

பக்கம் 53. கூதிர்காலம் - பனிக்காற்றுள்ள காலம்.

கொஞ்சம்...வெளிச்சம் - மாலைப் போதிற்கு முன்னரே சூடு குறைந்துவிட்ட வெளிச்சம்.

காப்பினை - பாதுகாப்பினை, காவலை.

மருதமரம் - ஓர் பெருமரம்.

வளைபுழை - வளைந்து வளைந்து ஓடும் நெடுந் துளை.

பக்கம் 54. இடம் - வெளி, ஆகாயம்.

குறுக்களவு - ஓர் உண்டைப் பொருளின் நடு அளவு.

கோள் - கிரகம், இயங்கும் வான்பொருள்.

நமதுகோள் - நிலம்.

பால்நிறவழி - படர்ந்து ஓடிப் பெரும்பகுதியாய் நிலவும் வெளுத்த—விண்மீன் கூட்டங்களா லாய—பாட்டை.

கால்களினுடைய இயக்கம் - நடத்தல்.

பொதுமன்றங்கள் - பொதுமக்கள் கூடும் இடங் கள்.

உயிர் எங்கே...ஊற்று - உயிர்கள் முடிவிலாது தோன்றிக்கொண் டிருக்கும் இடம்; உயிர் கள் உண்டாகும் வற்றுத ஊற்று; செடி கொடிகள் மரங்கள் விலங்குகள் பறவைகள் ஆகிய இவை உண்டாகும் காடுபோன் றவை.

பக்கம் 55. இறந்தபின்...நம்பிக்கை - மறுபிறப்பு உண் டென்னும் நம்பிக்கை.

பொருள் நிலைமைகள் - ஒருவன் முயற்சிக்கு உட் படாத சூழ் நிலைகள்.

தற்சமயங்கள் - எதிர்பாராத நிகழ்ச்சிகள்.

அவற்றின் இருப்பை - அவை ஆகி நிலைபெற் றிருப்பதை.

பெருவன்மை - கடவுளின் தோன்றுவிக்கும் சக்தி.

பக்கம் 55. நம்மை அடுத்தாற்போல்...ஆம் - நம்மை அடுத்து நம்மை உண்டாக்கிக் காப்பாற்றும் கடவுளே இருக்கிருர்; நமக்குக் கீழ்ப்பட்ட ஒன்றன்று.

பக்கம் 56. விசும்பு - வானம்.

விசும்பு...இருக்கிறது - இம்முதல்களின் அறிதற்கரிய சத்திகளின் மிக விரிவுற்ற ஆதிக்கத்தைக் குறித்திருக்கிறது.

உள் நிலைமை - அகப்பான்மை, நுட்பத்தன்மை.

நாம்...பிரிக்கப்படா - நாம் அச் சத்திகளைத் தனித்துக் காணமுடியாது என்பது.

பிண்டம் - இறந்தவர்க்கு அளிக்கும் சோற்றுத் திரளை.

அறிவு விளக்கங்கள் - ஓங்கிய அறிவின் இனங்கள்.

வையகம்...சூழ்ந்திருக்கின்றன - அகத்தூய்மையின்கண் முயற்சியும், தென்புலத்தார்க்கு உணவளித்தலும் அச்சத்திகளின் செயல்களே யாகும்; அவற்றைப் பொருட்களின் சத்திகள் என்பது மட்டும் அன்றி அறிவின் இனங்கள் என்றே கொள்ளலாம்; அச்சத்திகள் எங்கும் நிறைந்து விளங்குகின்றன.

சோதனை - ஆராய்வு, சோதிப்பு.

அக்கறை - நாட்டம், சிரத்தை.

நல்லொழுக்கம்...இருந்தே தீரவேண்டும் - தூய்மையான ஒழுக்கத்திற்குத் துணைநிற்கும் கூட்டாளிகள், மேற்கூறிய அறிவின் இனங்களாகிய சத்திகள் ஆவர்.

கன்பூசியசு - Confucius.

சித்தம் - முடிவுபடுத்தும் உளத்தின் கூறு.

பக்கம் 57. அரங்கம் - ஆட்டமேடை.

அந்தக் காண்பான் - உயிர்க்குயிராய் உள்ள பேரறிவு.

புனைந்துரை - கற்பனைக் கதை.

உளக்கண்ணின் ஓர் வேலை-எண்ண மாத்திரம்.

அயல்மனையாளர் - அடுத்த வீட்டுக்காரர்.

பக்கம் 58. கேம்பிரிட்ஜ் கல்லூரி - Cambridge College.

பக்கிரி - துருக்க சமயத் துறவி.

பக்கம் 59. சேர்ந்திருத்தல் - கூடியிருத்தல்.
மலிவானது - எளிமையானது.
ஒருவரினின்று...எதிர்படுகிறோம் - ஒருவர் மேன்மையுறுதல் படிப்படியாகக் கூடுவதொன்று; அது காலத்தை வேண்டி நிற்கும்; எனவே அடிக்கடி ஒருவரைப் பார்ப்பதால், அவரிடம் முன் கண்டறிந்ததையே மறுபடியும் பார்க்கவேண்டிவரும். அதில் ஒரு பயனும் இல்லை என்பது கருத்து.
நெடியவும் குறைந்த - மிகக் குறைந்த.
சரக்கு - வாணிகப் பொருள்.
அளவளாவுதல்கள் - நெஞ்சுகலத்தல்கள்

பக்கம் 60. நொய்ம்மை - வலிவின்மை.
உளக்கண் - அகப்பார்வை.
அந்தப்படியிலேயே -அந்த வண்ணத்திலேயே, அந்த மாதிரியிலேயே.
அந்தப் பெரிய நீர்ப்பறவை- ஆசிரியர் அக்காட்டில் கண்ட ஓர் நீர்ப்பறவை .
அப்படி... இருக்கிறார்கள் - ஏரி விளக்கமாகவும் அழகாகவும் இருக்கிறது என்பது.
மூடுபனிநாளில்... உண்மை - பனியால் வேறிடத்தில் மற்றொரு சூரியன் இருப்பதுபோல் தோற்றும் தோற்றம்.
மாயைப்பேய் - மாயையால் சூழப்பட்ட பேய்; Devil.

பக்கம் 61. வடமீன் - துருவன் என்னும் மீன்.

பக்கம் 62. மூலிகைத் தோட்டம் - மருந்துச் செடிகளும், பூண்டுகளும் பயிராகும் தோட்டம்.
முதல் - வேர், நடு.
பக்க நிகழ்ச்சிகள் - முதலை அடுத்து உண்டாய நிகழ்ச்சிகள்.
வயணம் - காரணம்.
உயிர்ப்பான்மை - உயிர்த்தன்மை.
ஓருயிர் உடையன - தொட்டால் அறியும் உணர்ச்சி மட்டும் வாய்ந்த செடிகொடி முதலியன.

பக்கம் 63. தன்வந்திரி - பெயர்பெற்ற வடநாட்டுப் பழைய மருத்துவ நூலாசிரியர்.

பக்கம் 63. மூப்புற்ற . . . பார்த்திருப்பதும் - எத்தனையோ மருத்துவர்கள் இறந்தொழிதலைக் காணுத லும்.

தாலம் - தட்டம், தட்டு.

கற்பம் - மூப்பொழிக்கும் மருந்து.

நாளின் ஊற்றுத்தலைப்பு - நாளாகிய ஆறு தொடங்கும் இடமாகிய காலைவேளை.

குப்பி - குவளை, சீசா.

ஈஸ்குலாப்பிய கிரேக்கர் - Aesculapius; அப் பெயர் கொண்ட ஓர் கிரேக்கநாட்டு மருத்து வர்.

ஹிஜியா - Hygeia.

ஜூனே - Juno.

புத்தேளிர் - வானோர்.

ஜூப்பிட்டர் - Jupiter.

ஹெபி - Hebe.

இந்தக் கோளம் - தரை.

10. ஆசிரியர் கேட்டே

1. ஆசிரியரது வரலாறு

பேராசிரியர் தாமஸ் கார்லைல் (Thomas Carlyle) அவர்கள், 1795-இல் ஸ்காட்லண்டு நாட்டிலே, எக்ளிபெக்கன் (Ecclefechan) என்னும் ஊரிலே பிறந்தார். அவர் தந்தை ஓர் கல் தச்சன். தந்தையும் தாயும் உயர்ந்த ஒழுக்கமுடையவர்கள். அவர்களுடைய சொல் தொடர்களும் பேச்சு மாதிரியும் ஆசிரியர் நூல்களில் பரக்கக் காணக்கிடப்பதாகத் தெரிகிறது. உயர்தரக்கல்வி பயின்றபின், அவர் சிறிது காலம் பள்ளிக்கூட உபாத்தியாயராக இருந்து, அத்தொழிலில் வெறுப்படைந்து, அதை விட்டுவிட்டார். பிறகு பத்திரிகைகளுக்கு எழுதிப் பார்த்தார். 1825-இல் லண்டன் நகரத்துக்கு வந்து, ஷில்லர் (Schiller) என்னும் ஜெர்மனி நாட்டுப் புலவரது வரலாற்றை வெளியிட்டார். 1826-இல் ஜேன்வெல்ஷ் (Jane Welsh) என்னும் அம்மையாரை மணம் புரிந்தார்; இவ் அம்மையாரால், ஆசிரியரது புலமையும் புகழும் வளர்ந்து செழித்தன. 1828 முதல், தமது மனைவியின் ஊராகிய கிரேகன் புட்டக் (Craigenputtock) என்னும்

இடத்தில் குடியிருந்து வந்தார். இங்கே தான் ஆசிரியர் தம் ஐயங்களையும் திரிபுணர்ச்சிகளையும் ஒழித்து ஒருவித ஆன்ம அமைதியை அடைந்தனர்; இங்கே தான் அவர் தமது ஒப்பற்ற உரை நடையையும் முதன்முதல் கைக்கொண்டார். ஸார்ட்டர் ரிஸார்ட்டஸ் (Sartor Resartus), பிரஞ்சுக் குடியரசுக் குழப்பம், கட்டுரைக் கோவைகள் ஆகிய அவர் நூல்களில் இந்நடையைக் காணலாம். இவற்றில், வாய்மையிடத்தும், இடையருத உழைப்பினிடத்தும், தூய்மையான ஒழுக்க வகைகளிடத்தும் மிக்க ஆழ்ந்த பற்றையும், போலி எண்ணங்கள், போலிப் பேச்சுக்கள், போலி மரியாதைகள் முதலிய எல்லாப்போலிக ளிடத்தும் வேரூன்றிய வெறுப்பையும் அவர் உண்டு பண்ணுகிருர். ஆசிரியர் எமர்சன் (Emerson) அமெரிக்காவிலிருந்து இவரைக் காணுமாறு இங்கு வரவே, இவ் இரு பேராசிரியர்களும் ஒருவரை ஒருவர் பார்த்தவுடனே நண்பராஞர்கள். இந்நட்பு இவர்களின் ஆயுட்கால முழுவதும் நிலைபெற்றிருந்தது. 1834-இல் அவர் இரண்டாம் முறை லண்டன் சென்றனர். 1836 தொடங்கித் தமது முதுமையிலும் அவர் பெருநூல்கள் எழுதி வெளியிட்டனர். 1866-ஆம் வருஷம் அவர் தம் அரிய மனைவியை இழந்தார். 1881-இல் ஆசிரியரும் இறந்தனர்.

2. ஆசிரியரது புலமை

இவர் ஓர் பேராசிரியர் என்றும், பேரான்ம விளக்கம் வாய்ந்தவர் என்றும் யாவராலும் இதுவரை போற்றப்படுகிருர். வாய்மையும் தூய்மையும் உழைப்புமே இவர் சலிப்புருது கற்பிப்பன. இவர் நூல்களில் காணும் பேச்சு வகை என்றும் காணுத ஓர் புதுமை. இவருடைய உரை நடை, கடவுளின் சிறப்புக் கருவிகளாகிய—அச்சமும் வியப்பும் விளக்கமும் நன்மையும் தரும்—இடி மின்னல்களின் சாயலேபோல் பொலிகிறது. இவர், நாட்டு அரசியல் வகைகளை, நாடகத்தில் என, காண்பதுபோலும், கேட்பது போலும், பேசுவதுபோலும் விளங்க வைப்பதில் ஈடற்றவர். இரக்கத்தையும் மேம்பாட்டினையும் காட்சித்திறனையும் மேற்கொண்டு இயங்கும் இவரது உரைநடை. அறிவாற்றல் இலாதவர் இவருடைய சொற்போக்கைக் கேட்டு எதிர்நிற்கும் ஆற்றலின்றி மறைந்தொழிவர்; முட்டாள்கள், இவர் சொல்வதின் பொருள் தெரியாது மயங்குவர்; வீண் பெருமைக்காரரும், பகட்டாளிகளும் இவரது கருத்தை உணருமா

றில்லை. தம் வாக்கியங்களுக்கு இடையில் சிற்சில கூட்டுச் சொற்களையும் சுட்டுச் சொற்களையும் சொல்லாது, படிப்பவரே அவற்றை எண்ணிக்கொள்ளும்படி விட்டுவிடுவர். சொற்களையும் சொல் தொடர்களையும் வரிசைப்படுத்தும் வகையாலும், செவிக்கினிய சொல் தொடர்களைப் பிணைக்கும் முறையாலும் இவரது நடை இன்னிசை பெற்றிருக்கிறது. இனி, இன்னது தான் என்று பிரித்துப்பார்த்து உணரக்கூடாத ஓர் தனி உத்தி இவர் உரையின்கண் கிடக்கிறது.

3. கட்டுரையின் வழி

ஆசிரியர் ஜெர்மன் பாஷையிலிருந்து மொழி பெயர்த்து 1827-இல் வெளிப்படுத்திய ஜெர்மன் கதைகள் என்பதற்கு எழுதிய முன்னுரைகளில் ஆசிரியர் கேட்டே என்பது ஒன்று. அதில் ஒரு பாகத்தின் மொழிபெயர்ப்பாகும் இது. இதை ஆசிரியரின் பல பொருட் கோவையில் (Miscellanies) காணலாம்.

4. கட்டுரையின் கருத்து

ஜெர்மனி நாட்டின் பேராசிரியரும் ஓர் ஆன்றோருமான கேட்டே அவர்கள் அரிய ஆன்ம விளக்கம் உடையவர் என்பது இதன் கருத்து.

5. கட்டுரையின் சுருக்கம்

பேராசிரியர் கேட்டேயின் உளத்தின் பெருஞ்சிறப்பு நிலைபெற்ற அமைதி என்றும், நேர்மையும் விரிவும் வன்மையும் அதன் மற்ற சிறப்புக்கள் என்றும்; அவர், உணர்வு நலனும், அறிவு விளக்கமும், உளக்காட்சியும், இன்பதுன்பச் செறிவும் இணையற்றபடி எய்தியிருந்தாலும், அவற்றை எல்லாம் அடக்கி, தமது அறிவின் ஒளியைத் துணைக்கொண்டு ஆண்டனர் என்றும்; அவ் ஆட்சிநிலை ஊழும் முயற்சியும் பொருந்தி இயங்கும் எய்தற்கரிய நிலையாகும் என்றும்; அவரது அமைதி மாசற்ற காட்சியை அடிப்படையாகக் கொண்ட நெடிய முயற்சியின் பயன் என்றும்; அவர், பொய்யைத் துருவி அறிந்து ஒழித்து மெய்யை மேற்கொண்டார் என்றும்; மக்கட்பிறப்பினரின் இழிவுகளைத் தெளிவாக அறிந்திருந்தும், அவர் ஒருவரையும் வெறுக்கிறதில்லை என்றும்; இப்படி ஒருமைப்பட்ட அவரது உள்ளம் பிறர் கற்பதற்காகும் ஓர் அரிய நூலாக இருக்கிறது என்றும்; அவர் நிறைந்த கல்வி கற்றவர் என்றும்; அவருடைய நூல்கள் பெருஞ்சிறப்பு வாய்ந்தன என்றும்; அவற்றின் நடை செய்யுளிலும் உரையிலும் ஜெர்மன் மொழியின் உயர்வுக்கு ஓர் எடுத்துக்

காட்டாக இருக்கிறது என்றும்; அவரது நூற்பொருளின் சிறப்பு சான்றாண்மையே என்றும்; புலவராக அறிவுறுத்திய சால்பை, அவர் தமது ஒழுக்கத்தில் கைக்கொண்டிருந்தார் என்றும்; இந்த வகையில் அவர் பேராசிரியர் ஷேக்ஸ்பியரை நிகர்க்கிறார் என்றும்; அவரைப் பிரஞ்சுநாட்டுப் பெரும்புலவர் வால்ட்டேரோடு ஒப்பிடுவது சரியாகாது என்றும்; இக் காலத்திற்கு ஏற்ற தேவர்களையும் அவுணர்களையும் அவர் கற்பித்தார் என்றும்; இயற்புலமையின் சரியான தன்மையை அறிந்தவன் தான், அவர் நூல்களில் இந்த நாளைய ஆன்ம விளக்கம் கோவில்கொண் டிருப்பதைக் காண்பான் என்றும்; கடவுட்காட்சி வாய்ந்த அவரை உள்ளபடி அறிந்து போற்றுவது இங்கிலாந்தின் கடமை என்றும்; அவரது உளத்தில் குறைபாடு உண்டெனினும், அவர் மேன்மைகளைத் தெளிவாக மதித்த பின்னர், அவருடைய தவறுதல்களைக் கண்டிக்க மேற்போகலாம் என்றும்; பிறவகையிலும், விரிவாக இக்கட்டுரை விளக்கும்.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 64. ஆசிரியர் கேட்டே - (1) அவருடைய வரலாறு:—ஜான் வொல்புகாங் வான் கேட்டே (Johonn wolf gang Von Goethe) அவர்கள், ஜெர்மனி நாட்டிலே, பிராங்க்பர்ட்டு (Frankfurt) நகரத்திலே, 1749-இல் பிறந்தார். சட்டத்தில் நிபுணரும், விரிவாகக் கற்றவரும் ஆன அவரது தந்தை ஓர் பெரிய உத்தியோகஸ்தர்; அவருடைய தாயாரோ, அதிநுட்ப அறிவும் சாந்த குணமும் உடையவர். சிறு குழந்தைப் பருவத்திலேயே, ஆசிரியர் ஒப்பற்ற புத்தி சாதுரியம் உள்ளவர் என்று கொண்டாடப்பட்டார். சட்டம் கற்பதற்காக 1765-இல் அவர் லீப்ஸிக் கலாசாலைக்குச் (Leipzic University) சென்றார். அங்கு அவர் சட்டம் பயின்றதோடு அமையாமல், ஆசிரியர் ஹெர்டர் அவர்களைப் (Herder) பின்பற்றி இயற்புலமையில் பெருந் தேர்ச்சி அடைந்து, 20 வயது முடியுமுன் அந்நாட்டின் இயற்புலவர்களின் தலைவர் என்று பெயரெடுத்தார். 1771-இல் தமது நகருக்கு வந்து, உபாயமாக வக்கீல் தொழில் நடத்தி வந்தார்.

பக்கம் 64. ஆசிரியரது மிகுந்த அழகும், உயர்ந்த நிலைமையும், புலமையின்கண் அவருக்கு இருந்த ஆற்றலும் சேர்ந்து, அவர் சென்ற சென்ற இடங்களிலெல்லாம், அழகும் கல்வியும் செல்வமும் உடைய பெண்கள் பலப்பலர் அவரிடம் காதல் கொள்ளும்படி செய்தன. அவரும் அப்போதப்போது அவ்வக்காதலில் ஈடுபட்டு மயங்கினாலும், கடைசியாய், தம் ஒப்பற்ற சித்தவன்மையால், அததனின்றும் தப்பித்து விடுவது வழக்கம். 'இளமகன் வெர்தரின் துயரங்கள்' (The Sorrows of young Werther) என்னும் நாவலை இவ் அநுபவத்தின் பயனாக 1774-இல் வெளியிட்டார். இதனால் அவரது புலமை ஐரோப்பாக் கண்ட முழுவதும் போற்றப்பட்டது. பின்னும் பௌஸ்ட் (Foust) முதலிய சிற்சில உயர்ந்த நூல்களையும் அவர் இப்போது எழுதத்தொடங்கினார்.

1775-இல் ஸாக்ஸ் வெய்மரின் (Saxe-Weimer) அரசிளங்குமரரான கார்ல் ஆகஸ்ட்டு (Karl August) அவர்களின் வேண்டுகோட்கு இணங்கி, வெய்மருக்குச் சென்று, அவரோடு நண்பராகி, அவ்வரசாங்கத்தின் ஓர் கவுன்சிலராக அமர்ந்தார். பிறகு, படிப்படியாக 1779-இல் பிரிவி கவுன்சிலராகவும், 1782-இல் அதன் தலைவராகவும், 1788-இல் ஓர் மந்திரியாகவும் ஆய், முதுமை வரையில் அவ் உயர்ந்த நிலையிலேயே இருந்துவந்தார். பின் அதனின்றும் விலகியபோது, நெப்போலியன் முதலிய சில அரசர்கள் தங்கள் தங்கள் நாட்டு உயர்ந்த அரசாங்கப் பட்டங்களை அவருக்கு அளித்துக் கௌரவப் படுத்தினார்கள். ஆசிரியர் அப்படி வெய்மரில் அமர்ந்த பின்தான், மக்களின் உள்ள நிலைகளையும் உலக அநுபவத்தின் எல்லாக் கூறுகளையும் நுணுகி நுணுகி ஆராய்ந்து கண்டு வைத்தார் என்பர். வெய்மருக்குச் சென்ற சிறிது நாளில் சார்லொட்டி வான் ஸ்டெயின் (Charlotte

பக்கம் 64. Von Stein) என்ற பெண் தகைக்கும் அவருக்கும் நட்புண்டாயிற்று. பிற்காலமெல்லாம் ஆசிரியர், தமது ஆன்ம விளக்கத்திற்குக் காரணம் ஷேக்ஸ்பியரும் சார்லொட்டியுமே என்று கூறுவர். ஆனல் அந்த நட்பு, தகாத ஒழுக்கத்தில் முடியும் என்று அவர் கண்ட போது, ஒருவருக்கும் சொல்லாமல்படி 1786-இல் அவர் இத்தாலி நாட்டிற்குச் சென்ருர். அதன் சிறப்பியல்புகளைக் கண்டு வியந்து 1788-இல் வெய்மருக்குத் திரும்பினர். பிறகு, செடிகொடிகளைப்பற்றிய சாஸ்திரத்திலும், மனித உடலைப் பற்றிய சாஸ்திரத்திலும் முதன்மையான ஒவ்வொரு கோட்பாட்டினை யூகித்தறிந்து வெளிப்படுத்தினர்; சில நாடகங்களும் அச்சேறின; தமது ஆயுள்வரை நிலைத்த பின்வரும் இரண்டு தோழர்களையும் பெற்ருர். கிறிஸ்டியானே வல்ப்பியஸ் (Christiane Vulpius) என்பவரிடம் கொண்ட காதல் 1806-இல் கல்யாணத்தில் முடிந்தது; பேராசிரியர் ஷில்லர் (Schiller) அவர்களது தோழமை அவர் இறக்கும் வரையில் நிலைபெற்றிருந்தது; இவ் இருபுலவர்களின் நட்பு அவர்களுக்கும் உலகத்துக்கும் பெரும் பயன் அளித்தது என்பர். 1797-இல் ஆசிரியரது பெயர் பெற்ற நாவலான வில்ஹெல்ம் மெய்ஸ்டட்ரின் 1-ஆம் பகுதி (Wilhelm Meister's Apprenticeship) வெளியாயிற்று. ஷில்லரது தூண்டுதலின் பேரில் பௌஸ்ட் நாடகத்தை மேலும் கொஞ்சம் எழுதினர். இவ்விருவரும் அந்நாட்டில் வழங்கிய போலி நூல்கள் பலவற்றைக் கண்டித்துக் கொஞ்சகாலம் எழுதிவந்தனர். பிறகு,'ஹெர்மனும் டொரோதியாவும்' (Hermann and Dorothea)என்னும் அழகிய செய்யுள் நூலை கேட்டேயும், பொது ஜனங்கள் அறியக்கூடிய சிந்துகள் சிலவற்றை இருவரும் சேர்ந்தும், அச்சிட்டனர். தம் பெயர்பெற்ற நாடகங்களை இயற்றியபின் 1805-இல் ஷில்லர் இறந்து விட்டார்.

பக்கம் 64. ஷில்லரோடு ஆசிரியருக்குத் தோழமை என்பது போய்விட்டது. இனி, அந்நாட்டிலுள்ள புலவர் யாவரும் அவரைத் தம் தலைவராகவே பாராட்டி வந்தார்கள்.

1806-ஆம் வருஷம் நெப்போலியன் வெய்மர் நகரத்தைக் கைக்கொண்டார். கேட்டேயை மரியாதையாக நடத்தவேண்டும் என்று உத்தரவிருந்தும், போர்க்குழப்பத்தில் சிப்பாய்கள் தாறுமாருய் அவர் வீட்டில் நுழைந்து துன்புறுத்தியபோது, அவரது காதலியான கிறிஸ்ட்டியானுவால் அவர் உயிர் தப்பினுர். நெப்போலியனிடத்தும், வால்ட்டேர், ரூஸ்ஸோ, திதரோ முதலிய பிரஞ்சுநாட்டுப் புலவர்களிடத்தும் தமக்குள்ள விருப்பாலும், பொதுவாக உலகின் நலத்தைக் கோரும் வழக்கத்தாலும் அவர் தமது நாட்டின் தோல்வியைப்பற்றி வருந்தினுரில்லை. நெப்போலியனும் அவரை நேரில் கண்டபோது, மிக்க மரியாதையாக வரவேற்று அளவளாவினுர் என்பர். 1808-இல் பௌஸ்ட்டின் முதல் பகுதி வெளியாயிற்று. வெளியானதுதான் தாமதம்; உடனே ஐரோப்பாவின் பெரும்புலவர்கள் எல்லாருமே அதை வெளிப்படையாகக் கொண்டாடினுர்கள்; மேலும், கேட்டேயை ஓர் ஒழுக்கமுறைக்குக் குருவாக மதித்துப் பெரும்பாலர் பின்பற்றத் தொடங்கினுர்கள்; கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்த பெண் நாயகங்கள் பலர் அவரைப்போற்றி வழிபாடு செய்து வந்தார்கள்; முதுமையிலும் அவர் காதலால் மயங்கினவராயினும், அதை, அக்காலத்தும், இளமையிற்போலவே, முறியடித்து வெற்றிகொண்டார். பின்னர், வில்லியம் மெய்ஸ்ட்டரின் இரண்டாம் பகுதியை 1821-இலும், பௌஸ்ட்டின் இரண்டாம் பகுதியை 1824-இலும் வெளிப்படுத்தினர்.

இப்போது அவரைச் சூழ்ந்து இளம் புலவர்கள் பலர் இருப்பர். வெளிநாடுகளி

பக்கம் 64. லிருந்து புலவர்களும் மற்றையரும் வந்து அவரைக்கண்டு அளவளாவிச் செல்வர். கார்லைல் அவர்கள் இவரைப்போன்று தமது காலத்து வாழ்ந்த வேறு எவரையும் பொருட் படுத்தவில்லை. இவரும், ஆசிரியர்கள் ஹைனே, பைரன், ஸ்காட், கார்லைல் முதலி யவர்களைப் பெரிதும் மதித்துப் பேசுவர். ஆசிரியர் கோல்டு ஸ்மித்தின் 'வேக்பீல்டு ஊரின் குருக்கள்' என்னும் நூலைத் தமது முதுமையில்கூட இவர் புகழ்ந்து பேசினதாகத் தெரிகிறது. கடைசி நாள் வரை உடல் நலத்தோடும், அறிவு விளக்கத்தோடும் இருந்து, இவர் 1831-இல் அமைதியாக உயிர் துறந்தார் என்பர்.

(2) அவரது புலமையும் ஞானமும்:— மனிதர் தவருன செய்கைகளைச் செய்தாலும் பொய்ம்மையான கருத்துக்களால் மயங்கி யிருந்தாலும், கடவுள் ஒவ்வொருவருக்கும் தோன்ருத் துணையாக இருந்து, வழிகாட்டி, இறுதியில் முத்திநிலையை அளிப்பார் என்பதே மெய்ஸ்ட்டரில் கண்ட சிறந்த கருத்து. மக்கள் எவரையும் அவரவர் ஒவ்வொரு காலத்து இருக்கும் இழிந்த அல்லது தாழ்ந்த நிலைமையைக் கண்டு வெறுக்காமல், அவரவர் இனி எதிர் காலத்தில் ஆகக்கூடிய உயர் நிலைமையைக் கருதிப் போற்றுதல் செய்வதே யாவருக்கும் ஒழிபின்றிப் பயன் அளிக்கக்கூடியது என்பதும்; தம்மின் உயர்ந்தோரிடத்தும், தம்மை ஒத்திருப்பவரித்தும், தம்மின் தாழ்ந்தோரிடத்தும் ஒழிபின்றி அன்போடும் இணக்கத்தோடும் நடந்துகொள்வதே மெய்ச்சமய ஒழுக்கம் என்பதும்; பிறவும் அந்நூலில் கண்ட மற்ற உயர்ந்த கருத்துக்களாகும்.

வெறும் தர்க்கமூட்டை அளப்பதிலும் சாஸ்திரக் குப்பைகளிலும் மன அமைதி உண்டாகாது என்றும்; பிரபஞ்சத்தின் தோற்றம், நிகழ்ச்சி, ஒடுக்கம் ஆகியவற்றைப்

பக்கம் 64. பற்றிய ஞானத்தையும், அவற்றிற்குக் காரண மாகிய சத்தியையும், பிரபஞ்சத்தின் அநுப வம் எல்லாவற்றையும்அடைய மனிதன் முற் படவேண்டும் என்றும்; அவ்வகை நன்முயற் சியின்கண் எதிர்ப்படும் எந்தத் துன்பமும் இடுக்கணும் நிலைபேறுகள் ஆகமாட்டா என்றும்; இவற்றிற்குக் காரணமான மாயை யும் கடவுளரின் ஏவலாளராதலால், துன்பம் போல் காட்டி, அதை முறியடித்து, மேற் போகும் தன்மையால் சித்தவன்மையை உண்டாக்கி, பேரின்பத்தினை நுகரத் தகுதி யாக்குவதே அதன் தொழில் என்றும்; மேலுமேலும் ஓங்கி வளர்ந்து கொண்டு போகும் நன்முயற்சியால், மனிதன் கொஞ் சம் கொஞ்சமாக வீடு பேறு அடைந்து கொண்டு போகிருன் என்றும்; எல்லாவற் றிற்கும் அடிநிலை இடைநிலையாக இருப்பது போலவே, கடவுள், முடிநிலையாகவும் இருப் பதால், 'உலகம் எலாம் உதிக்கின்ற ஒளி நிலை, மெய் இன்பம் உறுகின்ற வெளிநிலை என்று உபயநிலையாகி இலகிய' அவரது சேவடிகளை அடையும் வரையில் ஒருவன் எந்தவிதமான இன்பங்களிலும் நிலைகளிலும் திருப்தி கொண்டுவிடக் கூடாது என்றும்; அருள், தொடக்கத்தில் நினைத்தற்கு அரிய தாயினும், விடாத நன்முயற்சியால் ஒருவன் தூய்மையையும் சித்த வன்மையையும் அடைந்தபின், அதுவே, எல்லா ஞானத்தை யும், எல்லாச் சத்திகளையும், எல்லா அநு பவத்தையும் அடைவிக்கும் என்றும்; பிற வகையிலும், பௌஸ்ட் என்னும் நூல் கூறும். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ !'; 'கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு.' என்பன போன்ற அருண்மொழிகளை இங்கு உய்த் துணர்தல் பொருந்தும்.

பிரபஞ்சத்தின் உள்ளும் புறமும் கடவு ளது விளக்கமே நிறைந்திருக்கிறது என்றும்; புலன் அநுபவம் தொடங்கி மேன்மேலும்

பக்கம் 64. அநுபவித்துக் கொண்டு செல்லுதலே உண்மை நெறி என்றும்; செய்கையில் அன்றி வெறும் பேச்சிலும் எண்ணத்திலும் உண்மை அநுபவப்படாது என்றும்; படிப் படியாக உயர்ந்த கடமைகளைத் தளராது ஒரே மனதாய்ப் புரிந்துகொண்டு போகும் போது, உலகின் நலங்களெல்லாம் ஒருவனது அநுபவமாக வந்தடையும் என்றும்; உலகின்கண் காணக்கிடக்கும் பொய்களும் மாயங்களும் ஒருவனைவிட்டு விலகிவிடும் என்றும்; செய்த குற்றங்களுக்காகவும் தவறுதல்களுக்காகவும் வீணில் வருத்தப் பட்டுக்கொண்டு தியங்காமல், நன்னெறியில் வைராக்கியத்தோடு தொழிற்பட வேண்டும் என்றும்; இங்ஙனம் தொழிற்படுவதற்கு, ஒருவனுக்குப் புறம்பான அற வுரைகளும் விதிகளும் இன்றியமையாதபடி வேண்டிய தில்லை என்றும்; அப்படித் தொழிற்பட்டு, தூய்மையும் வன்மையும் அடைந்துகொண் டிருக்கும் ஒருவன் உளத்தின் கண்ணேயே மேல் நடக்கவேண்டிய வழி அறிவிக்கும் அருள் ஒளி உண்டாகி விளங்கும் என்றும்; இம்முயற்சியின் முதற்பெரும்பயன் ஆன்ம தரிசனம் என்றும்; ஆன்ம தரிசனம் செய்த வர்கள் மட்டுமே கடவுட் காட்சிக்கு அருக ராவர் என்றும் கொள்வது ஆசிரியரது மெய்ந்நெறியாகும்.

"அன்னப் பார்ப்பால் அழகாம் நிலையூடே
அம்பலம் செய்து நின்றுடும் அழகர்
துன்னப் பார்த்(து) என் உயிர்த்தோழியும் [நானும்
சூதாடுகின்ற அச் சூழலில் வந்தே,
'உன்னைப் பார்த்(து) உன்னுளே என்னைப் [பாராமல்
ஊரைப் பார்த்(து)ஓடி உழல்கின்ற [பெண்ணே!
என்னைப்பார்' என்கின்றார் என்னடி அம்மா!
என் கை பிடிக்கின்றார், என்னடி [அம்மா!"

பக்கம் 64. என்னும் மெய்ம்மொழியையும் பிறவற்றை யும் இவற்றோடு இங்கு நினைந்துணர்தல் பெரிதும் விளக்கந்தரும்.
நீர்மை - குணம், தன்மை.
வேட்கை - பெருவிருப்பம்.
உரங்கள் - சத்திகள்.
நாப்பண் - நடு.
நடுக்குறும் ஓர் உணர்ச்சி - மிக மேன்மையான உணர்ச்சி.
எடுப்பற்ற - உயர்வற்ற.
உடல் இயக்கங்கள் - மயிர்ச்சிலிர்ப்பு போன்றவை.
உட்புரைகள் - மறைவான நிலைகள்.

பக்கம் 65. இழிவான உயர்பதவியாளன் - செய்கையால் தாழ்ந்தும்,நிலையால் உயர்ந்தும் இருப்பவன்.
உடுப்பால்-ஆடையால், வெளித்தன்மையால்.
கழிபேர் ஆக்கம் - மிக்க உயர்ந்தது ஒன்று.

பக்கம் 66. உள்வீடு - உள்ளம்.
ஐயம் - சந்தேகம்.
உளவருவாய் - மனத்தின் அடிப்படை.
இழிதகைமை - தாழ்ந்த குணம்.

பக்கம் 67. முட்டுப்பாடு - கஷ்டம்.
உயர்வற்ற சிக்கல் - மிகப் பெரிய சிக்கல்.
கொடை - முயற்சியில்லாமல் பெற்றது.
முதல்உரு - தொடக்கநிலை.
முதல்கள் - தத்துவங்கள், தன்மைகள்.

பக்கம் 68. புறப்பொருள் - பக்கப்பொருள், இரண்டாந்தரமானவை.

பக்கம் 69. ஹூக்கர் – Hooker.
பேக்கன் - Lord Bacon.
மில்ட்டன் - Milton.
பிரௌன் - Sir Thomas Brown.
சான்றாண்மை - ஞானம், சால்புடைமை.
உளவேட்கை - மனவிருப்பம்.
துனியுற்றதும் - துன்பம் பொருந்தியதும்.
ஆன்மப் பேராழி - ஆன்மாவாகிய பெரிய கடல்.

பக்கம் 70. நோட்டம் - ஆராய்வு.

பக்கம் 70. ஓர் ஆன்ரோர் - ஓர் ஞானி.

பக்கம் 71. உடற்கோடு - வடிவப் பாகுபாடு.

பக்கம் 72. வால்ட்டேர் - Voltaire, பிரஞ்சுநாட்டின் பெயர் பெற்ற ஆசிரியர்.

சதுரப்பாடானவர் - சாமர்த்தியமுடையவர்.

பக்கம் 73. எரிவாய் நிரயம் - நரகம்.
மிக்ஞன் - Mignon.
ஹார்ப்பர் - Harper.
டாஸ்ஸோ - Tasso.

பக்கம் 74. மாய இருப்புக்கள் - இல்லாமலிருக்கும் எனப் படும் உண்மைகள்.

இந்த அரிய...தொடங்கினதும் - அதாவது, பௌஸ்ட்டு என்னும் பெரு நாடகத்தில்.

பக்கம் 75. பணிக்கைகள் - சீர்தூக்குதல்கள்.
மறை - இரகசியம்.

பக்கம் 76. ஸ்பென்சர் - Spenser, பெயர்பெற்ற ஆங்கிலப் புலவர்.
தேட்டை - தைரியம்.

பக்கம் 77. செர்வான்டெசு - Cervantes.
டாஸ்ஸோ - Tasso.
அமைவான கொடை - சாந்தமான தலைமை.

---

11. புலமைப் பேரின்பம் பெறும் உண்மை

1. ஆசிரியரது வரலாறு

அமெரிக்காவிலே, பாஸ்டன் (Boston) நகரத்திலே, 1803-ஆம் ஆண்டிலே, ஆசிரியர் ரால்பு வால்டோ எமர்சன் (Ralph Waldo Emerson) பிறந்தார். அவர் தந்தையார் ஓர் கோயில் குருக்கள். அவர் தாயார் மிகத் தூய்மையானவர். ஹார்வார்டு கலைக்கூடத்தில் (Harward University) கல்வி கற்று, 1821-இல் பட்டம் பெற்ருர். கிரேக்கருடைய பழைய நூல்களில் அவருக்கு அப்போதே மிக்க ஆழ்ந்த பற்று உண்டாய்விட்டது. சிலநாள் பள்ளிக்

கூட உபாத்தியாயராக இருந்து, அதைவிட்டு, சமயக்கல்வி கற்று, 1826-இல் சமயச் சார்பான விரிவுரை நிகழ்த்தினர். 1829-இல் அவர் மணந்த மனைவி 1831-இல் இறந்துவிட, அவர் சமய விரிவுரை நிகழ்த்துவதை விடுத்து, ஞானத்தை விரும்பி, ஐரோப்பாவையும், சிறப்பாக, ஆசிரியர் கார்லைல் அவர்களையும் பார்க்கும்பொருட்டு, 1832-இல் பிரயாணமானர். இத்தாலி நாட்டிற்குப்போய் அந்நாட்டின் அரிய கோவில்களையும் ஓவியங்களையும் கண்டு வியந்து, அங்கு ஆசிரியர் லாண்டார் அவர்களை நேரிட்டு, அவரது அடக்கி ஆளமுடியாத உளவன்மையை அதிசயித்து, இங்கிலாந்திற்குச் சென்று, ஆசிரியர் கோல்ரிட்ஜ் முதலியவர்களிடம் அளவளாவி, ஸ்காட்லண்டுக்குப் போய் ஆசிரியர் கார்லைல் அவர்களைக் கண்டார். கண்ட சிறிது நேரத்தில் இருவரும் நட்பாளரானர்கள். கொஞ்ச நாட்களில் அவர் அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்ருர். இவ் யாத்திரையால் ஆசிரியருடைய கருத்துக்களும் உணர்ச்சிகளும் விரிவடைந்தன என்பர். 1835-இல் அவர் இரண்டாம் முறை கல்யாணம் செய்து கொண்டார். எங்கும் நிறைந்து விளங்கும் கடவுள் தன்மையையும், நல்லொழுக்கமே கடவுட் காட்சிக்கு அடிப்படை என்பதையும் விளக்கும் 'இயற்கை' (Nature) என்னும் உரை நூலை 1836-இலும், 'வரலாற்று நூலின் உட்பொருள்' (The Philsophy of History) என்னும் மற்றென்றைப் பின்னும் கொஞ்ச நாளிலும் அவர் அச்சிட்டார். 1840 தொடங்கி நான்கு வருஷம் அவர் ஓர் உயர்ந்த பத்திரிகை நடத்தினர். இதன் சார்பாகப் பொருள் எழுதி உதவினவர்களில் ஆசிரியர் தோரோவும் ஒருவர். 1841-இலும் 1844-இலும் தமது சிறந்த கட்டுரைகளைத் தொகுத்து, ஆசிரியர் கார்லைல் அவர்களின் முன்னுரையோடு வெளியிட்டார். பிரசங்கம் செய்யும் பொருட்டு, 1847-இல் அவர் இங்கிலாந்திற்கு வரவழைக்கப்பட்டார். இதனல் மற்ருேர் முறை கார்லைல் அவர்களோடு அளவளாவ நேர்ந்தது. இச்சமயம் அவர் ஆசிரியர் டி குவின்சி அவர்களைக் கண்டு, அவரது பேச்சும் பழக்க வழக்கங்களும் இனிமையாகவும் தெளிவாகவும், இசையுடையனவாகவும் இருக்கின்றன என்று வியந்தார். அமெரிக்காவுக்குச் சென்று, 'ஆங்கிலரின் குணச்சிறப்புக்கள்' (English Traits) என்னும் நூலை 1856-இல் வெளிப்படுத்தி, கார்லைல் அவர்களின் மதிப்பைப் பெற்ருர். நீக்ரோ வகுப்பாரின் அடிமைத்தனத்தை ஒழிக்க முற்பட்டவர்களில் ஆசிரியரும் ஒருவர். பிறகு அவர் மூன்ரும் முறையாக ஐரோப்பாவுக்குப் போய், கார்லைல் அவர்களிடம் நெருங்கி அளவளாவி,

ஆசிரியர் ரஸ்கின் அவர்களிடம் நட்புக்கொண்டு, அவரை மிக நேர்த்தியான விரிவுரை நிகழ்த்துபவர் என்று பெரிதும் பாராட்டி, எகிப்து நாடு சென்று, தம்நாடு திரும்பினர். 1881-இல் கார்லைல் இறந்த செய்தி கேட்டு, மிகப்பரிவாக அவ்ஆசிரியரைக்குறித்துப் பொதுவில் பேசினர். 1882-இல் அவரும் உயிர் நீத்தனர்.

2. ஆசிரியரது புலமையும் ஞானமும்

ஆசிரியர்கள் கார்லைலும் எமர்சனும் கொண்ட அடிப்படைக்கருத்து, கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறர் என்ற ஒன்றே என்றும்; அதை, கார்லைல், ஹீப்ருவின் சமயகுரு மோசஸ்அடிகள் போல் வன்மைகொண்டும், எமர்சன் பழைய கிரேக்கப்புலவர்கள் போல் அமைதியாகவும் கற்பிக்கிறர்கள் என்றும் ஆசிரியர் ஹைனே அவர்கள் கூறியிருக்கிறர். எமர்சன் எவ்வித முறையுமின்றி எழுதுபவர். அவருடைய தனித்தனி வாக்கியங்களே முடிவான கருத்துக்கள் ஒவ்வொன்றைக் கருக்கொண்டிருப்பன போல் விளங்கும். அதாவது, உதாரணமாக,ஆசிரியர் வால்ட்டர் பேட்டர் எழுதும் முறைக்கு முற்றிலும் மாருனது. எமர்சன், எந்தத் தர்க்க முறையையும் பின்பற்ருது, முன்னைய சமயாசாரியர்கள் போன்று சாதிக்கிறர் என்பர். பழங்காலத்து ஆன்ரோரிடத்துப் போன்றே, இக்காலத்தும், எல்லா மனிதரிடத்தும் ஆன்ம விளக்கம் குடிகொண்டிருக்கிறது என்பது அவருடைய கருத்து. மேலும், அவா அறுத்தலை அவர் எப்போதும் வேண்டுகிறர். அழகு என்பது, ஆன்ம அழகு, குண அழகு என்றிப்படி அவர் கண்ணுக்குக் கிளைகொள்கிறது. அவரது உரையின் சிறப்பெல்லாம், தேர்ந்த சொற்களுள்ளும், கட்டிய வாக்கியத்துள்ளும் தான் கிடக்கிறது. அவர் வாக்கியங்களைக் குறள், ஆத்திசூடி முதலியவற்றில் உள்ள வாக்கியங்களுக்கு ஒப்பிடலாம். அறிவாளிகளால் அவை பெரிதும் உய்த்துணர்ந்து மகிழும் தன்மையன.

3. கட்டுரையின் வழி

ஆசிரியரின் கட்டுரைத் தொகுதியில் (Essays) ஒன்ருன புலமை (Art) என்பதன் மொழி பெயர்ப்பாகும் இது.

4. கட்டுரையின் கருத்து

புலமை, அழகினைக் காணும்பொருட்டு, ஆன்மாவுக்குத் துணை நிற்கும் ஓர் கல்விமுறை என்பதும்; அங்ஙனம் காணப்

பெற்றபின், புலமையானது, வேண்டாத ஓர் செய்விணை ஆகிறது என்பதும் இதன் கருத்து.

5. கட்டுரையின் சுருக்கம்

முத்திநெறி என்பது உயிரின்கண் அறிவு தங்கு தடையின்றி விளங்குதலே என்றும்; மேன்மேலும் விளக்க முறும் அறிவின் துணையால், மக்கள் தங்கள் குறைகளை அகற்றி நிறைவுபெற முயலுகிறார்கள் என்றும்; அப்படிப் பட்ட முயற்சியினை, ஓவியப்புலவன், தகுந்த குறிகளைக் கொண்டு, விளங்க வைக்கவேண்டும் என்றும்; இயங்கும் அம்முயற்சியை அதன் அடையாளமாகிய சூழ்ச்சி நிலையைக் கொண்டு உணரலாம் என்றும்; ஒவ்வொரு காலமும், அக்காலத்திய மக்களின் முயற்சிக்குப் புறத்தில் நின்று அம் முயற்சியைச் சூழ்ந்திருக்கும் ஊழ்நிலையை ஒவ்வொரு வகையில் கொண்டிருக்கும் என்றும்; ஓர் புலவன், அவன் காலத்திலும் நாட்டிலும் வழங்கும்—ஊழ் நிலையின் ஓர் கூறுகிய—குறியீடுகளின் வழியானே, தன்னுடைய நுண்ணுணர்வினை விளங்க வைத்தல் தக்கது என்றும்; நம் அகமும் புறமும் மேலும் கீழும் அழகு நிறைந்திருந்தும், நம்முடைய அறிவின் சிறுமையால், அதை அந்நிலையில் உணரமாட்டாதிருக்கிறோம் என்றும்; படைப்பின் எந்தப்பொருளையும், அதன் பொருட் கூட்டுறவினின்றும் தகுதியானபடி பிரித்துக் காட்டினால், அதுவே உலகத்தின் சிறந்த பொருள் என்று தோன்றும் என்றும்; இப்படிப் பிரித்துக்காட்டும் தொழிலை மேற்கொண்ட புலமைகளின் முடிவே வாழ்க்கையின் தொடக்கம் என்றும்; எல்லா உயிர்களுள்ளும் அததற்கு உயிராக விளங்கும் பேரறிவாகிய பெரும்புலவன், அதனதன் உடல் உறுப்புக்கள், அகக்கரணங்கள் முதலியவற்றை இமைக்கு இமை, வேறு வேறு வகையில் செப்பம் செய்கிறதைக் கண்டுணர்தல் வாழ்க்கையின் கடமை என்றும்; எல்லாவற்றையும் ஊடுருவும் பேரறிவின் பொது அடையாளம் நல்லொழுக்கம் என்றும்; நல்லொழுக்கம் உடைய புலவன், எக்காலத்திலும், எந்நாட்டிலும், எவர் துணையுமின்றி, சிறப்பெய்துவான் என்றும்; 'ஏசு அடிகளின் தெய்வத்தோற்றம்' என்னும் ஓவியம் போன்ற எந்தச் சிறந்த கைவினையும் நல்லொழுக்கமுடையவனுக்குப் பழக்கமுள்ளதாகத் தோன்றும் என்றும்; புலமை இடையீடின்றி நிறைந்திருக்கும் பேரறிவினைச் சுட்டிக்காட்டுவதற்காகும் கருவியே என்றும்; அப்பேரறிவாகிய பெரும் புலமை மக்களையும் பிரபஞ்சத்தையும் கற்பிக்கிறதென்றும்;

படைப்பினின்று வேறுபட்டது போலும், படைப்புக்கு எதிர் நோக்குடையது போலும் கற்பனையைக் கருதுவதால், அது சிறுமையுற்றுத் தோன்றும் என்றும்; அழகிய கற்பனைகள் என்றும், பயன்படு கற்பனைகள் என்றும் வேறுபடுத்திக் கூறுவது இயல்பாகாது என்றும்; வாழ்க்கையின் புதுமைக ளோடு கற்பனைகள் ஒத்தியங்கினால் மட்டுமே, அமை தமக் குள்ள சிறப்பைப் பெறும் என்றும் கூறுவது இதன் போக்கு.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 79. புலமை . . . உண்மை - புலமையாகிய பெரிய இன்பம் தோன்றுவிக்கும் உண்மை; உண்மை நிலையத்திற்கு வழிகாட்டி நிற்கும் புலமையாகிய இன்ப நிலையம்; புலமை கட வுட் காட்சி எய்துவிக்கும் என்பது கருத்து.

மேற்செல்லும் தன்மையது - வீடு பெறுவதற் கானமுயற்சியை மேன்மேலும் மேற்கொள் ளும் குணமுடையது.

பழையநிலை - ஆன்மா முன்பு ஒருபோது இருந்த நிலைமை.

ஒரு நிறைவு - அதனதன் தரத்துக்குத் தக்கபடி குறைவற்றது என்று சொல்லப்படும் ஒன்று.

பயன்தரும் நோக்கம் - பலரும் இன்புறுவதற்காகும் கருவிகளை உண்டு பண்ணும் நோக்கம்.

இன்பந்தரும் - இன்பத்தை நேரே தரும்.

செய்வினை - செய்தொழில்.

உண்டாக்குதல் - புதிதாய்த் தோன்றுவித்தல், கற்பித்தல்.

ஒப்பச்செய்தல் - ஒன்றைப்போல் பிறிதொன்றைச் செய்தல்.

நிலப்பரப்பு-அழகு வாய்ந்த நிலத்தோற்றங்கள்.

பொதுவகை - சிறப்புற்றுப் பெரும்பான்மையாய் உள்ளவகை.

சில்லறை - அற்பம், சிதறினவை.

அதன் உண்மையையும் ஒளியையும் - இயற்கை யின் உள் மறைவையும் அதன் பெருவிளக்கத் தையும்.

நிலக்காட்சி - நிலத்தைப் பொறுத்த காட்சி.

பக்கம் 79. ஒருநிலக்காட்சி . . . அறிதல் வேண்டும்- குறித்த ஓர் ஓவியத்தின் அழகு என்பது அதிலுள்ள ஓர் பெரு நலத்தைப் பற்றியிருக்கிறது; அப்பெரு நலமோ, அவ் ஓவியத்தின் கண் மட்டும் புதியதாய்க் காணப் பெருமல், காண்பான் ஒருவனது உளத்தின்கண் வதிந்திருந்தே அப்படிக் காணச்செய்கிறது என்று அறிதல் வேண்டும்.

இயற்கையின் குறிப்பு - தோற்றத்தின் உட்கிடை.

இயற்கைப்போலி – இயற்கையைப் போன்றிருக்க எழுந்த ஓவியம்; படம்.

துன்பத்துள் . . . எழுதுவான் - இன்ப துன்பங்களின் காரணங்களைக் கண்டு எழுதுவான்.

குறைவுற்ற ஒப்புமை - ஓர் வகையில் குறைவுள்ள சமானம்.

தன் எதிர் . . . வேண்டும் - ஒருவரது தோற்றத்தைப் படத்தில் எழுதப்புகும் ஓர் புலவன், அவர் உடல் உறுப்புக்களின் அப்போதுள்ள மேல் குறிப்பை அன்றி, அவர், தாம் எவ்வித நிலையை அடையக் கருதி விரும்பி முயல்கிருரோ, அந்த அகக் குறிப்பைக் கண்டறிந்து, அவற்றில் தோற்றுவிக்க வேண்டும் என்பது கருத்து.

பக்கம் 80. தெரிந்தெடுத்தலும் - பொறுக்கி எடுத்தலும்.

புதுவது புனையும் - புதியதாக ஒன்றனைத் தோற்றுவிக்கும்.

உள்முயற்சி - அறிவின் முயற்சி.

குறியீடுகள் - குறிகளாகிய பிரதிகள்.

பேரான்ம விளக்கம் - பேரறிவின் தொழில்; எல்லா உயிர்க்குள்ளும் உயிராய் இருந்து விளங்குவது பேரான்மா.

இயற்கை . . . என்பான் - இயற்கையின் நுட்ப விளைவு ஆவான் மனிதன்.

வான் வரம்பு - சுற்றியுள்ள வானவட்டம்.

ஒடுக்கம் - குறுக்கித் தறித்தது.

வான்வரம்பு . . . மனிதன் - படைப்பின் பல்வகைத்தாய தோற்றங்களில் மனிதனுகிய தோற்றம் மிக்க நுட்பமானது.

இடைவெளி - இடங்கொண்டிருக்கும் வெளி.

பருமை - சுமை.

பக்கம் 80. உட்கிடை - அகக்குறிப்பு.
தீட்டுக்கோல் - ஓவியம் எழுதுவதற்குக் கருவி யாயுள்ள கோல்.
மக்கட்பொது - ஜனம்.
உளக்கண் - அகப்பார்வை.
ஆன்மநிலை - பேரறிவின் போக்கு.
அறிவிறந்தது - மக்களின் அறிவின்பால் படாதது.
ஊழ்நிலை - விதி; முயற்சிக்குப் புறத்திலுள்ளது என்று காணும் நிகழ்ச்சிகளின் வித்து.
கடவுட்டன்மை - தெய்விகம்.
ஊழ்நிலையாகிய இந்தப் பகுதி - ஒருவனுடைய முயற்சியின்றி, அவனது நாளையதாயும் நாட்டினதாயும் நின்று, அவன் வேலைப் பாட்டில் சேர்ந்துகொள்ளும் பகுதி.

பக்கம் 81. நிருமித்தல் - கோலுதல்.
ஆன்ம விளக்கம் - அறிவின் தன்மை.
சித்தப்பிணக்கு - கண்டபடி முடிவுபடுத்தும் தன்மை.
உணர்ச்சித் தாறுமாறு - மனநிலைகளில் கண்ட படி பாய்தல்.
புறம்போந்து-பக்கத்தில் நின்று, நேராகவன்றி.
சித்தம் - முடிவுபடுத்தும் உளக்கூறு.
மக்கட்பிறப்பின் வரலாறு - மக்கட் பிறப்பினர் பால் ஊழிதொறும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள்.
கழிபெருங்கை - காலமாகிய பெரிய கை.
எகிப்தியர் - எகிப்து நாட்டினர்.
சித்திரஎழுத்துக்கள்-Hieroglyphics, இயற்கைப் பொருள்களின் வடிவங்களாலாய எழுத் துக்கள்; எகிப்தியரின் பெருங்கல்லறைக் கோபுரங்களின் மீது காணப்படுபவை.
மெக்சிகோ- Mexico, பழைய நாளில் வளமை யடைந்திருந்த ஓர் நாடு.
வணங்குதற்குரிய வடிவங்கள் - சட்டகங்கள், விக்கிரஹங்கள்.

பெரும்படியாக - நுட்பமற்றபடியாக.
சாயல் அற்றவை - இக்காலத்தியவர் கண் ணுக்கு அழகற்றவை.

பக்கம் 81. ஆன்மப் பொலிவின் - பேரறிவின் விளக்கத்தின்.

பக்கம் 82. வீடுபேறு - ஈடேற்றம், உய்தி, முத்தி.
ஊழ் - விதி.
உயிர்த்தொகுதி . . . தீட்டின - பல்லுயிர்களும் உய்யுமாறு உதவும் ஊழினுடைய படத்தில் அவை ஒவ்வோர் கோடாக இருக்கின்றன.
காலத்தொடர்பு கருதி - காலத்தை முன்பின்னுக எண்ணி.
ஒன்றிய - தனித்தனியான.
அறிவரிய - ஆராய்ந்து முடிவுபடுத்த அருமையான.
வேறுபட்ட - பல்வேறுபட்ட.
நமது...........உண்டாக்குவன அல்ல - இன்ப துன்ப நிலைகள் தம்மிலே முடிவடைவன.
அதன் - குழந்தையின்.
ஆன்மப்பண்பு . ஒழுக்கநிலை.
வேட்கை - ஆசை, உணர்ச்சி.

பக்கம் 83. உலகத்தின் ஈடு - உலகத்திற்கே இணை.
பேருரையாளர் - அவைக்கண் பெருஞ்சொல் நிகழ்த்துபவர்.
நாட்டாண்மையாளர் - நாட்டுத்தலைவர்கள்.
மன்ருடி - நெடுஞ்சொல்லாளன்.
பர்க்கு-Burke, பெயர்பெற்ற ஆங்கில அரசியல் நூலாசிரியர்.
பைரன்-LordByron,ஓர்ஆங்கிலப்பெரும்புலவர்.
கார்லைல் - Carlyle, 183-ஆம் பக்கம் பார்க்க.
வண்ணவேறுபாடு - நிறவேற்றுமை.
தாயகம் - பிறந்த இடம்.
பேர் ஆன்ம வன்மை - பேரறிவின் விளக்கம்.

பக்கம் 84. உலகின் உச்சி - உலகின் முடி.
அவதாரமாக - படைப்பு முழுவதுமே அப்படி மாறிவிட்டதாக.
சிந்து - ஓர் எளிய பாவகை.
காப்பியம் - பெருநூல்.
ஏஞ்சலோ -Angelo, இத்தாலி நாட்டின் பெயர் பெற்ற ஓவியப்புலவர்.

பக்கம் 84. தொடர்ந்த -அடுத்தடுத்து வரும்.

ஓவியம்........காணப்படவில்லை - இப் புலமைகளின் முடிவை நாம் கற்கவேண்டியிருக்கும் உயர்கல்விக்குத் தொடக்கமாகக் காணுதல் வேண்டும்.

மறைவை - உட்கிடையை, தனிச்சிறப்பை.

உருவங்கள்........இருக்கிறதும் ஆன - படைப்பின்.

பக்கம் 85. ஆன்மவிளக்கம் - பேர் அறிவு விளக்கம்.

வான்கூரை - வானமாகிய மேல்கூரை,இறப்பு.

நிலம்........அடிப்படை - தரையும் கடலும் ஆகிய அடிப்படை.

கறுப்பு........படத்தை - எஞ்ஞான்றும் மாறுபட்டு இயங்கிக்கொண்டிருக்கும் படைப்பினை.

கற்படிவங்கள் - கல் சட்டங்கள், கல்லுருவங்கள்.

ஓவியம்........அறிவிக்கும் - பலவகை நிறத்தைத் திறம்படப் பொருத்துவது ஓவியத்தின் தொழில்; பல்வகை வடிவத்தைத் திறம்படப் பொருத்துவது சிற்பத்தின் தொழில்.

பக்கம் 86. ஹோமர் - Homer, பெயர்பெற்ற கிரேக்க நாட்டுக் காப்பிய நூலாசிரியர்.

அவுணர் - அரக்கர், தானவர், மிக்க உடல் உரமுள்ளவர்.

உயிர்ப்பு வாய்ந்த மனித உடல் - (உயிருள்ள) மனிதர்.

முதலவாய - முதல்தன்மையை உடைய.

ஒற்றை வடிவங்கள் - தனித்த உருவங்கள், தனித்தனி வேறுபட்ட உருவங்கள்.

ஆன்மாவாகிய........கொண்டிருக்கிறன் -ஒருவனது உடலைக் கல்லாகவும், அவனுடைய அறிவைச் சிற்பியாகவும் கொண்டிருக்கிறது.

தோற்றவகை - தோன்றும் மாதிரி.

உள்நாட்டம் - மனப்பான்மை.

பக்கம் 86. மெய்ப்பாடு - உள்ள நிகழ்ச்சி உடலினிடத்து உண்டாக்கும் தோற்றவகை.

கூளம் - குப்பை.

பெருமுதலான வன்மை - கடவுளின் உண்டாக்கும் சத்தி; கடவுள்.

தீர்ந்த வேலைகள் - மிகச்சிறந்த வேலைகள்.

பக்கம் 87. முதலவாய உள்ள நிலைமைகள் - அன்பு, அடக்கம் போன்ற அடிப்படையான மனநிலைகள்.

புனிதமான ஆன்மாவின் பிறப்பு - மாசுபடாத அறிவின் அவதாரம்.

மாசற்ற பேரொளியின் தெறிப்பு - பேர் அறிவினின்று பாயும் ஒளி.

நிறைவுற்ற புலமையாகவும் - சிறந்த கைவினைகளில்கூட காணப்படும் குறை எதுவும் இல்லாத ஓர் மாப்பெரும் புலமையாகவும்.

செய்பொருள் - செய்தபொருள், கைப்பட்டுச் செய்த பொருள்.

பேரான்ம வன்மை - பேரறிவின் சத்தி.

ஏதோ குறித்த ஓர் இடத்தில் - குறித்த ஓர் நாட்டில்.

முதன்மையற்ற கட்டுப்பாடுகள் - அடிப்படைத் தன்மையற்று, அவ்வவ் இடத்திற்குமட்டிலும் ஏற்கும் விதிகள்.

அவ் அழகு.........ஓர் ஒளியே ஆக - விரும்பி, முயன்று பெற்ற நல்லொழுக்கத்தின் விளக்கமே அழகெனப்படுவது.

டஸ்கனி - Tuscany, இத்தாலியிலுள்ளது.

வெனீசு - Venice, இத்தாலியிலுள்ளது.

பொதுக்குறிப்பு - ஜாதி, சமயம், காலம், நாடு, மொழி முதலிய வேற்றுமைகளால் தியங்காது யாவரும் அறியத்தக்க குறிப்பு மொழி; நல்லொழுக்கம்.

பக்கம் 88. வாட்டிகன் - Vatican, உரோமாபுரியிலுள்ள காட்சிக்கூடம்.

பாண்டங்கள் - அழகுற அமைத்திருக்கும் குவளை போன்றவை.

அவனது - அக்காட்சியாளனது.

பக்கம் 88. ஒருவரோடொருவர் தொடர்புறுதல் - உறவும் நட்பும் போல்பவை.
நெஞ்சங்கள் துடித்தல் - காதல் போல்பவை.
கண்ணொடு கண்சேர்தல் - தாயன்பு போல்பவை.
பட்டடை - அடைகல், கொல்லர் முதலிய தொழிலாளரின் கருவி.

பக்கம் 89. உரோமாபுரி - Rome, இத்தாலியிலுள்ளது.
பாரிசு - Paris, பிரஞ்சு நாட்டிலுள்ளது.
புது ஹாம்ஷையர் - New Hampshire, அமெரிக்கா நாட்டிலுள்ளது.
பொழுதின் நிலைமை - சூடு, குளிர் என்னும் நிலைமைகள்.
ஓரமின்றி - பட்சபாதமில்லாமல், நீதியாய், வெறுப்பு விருப்பின்றி.
புறக்கண் - கண்.
அகக்கண் - மனம்.

பக்கம் 90. ஆன்மப் பெருவிளக்கம் - பேரறிவின் தெளிவு.
தாறுமாறு - விபரீதம், வெறும் புதுமைகள்.
முதற்பகுதி - அடிப்படையானது.
நேபிள்ஸ் - Naples, இத்தாலி நாட்டிலுள்ளது.
உவர்நீர் - பெருங்கடல்.
ராபேல் - Raphael.
ஸாச்சி - Sacci.
டிஷியன் - Titian.
லியனார்டோ டா வின்சி - Leonardo da Vinci.
பாஸ்ட்டன் - Boston, ஆசிரியர் பிறந்த ஊர்.
மிலன் - Milan.

பக்கம் 91. ஏசு அடிகளின் தெய்வத்தோற்றம் - The Transfiguration.

பக்கம் 92. உகந்த - ஏற்ற.
இலியடு - Illiad.
பெருவன்மை - பேரறிவின் ஆற்றல்.
புலமையானது......சொல்வதற்கில்லை - புலமை இங்குக் கூறியவற்றை இயற்றவல்லது.
புலமை - படைக்கும் சத்தி.
கற்பனைகள் - செய்வினைகள், செயற்கை முடிவுகள்.

பக்கம் 92. உளப்போக்கு - மனத்தின் சாய்வு.

உரிய........பிறந்த - வேண்டிய நாட்களில் குறைவுபட்டுப் பிறந்த.

கற்பிக்க வேண்டுதலே புலமையாம் - இங்கு, புலமை என்பது, படைக்கும் சத்தி அல்லது பேரறிவு.

அப்புலமை - படைக்கும் அச்சத்தி.

பக்கம் 93. தன் முழுவன்மையையும்........வேண்டும் - புலவன், தன்னுடைய ஆன்மசத்தி முழுவதையும் தன்கற்பனையில் செலுத்தி விளங்க வைக்கவேண்டும்.

புலமையானது - புலமையின் பயனை ஓர் ஓவியமோ, சிற்பமோ.

சூழ்நிலை-எப்பக்கமும் சூழ்ந்து வதியும் பொருள் நிலை.

ஒழிபற்ற தொடர்பையும் உரத்தையும் - எஞ்ஞான்றும் விளங்கும் பிரபஞ்சத்தின் தொழில் விரிவையும் வன்மையையும்.

அதன் உயர்ந்த........ஆகும்-ஓவியம் முதலியவற்றை உற்று நோக்குபவன் ஒருவனை ஓர் புலமையாளனுக மாற்றவல்ல வன்மை அவற்றின்கண் நிலைபெற்றிருத்தல் வேண்டும்.

கற்பனை முறைகள் - ஓவியம், சிற்பம் போன்ற புலமை இனங்கள்.

சிற்பத்தைப்போன்ற........சேர்க்கப்படுகிறது - சிற்பம்போன்ற கற்பனைகளில் உலகத்தின் விரிவைக் குறிக்க முடியாது என்பது கருத்து.

பக்கம் 94. அது......உண்டு - நம்முடைய மனநிலை எக்காலத்தும் எவ்விடத்தும் பொருந்தும் பேர் உண்மையைக் கவர்ந்தில்லாததால், அதன் குறை ஒவ்வொரு சமயமாவது அறிவிற்குப் புலனும்.

நியூடன் - Newton, பெயர்போன ஆங்கில வான சாஸ்திரி.

கல்பொம்மைகள் - சிற்ப வடிவங்களை அவருக்குத் தோன்றியபடி கூறியது.

பக்கம் 94. பேம்ரோக்குப் பிரபு - Earl of Pembroke.

வீணையானது...இழந்து விட்டது - யாழ்முறிகள் பல்கிவிட்டன.

பக்கம் 95. செய்யுள் - தனிக் கருத்தொன்றைக் கொண்டது; பிரிவுபட்டு ஒன்றியாய் நிற்கும் கருத்தைக் குறித்தது.

புனைந்துரை - வாழ்க்கைக்கும் படைப்புக்கும் பொருத்த மில்லாத சிற்சிலவற்றைக் கலந்து இயற்றியது; உண்மையற்ற தன்மையைக் குறித்தது.

அகப்புற உணர்ச்சிகளின் இயக்கம் - அகக் காட்சி; நம்பிக்கை முதலியவற்றைப்பற்றி எழும் உணர்ச்சிகளையும், வெளிப்பொருள்களையும் மக்களையும் சார்ந்து நிகழும் உணர்ச்சிகளையும் குறித்தது.

வாழ்க்கையானது...அன்றோ - வாழ்க்கை, பிரிவு பட்டும், உண்மையற்றும் இருக்கக் கூடுமானால், அது, இன்னும் சுலபமாக, அகப்புற உணர்ச்சியோடு உற்று விளங்கலாம் அல்லவா.

கிரேக்கரது ரதி மன்மதன் – Venus and Cupid of the Greek legends.

ஊழ் - படைப்போடு தொடர்புபடுத்தும் விதி.

களைகண் - புகலிடம், ஆதாரம்.

பக்கம் 96. சதுரப்பாடு-சாமர்த்தியம்.

கருத்துமாறுதல் அடையக் கூடாதவர்-அறிவு நிகழ்ச்சி அற்றவர், கற்கமாட்டாதவர்.

விழிப்புக்கனா - உண்மையற்ற பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் கொண்ட மாயக் காட்சி.

பக்கம் 97. கட்டியங்கூறுமலே - முன்பு சொல்லிக்கொள்ளாமலே.

ஆன்மவன்மை - பேரறிவின் சத்தி.

பக்கம் 98. கைவினைக் கூடங்கள்-கைத்தொழிற்சாலைகள்.

இடரைக் குறைக்கும் முறை - Insurance.

கூட்டு வாணிபம் - Joint stock company.

பக்கம் 98. மின்சாரம் விளையும் தொட்டி - Galvanic battery.
மின்சாரம் கொள்ளும் குப்பி - Electric Jar.
ஒளியைக்கூறு செய்யும் கண்ணுடி - Prism.
பொருட் கூட்டுறவை ஆராயும் கருவி - Chemist's retort.
பெரும் பொறிகள் - Machinery.
செண்ட் பீட்டர்ஸ்பர்க்கு - St Petersburg, ருஷ்யாவிலுள்ளது.
லீனு - Lena, ருஷ்யாவிலுள்ள ஓர் நீர்நிலை.

---

12. மகளிர் மேற்றுய முடிவுரை

1. ஆசிரியரது வரலாறு

ஆசிரியர் ஜான் ரஸ்கின் (John Ruskin) அவர்கள், இங்கிலாந்து நாட்டிலே, லண்டன் நகரிலே, 1819 - ஆம் ஆண்டு, செல்வமுள்ள ஓர் வணிகர் குடியில் பிறந்தார். ஆக்ஸ்போர்டு கல்லூரியில் (Oxford university) கல்வியில் நுட்பமான தேர்ச்சியடைந்து, 1842-இல், அவர் பி. ஏ. பட்டம் பெற்றனர். ஓவியம் சிற்பம் ஆகிய இப்புலமைகளின் ஊடே ஊடே நுழைந்து கற்று, அவற்றில் அரிய தேர்ச்சி எய்தினர். எனினும், அவர், உரைப்புலமையில் தான், தம் நிகரற்ற பேர் உயர்வை அடைந்தனர். 1843-இல் 'இந்நாளைய ஓவியப்புலவர்கள்' (Modern Painters) என்னும் பெருநூலை அச்சிட்டனர். 1849, 1851, 1853, 1954, 1857-இவ் வருஷங்களில் அவரது மற்றைப் பெருநூல்கள் வெளிவந்தன. பின்னர், 1865 தொடங்கி 1879 வரையில் சிறுசிறு நூல்கள் பல எழுதி, பதிப்பித்து வந்தார். 1900 ஆம் வருஷம் அவர் இறந்து போனுர்.

2. ஆசிரியது புலமை

ஆசிரியர் எப்போதும் எண்ணமிட்டுக் கொண்டிருப்பவர் என்றும், சிரித்தே அறியாதவர் என்றும், இணையற்ற விரிவுரையாளர் என்றும் ஆசிரியர் எமர்சன் சொல்லியிருக்கிறுர். இத்தாலிய நாட்டைக் கொடுங்கோல் ஆட்சியினின்றும் மீட்டதற்குத் தலைக்காரணரான மட்ஸீனி அவர்கள் (Mazzini), நமது ஆசிரியரை, எப்பொரு

ளேயும் நுணுகிநுணுகி, துருவித்துருவி, அதனதன் ஊடே ஊடே சென்று ஆராய்ந்து அறிபவர் என்றும், அவருக்கு ஈடாக, ஐரோப்பாக் கண்டத்திலேயே சென்ற நூற்ருண்டில் வேறு ஒருவரையும் சொல்வதற்கில்லை என்றும் வியந்திருக் கிறதாகத் தெரிகிறது. ஓவியங்கள் சிற்பங்கள் ஆகிய இவை நூற்பொருள் ஆதற்குத் தகுந்தவை என்பதை, இவர், முடிவாகக் கையாண்டு நிலைநிறுத்தினர். அவருக்கு முன், சில ஆங்கிலமொழிப் புலவர்கள், ஓவியப் புலமையில் பற்றுக்கொண்டு, அதை ஆங்காங்குத் தம்தம் நூல்களில் வியந்தனராயினும், ஆசிரியர் ரஸ்கின்போன்று, விரிவாகவும் அதன் கூறுகள் பல்லாயிரத்தில் நுழைந்து நுழைந்து ஆராய்ந்து எழுதியவர் வேறு ஒருவருமில்லை. அவர் பெரு நூல்களில் இயற்கைத் தோற்றங்களின் எண்ணிக்கையற்ற சிறப்பு வகைகளையும், ஐரோப்பாவில் உள்ள அரிய ஓவியங் களையும், பெயர்பெற்ற மாளிகைகளையும் கோவில்களையும் ஆன்ம உருக்கத்தோடும், ஆர்வத்தோடும், நுட்பமாகவும், உளக்கண்ணுக்குப் பெருவிளக்கமாகவும், அதுவரையில் யாவராலும் நினைத்தற்கும் அரிய ஓர் பேரழகு வாய்ந்த உரைநடையில், பெரும்புலநுட்பத்தோடு விவரித்துக் காட்டி யிருக்கிருர். இவரது உரை நடையின் பேரழகு, இந்த உளவால்தான் உண்டாகிறது என்று ஒன்றைச் சுட்டிக் கூற முடியவில்லை. பெரும் உரைப்புலவர்கள் எல்லாரிடத்தும் காணக்கிடப்பது போல், இவரது உரையிலும், செவிக்கினிய ஓசை நுட்பமாக அளவுபடுத்தப்பட்டு, நிலைபெற்றிருக்கிறது, சிற்சில இடங்களில் செய்யுளின் ஓசை என மயங்கும்படி அஃது அளவுபட்டிருக்கும். அவருடைய வாக்கியங்கள் 20, 30 வரிகள் வரையும், ஒவ்வொருபோது, ஒரு பக்கத்திற்கு மேற்பட்டுக்கூட, நீண்டிருக்கும். இந்தத் தன்மையால், செய்யுளோசைகொண்ட சொற்ருெடர்கள், உரைஓசைக்கு மாறுபட்டு இன்பமற்றவையாகப் புலப்படுவதில்லை. அவர் தர்க்கமுறையில் காரணகாரியங்களை ஒன்றன்பின் ஒன்ருக வரிசைப்படுத்திச் சொல்வது போல் தென்பட்டாலும், உண் மையில், அவர் காட்சிப்பொருள்களின் சிறப்புக்களை அடுத் தடுத்து, ஒன்றன்பின் ஒன்ருக உளக்கண்ணிற்குத் தோற் றம்பட வடிவு படுத்திக்கொண்டே போகிறதினுல், அவர் வாக்கியங்களின் நீளம் மனத்திற்கு அயர்வையும் மறதியை யும் தருகிறதில்லை. புதுச்சொற்களையும் புதுச்சொற்ருெடர் களையும் கையாள்வதும், பெயர்ச் சொற்களோடு புதியபுதிய அடைமொழிகளைப் பிணைப்பதும் ஆகிய ஓர் மேலோட்ட மான உத்தி அவரிடம் கிடையாது. ஆசிரியர் கார்லைல்

அவர்களது நடையின் சிறப்புகளின் சிற்சில மறைகளை ரஸ்கின் கற்றுக்கொண்டார் எனினும், அப்படிக் கற்றுக்கொண்டவற்றை வேறுபட்ட பொருள்களிடத்தும், வேறு பயனளிக்கும்படியும் அவர் கையாண்டார். ஆனால், நல்லொழுக்கத்தைப் பெறற்கரும் சிறப்பாகக் கூறுவதில் இவ்விரு ஆசிரியரும் ஒரே மனத்தினர் ஆவர்.

3. கட்டுரையின் வழி

இது 'அரசிகளுடைய சோலைகளின் மலர்கள்' (Lilies of Queens' Gardens) என்னும் விரிவுரையின் மொழிபெயர்ப்பாகும்.

4. கட்டுரையின் கருத்து

ஆடவரும் பெண்டிரும் ஒருவருக்கொருவர் இன்றியமையாத வாழ்க்கைத் துணைவர் என்பதும்; அமைதிக்கு உறைவிடமாகிய தங்கள் தங்கள் வீடுகளை ஆளுவதே பெண்மக்களது அகக்கடமை என்பதும்; பெண்மக்களின் கல்வி, பொருளிலும் துறையிலும் ஆன்மப்பொலிவிலும் ஆண்மக்களின் கல்வியைப் போன்று இருத்தல் வேண்டும் என்பதும்; மக்கட்பொதுவில் அமைதி நிலைபெற்றிருக்குமாறு தொழிற்படுவதும், அதில் உள்ள திக்கற்ற குழந்தைகளை ஆதரிப்பதும் அவர்களின் புறக்கடமை என்பதும் இதன் கருத்துக்களாகும்.

5. கட்டுரையின் சுருக்கம்

ஒழுக்கமும் அறிவும் உடையவர், அவற்றைக் கைக்கொள்ளாத மற்றையரின் அரசர் என்றும்; எனவே, இவ்வகை அரசரே, உலகவழக்கில் (வேறு பொருளில்) அரசர்கள் எனப்படுபவர்களுக்கு வழிகாட்டும் தகைமை உடையவர் என்றும்; ஆடவரும் பெண்டிரும் ஒருவருக்கொருவர் இன்றியமையாத வாழ்க்கைத் துணைவர் என்றும்; இம்முடிவு பழங்காலத்தும் பிற்காலத்தும் உள்ள ஆன்றோர்களின் கருத்துக்கும் நம்பிக்கைக்கும் நடக்கைக்கும் பொருத்தமாக இருக்கிறது என்றும்; அவர்களுடைய வேறுபட்ட குணங்களே அந்த நிலைமைக்கு அடிப்படை என்றும்; ஆடவர் மறைவற்ற வெளிஉலகில் தொழிற்படுவதும், அவர்களால் காக்கப்பட்ட வீடுகளில், அரசிகள்போல், பெண்பாலர் ஆட்சிபுரிவதும் முறை என்றும்; ஆடவருடைய பல்வகைப்பட்ட போக்கிற்கு இணங்க நடந்துகொள்ளும் பெண்டிரின் சிறப்பியல்பு

தான் அவர்களது மாறுந்தன்மை எனப்படுவது என்றும்; மேற்சொன்ன உயர்ந்த கடமையை அவர்கள் நிறைவேற்றும் பொருட்டு, அவர்களது உடல்நலத்தை உறுதிப்படுத்தற்கும், அழகை நிறைவுபடுத்தற்கும் ஆகும் உடற்பயிற்சியும் பழக்கமும் அவர்களுக்கு அடைவித்தலும்—ஆடவரது தொழிலை அறிந்து துணை நிற்பதற்காக அவர்களுக்குப் பல திறப்பட்ட கல்வி கற்பிக்கப்படுதலும்—சிறந்த பெரியோர்கள் நுழைய நடுங்குகிற சமய மதத் தர்க்கத்தை அவர்கள் மேற்கொள்ளாதிருத்தலும்—அவர்கள் இன்னின்ன வகையில் இன்னின்ன இலக்கிய இனங்களைக் கற்றுக்கொள்ளுதலும்—ஒழுக்க நூல்களில் அவர்கள் பெரிதும் பயிலுதலும்—போற்றுதற்குரிய உபாத்தியாயர்களை அவர்களுக்கு ஏற்பாடு செய்தலும்—படைப்பின் சிறப்புக்களை அவர்கள் கண்டு கற்குமாறு விடுதலும்—வேண்டும் என்றும்; அவர்களது புறக்கடமை, அரசாட்சியின் நேர்மையையும் அழகையும் போற்றுவது என்றும்; அவர்களது உயர்ந்த அரசச் செல்வாக்கை மக்கட்பொதுவில் அமைதி நிலைபெறும்பொருட்டுத் தவறாது பயன்படுத்த வேண்டும் என்றும்; பெண்டிர்கள் கால் வைத்த இடமெல்லாம் அமைதியும் அழகும் வளர்ச்சியும் உண்டாதல் வேண்டும் என்றும்; திக்கற்ற குழந்தைகளை ஆதரித்துப் போற்றுவது அவர்களுடைய தனிக்கடமை என்றும் கூறுவது இதன் பெரும்படியான போக்கு.

6. அரும்பொருள் விளக்கம்

பக்கம் 99. மகளிர் மேற்றுய முடிவுரை - பெண்டிரைக் குறித்த முடிவான பேச்சு.

விரிவுரை-பொருள் நயம்பட விரிந்த பேச்சு.

மற்றென்று – Sesame of Kings' Treasuries, 'அரசர்களுடைய கருவூலத்தின் திறவுகோல்' என்னும் விரிவுரை.

பொதுநோக்கம் - இரண்டு விரிவுரைகளாலும் ஆசிரியர் விளக்க முயலும் கருத்து.

கிளந்த – விளக்கம்படக் கேட்ட.

செல்வாக்கு - சாய்கால், சௌகரியம்.

புல்லிய ஒழுக்கத்தினர் - நல்வழியில் நடவாதவர்.

ஓர் வன்மை உடைமையை உண்டாக்குகின்றன - ஓர் ஆற்றலை உண்டாக்கி நிலைபெறச் செய்கின்றன.

பக்கம் 99. கோ இயல் - அரச இயல், அரச ஆதிக்கம், பலரை அடக்கி ஆளும் ஓர் மேன்மை.

மக்களுக்குள் இருக்கக்கூடிய - மக்களுக்குள் நீதியாக இருக்கக்கூடிய.

கண்ணுல்...கோலங்கள் - யாவரும் காணக் கிடக்கும் அதிகாரத்தின் அறிகுறிகள்.

பொருளை...செல்வாக்கு - பொருட் செல்வத்தின் பலவேறு ஆற்றல்கள்.

உயிர் அற்ற வெறுந்தோற்றம்-உட்பொருளற்ற தோற்ற மாத்திரம்.

கொடுங்கோலன - (யாவர்க்கும் நன்மைதரும் நேர்மையை ஒட்டி நடக்காமல்) அவரவரின் மனப்போக்கினைப் பின்பற்றித் துன்பம் விளைப்பன.

அவை - மற்ற கோ இயல்கள்.

போலானவை - கெட்டியற்றவை, உள்ளழிந்தவை.

போலி அரச முடி - அரசமுடியின் வடிவம் மட்டும் மேற்கொண்ட ஒன்று.

பக்கம் 100. தரித்திருப்பவையும் - அணிந்திருப்பவையும்.

மாதிரிகள் - சாயல்கள்.

சாயைகள் - நிழல்கள்.

உளத்தின் விருப்பத்தை விதியாகக் கொள்வது-மனம் போனபடி எல்லாம் போவது.

அவை - மற்ற கோ இயல்கள்.

இந்த எண்ணத்தை - 'நல்வழியில்...தருகிறது' என்னும் எண்ணத்தை.

முடிபுனைந்தோ - முடியாகிய ஓர் அணியை அணிந்தோ.

மற்றவைகள் - மற்ற கோ இயல்கள்.

உங்களுக்கு அது உரம் தரும் - நீங்கள் மேற்சொன்ன கோ இயலை எய்திஞல், உங்களுக்கு அது உரம் தரும்.

பக்கம் 101. அரசியல்...செல்வாக்கை-மேன்மையுள்ளதும், பொறுமையோடும் அன்புடனும் இயகுவதும் ஆன செல்வாக்கை.

பக்கம் 101. ஆளும் நாடுகள் - செல்வாக்கிற்கு உட்பட்டவர்களின் தொகுதி.

அரசிகள் சோலை - அன்பையும் ஆற்றலையும் காட்ட அரசிகள் என்றும், அமைவும் அழகும் ஆன பயன்களைத் தெரிவிக்க சோலைகள் என்றும் கூறியிருக்கிறது.

விபரீதநிலை - இயல்பற்ற நிலை.

பொதுமையான - சாதாரணமான.

நிலைபெற்ற - தொடர்ந்த, நாள்தோறும் நடத்த வேண்டிய.

வீணை...நடந்த - தோன்றியபடி எல்லாம் பேசிய.

பக்கம் 102. தனித்தனி - ஒருவரை ஒருவர் சாராது.
எதிர்ப்பட்ட - பொருத்தமற்ற.
பதி - கணவன்.
தொடர்புகள் - சம்பந்தங்கள், உறவுகள்.
சால்பு - மாட்சிமை, குண உயர்வு.

பக்கம் 103. எஞ்ஞான்றும்......மந்திரத்தலைவர்கள் - எக்காலத்துக்கும் பொருத்தமான நீதியும் ஆலோசனையும் கூறுபவர்கள்.

சான்று - சாட்சி.

ஷேக்ஸ்பியர் - Shakespeare, பெயர் பெற்ற ஆங்கில நாடகப் புலவர்.

ஆண் தகைகள் - சிறந்த ஆடவர்கள், ஒவ்வொரு வகையிலாவது சிறப்புடையவர்.

கார்டீலியா...வர்ஜிலியா-Cordelia, Desdemona, Isabella, Hermione, Imogen, Queen Catherine, Perditta, Sylvia, Viola, Rosalind, Helena, Virgilia; விவரம் முதல் நூல்களில் கண்டு தெளிக.

பக்கம் 104. தகைசால் - பெருமை நிறைந்த.
எடுத்துக்காட்டு - உதாரணம்.
கூத்து - ஆட்டம், நாடகம்.

கீழ்ச்செலவு - அழிவின் தொடக்கம்.
ஒபீலியா - Ophelia.
ஹாம்லெட் - Hamlet.

பக்கம் 104. மக்பெத் பெருமாட்டி, ரீகன், கோனெரில் - Lady Macbeth, Regan, Goneril.
விலக்குகள் - ஒழிபுகள்.
இப்படி - மேற்சொன்ன வண்ணம்.
தெய்விகம் - மகிமை.

பக்கம் 105. ஊழின் நிமித்தங்களையும் துறைகளையும் - விதியின் காரணங்களையும் வழிகளையும்.
இந்நாளையின்-பத்தொன்பதாம் நூற்ருண்டின்.
வால்ட்டர் ஸ்காட்டு - Sir Walter Scott, பெயர் பெற்ற ஆங்கிலக் கதை நூலாசிரியர்.
ஆன்ம நோக்கம் - அடையவேண்டிய முடிவான பயன் என்று கொண்டிருப்பது.
ஸ்காட்லண்டு - Scotland.
டாண்டி டின்மாண்டு...கிளேவர் ஹௌஸ் - Dandie Dinmont, Robroy, Claverhouse; விவரம் முதல் நூல்களில் காண்க.
ஆறலைப்பவன் - வழிமறித்துக் கொள்ளை கொள்வோன்.
ஊழின்...தப்புகிருர்கள் - ஊழ்வலிவானன்றி, முயற்சி வலிவால் துன்பத்தை முறியடிக்கவில்லை.

பக்கம் 106. பண்படுத்தப்பட்ட - ஒழுங்குபடுத்தப்பட்ட.
உன்னிப்பு - ஊகிப்பு, கற்பனை.
எல்லன் டூகிளஸ்...ஜீனி டீன்சு - Ellen Douglas, Flora Macivor, Rose Bradwardine, Catherine Sayton, Diana Vernon, Lilius Redgauntlet, Alice Bridgenorth, Alice Lee, Jeanie Deans; விவரம் முதல் நூல்களில் காண்க.
கடமையின்......தோற்றத்திற்காகவும் கூட - கடமையைச் செய்வது மட்டில் அமையாது, கடமையைச் செய்ததைத் தெரிவித்தற்காகவும் கூட.
உயிர்த்தும் - உயிர் கொடுத்தும்.
மைந்தன் - ஆடவன்.

பக்கம் 107. இத்தாலியா - ஓர் நாடு, Italy.
கிரீக்கு - ஓர் நாடு, Greece.

பக்கம் 107. டான்ட்டே - Dante, பெயர்பெற்ற இத்தாலிய நாட்டு ஆசிரியர்.

தமது - டான்ட்டேயின்.

ஆன்மாவை அவள் காப்பது - அவரது ஆன்மா, அறிவு விளக்கத்தில் மங்காதபடியும், தூய்மையி னின்றும் வழுவாதபடியும் அவள் அறிவுறுத்திக் காப்பது.

கிறிஸ்தவக் காதலன்-டான்ட்டே போன்றவர்.

ஆன்மக்குடிமை - தூய்மையைக்கருதி அடங்கும் அடக்கம்.

அவர்களது - கிரேக்கப் பெண்டிரது.

அண்டிரோமாக்கி - Andromache.

காஸ்ஸாண்டிரா - Cassandra.

நாஸிகா - Nausicaa.

பக்கம் 108. பெனலொபி - Penelope.

மனையாட்டிக்குரிய - மனையாட்டியாகிய நிலைமைக்குத் தகுந்த.

ஆண்டிகனி - Antigone.

இபிஜீனியா - Iphigenia.

மறி - ஆட்டுக்குட்டி.

சாவின் இடும்பை - இறத்தலாகிய பொறுத்தற்கரிய துன்பம்.

ஆல்செஸ்டிசு - Alcestis.

ஆன்ம மீட்சி - உடல் அழிவோடு உயிரை அழியவிடாது மீட்டல்.

சாஸர் - Chaucer, ஓர் ஆங்கிலப் புலவர்.

ஸ்பென்ஸர் - Spenser, ஓர் ஆங்கிலப் புலவர்.

யூனு - Una.

பிரிட்டோமார்ட் - Britomart.

மக்கட்...ஏற்படுத்தியவர் - Moses, மோசஸ் என்னும் ஆன்றோர்.

அரசி ஒருவர் - Pharaoh's daughter, பரோவா மன்னரின் மகள்.

கடவுட் கல்வி - பரமஞானம், உய்வதற்காகும் கல்வி.

ஓர் பெண் வடிவம் - Sphinx, எகிப்தியரின் சரஸ்வதி.

குறியீடு - அறிகுறி.

பக்கம் 109. புலமையிலும்... அவளும் - கிரேக்கரது கல்வி வளமையே ஆங்கிலக் கல்விக்குத் தாயகம் என்பது.
அதீனு - Athena, கிரேக்கரின் சரஸ்வதி.
சேய்மையில் உள்ளது - மிகப்பழைய காலத்தில் நிலவியது.
எண்ணுபவன் - அறிவாளன்.
ஆளுபவன் - தலைவன்.

பக்கம் 110. ஈஸ்கயிலசு - Aeschylus.
ஹோமர் - Homer.
பாவைகளை அலங்கரித்தல் - பொம்மைகள் சிங்காரித்தல்.
வெறும் பாவைகள்-உயிரில்லாதபொம்மைகள்.
முடியும் என்றபோது - கைக்கொள்ள முடியும் என்று காட்டியதால் கைக்கொள்ள முடியும் என்றே நம்பி.
அடக்கமான பராமரிப்பு - அடங்கி நின்று போற்றுதல்.
வெறும் ஆர்வம் - விரைவுடைய பற்று மட்டும் கொண்டிருத்தல்.
பரிசு - வெகுமதி, இனும்.
உழைப்பின் போக்கு - எந்தவாறு தொழிற்படுவது தக்கது என்பது.
வீரம் - கிறிஸ்தவ நாட்டில் முன்நாளில் நடந்தேறிய ஓர் ஒழுக்கமுறை.

பக்கம் 111. ஏவுதல் - போக்கு, தொழில்.
நேரும் - புரியும்.
சிறை - அடங்கி நிற்றல்.
பலப்பல வன்மையின் தூய்மையாக்கல்-ஒருவனுடைய பலவகையான அகப்புறச் சத்திகளை நன்மையின் பொருட்டு இயங்கச் செய்தல்.
பலப்பல நோக்கங்களின் தொடர்ச்சி - பலப்பல நோக்கங்களும் இடையருது தொழிற்படும் நிலை.
கவசம் - இருப்புச் சட்டை.
கோலாகலம் - மனப்போக்கின்படி நடத்தல்.

பக்கம் 112. ஆன்மாவினுடைய கவசம்-ஆன்மாவை ஊறு செய்யாது காக்கும் காப்பு.

பக்கம் 112. காதலன் - காதலி - களவொழுக்கம் நிகழ்த்துபவர்.
கணவன் - மனைவி - கற்பொழுக்கம் மேற்கொண்டவர்.
அப்பண்பு - அந்தக் குணத்தையுடைய மடந்தை.
முடிவுபடுத்தும் தொழில் - துணை நிற்றலினின்றும் வேறுபட்ட தீர்மானம் செய்யும் தொழில்.

பக்கம் 113. பால் - பிரிவு, இயல்பு.
இயங்குவது - செல்லுந்தன்மையது.
மேற்செல்வது - வளர்வது.
பாதுகாப்பது - தீங்கினின்றும் காப்பது.
செய்பவன் - தொழிற்படுபவன்.
ஆக்குபவன் - உண்டு பண்ணுபவன்.
கைப்பற்றுதல் - பொருளைக் கைப்பற்றுதல்.
முடிவுபடுத்தற்கு-இரண்டு வழிகள் தோன்றித் தியக்கம் உண்டாகும்போது, ஏதோ ஒரு வழியின் சார்பாக முடிவுபடுத்துவதற்கு.
மறைவற்ற உலகத்தில் - வெளி உலகத்தில், விவகாரத்தில், பலமக்களுக்கு இடையில்.

பக்கம் 114. இழத்தல் - நஷ்டப்படுதல், தவறுதல்.
களைகண் - புகலிடம்.
இகல் உடையது - பகை உடையது.
சமூகம் - சங்கம், கூட்டம், உறவு, நட்பு.
ஒப்புமை - சமானம்.
கலங்கரை விளக்கம் - கப்பல்களுக்குத் துறை காட்டும்,கரையின் மாடத்துள்ள விளக்கு.

பக்கம் 115. சாதிலிங்கம் - ஒருவகை நிறந்தரும் பொருள்.
நிறம் பூசப்பட்டது - நிறம்பெறுமாறு பூசப்பட்டது.
பெருமிதம் - கர்வம், தன்மதிப்பு.
முடிவற்றவிதம் பொருத்தம்படக் கூடியது - கணக்கற்ற வகையில் இயைந்து போகும் தன்மையது.
முடிவற்றவிதம் மாறுதல் எய்துகிற-இயைந்து போவதன் பொருட்டு, கணக்கற்ற வகையில் மாற்றம் அடைகிற.

பக்கம் 116. கூறு - பங்கு, பிரிவு.
பல்கும் - பிரிந்து விரிவுறும்.
இது - மேலே விவரித்தது.
பேர்ஒளி - பெரு விளக்கம்.
உடல் இயக்கம் - ஆள்வினை, உடல் முயற்சி.
மென்மையான வன்மை - முரட்டுத்தனம் அல்லாத வலிமை.

பக்கம் 117. உடல் இயக்க உரிமை - போதல், செய்தல் முதலிய உடல் இயக்கத்தில் சுதந்தரம்.
நெஞ்சியக்க உரிமை - நினைவு, உணர்வு, முதலிய அக இயக்கத்தில் சுதந்தரம்.
கட்டு - காவல், தளை.
இயற்கை அறிவுப் பதிவுகள் - பறவை கூடு கட்டுதல் போன்ற தொழிலின் வித்துக்கள்.
ஒரு நல்ல...கிடையாது - கட்டும் தடங்கலும் அவளது உறுப்பில் தாமே தோன்றும்.
அறத்துறை - நல்லொழுக்கம்.
எதிர்கால விளைவுகள் - இனிப் பயன்படும் என்று எதிர்பார்க்கக்கூடிய சிறப்புக்கள்.
ஆண்டுகளின் - சென்றுபோன ஆண்டுகளின்.
உளப்பதிவு - செய்துமுடித்த வேலைகளைப் பற்றிய ஞாபகமாகிய குறிப்பு.
நினைப்பை - ஞாபகத்தை.
உண்டாக இருக்கும் - எதிர்பார்க்கும்.

பக்கம் 118. பொலிவு - முகமலர்ச்சி, பூரிப்பு.
உடற்கூட்டை-கட்டப்பட்டிருக்கும் உடம்பை.
உளச்சார்பு - பிறப்பிலேயே மனத்தில் பதிந்து கிடக்கும் உணர்ச்சியின் வித்து.
நடுத்தீர்ப்பதற்கும் - நீதிதெரிவதற்கும், முறை அறிவதற்கும்.
பெறுமானம் - தகுதி.
மேம்பாடு - உயர்வு.

பக்கம் 119. விலக்கவொண்ணுமை - நிகழ்ந்தே தீரும் தன்மை; முயற்சியால் விலக்கவொண்ணுமை.

பக்கம் 119. வைப்புக்கள் - இடங்கள்.

ஆன்ம விளக்கம் - மெய்யறிவு.

நிலைத்தொகுதிகள் - நிகழ்ச்சிகள், பொருள்கள் ஆகிய இவற்றின் வகை வகையான கூட்டங்கள்.

பரிசு - வெகுமதி.

ஒறுத்தல் - தண்டித்தல்.

ஊழ்நெய்யும் நெருப்பால் ஆய இழை - காலம், இடம் முதலியவற்றால் சிதறி, பொருத்தம் மறைந்திருக்கிற - தவறும் தண்டனையடைவதும் ஆன—இரண்டு நிகழ்ச்சிகளைக் காரண காரியமாகப் பொருத்தி, நியாயம் தோன்றக் காட்டுகிற ஊழின் விளக்கமான செயல்.

பக்கம் 120. சிறுபோதைய - சிறுசிறு காலமே யுள்ள.

அது - கடவுள் வணக்கம்.

கருத்தொற்றுமை - சம்மதம்.

தொடாதிருக்கும் ஆறு - தொடாதிருக்கும் வண்ணம்.

பக்கம் 121. பிசினாலாகிய ஒரு நாற்றக் கத்தை - தீ நாற்றமுள்ள ஊதுவத்திக் கத்தை.

தவிசு - சிறந்த ஆசனம்.

வடிவுகொண்ட அன்பு - அன்புருவம்.

மனைவாழ்க்கையின் கலக்கம் – இல்வாழ்க்கைச் சிதைவு.

மக்களுக்கு ஆறுதலைத் தந்தவர் – ஏசு அடிகள் போன்ற வழியடியார்.

மனையாட்டிகளை - மனையாட்டிகளாக இருக்க வேண்டியவர்களை.

விகார விக்ரஹங்கள் - அழகற்ற சட்டகங்கள்.

சமய மரப்பாச்சிகள் - சமயச் சார்பாக வதியும் பொம்மைகள்.

அவை - அந்த விகார விக்ரஹங்கள்.

உண்டாகும் - தம்மை விகார விக்ரஹங்களாக ஆக்கிக்கொண்டவரினின்றும் உண்டாகும்.

பக்கம் 122. ஒத்துணர்வு செலுத்த - அவனைப் போன்று உணர்வுகொள்ள.
முதற்கல்வி - தொடக்கக் கல்வி,
மேலோட்டமான கல்வி - ஆழமற்ற கல்வி, நுனிப்புல் மேய்ச்சல் என்னும் கல்வி.
இலக்கியத் தொகுதி - நூல்கள்.

பக்கம் 123. நூல்கூடம் - Library, பொது நூற்சாலை, பலப் பல நூல்கள் கொண்ட ஓர் இடம்.
நூல்கட்டு - நூல்கள் கொண்ட ஓர் கட்டு.
பேதைமை - அறிவின்மை.
உத்தி - நுண்ணறிவு, கற்பிக்கும் அறிவு.
கிளர்ச்சி - மனக்கிளர்ச்சி.
வரலாற்று நூல் - History.
தத்துவ நூல் - Philosophy.
அரசியல் கோவைகள் - Political Essays.

பக்கம் 124. ஈரமுள்ளவள் - உருக்கமுள்ளவள்.
அழுக்காறு - பொறாமை.
தாக்கரே - Thackeray, ஓர் சிறந்த ஆங்கிலக் கதை நூலாசிரியர்.
வடிவு படுத்தற்கு - மனத்தைக் கவரும் உருவாக்குவதற்கு.
வெம்மை - கருமை.
ஒற்றைச்சார்பு - ஒருதலைச் சாய்வு.
உயிர் உரம் - பயன்படும் தன்மை.
ஓர்மிக்காமல் - மேற்கொள்ளாமல்.

பக்கம் 125. வெறுமை - ஒன்றுமில்லாமை, அறிவின்மை.
இணக்கமான - இசைவான.
சேர்பு இருக்கக்கூடுமானால் - போகக் கூடுமானால்; சேர்பு - அடைவு.
திங்கள்தாள் - மாதப்பத்திரிகை.
சுத்தி - ஓர் கருவி.
உறை - கூடு, இருப்பிடம், உடல்.
அவள் கீழ்விழுந்து......கொள்வாள்-ஒழுக்கம் தவறிப்போவாள்.

பக்கம் 126. வகைகள் - மாதிரிகள்.
இசைப்புலமை - சங்கீதப்புலமை.
வண்ணம் - பண், இராகம்.

பக்கம் 127. துறை - வகை.
ஆன்மப்பொலிவு - அறிவு விளக்கம்.

பக்கம் 127. சுவரின்.........உரியர் - வெறும் படங்கள்போல் பவர்.
வாய்ப்பு – பேறு, சிறப்பு.
அறிவுப்பதிவுகள் - பிறப்பு முதல் காணும் தொழிற்போக்குகள்.
இந்தக் கிறிஸ்தவ நாடு - இங்கிலாந்து.
கடுவேக்காடு - பெருங்கொதிப்பு.

பக்கம 128. முறைப்பாடு - முறைமை காட்டி எடுத்துரைத் தல்.
டீன் - Dean, உபாத்தியாயர் தலைவர்.
டிரினிட்டியின் தலைவர் - The master of Trinity.
உண்டிவகைகள் - சாப்பாட்டினங்கள்.
முழு உண்டாதல்-உண்டாதல் முழுவதையும், தோன்றிவளர்தல் முழுவதையும்.

பக்கம் 129. ஆர்க்கில் பிறந்த ஜோன் - Joan of Arc.
வேல்சுநாட்டின் இளவரசி - Princess of Wales.
மாபெரும் முறையாளி - அறநெறிக் கடவுள்.
தண்ணீர்த் துறைகள் - ஊற்றுக்கள்.
முன்ஞானையவன் - சமயமில்லாக் காலத்தவன்.
களங்கமாக்குகிற...........தொழப்படுகிறவை - தொழாது நிற்பதோடு ஒழியாது, மேற் கொண்டு பாழாக்கப்படுகிறவை.
ஞானஸ்நாநம் – கிறிஸ்து சமயத்துட்புகுவான் ஒருவன் புரியவேண்டிய முதற்சடங்கு.
பலிபீடங்கள் - உணவு வைக்கும் மேடைகள்.
தீவாசனம் - தீவாகிய ஆசனம், ஆங்கில நாடாகிய ஆசனம்.
எழிலி – மேகம், மாசு.

பக்கம் 130. மறை - இரகசியம், உட்பொருள்.
வெளிவகை – வெளி உலகத்தில் நடைபெறு பவை.
உள்வகை - வீட்டிற்குள் நடைபெறுபவை.
அரசின்பால் தொடர்பு - அரசின் சார்பு.
பொதுவகையான - குடிகள் எல்லோருக்கும் பொதுவான.
தன்வகை – தன்னைமட்டும் பொறுத்தது.
காப்பாற்றுதல் – பிழைப்பு.
மேற்செலவு - வளர்ச்சி.

பக்கம் 130. காப்பு - காவல்.

பக்கம் 131. அகற்றி - விரிவுசெய்து.
அங்கம் - உறுப்பு.
கடப்பாடு - கடமை.
நடு - மத்தி.
ஆடி - கண்ணுடி.

பக்கம் 132. திட்டம் - கட்டுப்பாடு, சட்டம், ஒழுங்கு.
வன்மையின்கண் விருப்பம் - அதிகாரத்தில் விருப்பம், அதிகாரம் செய்ய ஏவும் அக வேட்கை.
மடங்கலின் உறுப்பு - சிங்கத்தின் அடி.
அவுணன்கை - அரக்கனது (அழிக்கும்) கை.
கரை யேற்றுவதற்கும் - தூக்கி விடுவதற்கும்.
பொன்தவிசு - பொன் ஆசனம்.
வெஃகுதல் - விரும்புதல், அவாவுதல்.
தவிசேறி - போற்றுதலோடு குடிகொண்டு.
அம்முடியை - அரச மேன்மையை.

பக்கம் 133. சந்தனத்தழையாலாய முடி - தழையாலாகிய முடி அடக்கத்தையும் அன்பையும் கொண்டுள்ள பெருமையைக் குறிக்கும்.
மறை - இரகசியம்.
பேர் அமைதியின் அரசன் - பிரபஞ்சத்தின் சாந்தி நிலைக்குக் காரணரான கடவுள்.
முறைமையாளர் - வழக்குரைப்பவர்கள்.
போர் - சண்டை.
ஓரம் - முறையின்மை.
பூசல் - சண்டை.

பக்கம் 134. முறைபிறழ்ச்சி - அக்கிரமம்.
சோலை - பூஞ்சோலை.
ஓர் உலகம் - வீட்டிற்குப் புறத்தது.
காடு மூடிப்போய் - கொடுமையும் துன்பமும் நிறைந்து.

பக்கம் 135. உயர்வு காட்டி - சரிக்கட்டி.
செந்நீர் - இரத்தம்.

பக்கம் 136. குவளைகள் - புல்நிலத்தில் இடை இடையே உள்ள குவளைகள்.
மயக்கவுரை - திரிபான உரை.

பக்கம் 137. அவை பூக்கவும் வேண்டும் - அதுகாறும் மலராத குவளை மலருதல் வேண்டும்.

உயர்வு நவிற்சி - தூக்கிப் பேசுதல்.

கூற்றிலும் – சொல்லிலும்.

வெதுப்புநோய் - வெம்மை செய்யும் நோய்.

இவற்றைக் காட்டிலும் அழகான மலர்கள் - திக்கற்ற குழந்தைகள்; ஆதரவு வேண்டி நிற்கும் ஏழைக் குழந்தைகள்.

பக்கம் 138. ஆட்டங்கள் - இரவில் பலர் ஒருங்குகூடி ஆடும் விளையாட்டுக்கள்.

ஒரு காலைக்குப்பின் மற்றொரு காலை - ஒவ்வொருநாளும்.

மதிமயக்கங்கொண்ட - வீணான, இழிவான, பைத்தியக்காரத்தனமான; மகளிர் வீணில் காலம் போக்குகிறார்கள் என்பது.

மல்லிகை, முல்லை.........உயிர்க்கும்பொருட்டு- இந்த அநாதைக் குழந்தைகள் நலமடையும்பொருட்டு.

* அங்ஙனம்.........தேக்கிற்று-இது முதல்நூலில் இல்லாதது.

மற்றோர் புலவர் பெருமான் - ராபர்ட் பிரௌனிங்கு (Robert Browning 1812—1889).

விவரிக்கப்பட்டிருக்கும் - அவரது 'பிப்பா' (Pippa Passes) என்கிற நூல் தொடக்கத்தில் விவரிக்கப்பட்டிருக்கும்.

பெற்றோரற்ற ஓர் ஏழைச்சிறுமி - பிப்பா.

பெறுதற்கரிய ஓர் ஓய்வுநாள் - பிப்பாவுக்கு வருஷம் 364 நாள் அடிமை வேலையும் வருஷப்பிறப்பாகிய 1 நாள்மட்டும் ஓய்வும் ஆக இருந்தது.

ஓ ஓ விடிந்தேவிட்டது...தேக்கிற்று - (Day!... overflowed the world.) பிப்பாவின் மனத்திற்கு அவ் ஓர் ஓய்வுநாளின் தொடக்கமான சூரியோதயம் பட்டமாதிரி விவரித்திருக்கிறது. அந்த ஒருநாளும் தனக்குக் களிப்பளிக்காமலே விரைவாகக் கழிந்துவிட்டால் என்ன செய்கிறது என்ற அச்ச உணர்வில் பிப்பா இவ்வண்ணம் வியந்தனள் என்பது காண்க.

பக்கம் 138. இரவின் விளிம்பு - இரவாகிய வரம்பு.
மாசு - மேகம்.

பக்கம் 139. ஓ மகளே.........புகுவாயாக - இது, ஞாயிறு, தன்னெடு எழுந்து, உலகத்தில் பரிந்து சென்று, அன்பு செலுத்துமாறு, எல்லா நன் மனையாட்டிகளையும் சொல்லாமற் சொல்லி அழைக்கும் அறவுரையாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆசிரியர் டென்னிஸனின் 'மாட்' என்னும் நூலி லிருந்து [Tennyson's Maud, Chap XXII (1)] எடுக்கப்பட்டிருக்கிறது; பைபிளில் சாலமனுடைய பாட்டுக்களையும் பார்த் துணர்தல் வேண்டும்.

கோமலர் - ரோஜாப் பூ.

பூம்பொழில் - உலகத்தைக் குறிக்கிறது.

வைகறை - காலை.

அவற்றிற்கு-அந்தத்திக்கற்ற குழந்தைகளுக்கு.

திருமகள் - 'மாட்' என்னும் பெண்ணின் பெயர் கொண்ட நூலை இங்குத் 'திருமகள்' என்று குறித்திருக்கிறது; பைபிளில் சாலம னுடைய பாட்டுக்களில் இந்த வகையான உவமை பெரிதும் கையாளப்பட்டிருக்கிற தைக் காண்க. தமிழ்நாட்டில், வழியடி யார்கள், தம்மைக் காதலிகளாகவும் கடவுளரைத் தங்கள் காதற்குகந்த ஆண் தகையாகவும் கருதி, அன்பும், அருளும், பேரின்பமும் பெற்றுய்வது தெரிந்ததாகும். நமது சுந்தரமூர்த்திகள் கடவுளொடு பரிந்து விளையாடிக் கூறும்

'நீறுநுந் திருமேனிநித்திலம்,
நீல் நெடுங் கண்ணிளுெளொடும்
கூறராய் வந்து நிற்றிரால் :
கொணர்ந்திட கிலோம் பலி, நட
பாறு வெண்டலை கையிலேந்திப் [மினே!
பைஞ்ஞீலியேன் என்றீர் அடிகள்நீர்
ஆறுதாங்கிய சடையரோசொல்லும்
ஆரணீய விடங்கரே !

பக்கம் 139. என்பவை போன்ற அருண்மொழிகளை இங்கு நினைப்பூட்டி உணர்ந்து தெளிதல் பொருந்தும்.

வாயிலின் கண் நான்மட்டும் ஒன்றியாய் இருக்கிறேன் - ஏசு அடிகள் போன்ற அடியார்களும் கடவுளும் தாம் உலகினரின் துன்பங்களுக்குப் பரிந்து தொழிற்படுகிறார்கள் என்பதும்; உலகம், கடவுளரின் வீடாகவும், அவரைத் தம்தம் கணவனாகவும் கொண்ட ஒவ்வொருவரும், அதில், அவருடைய நன்மனையாட்டி போன்று தொழிற்பட்டு, அன்பு செலுத்தி, துன்பத்தைக் குறைத்து, அமைதி பிறப்பிக்க வேண்டும் என்பதும் கருத்தாம். நன்மனையாட்டிகள் கடவுளின் மனைவியராகவும் தங்களைக் கருதி அந்த மாப்பெரும் நிலைமைக்குரிய கடமைகளைச் செலுத்த வேண்டும் என்று சொல்லியிருப்பது கண்டு தெளிக.

வாயிலின்கண் - உலகின்கண்.

கமர் - வெடிப்பு, இடைவெளி.

செதிள் - தெறிப்பு.

நுரைச்செதிள் - ஒளிக்கதிர்.

ஞாயிறு - சூரியன்.

மார்பின் எல்லைகள் - சூரிய பிம்பத்தின் வரம்புகள்.

தேக்கிற்று - முழுகி நிரப்பிற்று.

பக்கம் 140. ஒருவர் - ஏசு அடிகள்; கடவுள்.

காலையில்...உண்டா? - பைபிளில் உள்ள வரலாறு. S. John, Chap 20, V. 15. ஏசு அடிகள் தெய்வ வடிவங்கொண்டெழுந்த நிகழ்ச்சியைக் குறிக்கிறது.

'பூவில் நாற்றம் போன்று உயர்ந்(து), எங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை,
இன்றெனக்(கு) எளிவந்தருளி,
அழிதரும் ஆக்கை ஒழியச்செய்த ஒண்
பொருள்;

பக்கம் 140. இன் றெனக்(கு) எளிவந் திருந்தனன் போற்றி! அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி !'

என்று நமது மணிவாசகப்பெருமானும் கடவுளது அருள் திறத்தை வியந்திருக் கிறது காண்க.

இரவெலாம் - உயிரிரக்கமில்லாத பேரறியாமை யோடு.

நெருப்பாலாகிய... அலையவில்லையா - பைபிளில் உள்ள வரலாறு; Genesis, Chap 3. V. 24. துன்பமற்ற மேலுலகில் மட்டுமே கடவுள் வதிகிருர் என்று கருதவேண்டாம் என்பது கருத்து.

'கருணை நிறைந்து, அகம்புறமும் துளும்பி
வழிந்து, உயிர்க்கெல்லாம் களைகண் ஆகி,
தெருள்நிறைந்த இன்பநிலை வளர்க்கின்ற
கண்ணுடையோய் !'

என்று நம் இராமலிங்க அடிகளார் கடவுளரை வழிபட் டிருப்பது காண்க.

ஆனால் இந்தத் தோட்டத்தினுடைய...காண் பீர்கள் - பைபிளில் உள்ள வரலாறு; Solomon's Song, Chap 6, V.2, 11, Chap 7, V. 12 and other verses. துன்பம் மலிந்த இம்மண் உலகில் தான் கடவுளின் அருட் செய்கையை எளிதில் காணலாம் என்பது கருத்து.

''வான் பழித்(து) இம் மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல்''

என்பது போன்ற பொய்யா மொழிகளையும் இங்குக் கண்டு வைத்தல் கடனும்.

கூந்தல்கள் - படர்கொடிகளின் மெல்லிய நுனிகள்.

''நமது கொடி முந்திரிகள்...அப்புறப்படுத்து வோம் ஆக''—பைபிளில் உள்ளது; Solomon's Song, Chap 2, V. 15. 'மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க' என் றும், 'சரஅசர விவித ஆன்மப் பகுதி தாங்கும் திருப்பூம்பதம்' என்றும், 'மலி

பக்கம் 140. பிறவி மறலியின் அழுந்தும் உயிர்தமை அருளின் மருவுற எடுக்கும் பதம்' என்றும் புகழ்ந்து நம் வழி அடியார்கள் கடவுளது திருவருளைப் போற்றுவது காண்க.

நாகிளம் - பெரிதும் இளமையான.

புத்தேளிர் - வானோர்.

கொடுநரிகள்... கூடுகள் - துன்பங்கள்.

கடவுட்காட்சியாளர்......தகுதியானதாகுமா - பைபிளில் உள்ளது; S. Luke, Chap V. 58. மக்களுடைய துன்பங்களைத் தீர்க்க ஓய்வில்லாது முயன்றுகொண் டிருக்கும் ஏசு அடிகள் போன்ற அடியார்களைக் கூடிய வரையில் தன் தன் தரத்திற்குத் தக்கபடி ஒவ்வொரு பெண்மகளும் பின்பற்றி நடக்க முயலவேண்டும் என்பது கருத்து. இங்கு,

'வரும் உயிர் இரக்கம் பற்றியே உலக
வழக்கில் என் மனம் சென்ற தோறும்,
வெருவி நின் அடிக்கே விண்ணப்பித்திருந்
தேன்,
விண்ணப்பஞ் செய்கின்றேன் இன்றும்;
உருவ!என் உயிர்தான் உயிர் இரக்கந்தான்
ஒன்றதே இரண்டிலை; இரக்கம்
ஒருவில் என் உயிரும் ஒருவும்; என்
உள்ளத்(து)
ஒருவனே நின்பதத்தாணை.'

என்று நமது இராமலிங்க அடிகளார் மனங் கரைந்துருகிக் கடவுளிடம் முறையிட்டுக் கொண்டிருப்பதில் காணக்கிடப்பது போன்ற பொது நெறியாகிய ஆன்றோர்களின் ஜீவ காருண்ய ஒழுக்கத்தினை உணர்ந்து தெளிந்து கடைப்பிடித்தலே நமது கடமையும் உரிமையும் ஆகும் என்று அறிதல் வேண்டும்.

முற்றிற்று